DIGITIZED

26:414
N00
118282

T.D.R.C. 722.

R.R. 1-2-1900.

✠

சர்வேஸ்வராயநம:

OFFICE ... MADRAS. 2 APR 1900

# தேவமாதாவை

## வணங்கும் வணக்கத்தின் சம்பாஷணை

## விளக்கம்.

இஃது

பாளையங்கோட்டை

ஜே. இராயப்ப உபதேசியாரால்

இயற்றப்பட்டு,

சென்னை அதிமேற்றிராசன விசாரணையைச் சேர்ந்த

ஓர் சுதேச குருவானவரால் பரிசோதிக்கப்பட்டது

இரண்டாம் பதிப்பு.

சென்னை

இராயபுரம் இண்டியன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1899.

Ob: 41
No.
115389

IMPRIMATUR,

✠ J. COLGAN,
*Archbishop*
*of Madras*

*22nd September, 1898.*

7-22
232.931

# முகவுரை.

---

சிலகாலத்துக்கு முந்தி கா. பே. சவுந்தரநாயகம்பிள்ளை, பி.எ. பி.எல். அவர்களா லெழுதப்பட்ட தேவமாதாவணக்கம் என்னும் ஒரு சிறு பிரபந்தத்திற்கு விரோதமாய் ஷாப்கிப்பர் முத்தையபிள்ளை என்பவர்கள் தேவமாதா வணக்கத்தவறு என ஒரு சிறிய புத்தகத்தைச் செய்து பிரசித்தப் படுத்தினதாயும், அதைவாசித்த சிலர் அத்தேவதாயாருடைய வணக்கத்தின் பேரில் சந்தேகப்பட்டு மனச்சோர்வடைந்ததாயும் யான்கேள்வியுற்று, அதென்னவென அப்புத்தகத்தை யானும் பரிசோதித்துப் பார்க்குமளவில், அதில் எழுதப்பட்ட எதிர்வாதங்களெல்லாம் வேதத்துக்கும் புத்திக்கும் ஒவ்வாச் சர்வ விரோதமானவைகளெனக் கண்டேன். அப்படியிருக்க அவைகளை வாசிக்கும் நேசர் பகுத்தறிவில்லாமல் மனச்சோர்வடைவது எவ்வளவு மதியீனமும், புத்திக் குருட்டாட்டமுமெனக் கண்டு மெத்த யான் கவலையுற்று, முத்தையபிள்ளை யவர்கள் மொழிந்த வேதத்துக்கொவ்வா அவ்விரோதமான வசனங்களைத் திக்கரிக்கக் கத்தோலிக்கனாகிய ஒரு உபதேசியாருக்கும், அம்மாதாவணக்கத்தின் பேரில் சந்தேகித்தோனாகிய சந்தியாகு பீற்றருக்கும் அவைகளைப்பற்றி நடந்த சம்பாஷணையாக இதை எழுதலானேன்.

மேலும் முத்தையபிள்ளை யவர்கள், தாமெழுதிய அவ்வொவ்வா நூலுக்கு தேவமாதா வணக்

கத்தவறு என்று அத்தேவதாயாருக்கு நிந்தனையாகப் பெயர்கொடுத் தெழுதினாராமே. ஏனோ வென்றால்; அம்மாதாவை வணங்கும் வணக்கமே கிறீஸ்துவர்களுக்குரிய உத்தமதனமும் சர்வேஸ்வரனருளிய கற்பனையின் சங்கையுமென்ன வேத உதாரணத்தோடும், வேண்டிய நியாயத்தோடும் அந்நிந்தையைப் பரிகரிக்க எண்ணமுற்றெழுதிய இச்சிறிய பிரபந்தத்துக்கு தேவமாதாவை வணங்கும் வணக்கத்தின் சம்பாஷணை விளக்கமென்னும் பெயர் இரட்டித்துக் கொடுக்கலாயிற்று.

ஜே. இராயப்ப உபதேசி.

பாளையங்கோட்டை,
1898-ம் மேய் 15உ.



தேவதாய்துணை.

# தேவமாதாவை வணங்கும் வணக்கத்தின் சம்பாஷணை விளக்கம்.

## 1-ம். அதிகாரம்.

[தேவமாதா வணக்கத்தவறு என்றதைக் கண்டித்தலும், அம்மாதா தேவனு மனுஷனு மொன்றானவருக்கும், அவரை விசுவசிக்கிற கிறீஸ்துவர்களுக்குந் தாயாராயிருக்கிறாள் என்பதைத் திருஷ்டாந்தப் படுத்தலுமாகிய]

### சம்பாஷணை.

உபதேசியார்—சந்தேகித்தோனாகிய சந்தியாகுபிற்றை நோக்கிச் சகோதரனே! ஏன் இப்படி மனச்சோர்வடைந்திருக்கிறீர்.

சந்தேகித்தோன்.—ஐயா! [illegible] சோர்வு ஏதென்றால் கிலமாதத்துக்கு முந்தி கா. பே. சவுந்தரநாயகம்பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் தேவதாயாருக்குப் புகழ்ச்சியாக தேவமாதா வணக்கமென்னும் ஒரு சிறுபிரபந்தஞ்செய்து பிரசித்தப்படுத்தினார்கள். இதற்கு விரோதமாக தொப்பிப்பர் முத்தையபிள்ளையவர்கள் என்ற ஒருவர் தேவமாதா வணக்கத்தவறு என்னும் சிறுபுத்தகமொன்று செய்து பிரசித்தப்படுத்தி யிருக்கிறார்கள். அதை யான் பார்வையிட்டதில் என்மனதில் சில சந்தேகமுற்று, மனச்சோர் வடைந்திருக்கிறேன்.

உப.—இதற்குத்தானே நானும் அந்தப் புத்தகத்தைப் பார்வையிட்டிருக்கிறேன், ஆனால் அதில் சொல்லப்பட்டிருக்கிறதெல்லாங்கூடித் தங்களை மெத்த ஞானிகளென் றெண்ணிச் சுத்தப் பயித்தியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, அந்தப் புத்தகத்துக்கு "தேவமாதாவணக்கத்தவறு" என்று பேர்கொடுத்தார்கள். கொடுத்த அந்தப் பேரைக்கொண்டு தானே அவர்களுடைய புத்தியின் கூர்மையு மெத்தஞானமும், இன்னதென நன்றாய்த் துலங்குகின்றது. ஏதென்றால் பிள்ளையானது பெற்றதாயை வணங்கிச் சங்கிக்கக் கூடாதென மறுத்துச்சொல்வதே அவர்களுடைய கூர்மையான புத்தியுமெத்த ஞானமுமாம்.

சந்.—அப்படியானால் ஐயாவே! சங்கைக்கும், வணக்கத்துக்கும் வித்தியாச மில்லையோ?

உப.—பரிச்சேதமில்லை, சங்கை, வி[illegible]ம், கனம், இவைகளெல்லாம், ஒரேவகையான மரியாதைதான். அப்படியே நமது தேவனாகிய கடவுள் தகப்பனையுந் தாயையுஞ் சங்கிக்கும்படி தமது நான்காவது கற்பனையாக வரைந்து நமக்குக்கொடுத்திருக்கிறார், அந்தப்படி அவருடைய குமார



னும் [illegible]ருந் தம்மைக் கருவா யுருவாய்ச் சுமந்து பெற்ற மாதாவாகிய மரியம்மாளுக்குச் சங்கை வணக்கஞ்செய்து கீழ்ப்படிந்து நடந்தார். (அர்ச். லூக். 2-50.)

சந்.—ஐயா! அது மெய், ஆனால் மரியம்மாள் தேவகுமாரனுக்குத் தாயாரானதினாலே அவர் தமது தாயாருக்குக் கீழ்ப்படிந்து, சங்கை, வணக்கஞ் செய்யவேண்டியதாயினும், நாமும் அந்தம்மாளுக்குச் சங்கைவணக்கஞ் செய்யவேண்டியதுதானோ?

உப.—ஆம் சந்தேகமின்றி அந்தத்தாயாருக்கு நாம் வணக்கஞ்செய்ய வேண்டியதுதான். ஏனெனில் மரியம்மாள் நமது இரட்சகரைப் பெற்றதினாலே கிறீஸ்துவர்களாகிய நம்மெல்லோருக்குந் தாயாயிருக்கிறாள். மீளவுங் காட்சியாகமத்தில் கிறீஸ்துவர்கள் யாவரும் அந்தேவ தாயாருடைய சந்ததியாராக சொல்லப்பட்டிருக்கிறார்கள். (காட்சி. 12-17) ஆனதால் சந்ததி என்றவார்த்தை புத்திரரைக் குறிக்கிறபடியால் மரியம்மாள் நம்மெல்லோருக்குந் தாயாராயிருக்கிறாள். அந்தப்படி பழைய ஏற்பாட்டின் பன்னிரண்டு கோத்திரங்களாகிய இசராயேலின் சபைபுத்திரர்யாவரும் ஆபிரகாமின் சந்ததி என்று சொல்லப்பட்டிருக்கிறதுபோல புதிய ஏற்பாட்டின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் வழியான கோத்திரங்களாகிய கிறீஸ்துசபைப்புத்திரர் யாவருந் தேவதாயாராகிய மரியம்மாளின் சந்ததியாராகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். மேலும் அந்தேவதாயார்தாமே இக்காலமுதல் எல்லாத்தலைமுறைகளும் என்னைப் பாக்கியமுள்ளவளென்று சொல்லுமென (அர்ச். லூக். 1-48.) தீர்க்கதரிசனமாய் முன்னறிவித் திருக்கிறார்

ஆனதால் தலைமுறைகளென்ற [illegible] வசனமும், சந்ததிகளென்ற அவ்வேதவசனமும், புத்திரனைக் குறிக்கிற ஒரே அர்த்தமாகவே இருக்கின்றது. அல்லாமலும், அந்த வாக்கியங்களின் கருத்து இரட்சகராகிய தேவனுக்கு மரியம்மாள் மாதாவானதினால், அந்த இரட்சகரை விசுவசிக்கிற புத்திரபவுத்திர பாரம்பரையான தலைமுறைகளெல்லாம் அல்லது சந்ததிகளெல்லாந் தன்னை தங்களுக்குப்பாக்கிய முள்ளதாயாராக வணங்கி ஏத்திப்போற்றிப் "புகழுமென்பதேயாம். ஆகையால் சகோதரனே! நமது இரட்சகராகிய தேவகுமாரனைப்பெற்ற அத்திருத்தாயார் அந்த இரட்சகரைத் தேவனென்று விசுவசிக்கிற கத்தோலிக்கு சுவிகாரப் பிள்ளைகளாகிய நம்மெல்லோருக்குந் தாயாராயிருக்கிறாள். என்பது வேதசத்தியமும், அவளைவணங்குவது நீதிநியாயமுமா யிருக்கின்றது.

சக்.—ஐயாவே, நீங்க ளிப்போது சொன்னதெல்லாம் நியாயமும் வேதசத்தியமுமென என் புத்தியிலுந் தெளிவாய்க் காண்கிறேன். ஆனால் முத்தையபிள்ளையவர்கள் "தேவமாதா வணக்கத்தவறு" என்று தமது நூலுக்குக்கொடுத்த அந்தப்பெயரே பிசகாயிருக்க, அந்நூலில் தேவதாயாருக்கு விரோதமா யவர்கள் சொல்லத் துணிகிற மற்ற விஷயங்களெல்லாம் எவ்வளவோ பிசகாயிருக்குமென நாம் கவனிக்கத்தக்கதா யிருக்கின்றது.

உப.—ஆம் அதற்குச் சந்தேகமென்ன? இன்னமும் நான் சொல்வதைக் கேளும், "தேவமாதா வணக்கத்தவறு" என்று கொடுத்திருக்கிற அந்தப்பேருக் கிணையாக, கத்தோலிக்குத் திருச்சபையாரை "ரோமானித்தார்" என்று வணக்கத்தவறு என்ற அதன் அடியில் எழுதிக்கொண்டார்கள். இதுவிஷயத்திலும் முத்தையபிள்ளையவர்



களுடைய புத்திக்கூர்மையு மெத்தஞானமும் இன்னதென விளங்குகின்றது. அதாவது "ரோமானித்தார்" என்றபதம் அதில் குடியிருக்கிற உரோமை இராச்சியத்தாராகிய அச்சாதியாரை அல்லது அதின் குடிஜனங்களைக் குறிக்குமேயல்லாது, தேவதாயாரைவணங்குகிற கத்தோலிக்குச் சத்தியவேத கிறீஸ்துசபையாரைக் குறிக்கிறதல்ல. ஏனெனில் "ரோமானித்தாராகிய" உரோமை இராச்சியத்தார் மட்டுமல்ல; பூமியிலுள்ள எத்தேசத்தாரும் பலபாஷைக்காராகிய சகலசாதி ஜனங்களுமே அந்த ஒரே மெய்யான கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்க்கப்பட்டு ஏகவிசுவாசப் பிரமாண சகோதரராயிருக்கிறார்கள். ஆனதால், முத்தையபிள்ளையவர்கள் இத்திருச்சபையாரை "ரோமானித்தார்" என்றது பெரும்பிசகு.

சக்.—அப்படியானால் இத்திருச்சபையை உரோமான் கத்தோலிக்கு என்று கிறீஸ்துவர்கள் தாமே சொல்லுவதேன்?

உப.—அப்படிச் சொல்லுவதேதுக்கென்றால், திருச்சபையில் காணப்படுந் தலைவராகிய, அர்ச். பாப்பானவர் உரோமாபுரியில் தமது ஞான ஆளுகையின் சிம்மாசன ஆதிக்கமா யிருந்து கத்தோலிக்கென்னுஞ் சகலதேசத்து மேற்றிராசனசபை அனைத்தும் ஆண்டுபரிபாலித்துக் கொண்டு வருகிறபடியால் அத்தலைமைஸ்தானஞ் சகல கிறீஸ்துவர்களுக்குந் தெரியவர உரோமான் கத்தோலிக்குத் திருச்சபை யென்று சேர்த்துச்சொல்லும் வழக்கச்சொல்லே யல்லாது மற்றப்படியல்ல. ஏனெனில் திருச்சபையானது கிறீஸ்துவின் மெய்யான பத்தினியாயிருந்து (ஒசேயாஸ். 2-19;

எபே. 5-23, 27.) எல்லாருக்குந் தாயும் பொது வுமாய் (இசையாஸ் 49-20, 21 ; கலா. 4-26, 31.) இருக்கிறது என்ற கத்தோலிக்கு என்னும் பெயரையுடைய கிறீஸ்துவின் திருச்சபையே யல்லாது "ரோமானித்தார்" என்ற அத்தேசத்தார் ஏற்படுத்திய சபையுமல்ல, காணப்படுந் தலைவராக அத்திருச்சபையை யாளும் அர்ச். பாப்பானவர் ஏற்படுத்திய சபையுமல்ல. இப்படியிருக்க முத்தைய பிள்ளை யவர்கள் திருச்சபையின் சுவாதீன அக்காரணப்பேரைக் கபடாக விட்டு விட்டு அல்லது மறைத்து "ரோமானித்தார்" என்று தாங்கள் இழிவுபட எண்ணிக்கூறுவது போலியின் போலி வார்த்தைமட்டு மல்ல, வேத வசனத்திற்கு முற்றும் விரோதமாயு மிருக்கின்றது.

சங்.—இவைகளை உணர்ந்து பாராமல் முத்தைய பிள்ளை யவர்கள் கத்தோலிக்குத் திருச்சபையாரை "ரோமானித்தார்" என்று எழுதிக்கொண்டதேன்?

உப.—அவர்கள் ஊராப்கிப்பானதினாலே தங்கள் வியாபாரத்தி னிமித்தந் தேவவாக்கியம் வேத சாஸ்திர மற்றுமுண்டான மேலான காரியங்களைப் பார்த்தறியக் கூடாதவர்களாய் சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளைபோல, மற்றவர்கள் சொல்லக் கேட்டெழுதி யிருக்கலாம். அல்லது தாங்கள் எழுதிய, தவறு நூல் 2—ம். பக்கத்தில் கத்தோலிக்கர் பேரில் தாம் குண்டணியாக சொல்லிக்கொண்ட கோபத்தையுஞ் சாபத்தையுந் தாமே அமைத்துக்கொண்டு தங்கள் மத சம்பந்தமாய் வாதிக்கும், சாதிக்கும் தேவைகாயாருக்கு நிந்தையா யெழுதத் துணிந்த அந்நூலி லுள்ள தங்கள் கோபத்துக்கும், சாபத்துக்கும் இது ஓர் கூடாக ("ரோமானித்தார்" என்னும் பெயரை) வம்பாய் சமைத்துக் கொண்டதா யிருக்கலாமே யல்லாது மற்றப்படியல்ல. மேலும் புரொடெஸ்டாண்டார் திருச்சபையின் பேரிலும், அதின் தலைவர், மேற்றிராணியார்கள் முதலான குருப்பிரசாதிகள் பேரிலுந் தூஷணித்தெழுதிய கோபத்தையுஞ் சாபத்தையும் நிந்தனைகளையும் எடுத்தெழுத வேண்டுமானால் இச்சிறிய புத்தக மெத்த விரிவாகுமென்று நிறுத்துகின்றோம்.

சங்.—ஐயாவே! முத்தையபிள்ளை யவர்கள் திருச்சபையை கத்தோலிக்கு என்பதைத் தள்ளி, அவ்விதம் "ரோமானித்தார்" என்றதைத் தங்கள் கோபத்துக்கு ஓர் கூடாகத்தான் சமைத்துக் கொண்டதாய்த் தெரியவருகின்றது. இது இப்படியிருக்க, அவர்கள் சேர்ந்திருக்கிற புரொடெஸ்டாண்டு மார்க்கத்தைப் பதித மார்க்கமென்று சொல்லுகிறோமே அது சரியோ?

உப.—புரொடெஸ்டாண்டா மென்று சொல்லுவதும், பதிதமென்று சொல்லுவதும் ஏறக்குறைய ஓரே அர்த்தத்தை யுடையதுதான். எப்படியெனில், பூர்வபூர்வமாய் பாரம்பரையாய் திருச்சபையில் நடந்தேறிவரும் ஒரே பொதுவான கொள்கைக்கும், அதின் விசுவாசப் பிரமாணத்துக்கும், தேவ ஆராதனைப் பலி பூசை ஒழுங்குக்கும் விரோதமாய் போதிக்கும், சலஞ்சாதிக்கும் வருகிற வேதப் புரட்டரைப் பதிதரென்று திருச்சபையானது தன் ஐக்கியத்தில் நின்று புறம்பாகத் தள்ளிவைக்கிறது. (இதற்கு இந்தப் புரொடெஸ்டாண்டாருந் தாமே எழுதி, பாளையங் கோட்டையில் 1854-ம் வருஷம் அச்சுப் பதிப்பித்திருக்கிற திருச்சபைச் சரித்திர வினாவிடை என்னும் புத்தகம், 108-ம், 152-ம். பக்கங்களில் அத்தா

ட்சி கொடுக்கிறார்கள்.) அந்தப்படி இந்த புரோடெஸ்டாண்டாருந் திருச்சபையின் ஒரே பொதுவான கொள்கைக்கும், அதின் விசுவாசப் பிரமாண ஏக ஐக்கியத்திற்குந் தேவாராதனைப் பலி பூசை ஒழுங்குக்கும் விரோதமாய் போதித்துச் சலஞ்சாதித்து எதிர்த்த படியால் 1517-ம் ௵ திருச்சபைக்குப் புறம்பாக பதிதரென தள்ளப்பட்டு புரோடெஸ்டாண்டுக்கள் என்ற இந்தப் பேரைத் தங்களுக்குத் தாங்களே 1529-ம் ௵ தரித்துக்கொண்டார்கள். மேலும் புரோடெஸ்டாண்டு என்ற அந்தப்பேர் (தங்களால் ரோமைச் சபை என்று சொல்லப்படுகிற) கத்தோலிக்குத் திருச்சபையை எதிர்க்கிறதென்னும் அர்த்தமுடையதென அவர்களே ஒத்துக் கொள்ளுகிறார்கள். இதற்கு அத்தாட்சி வேண்டுமென்றாலோ, புரோடெஸ்டாண்டார் 1845-ம் ௵ சென்னையில் அச்சுப்பதித்த திருச்சபைச் சரித்திரம் என்னும் புத்தகம் 447-ம் பக்கங் காண்க. அன்றியும் திருச்சபை துவக்கமுதல் 15-ம் நூற்றாண்டுவரை அதை எதிர்த்தெழும்பிய பல வேதப்புரட்டரெல்லாம் பதிதரென்றே சொல்லப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே இந்தப் புரோடெஸ்டாண்டு, பல கொள்கைக்காரரும், பொதுவாய்த் திருச்சபையை எதிர்த்தும், பிரிவாய்த் தங்களிற் றாங்களே மறுத்தும், பலவிதஞ் சலஞ்சாதித்தும் வருகிறபடியால், இவர்களும் அவர்களோடொத்த வேதப் புரட்டராகிய பதிதரென்றே சொல்வது நியாயமாயிருக்கின்றது. மீளவும் புரோடெஸ்டாண்டென்கிற அந்தப்பெயரும் இதற்கு உரித்தானதாம், ஆனதால்தானே தங்கள் போதகராகிய



பவர் ஐயர் தாமெழுதிய வேத அகராதி 430-ம் பக்கத்தில், புரோடெஸ்டாண்டு என்கிற அந்தப்பேர் தங்களுக்குத் தகாத பேரென்று சங்கூச்சப்பட்டெழுதி யிருக்கிறார். இந்தப்படி அந்த மார்க்கத்தாரில் ஒருவனை நோக்கி நீ எந்தமார்க்கத்தானென்று கேட்டால், நான் புரோடெஸ்டாண்டானென்று சங்கூச்ச மில்லாமற் சொல்லமாட்டான். ஏனென்றால் அந்தப்பெயரும், அதின் நிலைமையும், அதின் தன்மையும் (அவர்களின் பதிதத்தனத்தையும், வேதப்புரட்டையும்) இன்னதென நன்றாய் விளக்கிக் காட்டுகின்றது.

## 2-ம். அதிகாரம்.

[மரியம்மாள் யேசுநாதருடைய மனிதத்தன்மைக்குமட்டும் மாதா என்பதைக் கண்டித்து, அவள் தேவனும் மனுஷனும் ஒன்றான அத்தேவனுக்கே மாதா என்பதை வேதவசனத்தைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தலாகிய]

## சம்பாஷணை.

சங்.—ஐயாவே! முந்தின சம்பாஷணையில் மரியம்மாள் நமது இரட்சகராகிய தேவகுமாரனுக்குமட்டுமல்ல, நமக்குங்கூட அவள் தாயாராயிருக்கிறாளென்று காட்டிய வேத உதாரணங்கள் நியாயமாய்த்தானிருக்கிறது. ஆனால் முத்தையபிள்ளையவர்கள் தமது வணக்கத்தவறில் திருச்சபையை "ரோமானித்தார்" என்று எழுதிக்கொண்ட அதன் அடியில் அட்டவணையாகக் குறிப்பிட்டிருப்பதைப்பார்த்தீர்களோ?

உப.—ஆம், அதாவது "மரியம்மாளை தேவமாதா என்றும், மனிதருக்கும் கிறீஸ்துவுக்கும் நடுநின்று மத்தியஸ்தத் தொழில் புரிகிறவளென்றும், பாவமில்லாமல் உற்பவித்தாளென்றும் சொல்லி அவளை வணங்கித் துதித்து வழிபடும்செய்கை வேதத்துக்கும், புத்திக்கும் சர்வ விரோதம்" என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவைகளைப்பற்றி அவர்கள் வாதித்து சாதிக்கும் அந்தந்த அதிகாரத்தில் சம்பாஷிப்போம்.

சங்.—ஐயாவே! அது நியாயந்தான். ஆகிலும் ஒரு கேள்வி, அதாவது "அவளை வணங்கித் துதித்து வழி



படும் செய்கை வேதத்துக்கும் புத்திக்கும் சர்வ விரோதம் என்றார்களே, அதின் விபரமென்ன?

உப.—அதேதென்றால் "தேவமாதாவணக்கம்" என்னும் புத்தகத்திற் சவுக்காநாயகம்பிள்ளையவர்கள் அம்மாதாவைப்பற்றி எடுத்துக் காட்டிய நியாயங்கள், வேதத்துக்கு ஒத்திருக்குமேயாகில், புத்திக்குச் சரியில்லையே என வாதிக்கவும், புத்திக்கு ஒத்திருக்குமேயாகில், வேதத்துக்குச் சரியில்லையே என வாதிக்கவும், முன்னணையாக போட்டுக்கொண்ட இதோர் கபடுள்ள புத்திசாமார்த்தியந்தான். இதிருக்கட்டும், ஆனால் "வேதத்துக்கும் புத்திக்கும் சர்வவிரோதம்" என்று சொல்லிய அவைகளை இப்போது, ஒவ்வொரு அதிகாரத்திலும், பரிசோதிப்போம். அதாவது முத்தையபிள்ளையவர்கள் தமது தவறு நூல் முதலதிகாரத்தில் வேதத்துக்கும் புத்திக்கும் சர்வவிரோதமென வாதித்துச் சாதிப்பதெல்லாங் கூடி மரியம்மாள் தேவமாதாவென நாம் சொல்வதைப்பற்றித்தான். ஆனால் இதற்கு எதிரிடையாக "மரியம்மாள் யேசுநாதருடைய தேவதன்மைக்கு மாதாவல்ல; அவருடைய மனுஷீகத்தன்மைக்குமட்டு மாதாவாயிருக்கிறாள்." ஆனதினால் தான் அந்தம்மாளை "தேவமாதா" என்று சொல்லக் கூடாதென்பதே அவர்களுடைய கருத்து. தவறுள்ள இக்கருத்தைக்கொண்டு "தன்மைக்கு மாதாவென்றும் ஆளுக்கு மாதாவல்லவென்றும்" பிரித்துப் பேசுவதும் அதை அடிபிடித்து வாதிப்பதுமே வேதத்துக்கும் புத்திக்குஞ் சர்வவிரோதமென்று நாமே சொல்லுகிறோம்.

சங்.—ஐயாவே! அப்படியானல், அவருடைய்
தேவ தன்மைக்கும் சேர்த்து ஒரே ஆளானவருக்கு மரிய
ம்மாள் மாதாவாக தேவமாதா அல்லது தேவனுடைய
தாயார் என்பதற்கு வேத உதாரண மென்ன?

உப.—சகோதரனே! கேளும், எலிசபெத்த
ம்மாளைப் பரிசுத்த மரியம்மாள் போய் மினவின
போது அச்சமையத்தில் இஸ்பிரீத்து சாந்துவான
வர் எழுந்தருளி வந்து எலிசபெத்தம்மாளிடம்,
அருள்கொண்டு இவர் வினபடி அவள் மரியம்
மாளைப் புகழ்ந்து சொன்னதாவது "என் ஆண்ட
வருடைய தாயார் என்னிடத்தில் எழுந்தருளிவர
எனக்கு எப்படிக்கிடைக்கலாயிற்று" என்றாள்.
(அர்ச். லூக். 1-43) ஆகையால் "ஆண்டவர்" எ
ன்ற அவ்வார்த்தையானது தேவனைக் குறிக்கும்
வார்த்தையல்லவோ? மீளவுமரியம்மாள், ஆண்ட
வராகிய இரட்சகருக்கு மாதாவாக சம்மனசினால்
அறிவிக்கப்பட்ட இரகசிய சங்கதியை இன்னமும்
எலிசபெத்தம்மாள், அறியாதகா யிருக்க மரியம்
மாளை "ஆண்டவருடைய தாயாரென்று" உரத்தச
த்தமாய் அவள் புகழ்ந்து கூறலானது இஸ்பிரீத்து
சாந்துவின் ஏவுதல் அல்லாது மற்றப்படியல்லவே:
ஆனதால் இஸ்பிரீத்து சாந்துவானவர்தாமே மரிய
ம்மாளை ஆண்டவருடைய அதாவது தேவனுடை
ய தாயாரென்று சொல்லும்போது இதைப்பார்க்
கிலும் வேதத்தில் வேறே ஆதாரம்வேண்டியதோ?
இப்படியிருக்க முத்தைய பிள்ளை யவர்கள் மரியம்
மாள் தேவனுக்கு மாதாவல்லவென்றும், அப்ப
டி சொல்லக் கூடா தென்றும், வாதித்துச் சாதிப்
பதெல்லாம் மேற்காட்டிய வேத வசனத்துக்கு
விரோதமாயிருக்கிறது மன்றி கொடும் பாவமுமா



யிருக்கின்றது. அதேதென்றால் இஸ்பிரீத்து சாந்
துவானவருக்கு விரோதமாய்த் தூஷணிப்பவன்
ஊழியுள்ளகாலம் பொறுத்தலடையாமல் நித்தி
ய பாவக் குற்றவாளியா யிருப்பான் என்பதே.
(அர்ச். மாற். 3-29) இதை யவர்கள் நன்றாய்க் கவ
னிக்கக் கடவார்கள்.

சங்.—ஆண்டவரென்றால் தேவனைக் குறிக்கின்ற
வசனந்தானே?

உப.—ஆம், அதற்கு யாதொரு சந்தேகமா?
அப்படி சந்தேகமுண்டானால் (சங். 110-1) இவ்
வேத வசனத்தைக் கவனிக்கக்கடவார்கள். அதே
தெனில் தேவனென்பதற்கு ஆண்டவர், என்றே
சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபோலவே எலிச
பெத்தம்மாளும், இஸ்பிரீத்து சாந்துவானவரால்
ஏவப்பட்டுப் புகழ்ந்து கூறிய அவ்வசனங்கள் தே
வனும், மனுஷனும், ஒன்றானவராகிய இரட்சகரை
"ஆண்டவர்" என்றும், அத்தேவ நாமத்தால்
கூறி மரியம்மாளை "ஆண்டவருடைய தாயார்"
அதாவது தேவனுடைய தாயார் என்று புகழ்ந்தி
ருக்கிறதே யல்லாது, அவருடைய தேவதன்மை
யையாவது மனுஷத்தன்மையையாவது பிரித்துப்
பேசப்பட்டிருக்கிறது மல்ல, மரியம்மாளைத் தன்
மைக்கு மாதா அதாவது மனுஷத்தன்மைக்கு மா
தாவென்று சொல்லப்பட்டிருக்கிறது மல்ல.

சங்.—இப்படிப்பட்ட வேத உதாரணங்களிருக்க
முத்தையபிள்ளையவர்கள் தமது தவறுதலில் இரட்சகரு
டைய தேவதன்மையையு மனுஷத் தன்மையையும் வெ
வ்வேறாகப் பிரித்து மரியம்மாள், தேவமாதா அல்லவெ
ன்று சொல்லுவது நியாயமாமோ?

உப.—அது பரிச்சேதம் நியாய மாகாது. ஏனெனில் மாதாவின் மட்டில் யேசுநாதருடைய தேவதன்மையையு, மனுஷத் தன்மையையும் பிரித்துப் பேசுகிறதா யிருந்தால், முடிவுபரியந்தம் மனிதர்களுடைய இரட்சணியம் நிறைவேறுதலுக்குப் பெரிய குறைவாகுமே.

சங்.—அப்படி யானால் மூத்தையபிள்ளை யவர்கள் "யேசுநாதருடைய பிறப்பு, வளர்ப்பு, களைப்பு, ஆயாசம், பசி, தாகம், துன்பம், துக்கம், மரணம், முதலிய செயல்களெல்லாம்" யேசுநாதருடைய தேவ தத்துவத்தைச் சாரா தென்கிறார்களே?

உப.—ஆம், மனுஷசுபாவத்துக் கடுத்த அவைகள் தேவசுபாவத்தில் அணுகாதென்பது வாஸ்தவம். (இதற்குக் கத்தோலிக்குத் திருச்சபைப் பிள்ளைகள் படித்துவருகிற சத்தியவேத ஞான உபதேச குறிப்பிடம் மூன்றும் பிரிவைப்பார்க்கட்டும்) ஆயினும் வேதாகமத்தில் "தேவகுமாரன் பாடுபட்டார்" (எபி. 5-8) என்றும் "தம்முடைய கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்" (காட்சி. 11-8) என்றும் "அவர் சீவனைவிட்டார்" (அர்ச். அருள. 1-வது நிரு. 3-16) என்றும் "தேவன் தமது சுய இரத்தத்தினால் தமது சபையைச் சம்பாதித்துக் கொண்டார்" (அப். நட. 20-22) என்றும் இப்படியாய் மனுஷ செயலை அவருடைய தேவசெயலோடிணைத்து, இரட்சணியம் தேவசெயலாக தேவ நாமத்தால் பொதுப்பட வசனிக்கப்பட்டிருக்கிறதேயல்லாது, தனிப்பட அவருடைய மனுஷதன்மை பாடுபட்டது; மனுஷ தன்மை சிலுவையில் அறையப்பட்டது; மனுஷதன்மை சீவனைவிட்டது; மனுஷதன்மை இரத்தத்தைச் சிந்தினது என்



று பிரித்துச் சொல்லப்படவில்லையே. ஏனென்றால், மனிதர்களுடைய அளவற்றதுங் கொடிதானதுமான பாவங்களை நிவிர்த்திபண்ணி மீட்டு இரட்சிக்க மனுஷசுபாவம் தனிப்பட போதுமானதாயிராததால் தேவகுமாரன் தம்மோடு அம்மனுஷ சுபாவத்தை இணைத்துத் தாமே அவ்விரட்சணிய செயலை நிறைவேற்றத் தமது தெய்வீக தீர்மானமாயிற்று. (இதற்கு பழைய ஏற்பாடு ஆகமங்களெல்லாம் சாக்ஷி கொடுக்கின்றது) இல்லையென்றால் மனுஷர்களுடைய இரட்சணியம் எப்படி நிறைவேறக் கூடும்? ஆகையால் தேவகுமாரனாகிய அத்தேவனுடைய பிறப்பைக் குறித்தும், இரட்சிப்பின் இறப்பைக் குறித்தும் பிரித்துப் பேசுவதும், அந்தந்தச் செயலை அந்தந்தத் தன்மையில் பிரித்தறிய வேணுமென்பதும் பெரியபிசகு.

சங்.—ஐயா இது சரிதான். நீங்கள் முன்சொன்ன ஞான உபதேச குறிப்பிடத்தில் "அவர் எந்த சுபாவத்திலே பாடுபட்டார்? மனுஷ சுபாவத்திலே பாடுபட்டார்" என்றிருப்பதால் இது பிரித்துப் பேசுந்தன்மையல்லவோ?

உப.—அப்படியல்ல, "அவர் மனுஷ சுபாவத்திலே பாடுபட்டார்" என்று சொல்லப்பட்டிருக்கிறதேயல்லாது மனுஷ சுபாவம் பாடுபட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறதில்லை. "அவர்" என்னும் அந்தச்சொல் தேவனில் ஒரு ஆளாகிய தேவசுதனைக் குறிக்கின்றதே யல்லாது அவர் எடுத்துக்கொண்ட மனுஷத்தன்மையைக் குறிக்கின்றதல்ல. ஆனால் தேவனில் பாடுகள் அணுகக்கூடாமல் அதுகள் மனுஷத்தன்மைக் குடையதாயினும், அவைகளைத் தேவன்தாமே சுமந்துகொண்

டதாக அவரில் பிரிக்காமலிணைந்து "அவர்" (தேவன்) "எந்தசுபாவத்திலே பாடுபட்டார்? மனுஷசுபாவத்திலே பாடுபட்டார்" அதாவது, மனுஷசுபாவத்திலே தேவன் அல்லது தேவகுமாரன் பாடுபட்டார் என்று சொல்லப் பட்டிருக்கிறதேயல்லாது மற்றப்படியல்ல.

சந்.—இப்படிக்கொத்த நியாயங்களிருக்க முத்தையபிள்ளையவர்கள் இவைகளை உணர்ந்துபாராமல் மரியம்மாள் தேவமாதா அல்லவென்பதற்கு இந்தமுதல் அதிகாரத்தில்தானே அவர்கள் வேறுவிதமாயெடுத்துக்காட்டும் விபரீதங்களைப் பாருங்கள். அதாவது "யேசுநாதர்" என்கிறபதம் பூர்வசாதனத்தில் ஒரு கருத்தும் உத்தரசாதனத்தில் வேறுகருத்துமாகி சிலேஷை மத்தியபதமாயிருப்பதால், இது போலி நியாயம் என்று தெரியவருகிறது. எப்படி என்றால் "யேசுநாதர் மரியம்மாள் மகன் என்றாவது யோசேப்பின் புத்திரன் என்றாவது யாக்கோபு, யோசே, யூதா, சீமோன், என்பவர்களுடைய சகோதரன் என்றாவது சொல்லும்போது" கருத்து வேறு என்றும், "யேசுநாதர் தேவகுமாரனென்றாவது ஆபிரகாமுக்கு முன்னிருந்தவர் அல்பாவும், ஓமேகாவும், ஆதியும் அந்தமுமா யிருக்கிறவர் என்றாவது சொல்லும்போது" கருத்து வேறு என்றும், அப்படி அல்லவென்றால் யேசுநாதரைப் பற்றிச் சொல்லப்படுகிற சகலமும் வித்தியாசமின்றி தேவனைப்பற்றிச் சொல்லப்படுகிறதாகப் பொருள் கொண்டு தேவன் யோசேப்பின் புத்திரன் என்றும் யோசேப்பு ஆபிரகாமுக்கு முன்னும் அநாதிக்கு முந்தியும், இருந்தவன் என்றும் ஏற்படுகிற நியாயபாசம் உண்டுபடுமென்றும் சொல்லுகிறார்களே இதற்கு நியாயம் என்ன?

உப.—சகோதரனே! அவர்கள் மெத்த ஞானமாக எண்ணிப் பேசுமிவையும் ஓர்வகையில் சுத்தப் பயித்தியமா யிருக்கின்றது. அது எவ்வாறெனில் "யேசுநாதர் மரியம்மாளுடைய மகன், யோ



சேப்பின் புத்திரன், யாக்கோபு முதலானவர்களுடைய சகோதரன் என்றாவது சொல்லும்போது கருத்து வேறு. யேசுநாதர் தேவகுமாரன், ஆதி அந்தமா யிருக்கிறவர் என்றபோது கருத்து வேறு என்ற அது அவர் மனுஷபுத்திரனென மட்டில் தேவகுமாரனாகார். அவர் தேவபுத்திரனென மட்டில் மனுபுத்திரனாகார் என்பதே அவர்களுடைய வெவ்வேறான இருவகைக் கருத்து. ஆனாலோ, தேவகுமாரனாகிய அவர் இந்த இருவகைக் கருத்தையும் ஒன்றாகப் பூட்டியே ஓரே ஆளானவராக மனுஷாவதாரஞ் செய்தார். ஆனதால் யேசுநாதர் தேவனும் மனுஷனும் ஒன்றான அந்த ஓரே ஆளானவராக மரியம்மாளிடம் பிறந்தார்; பிறந்ததினாலே அந்த ஆளானவரே மரியம்மாளுக்கு மகனும், யேசுநாதர் மனுஷாவதாரஞ்செய்யுமுன் தேவதன்மையில் ஓர் ஆளானவராக குமாரனா யிருந்ததுபோலவே அவர் மனுஷாவதாரஞ் செய்தபின்னும், மனுஷத்தன்மையில் அந்த ஒன்றான ஓரே ஆளானவராகத் தேவனுக்குக் குமாரனுமா யிருக்கிறார் என்பது, வேதம் வாசிக்கத்தெரிந்த விற்பனர் யாவர்க்கும் விளங்கத்தக்க விஷயமாம். இப்படியிருக்க, வேதத்தைத் தூரவைத்தவர் போல மனுஷாவதாரஞ்செய்த யேசுநாதருடைய மனுஷத்தன்மைக்கு மாத்திரம் மரியம்மாள் மாதாவாயிருக்கிறாள் என்று தாங்கள் பொருள் கொள்ளும் கருத்துக்கு யுக்தி சுருதியை ஆதாரமாக வைத்துக் கொண்டார்கள். இவர்களா வேதத்தை அறிந்தோராவார். மீளவும் இப்படி பிரித்துப்பேசும் மேலான ஞானமும், யுக்தியும் முத்தையபிள்ளையவர்களுக்குத் தெரிந்ததைப்போல தேவனுக்குத் தெரியாமற் போனதென்ன? அவ்விதம் அவருக்குத் தெரிந்திருக்

குமேயாகில், எலிசபெத்தம்மாளைக் கொண்டு மரி
யம்மாளை "ஆண்டவருடையதாயார்" என்று சொ
ல்லி யிருக்கமாட்டார். ஏனென்றால் முத்தைய
பிள்ளை யவர்கள் கொண்டுவருகிற வேதத்தில் இ
ல்லாத பிரித்தலும், அதற்குமேலாய் உண்டுபடுத்
தும் நியாயபாசமும், இஸ்பிரீத்து சாந்துவாகிய
சர்வேசுரன் அருளிய அவ்வசனத்திற்கு முற்றி
லும் விரோதப் படுகின்றது. நியாயம் இப்படி
யிருக்க, தேவனுக்கு மேலாகப் பேசுவதெல்லாம்
வின் அலப்புதலும், மனுஷ சிற்றறிவுக் குண்டா
ன பயித்தியமுமா யிருக்கின்றதே யல்லாது மற்ற
ப்படியல்ல. அல்லாமலும் முத்தையபிள்ளை யவர்க
ள் தமது தவறு நூல் முதலாம் அதிகாரம் இர
ண்டு பிரிவுகளிலும், யேசுநாதரைப் பிரித்துப்
பேசுந் தன்மை வேதாகமத்தில் ஓரிடத்திலும் பி
ரித்துப் பேசக்காணோம் ஆனால், அவர் பிறப்பு
வளர்ப்பு மற்றுமுண்டான பாடுகளைக்குறித்து மு
ந்தின சம்பாஷணையில் நாம் தெளிவித்திருக்கிற
படி, தேவகுமாரன் பிறந்தார்; பாடுபட்டார்; மரி
த்தார்; உயிர்த்தார்; என்று மனுஷ சுபாவத்தை
யிணைத்துக்கொண்ட தேவ ஆளாகிய திரித்துவத்
தின் அந்த இரண்டாமாளின் தேவ திருநாமத்தா
ல் கூறி வசனிக்கப்பட் டிருக்கிறதாக வேதம் வா
சிக்கத் தெரியவருகின்றது. அந்தப்படி பிதாவாகி
ய சர்வேசுரனும் "இவர்" தேவசுபாவத்தில் எ
ன்னுடைய குமாரனும், மனுஷ சுபாவத்தில் மரி
யம்மாள் குமாரனுமா யிருக்கிறார் என்று பிரித்து
ச் சொல்லாமல் "இவர் நமது நேச குமாரன்"
(அர்ச். மத்தேயு 3-17, 17-5) என்று இரு தன்மை
யும் இணைத்துப் பொதுப்பட ஒரே போனவரா
கத் திருவுளம்பற்றி யிருக்கிறார். இதுவுமன்றி கா



பிரியேலென்னுந் தூதனானவர் மரியம்மாளிருந்த
வீட்டிற் பிரவேசித்து, அக்கன்னித் தாயாருக்
குச் சங்கையாக வாழ்த்துதல் சொல்லி "இதோ
உமது உதரத்திற் கருப்பந்தரித்து ஓர் குமாரனைப்
பெறுவீர்; பின்னும், அவருக்கு யேசு வென்னும்
நாமகரணஞ் சூட்டுவீர்; அவர் மகத்துவமுள்ளவ
ரா யிருப்பதுந்தவிர உன்னதக்கடவுளுடைய கு
மாரன் என்னப்படுவார்." பின்னும் அந்தத் தேவ
தூதன் மரியம்மாளை நோக்கிச் சொன்னதாவது
"இஸ்பிரீத்து சாந்துவானவரும் உமதுமேல் எழு
ந்தருளிவருவார் உன்னதக் கடவுளுடைய வல்ல
மையும் உமக்கு நிழலிடும். ஆகையால் உம்மிடத்
திற் பிறக்கும் பரிசுத்தமானது தேவனுடைய கு
மாரன் என்னப்படும்" (அர்ச். லூக். 1-31, 35)
என்றுரைத்திருக்கிறார். ஆகையால் மரியம்மாள் உ
தரத்திற் கருப்பந்தரித்து அவளின் உதரப்பிறப்
பாக பிறக்கும், அவளுடைய அந்தக் குமாரனே
தேவனுடைய குமாரன் என்று இணைத்துப் பொ
துப்படச் சொல்லுகிறாரே யல்லாது, உம்மிடத்
திற் பிறக்கும்; அந்தப் பிள்ளையானது மனுஷத்
தன்மையில் உம்முடைய மகனும் தேவதன்மையி
ல் கடவுளுடைய குமாரனுமா யிருக்கிறார் என்று
இருதன்மையாகப் பிரிதுச் சொல்லவில்லையே.
தேவ சன்னிதானத்திலிருந்து தேவ அறிக்கை
யாக வந்த அந்தப் பிரதான சம்மனசானவர் பிரித்
துப்பேச அறியாத அச்சங்கதி இந்த முத்தையபி
ள்ளை யவர்கள் அறிந்துகொண்டது மெத்த ஆச்ச
ரியந்தான். அன்றியும் அவர் "அல்பாவும், ஓமே
காவும், ஆதியும் அந்தமுமா யிருக்கிறவர்" என்று
அந்த மேலான சம்மனசானவர் அறியாதிருந்தா
ரோ? அவர் அறிந்து "மரியம்மாளை நோக்கி உம்

யிடத்திற் பிறக்கிறது தேவகுமாரன்" என்று திரித்துவத்தில் இரண்டாம் ஆளானவரைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதேன்? அப்படி அவர் சொன்னது மெய்யானால் மரியம்மாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தவர் ஏக திரித்துவதேவனில் ஓர் ஆளானவரான தேவன்தானே. இத்தேவனே அந்தம்மாளிடம் உற்பவித்துப் பிறந்தது மெய்யாம்; ஆகில் மரியம்மாள் அத்தேவனுக்கு மாதா அல்லாமல் வேறே யாருக்கு மாதாவாகக்கூடும். வேதம் வெளிப்படையாயிப்படிச் சொல்லும்போது அத்தேவனைப் பெற்றமாதாவை ஏன் தேவமாதாவென்று சொல்லக்கூடாது. அப்படி சொல்லக் கூடாதென்று சொல்லுகிறவன் வேதம் அறிந்தவனோ? நியாயந் தெரிந்தவனோ? அப்பிரதான தேவ தூதனுக்கு மேலானவனோ? சகோதரனே! முத்தையபிள்ளையவர்கள், இதை நன்றாய்க் கவனிக்கக் கடவார்கள்.

சங்.—ஐயா! அதில் இன்னொருகாரியம் யேசுநாதர் யோசேப்புக்குப் புத்திரனும், யாக்கோபு, யோசே, சீமோன், யூதா, முதலானவர்களுக்குச் சகோதரனும், என்று சொல்லுகிறார்களே; அப்படியானால் அர்ச். சூசையப்பர் அவருடைய தகப்பனும் யாக்கோபு முதலானவர்கள் அவருடைய சகோதரருமோ? இதின் விபரமென்ன?

உப.—இந்த விஷயத்திலும், அவர்கள் பிசகித்தான் போனார்கள். எப்படியெனில் யோசேப்பு என்ற அர்ச். சூசையப்பர் "யேசுநாதருடைய தகப்பனென்று (அர்ச். லூக். 2-40, 48) சொல்லப்பட்டிருந்தாலும், அந்த அர்ச். சூசையப்பர் அவரை வளர்ப்பதற்கு உதவியாய் தேவமாதாவுக்கு விரத்த பத்தாவாக தேவ எத்தனமாயேற்ப



டுத்தப்பட்ட தகப்பனேயல்லாது, அவருடைய உற்பவத்தின் தகப்பன் அல்லவே." (அர்ச். மத். 1-16, 25. அர்ச். லூக். 1-34) அந்தப்படி யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்கள் அவருடைய சகோதரர் என்று சொல்லப்பட்டிருந்தாலும் (அர்ச். மாற். 6-3) அவரோடு கூடப்பிறந்த உதரத்தின் சகோதரர் அல்லவே. (அர்ச். மத். 10-3, 4; 27, 56. அர்ச். லூக். 6-15, 16. அப். நட. 1-13) இப்படியிருக்க அவ்வொப்பனையும் உறவின் முறையானதை முத்தையபிள்ளையவர்கள் தாம் பேசும் விவாதசம்பந்தத்துக்கு ஓர் அநுகூலமாக எடுத்துக்கொண்டு அவர்கள் அவருடன் பிறந்த சகோதரரைப்போலவும், அர்ச். சூசையப்பர் அவரைப் பெற்ற தகப்பனைப்போலவும் பாவித்து "யோசேப்பு ஆபிரகாமுக்கு முன்னும், அநாதிக்கு முந்தியும் இருந்தவன் என்றும் ஏற்படுகிற நியாயாபாசம் உண்டுபடும்" என்பதாய்ச் சொல்லுகிறது என்னநியாயம்? இவை அகட விகடமும் வேதவிரோதமுமேயன்றி வேறல்ல. மேலும் இவர்கள் எடுத்துணர்த்தும் அந்த நியாயாபாசம் நூதனமாயிவர்கள் ஏற்படுத்தும் ஓர்வித விபரீதச் சொல்லாயிருக்கிறதேயல்லாது கிறீஸ்துச் சபைப் பிள்ளைகளுக்குள்ளே முன்னோர்களாவது, பின்னோர்களாவது ஒருவரும் நினைப்பாருமில்லை; சொல்லுவாருமில்லை.

சங்.—இவைகளையெல்லாம் கவனிக்கும்போது முத்தையபிள்ளையவர்கள் மரியம்மாளைத் தேவமாதா அல்லவென்று எடுத்துக்காட்டும் நியாயமெல்லாம் வேதவசனத்துக்கு அடாத பிசகாய்த்தான் காணப்படுகிறது. ஆனால் தேவமாதா என்பது வேதத்துக் கொத்ததாயினும் நமது புத்திக் கது ஒத்ததாமோ?

உப.—ஆகிலும் சகோதரனே! கேளும். தெய்வீக பரம இரகசியமான ஆழ்ந்த கருத்தும் மேலான ஞானமும் அடங்கிய வேத வசனத்துக்கும் மனுஷனுடைய புத்தி யுக்திக்கும் (வானத்துக்கும் பூமிக்கும் எட்டாததுபோல்) வெகுதூர வித்தியாசமுண்டு. ஆனதால் நமது புத்தி யுக்தியைத் திருச்சபையின் கருத்துக்கிசைய வேதத்தோடொத்து நடத்தவேண்டுமே யல்லாது அதற்குமேலா யுயர்த்தலாகாது. அப்படி யுயர்த்துங்கால் மகா பெரிய பிசகாகி, மலையினின் றுருண்ட கல் வரவர மற்றக்கல்லுக்களி லிடறித் தவிடுபொடியாய் நொறுங்குண்டு போவதுபோல் திருச்சபையில் நின்றுண்டான நமது மெய் விசுவாசம் அவிசுவாசத்தால் பலவிபரீதப்பட்டு நமது ஆத்துமா நொறுங்குண்டாப்போல் பாழுக்குரியதாய்ப் போம் என்பது நிச்சயம். ஆகிலும் மரியம்மாள் தேவகுமாரனை உற்பவித்துப் பெற்ற முகாந்தரமாக அவள் தேவனுடைய தாயார் என்ற சொல் உலக வளமைக்கும் புத்தி யுக்திக்கும் ஒத்த நியாயமேயல்லாது மற்றப்படி யல்ல. இதற்கு இதனடியிற் சொல்லும் நியாயங்களை நன்றாய்ச் சிந்தித்துப் பாரும். அதாவது ஒரு குழந்தையானது தன்தாயின்வயிற்றில் உருவாக்கப் படும்போது, அவள் உதரத்தின் கனியாக அவள் சரீரத்தில் நின்றே தேவன் அதின் சரீரத்தைச் சிருஷ்டிப்பது வாஸ்தவம். ஆனால் அக்குழந்தையின் ஆத்துமமோ அவளிடமாய் அவள் சொந்த ஆத்துமத்தில் நின்று சிருஷ்டிக்கப்படாமல் கடவுள் அதற்கு ஒரு ஆத்துமத்தை வேறே சிருஷ்டிப்பாகப் படைத்து உருவாக்கப்பட்ட அக்கர்ப்பத்தில் தானே அச்சரீரத்தோடு ஒன்றித்திணைத்துக் காலம்நிறைவேறினபோது



அவளுதரத்தின் கனியாகப் பிறக்கச் செய்கிறார். பிறந்த அது ஒரு பாலன் என்றும், ஒரு மனுஷன் பூமியிற் பிறந்தா னென்றும், பின்பு அதற்கோர் பேர் கொடுத் தழைக்கப் படுகின்றது. மேலும் மனு, அல்லது மனுஷன் என்பது பிரதானமாய் ஆத்துமத்தைக் குறிப்பிடுகிற அதற் குரித்தான சொல்லே யல்லாது மற்றப்படி யல்ல. பிள்ளையின் சிருஷ்டிப்பு இப்படியிருக்க, பிள்ளையின் ஆத்துமத்துக்கும், அதின் தாயுக்கும் யாதொரு சம்பந்த முண்டோ? இல்லையே. அப்படியானால் அக்குழந்தையைப் பெற்ற தாயைச் சரீரத் தன்மையின் தாயென்று பிரித்துச் சொல்லுவது புத்தி யுக்திக் கொத்ததா? அல்லது அந்த ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் ஒன்றுபடுத்திப் பிறப்பித்திருக்கிற தேவ செயலின்படி அவளை மனுஷனுடைய தாய் அல்லது அவன் ஆத்துமத்தி னூன்றி யிருக்கிற பேரை உச்சரித்து இன்னானுடைய தாய் என்று அவ்வாத்துமத்தின் மேலான தன்மையைக் கொண்டு சொல்லுவது புத்தி யுக்திக் கொத்ததா? இவைகளைக் கவனிக்க வேண்டியது.

சங்.—ஐயாவே! இவைகள் என் புத்தியில் நன்றாய்ப் பட்டிருக்கின்றது. ஆனால் மனுஷன் என்றுசொல்லுவதும், அவனுக்கோர் பேர்கொடுத் தழைப்பதும், அவனின் ஆத்துமத்தைப் பற்றியதுதானோ?

உப.—ஆம், அதற்கோர் சந்தேகமா? மேலே நாம் எடுத்துக் காட்டியபடி ஆத்துமம் இல்லாமல் சரீரமட்டும் இருந்து அதற்குப் பேர்கொடுத்தும் பிரயோசன மென்ன? அன்றியும் அதை ஒரு மனுஷன் என்று சொல்லுவதற்கும் ஏதுவல்ல. (உதாரணமாக) ஒருவனை நோக்கி ஓ! மனுஷனே

என் றழைத்தாலுஞ் சரி, அல்லது அவன் பேரை
க் கொண்டு உச்சரித்துக் கூப்பிட்டாலுஞ் சரி,
அவனில் ஆத்துமம் என்னவென்று மறுமொழி
கொடுக்குமேயல்லாமல் சரீரமல்லவே. ஆத்துமம்
இல்லாவிட்டால் சரீர மறுமொழிகொடுக்க ஏதுவி
ல்லாமல் போகாமற்கிடக்கும். சகோதரனே! மனு
ஷனைப்பற்றிய காரியம் இப்படியானதால், மனுஷ
ரூபவதரித்த தேவகுமாரனைப் பற்றியும் புத்தி
நியாயத்துக்கு இவ்விதமா யோசிக்க வேண்டியது.
அதாவது அவர் மனுஷ சுபாவத்தோடு தமது
தேவ சுபாவத்தை ஒன்றிக்க மரியம்மாளிடம் உ
ற்பவித்து, காலம் நிறைவேறின பின் அவளுதர
த்தின் கனியாகப்பிறந்து இரக்ஷகர் என்னும் அர்
த்தமுடைய யேசுவென்ற பேர்கொடுத் தழைக்க
ப்பட்ட அந்தெய்வ மைந்தனை அவருடைய அம்
மேலான சுபாவத்தைக்கொண்டு இரக்ஷகராகிய
தேவனென்றுசொல்லுகிறது தகுதியா? அல்லது
யூதர்கள் அவருடைய மனுஷத்தன்மையைக் குறி
ப்பிட்டு, அவரை ஒரு மனுஷனைமட்டு மெண்ணி
ப் புறக்கணித்தாற்போல அவ்விதம் அவருடைய
மனுஷத் தன்மையைப் பிரித்துப் பேசுகிறது த
குதியா? அந்தப்படி அவரைப் பெற்ற மாதாவை
அவருடைய அம்மேலான சுபாவத்தைக்கொண்டு இ
ரக்ஷகராகிய தேவனுடைய தாயார் என்று சொல்
லுகிறது தகுதியா? அல்லது இரக்ஷகராகியமனு
ஷனுடைய தாயாரென்று சொல்லுகிறது தகுதி
யா? தேவ திரித்துவத்தில் ஓர் ஆளானவராகிய அ
வரை அவ்விதத் தன்மையைப் பிரித்துச் சொல்
லுகிறதாயிருந்தால், தேவனுடைய மனுஷத் தன்
மை மரியம்மாளிடம் உற்பவித்துப்பிறந்தது. அ
ம்மனுஷத் தன்மை பாடுபட்டு மரித்துயிர்த்தது.



அம்மனுஷத் தன்மை இரக்ஷித்தது. என்றல்ல
வோ சொல்லவேண்டியதாகும். அப்படிச்சொல்
லுங்கால், தன்மையென்ற அது (தேவ ஆள்தவிர)
மனுஷனெனவேறோர் ஆளாகவல்லவோ வந்துமு
டியும். மேலும் அப்படிச் சொல்லுவதும் அதை
அடிபிடித்து வாதிப்பதும் தெய்வீக இரக்ஷணிய
செயலுக்கு மகா இழிவும், வேதத்துக்கொவ்வா
விகடவார்த்தையும், விபரீத கொள்கைகளுமாகு
மே. அப்படிப்பட்ட வேறுபாடும் விபரீதங்களு
மில்லாமல், இரக்ஷணிய செயல் நிறைவேறும்படி
க்குத் தேவன்தாமே தமக்கு மாதாவாக மரியம்
மாளைத் தெரிந்துகொண்டு, அவள் வயிற்றில் அ
வர் ஸ்திரீயின் வித்தாக உற்பவித்து (1. மோசே.
3-15; அர்ச். அருள. 1-13; கலா. 4-5) அத்தேவன்
தாமே மனுஷனாகப் பிறந்து பாடுபட்டு மரித்து
யிர்த்தார். இதுவே மனுட ஆத்துமாக்கள் ஈடே
றும் பொருட்டு மேலான இரக்ஷணியமாயிருக்கின்
றது. இப்படி அவர் மனுஷத் தன்மையைக் கொ
ண்டவராயினும், யூதர்களைப்போல அவரை அவ
மதியாமல், அவர் தேவன் என்றே யாவரும் விசு
வசிக்கும் பொருட்டு அவருடைய அந்தமேலான
தேவதன்மையைப் பாராட்டி, அவரைப்பெற்ற
மாதாவைத் தேவமாதா என்று சொல்லுவதே
தகுதியாயிருக்கின்றது மல்லாமல் புத்தி யுக்திக்
கும் ஒத்த நியாயமா யிருக்கின்றது.

சங்.—அப்படியானால் அந்த அதிகாரத்தில் இரண்
டாவதாக முத்தைய பிள்ளை யவர்கள் தேவகுமாரன் மனு
ஷனாக அவதரித்தகாலத்தில் மாதாவான மரியம்மாள்
அதற்கு முன்னுள்ள அவருடைய தேவதன்மைக்குஞ்
சேர்த்து எப்படி தேவமாதாவாக இருக்கக்கூடும் என்ப
தும், மரியாயி தேவமாதா அல்லவென்றால், யேசுநாதர்

தேவனல்லவென்று எப்படி நியாயம் எற்படும் என்றும்
தெரியவில்லை என்பதாய்ச் சொல்லுகிறார்களே 'ஐயா
வே! இதற்கு வகையென்ன நியாயம் என்ன?

உப.—இதற்கு வகையும் நியாயமும், முத்
தையபிள்ளையவர்கள்தாமே கடவுளைநோக்கி நீர்
தேவனுச்சதே, நீர் துவக்கமும் முடிவுமில்லாத
வராயிருக்க, உமக்கு மாதாவான மரியம்மாள் மு
ன்னுள்ள உமது தேவதன்மைக்குச் சேர்ந்து எப்
படி தேவமாதாவாக இருக்கக்கூடும் என நேரே
தெரிந்துகொள்ள • வேண்டியதாமே. ஆயினும்,
இப்படிப்பட்டவர்கள் இன்னமும் இதற்கொத்த
வேறுகேள்வி யாதெனில் பிரியக்கூடாத திரித்
துவ ஏகதேவனுயிருக்கிற அவர் தம்மில் ஓராளா
கிய சுதனுனவர் பிரிந்து எப்படி நரரூபமாய்ப்பிற
க்கக்கூடும் என்றும், அவர் எங்கும் நிறைந்தவ
ராய் இதோ வானுதி வானங்களும் தம்மைக் கொ
ள்ளாதென் றிருக்க (1. இராசா. 8-27) தம்மால்
சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்தில்
எப்படி அடங்கியிருந்து பிறந்தார் என்றும்? பிறந்
த அந்தச் சிறுகுழந்தையி னிடமாக அகண்டிதமா
கிய தேவன் எப்படி கண்டிதமாயடங்கி ஒன்றி
த்து வாசம்பண்ணினு ரென்றும், (கேள்விகேட்
கிற ஒரு அஞ்ஞானி அல்லது யூனிட்டேரியனுக்
கொப்பாயிவர்களும்) கேள்வி கேட்பார்கள்போ
லவாம்; இதற்கு அடி ஷாய்கிப்பாவர்களே மறு
மொழி சொல்வார்களே யாமாகில், அதற்கும்
நாம் மறுமொழி சொல்லலாகும். ஆனால், இவ்
வித தர்க்கவாதங்க ளெல்லாம் விட்டு நேர்நிலை
மையான எண்ணத்தோடு தெளிந்ததும், நிர்மா
ணமுமான வேத நியாயங்களின்படி அறிய வே
ண்டுமானுல் மேலே நாம் எடுத்துக்காட்டியது



போல மனுக்குல இரக்ஷணியத்துக்காகத் தேவ
குமாரனுகிய தேவன் தாமே மனுஷனுய் அவ
தரிக்கச் சித்தமாகி, அந்தப்படி தாம் பிறக்கும்
வழியாகத் தம்மாற் சிருஷ்டிக்கப்பட்ட பரிசுத்
தக்கன்னிகையான மரியம்மாளைத் தம் அவ்விரக்ஷ
ணிய தேவ மநுத்துவத் தாயாராகத் தெரிந்து
கொண்டார் என்பதே அதின் சத்தியமா யிருக்கி
ன்றது. இதைவிட்டு, முத்தைய பிள்ளையவர்களைப்
போல தன்மைக்கு; மாதா தன்மைக்கு மாதாவெ
ன்று இழுத்துப் பிரித்துப்பேசுகிறதா யிருந்தால்,
அது தேவனுக்கும், அவர் அருளிச்செய்த திவ்
விய வேதத்திற்கும் அவர் ஸ்தாபித்த திருச்ச
பையின் சத்திய போதகங்களுக்கும் அடங்கா மேலா
னதாயுள்ள புத்தியுக்தியும் உதவா ஞானமுமா யி
ருக்கும் என்பதை வேதம் வாசிக்கத்தெரிந்த விற்
பனர் யாவரும் அறிந்து கொள்ளக்கூடாத விஷய
மல்ல. ஆகிலும், முத்தையபிள்ளை யவர்கள் இவ்வி
ஷயத்தில் "தேவகுமாரன் மனுஷனுக அவதரித்த
காலத்தில் மாதாவான மரியம்மாள் அதற்கு முன்
னுள்ள அவருடைய தேவதன்மைக்குஞ் சேர்ந்து
எப்படி தேவமாதாவாக இருக்கக்கூடும்" என்ற
தெரியாமையான அம்முதல் கேள்விக்குச் சுருக்க
மான வேத உதாரண மறுமொழியாவது; முன்
னுள்ள தேவனுனவர் (அர்ச். அருளப்பர் 1-1, 2)
"பின்னுள்ள மனுஷனுக மரியம்மாளிடம் உற்பவித்
து; "உம்மிடத்திற் பிறக்கிறது தேவகுமாரன்"
(அர்ச். லூக். 1-32) என்னப்பட்டாரோ அப்போ
தே மரியம்மாள் (மனுஷமாதா அல்லது மனுஷத்
தன்மைக்கு மாதா என்று சொல்லப்படாமல்) ம
னுஷத் தன்மையோடு "முன்னுள்ள அவருடைய
தேவதன்மைக்குஞ் சேர்ந்து (அவ்வொரே தே

வாளானவருக்கு மாதாவாக) தேவமாதாவாக இருக்கக்கூடும்" என்பதால், அந்தப்படி "ஆண்டவருடைய தாயார் அதாவது தேவனுடைய தாயார்" (அர்ச். லூக். 1-43) என்றழைக்கப் பட்டாள்.

பின்னும் "மரியாயி தேவமாதா அல்லவென்றால், யேசுநாதர் தேவனல்ல என்று எப்படி நியாயம் ஏற்படும்" என்பதாய் அவர்கள் கேட்ட இரண்டாவதான (தெரியாமையின்) கேள்விக்கு மறுமொழி ஏதென்றால், மேற்காட்டிய வேத உதாரண தேவ அறிக்கையின்படி "உம்மிடத்திற் பிறக்கிறது தேவகுமாரன் என்னப்படும்" என்றதினால். "பிறந்த அதற்குப் பெற்றவள் மாதா" என்பது நியாயம் ஏற்படும் அல்லவோ? ஆகையால், பிறந்த அவர் தேவகுமாரனான தேவனானதால் அவரைப்பெற்ற மரியம்மாள் அத்தேவனுக்கு மாதாதானே. இதுநிமித்தம் அவளிடத்திற் பிறந்த அந்த யேசுநாதர் தேவன் என்று விசுவசிக்கிறோம். ஆனால், முத்தையபிள்ளை யவர்கள் கருதல்படி "மரியம்மாள் தேவனுக்கு மாதா ஆகக்கூடாதென்றால், அந்தப்படி தேவ குமாரனாகிய தேவன் மரியம்மா ளிடத்தில் உற்பவித்துப் பிறக்கக்கூடாதென்றாற்போ லாயிற்று." அப்படியானால், மரியம்மாளிடத்திற் பிறந்த அந்த யேசுநாதர் தேவனும் அல்லவென்றாற்போலாகுமே. இந்நியாயத்தைப் பற்றியே "மரியம்மாள் தேவமாதா அல்லவென்று சொன்னால் யேசுநாதர் தேவனல்லவென்று சொல்லுவதாகும்" என சவுந்தரநாயகம் பிள்ளை யவர்கள் சொல்லுகின்றார்கள் இது நியாயந்தானே. இதை முத்தையபிள்ளை யவர்கள் நன்றாய் கவனிக்கக்கடவார்கள். மீளவும் அதின் சுருக்கமாவது யேசு



நாதர் தேவன் என்றால் அவரைப்பெற்ற மரியம்மாள் தேவமாதா ஆகக்கூடும். மரியம்மாள் தேவமாதாவாகக்கூடாதென்றால் தேவன் அவளிடத்தில் பிறக்கக்கூடாதவரா யிருக்கிறார் என்பதே. அப்படியானால், அவளிடத்தில் பிறந்தவர் தேவனல்லவென்றே நியாயம் பாரிக்கும். காரியம் இப்படியிருக்க வேதத்தை மெத்தபடித்த ஞானிகளுக்கு இதிலோர் தெரிந்து கொள்ளுதலும் வேண்டுமோ? தங்களுக்கிவைகள் தெரியவில்லை என்றால் தங்கள் படிப்பின் கனத்துக்கு மெத்த குறைவாகுமே.

சந்.—இப்படிப்பட்ட நியாயங்களிருக்க இன்னமும் முத்தையபிள்ளை யவர்கள் அந்த அதிகாரத்தில் சொல்வதைப் பாருங்கள். அதாவது நாம் அப்படி மரியம்மாளைத் தேவமாதா என்று சொல்வதால் "மனுஷத் தன்மைமாத்திரமுடைய மரியம்மாள் தேவதன்மைக்கு மாதாவாகிறது அசாத்தியம்" எனவும் "யேசுநாதர் தேவனாயிருக்கிறதினிமித்தம் அவர்தாயாகிய மரியம்மாளுக்கும் தேவதன்மை உண்டென்று ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று" நாம் சொல்வதாக சொன்னால், மரியம்மாளுக்குத் தேவத்தன்மை இருக்கிறதினிமித்தம், அவளுடைய தாய்க்கும் தேவதன்மை உண்டென்று ஒத்துக்கொள்ள வேண்டுமே. இப்படிப்போனால் முடிவெங்கே? "ஆதாமுடைய சந்ததியாராகிய மனுஷர் அனைவரும் தேவதன்மை உடையவர்கள் என்றல்லோ ஒத்துக் கொள்ள வேண்டும்" எனவும், இந்தப்பிரகாரம் "மனுஷீகத்தை தெய்வீகத்துக்குச் சமமாக்கி, தெய்வீகத்தை அதன் தன்மைக்கு அடாத விதமாய்த் தாழ்த்தி உபதேசிப்பது தேவதூஷணமோ அல்லவோ?" எனவும் சொல்லுகின்றார்களே.

உப.—இது விஷயத்திலும் பிசகித்தான் சொல்லுகின்றார்கள். 1-வது.—"மரியம்மாளைத் தேவமாதா என்பதினால் அவள் தேவதன்மை

டையவள்" என்று பரிச்சேதம் அர்த்தமாகிறதல்
ல. அவளிடத்தில் உற்பவமாகிப் பிறந்தவர் தேவ
ன் என்றே அருத்தமாகும். ஆனதால் தேவனு ம
னுஷனும் ஒன்றான தேவனுக்கு மாதா என்று நா
ம் சொல்லுகிறதே யல்லாது, தேவ தன்மைக்கு
மட்டும் அல்லது மனுஷதன்மைக்கு மட்டும் மரி
யம்மாள் மாதா வென்று நாம் சொல்லுகிறதே யி
ல்லை. 2-வது.—மனுஷத் தன்மைமாத்திர முடை
யமரியம்மாள் யேசுநாதருடைய மனுஷத்தன்மை
க்கு மாத்திரம் மாதாவானால், யேசுநாதருடைய
தேவதன்மைக்கு மாதா யார்? அதுக்கோர் மாதா
வேண்டுமோ? ஆனால், தேவனுக்கு உற்பவமு மில்
லை; பிறப்பு மில்லை, அதினால் அவருக்கு மாதாவு
ம் இல்லை என்றால் "தேவனுடைய ஒரே பேரான
குமாரன் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியா ளி
டத்தில் உற்பவித்து அற்புதமாய்ப் பிறந்தார்"
என்று தங்கள் விசுவாசப்பிரமாணத்தில் சொல்கி
ன்றார்களே இது எதுக்கு? விளையாட்டுக்கோ? மே
லும் தேவதூதனானவர் கன்னிமரியாளை நோக்கி,
"உமது உதரத்தில் கர்ப்பந் தரித்து ஓர் குமார
னைப் பெறுவீர். உம்மிடத்தில் பிறக்கும் அது
தேவகுமாரன் என்னப்படும்" என்றது பொய்யாக
வேணுமே. ஆ! முத்தையபிள்ளை யவர்களுடைய
பிசகு எவ்வளவா யிருக்கிறதென்று சிந்தித்துப்பா
ருங்கள். 3-வது.—யேசுநாதர் தேவனா யிருக்கிறது
னிமித்தம் (அவரைப்பெற்ற மரியம்மாள் அத்தே
வனுக்கு மாதாவாக யிருக்கிறாள் என்று சொல்
லுகிறோமே யல்லாது) "அவர் தாயாகிய மரியம்
மாளுக்கும் தேவதன்மை உண்டென்று ஒத்துக்
கொள்ளத்தான் வேண்டும் என்று" நாமாவது
தேவமாதா வணக்கம் என்னும் புத்தகத்திலாவது



கத்தோலிக்கு விசுவாசிகள் எழுதிய மற்றெந்த
புஸ்தகங்களிலாவது சொல்லுகிறதில்லையே; சொ
ல்லவுங்கூடாதே; அப்படி சொல்லவுங் காணோ
மே. அந்தப்படி மரியம்மாளுக்குத் தேவதன்மை
உண்டென்று கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களில்
யாதா மொருவர் கருத்துற்று நினைப்பாரு மில்லை.
யோசிப்பாரும் இல்லையே. இது தேவன் அருளிய
முதல் கற்பனைக்கு விரோதமான தேவதுரோகப்
பாவம் என்று கத்தோலிக்கர் யாவருக்கும் நன்றா
ய்த் தெரிந்தகாரிய மாச்சுதே; ஆ! முத்தையபிள்
ளை யவர்களுடைய பொய் எவ்வளவா யிருக்கிற
தென்று பாருங்கள். மேலும் அவர்கள் தங்கள்
"தவறு" நூலுக்கு ஏற்ற கோட்பாடாயும், விசே
ஷமாய் தேவதாயாருடைய வணக்கத்துக்கு வி
ரோதமாய் கொண்ட அகங்காரத்தினாலேயும்,
தம்மனசுப்படி தேவதூஷணமாக பொய்க்கஞ்சா
மல் எடுத்தெழுதிக் கொண்டார்கள். ஆனதால்,
நாம் இதை ஒப்புக்கொள்ளவும், இதற்கு மறு
மொழி சொல்லவும் அவசியமில்லை. 4-வது.—
அவர்கள் தாம் இந்த முதல் அதிகாரம் இரண்
டு பிரிவுகளிலும் சற்றே முன்னும் பின்னுமா
கச் சொல்வதைக் கொஞ்சங் கவனிக்க வேண்
டியது. அதாவது, "யேசுநாதருடைய தேவத
ன்மையைப்பற்றிச் சொல்லப்படுகிற சுயம்பு, சர்
வவியாபகம், அகண்டிதம், அரூபம் முதலிய தே
வ லட்சணங்க ளெல்லாம்" அவருடைய மனுஷ
தன்மைக்கு இல்லை, எனப் பிரித்தறியவேண்டு
மென்றாற்போல வேதம் கற்பிக்கிற தாகவும்,
நாம் "இந்தவித்தியாசத்தை மறந்து அவ்விரு
தன்மையும் ஒன்றாகக் குழப்பிப்போட்டோம் எ
ன்றாற்போலவும்; அவர்கள் வம்பாய் எண்ணி

க்கொண்டு, இதினால் ஒன்றோடொன்று முரணி
கடவுளுக்கு உற்பத்தி, வளர்ச்சி, துன்பம், துக்க
ம் முதலிய குறைகள் உண்டென்று ஏற்படுகிற
சுய விரோ தாண்டாந்தத்தில் முடியும்' என நமக்
கு மேற்புத்தி சொல்லிக் கொண்டார்கள். இரக்ஷ
ணிய செயலில் வேதம் கற்பியாத இவ்வித வித்தி
யாசங்களை முத்தையபிள்ளை யவர்கள் "வேதம் க
ற்பிப்பதாக" பொய்யா யெழுதி அபிப்பிராயங்
கொண்டு அடஞ்சாதித்துக் கடைசியாய் "மனுஷீ
கத்தைத் தெய்வீகத்துக்குச் சமமாக்கித் தெய்வீ
கத்தை அதன் தன்மைக்கு அடாதவிதமாய்த் தா
ழ்த்தி உபதேசிப்பது தேவ தூஷணமோ அல்ல
வோ?' என நமதுமேற் குற்றமும்பாரித் தெழுதி
க்கொண்டார்கள். ஆனால் இவைகள் பித்தம் அதி
கரித்தவர்கள் கனக்கண்டு வாய்குளறிப் புலம்பும்
வன்மைபோ லிருக்கின்றது. என்றாலும், கடவுள்
அநாதியாய் தம்மில் தானாயுள்ளவர், அச்சயன்,
அரூபி, அறுகுணன், எங்கு நிறைந்த ஏகாதிகர்த்
தன், பூமிதர் ஐம்புலத்தடங்கா அகண்டாகண்ட
ன் என வேதத்தை உணர்ந்தோர் யாவரும் அறி
யாதவரல்லவே. ஆகிலும் அகண்டிதமாகிய அத்
தேவன் கண்டிதமாகிய மனுஷத் தன்மைக்குள்
அமைந்து பிறக்கச் சித்தமானால், யார் தடுக்க வல்
லவன். அப்படியே அத்தேவன் தாமே தம்மாற்
சிருஷ்டிக்கப்பட்ட மனுஷர் அனைவரையும் மீட்டு
இரக்ஷிக்கவேண்டிய தவசியமென தம்மிலே தாம்
அறிந்து நேசித்தவராய் மனுஷீகத்தில் தம்மைத்
தாழ்த்தி (கலா. 4:4, 5; பிலி. 2:6, 8) இருக்கிறப
டியால் நம்மைத் "தேவதூஷணர்" என்ற முத்தை
யபிள்ளை யவர்கள் இப்போது என்ன சொல்லு
வார்களோ நாம் அறியோம். ஆனால் தேவன் தா



மே மனுஷரை மீட்க இப்படியாய்த் தம்மைத் தா
ழ்த்தியிருக்க அப்படி "தாழ்த்தக்கூடா" தென்
றும். அது "அடாத செய்கை" யென்றும் சொ
ல்லுகிறவர்களும், இவர்களைச்சேர்ந்த புரோடெ
ஸ்டாண்டாரான சுவிசேஷ சங்கத்தாருமே அத்
தேவனுக் கெதிரியாய் நின்று தூஷணிக்கிற தேவ
தூஷணரா யிருக்கிறார்களென்று நாம் நிர்பானிக்க
வேண்டியதுமன்றி, தேவனும் மனுஷனும் ஒன்றா
னவராக அவர் தம் நேசப்படி சென்மித்துப் பிறந்
த தெய்வீக ஆளானவரை நெஸ்தோரியனுக்கொ
ப்ப இவர்கள் "இரண்டாளானவராக பிரித்து அ
ந்தந்த செயலை அந்தந்த தன்மையில் போதிக்க
வேணும்" என்பதாலும் "அவ்விதம் பிரிக்கவி
ட்டால் அவ்விரு தன்மையும் ஒன்றாய் குழம்பி ஒ
ன்றோடொன்று முரணிவிடும்" எனப் பதிலாய்
சந்தேகத்தை ஊட்டுவதாலும் இது நிமித்தம்
"மரியம்மாள் தேவமாதா அல்ல" என்று சாதிப்
பதாலும் இவர்கள் வேதத்திற்கும், அதின் விசு
வாசப் பிரமாணத்திற்கும் விரோதிகளாயிருக்
கிறார்களென்று சொல்லவேண்டியது மாகும்.

சங்.—நல்லது ஐயா, நெஸ்தோரியனுக் கொப்ப
என்று சொன்னீர்களே அதின் விபரம் என்ன?

உப.—அதாவது, இந்தமுத்தையபிள்ளை யவ
ர்களைப்போல 420-ம் வருஷத்தில் நெஸ்தோரிய
ன் என்ற ஒரு வேதப்புரட்டன் எழும்பிக் கிறீஸ்
துவின் தெய்வீகத்தையும், மனுஷீகத்தையும் இர
ண்டாகப் பிரித்து கிறீஸ்துவர்களுக்குச் சந்தேக
த்தைப் பூட்டி, இப்போதிவர்கள் "மரியம்மாள் யே
சுவின் மனுஷத்தன்மைக்கு மாதாவே யல்லாது
தேவமாதா அல்ல, அப்படி சொல்லவுங் கூடா
தென்றதுபோல அவனும் மரியம்மாள் கிறீஸ்து

வின் மனுஷீக ஆளானவருக்கேமாதாவேயல்லாது
தேவமாதா அல்ல, அப்படிச்சொல்லவுங் கூடா
தென்று போதித்து, அநேகரைத் தன் துர்ப்போ
தனைக்குள் இழுத்துக்கொண்டான். இவனுடைய
அந்தத் தப்பறைகளைச் சோதிக்கும்படி அர்ச். பா
ப்பானவர் அநுமதியில் 431-ம் வருஷம் ஞூன்மா
தம் 22-ந்தேதி இருநூறு மேற்றிராணிமார்களு
ம், மற்ற வேதசாஸ்திரிகளும் எபெஸ் பட்டணத்
தில் பொதுவான சங்கங்கூடி, அத்தப்பறையான
போதனைகளைப் பரிசோதித்து அவைகள் வேதத்
திற்குந் திருச்சபையின் சாதாரண ஏக விசுவாசப்
போதனைக்கும் முற்றிலும் விரோதமெனக் கண்
டு அவனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் அத்
துர்ப் போதனைகளைத் தள்ளும்படி நியாயம் சொ
ல்லியும், அவர்கள் அதற்குச் சம்மதியாமலும், ம
னந்திரும்பாமலு மிருந்ததால் திருச்சபையானது
அவனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் தன் ஐக்
கியத்திற்குப் புறம்பாய் பதிதாகத் தள்ளிச் சபி
த்து, அன்று அத்திருச்சபைச் சங்கத்தார் திருமே
“அர்ச். மரியாயே சர்வேசுரனுடைய மாதாவே”
என்று நாம் நாள்தோறும் பிரார்த்தித்து வேண்
டிக்கொள்ளுகிற பிரியதத்த மந்திரம் துவக்கமுத
ல் முடிவு வரையுமுள்ள அந்தமன்றாட்டை முடித்
துகிறீஸ்துவர்கள் யாவரும் சாதாரண முறைப்படி,
தேவமாதாவை நோக்கி வேண்டிக்கொள்ளக் கற்
பிக்கலாயிற்று. அதுமுதல் இதுவரையும் அதற்கு
விரோதமாய்ப் போதிப்பாருமில்லை, சாதிப்பாரு
மில்லை. இப்படியிருக்க, இந்த நூற்றாண்டின் க
டைசியாக அந்த நெஸ்தோரியுஸ் என்கிற பதித
னுடைய தப்பறைகளை இந்த முத்தையபிள்ளையவ
ர்கள் கைக்கொண்டு யேசுநாதருடைய தெய்வீகத்



தையும், மனுஷீகத்தையும் இரண்டாளானவரைப்
போலாகப் பிரித்து, அவருடைய மாதாவைத்
தேவமாதாவென சொல்லக்கூடா தென்று போ
திக்கத் தலையெடுத் திருக்கின்றார்கள். மேலும், இ
ந்த துர்ப்போதனையை அங்கீகரித்துப் பிரசித்தப்
படுத்தின சுவிசேஷ சங்கத்தார் என்றழைக்கப்
படுகிறவர்களும் பூர்வ பூர்வ மாய்ச் சத்தியவேதத்
தில் நின்று வந்த மெய்விசுவாச சுவிசேஷ வசனத்
தை தங்கள் அவிசுவாசத்தால் கெடுத்து அச்சிட்
டுப் பிரஸ்தாபப் படுத்தியதால், அந்த நெஸ்த்
தோரியுஸ் வகுப்பைச்சேர்ந்து அவனுக்கொப்பச்
சுவிசேஷத்தைக் கெடுத்த சுவிசேஷ சங்கத்தாரா
யிருக்கிறார்கள் எனக் காண்கிறோம்.

சங்.—ஐயாவே! அதெல்லாந் தங்களுக்கு ஒப்பா
தென்றாற்போல் முத்தையபிள்ளையவர்கள் தமது வண
க்கத்தயறு 5, 6-ம் பக்கங்களில் “பூர்வ பிதாக்களாவது,
மற்றெந்த மனுஷராவது பேசுகிற பேச்சுக்கள், செய்கி
ற செய்கைகள் எல்லாம் தேவவசனத்துக்கு ஒத்திருக்
கும், அளவுமாத்திரம் நமக்கு அங்கீகாரம் அன்றி மற்
றப்படி அவைகள் நமக்குப் பிரமாண மாகா” என்றும்
இதற்கு அவர்கள் “நான் உங்களுக்குப் பிரசங்கித்த
சுவிசேஷத்தை யல்லாமல் நாங்களாவது வானத்திலிரு
ந்து வருகிற தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை
உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப் பட்ட
வனா யிருக்கக் கடவன். (கலா. 1-8, 9,) என்ற இவ்
வேத வசனங்களோடே (தீத். 1-13, 14; மத். 15-3, 9)
இவ்வேத வசனங்களையும் ஆதாரமாகச் சேர்த்துக்கொண்
டு திருச்சபை இவ்விதமாய் “நேரே தேவவசனத்தண்
டை செல்லாமல் பிதாக்களுடைய அபிப்பிராயங்களை
யும், பாரம்பரைகளையும் பிரமாணமாகத் தேடுகிறது”
என்றும், தேடியும் பலன் இல்லை ஏனெனில் “ஒரு பிதா
இன்னொரு பிதாவுக்கு விரோதமாகவும், ஒரு பிஷப்
இன்னொரு பிஷப்புக்கு முரணாகவும், ஒரு சங்கம் இன்

ணொரு சங்கத்துக்கு மாறாகவும், ஒரு சபை இன்னொரு சபைக்கு எதிரிடையாகவும், அபிப்பிராயங் கொண்டு அடஞ்சாதித்து வந்தார்கள்" என்றும் இணைத்து முடித்து சொல்லுகின்றார்களே இது மெய்யோ? அப்படியானால் பிதாக்கள் அபிப்பிராயங்களையும், பிஷப்புக்களாகிய மேற்றிராணிமார் கூடிய சங்கத்தின் தீர்மானங்களையும் நாம் எப்படி அங்கீகரித்து அவைகளை விசுவாசப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளுகிறது? சரியோ?

உப.—சகோதரனே! இதற்கு விடையாக நான் இதனடியில் எடுத்துக்காட்டும் நியாயங்களைச் சற்றுக் கவனித்துப்பாரும்; அப்போது அதின் தெளிதல் அறிவீர்.

1-வது.—கலாத்தியருக்கு அப்போஸ்தலர் எச்சரித்திருக்கிறபடி கிறீஸ்துவின் உத்தம சுவிசேஷத்தை விட்டு, வேறே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் இந்த முத்தையபிள்ளையவர்களும், இவர்களுக்குத் துணையாக நின்று அச் சுவிசேஷத்தைக் [illegible] சுவிசேஷ சங்கத்தாருமோ? அல்லது கத்தோலிக்குத் திருச்சபையும் அதின் சங்கத்தாருமோ? என்று நாம் இதில் முந்தி சம்பாஷித்துக் கொண்ட நியாயங்களில் எடுத்துக்காட்டியிருக்கிற கிறீஸ்துவின் மெய்ச்சுவிசேஷ வாக்கியங்களையும், தேவமாதாவைப்பற்றி யுரைத்திருக்கிற மற்றவிசேஷங்களையும், ஆராய்ந்து சிந்தித்துப் பார்த்தால் அதின் உத்தமம் நன்றாய்த் துலங்குமே. ஆகிலும் அவைகளை இப்போதறியும்படி சுருக்கத்தில் வெளிப்படுத்துவோம். அதேதென்றால், திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய தேவன் தமது தேவசுபாவத்தோடு மனுஷசுபாவத்தையுமெடுத் தவதரிக்கக் கன்னிமரியம்மாள் வயிற்றில் செனித்துப் பிறந்தாரென்றும், (அர்ச். லூக்.



1-31, 32, 35) பிறந்த அந்த ஒரே தேவாளாகிய "தேவனுக்கு மரியம்மாள் மாதா" வென்றும், (அர்ச். லூக். 1-43) அவர் தமது தேவசுபாவத்தையும், மனுஷ சுபாவத்தையும் கொண்டேக ஆளானவராக இணைந்து பிரியாவண்ணம் தமது இரக்ஷணிய செயலை முடித்தார். (அர்ச். அருள. 1-14; கலா. 4-4, 5; பிலி. 2-6, 8; எபி. 2-14, 15) என்றும் தேவன் அருளிய இவ்வுத்தம சுவிசேஷம் போதிக்கிறது. இதற்கு விரோதமாய் தேவ குமாரனாகிய அந்த ஒரே ஆளானவரை இருவராகப் பிரிப்பதைப்போல் தன்மைக்கொரு மாதாவென மரியம்மாள் அவருடைய மனித தன்மைக்கு மாத்திர மாதாவேயல்லாது இரு தன்மையும் சேர்ந்த அந்த ஒரே தேவாளானவருக்கு அவள் மாதாவல்லவென்று வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் இந்த முத்தையபிள்ளையவர்களும் இவரை அங்கீகரித்த சுவிசேஷ சங்கத்தாருமேயல்லாமல் வேறேயார்? ஆனால், தடியை யெடுத்து ஓங்கினேனேயல்லாது அடிக்கவில்லை என்றாற்போல இருதன்மையாகப் பிரித்தோமேயல்லாது இரண்டாளாகப் பிரிக்கவில்லை என்று போக்குச்சொல்லுவார்களாக்கும். அந்தப்படி "மனிதத்தன்மைக்கு மாத்திரம் மரியம்மாள் மாதாவென்றால், தேவதன்மையான அத் தேவாளானவருக்கு அவள் மாதா அல்லவென்று அர்த்தமாகுமே? அப்படியானால் மனிதத்தன்மையும் ஓர் ஆளாகவேணுமே. இப்படியாயிவர்கள் அவருடைய பிறப்பையும், இரக்ஷணியசெயலையும் பிரித்து வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, (கலா. 1-8, 9) இவ்வசனங்களால் கூறப்

பட்டிருக்கிற சாபனைக்குள்ளா யிருக்கிறார்கள
என்றறியவும்.

2-வது.—மரியம்மாளிடத்தில் உற்பவித்துப் பி
றந்தவர் தேவகுமாரன் என்றும், அத்தேவ குமா
ரனைப் பெற்ற அம்மரியம்மாள் அத்தேவனுக்கு
மாதா என்றும் இப்படியா யவருடைய இரக்ஷணி
யச் செயலைப் பிரிக்காவண்ணம் உபதேசித்துவரு
கிற கத்தோலிக்குத் திருச்சபையின் போதனை
யானது (தித். 1-13, 14; அர்ச். மத். 15-3, 9)
இவ்வசனங்களால் கண்டிக்கப்பட்டிருக்கிற யூதர்
களுடைய பாரம்பரையைப்போலு மல்ல. அவர்
களுடைய கட்டுக்கதைகளைப்போலு மல்ல. மனி
தர்களுடைய கற்பனைகளான உபதேசங்களும
ல்ல. தேவ அறிக்கையாக வந்த அர்ச். கபிரியே
லென்னும் அதிதூதருடைய நற்சுவிசேஷமும்,
இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரனுடைய ஏவு
தலின் கற்பனையாக அர்ச். எலிசபெத் தம்மா
ளால் புகழ்ந்து கூறப்பட்ட மெய்யுபதேசமும்,
அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட அருள்
வேத வசனங்களுமே யல்லாது மற்றப்படியல்ல.
ஆனால் முத்தையபிள்ளை யவர்கள் இதற்கு விரோ
தமாய் சாதிக்கும் உபதேசங்களோ சுவிசேஷத்
துக் கேலாததும், அதிலில்லாத பிரித்தலும்; தம்
இஷ்டப்படி அப்படி இப்படியென்று மனோரஞ்
ஜியம் பண்ணுவதுமான யூதர்களுடைய போத
னைக்கொப்பான கட்டுக்கதைகளும், சத்தியத்தை
விட்டுவிலகுகிற மனுஷருடைய கற்பனைகளும்,
தேவனுடைய கற்பனைகளை அவமாக்குகிற நெஸ்
தோரியனுடைய உபதேசத்தில் நின்று வந்த பா
ரம்பரியமுமா யிருக்கிறதென்றறியவும்.



3-வது.—திருச்சபையின் பிதாக்களும், மேற்
றிராணிமார்களும் அந்தந்தக் காலத்தில் கூடிய
பொதுச் சங்கங்களும் (உரோ. 16-17; எபே.
4-11, 14; பிலி. 3-16; எபி. 13-7, 9) இவ்வேத
வசனங்களின்படி "ஒரேவகை சிந்தனை, ஒரேவ
கை போதனை, ஒரேவகை விசுவாசப் பிரமாணத்
தோடு அம்மெய்ச் சுவிசேஷத்தை உறுதி படு
த்திப் பிரசங்கித்து வந்ததேயல்லாமல், புரொடெ
ஸ்டாண்டாரைப் போலவும், அவர்களின் பிதாக்க
ளான லூத்தேர், கல்வின், கார்லோஸ்தர, மேலங்
தோன், முதலானவர்களைப் போலவும், மற்றும் அ
வர்களுடைய பிஷப்புக்களைப் போலவும், அவர்கள்
அங்கங்கே கூடிய சங்கங்களைப் போலவும் வே
தவசனங்களைப் புரட்டிப் பற்பல கொள்கைகளை
யுண்டுபண்ணி இப்படிப் பலமார்க்கமாய்த் திரித்
லைவதற்கான வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்
கித்ததல்ல. இதுவிஷயத்தைப் பற்றியே அத்தி
ருச்சபையானது ஏக கத்தோலிக்குச் சாதாரண
திருச்சபை என்று உண்மைக்கு உடந்தையான
பேரால் அழைக்கப்பட்டு வருகின்றது. இதற்
குத் திருச்சபையில் மறக்கப்படாத சரித்திரங்
கள் அத்தாட்சியா யிருக்கிறதுமன்றி அந்தப்படி
இக்காலத்திலும் பூமியின் எத்திசைகளிலும் அந்
தந்தத் தேசங்களிற் சென்று அம்மெய்ச் சுவிசே
ஷத்தைப் பிரசங்கித்துத் திருச்சபையின் ஏக
விசுவாசத்தை ஸ்திரப்படுத்தி வருகிற ஆயிரத்
துக்கு மேலான மேற்றிராணிமார்களும், திருச்
சபையின் பிதாக்களும், மற்றும் எத்தனையோ
ஆயிரம் அதின் குருப்பிரசாதிகள், மடாதிபதிகள்,
வேத சாஸ்திரிகள் முதலானோரும் திருச்சபை
யில் காணப்படும் தலைவராகிய அர்ச். பாப்பானவ

ரோடு ஏக ஐக்கியமுள்ள ஒரேவகை சிந்தனையோடு போதனையடைந்து உபதேசித்து வருகிறார்கள். இப்படியிருக்க "அவர்கள் ஒன்றுக்கொன்று முரணாகவும், விரோதமாகவும், மாறாகவும், எதிரிடையாகவும் இருந்தார்கள்" என்று முத்தையபிள்ளை யவர்கள் புரோடெஸ்டாண்டாருடைய போதனையை நம்பி அடஞ்சாதிப்பது வெகு பிசகாயும் (இசை. 60.17, 22; அர்ச். மத். 16.18; 28.20; அர்ச். அருள. 16.13, 15; 1. திமோ. 3.15) இவ்வேத வசனங்களுக்கு விரோதமான அசத்தியமாயும் இருக்கின்றது. இப்படிப் பொய்யாய் அடஞ்சாதிக்கிறவர்கள் எதைக்கொண்டு பேசுகிறார்களென்று (அர்ச். அருள. 8.44. 45) இவ்வசனங்களை யுற்றுக் கவனிக்கக் கடவார்கள்.

4. வது.—ஒரு சங்கம் இன்னொரு சங்கத்துக்கு மாறாகவும் இருந்தது என்றால், இவர்கள் சுவிசேஷத்துக்கு விரோதமா யுண்டுபண்ணிய "தேவமாதா வணக்கத்தையு என்னும் புத்தகத்தைப் பிரசித்தப் படுத்தும்படி ஏற்றுக்கொண்ட "விசேஷ பிரபல்லிய சங்கம்" எதுக்கோ தெரியவில்லை. ஆனாலது சுவிசேஷத்தைக் கெடுக்கத்தானென விளங்குகின்றது. மேலும் 1855-ம். வருஷத்து நற்போதகத்தின் வழியா யவர்கள் பிரசித்தப்படுத்தி யிருக்கிறபடி கோராம் ஐயருக்கும் அவருக்கு மேலான பிஷப்புக்கும் வந்த வேதவழக்கைத் தீர்க்கும்படி பார்லிமெண்டு சங்கம் எதுக்கோ தெரியவில்லை. ஆனாலதின் கடைசித் தீர்ப்பு வேதத்தைக் கெடுக்கத்தானென்று தெரியவருகிறது. அன்றியும், ஒரு பிஷப்பு இன்னொரு பிஷப்புக்கு முரணாயிருந்தால் புரோடெஸ்டாண்டார்



தங்களுக்குப் பிஷப்புக்களை ஏற்படுத்துவானேன்? இது எனக்கோ தெரியவில்லை. ஆனால் இவர்கள் சொல்லுகிறபடி ஒருவருக்கொருவர் முரணாயிருந்து அடஞ்சாதிக்கவோ; அப்படியானால் அவர்களுக்குக் கொடுக்கும் பட்டம் வம்புக்குத்தானே. ஒருவேளை எங்கள் பிஷப்புக்கள் ஒருவருக்கொருவர் முரணாயிருக்கிறதில்லை' என்று மேற்படி பிள்ளையவர்கள் கூச்சமின்றி சாதிக்க மாட்டார்கள். ஏனென்றால், இப்புரோடெஸ்டாண்டின் பல மார்க்கப் பிரிவினைகள் இதற்கு அத்தாக்ஷியா யிருக்கின்றது."

சங்.—ஆனால் ஐயாவே! கத்தோலிக்குத் திருச்சபையில் அப்படிப்பட்ட ஏக ஐக்கியம் இருக்கிறது மெய். அதுபோலப் புரோடெஸ்டாண்டு மார்க்கத்திலும், அதின் பிஷப்புக்கள் மற்றும் குருக்கள் முதலானவர்களுக்குள்ளும் ஏக ஐக்கியமும், சிந்தனையும், போதனையும் இல்லையோ?

உப.—பரிச்சேதமில்லை; அப்படி யவர்கள் சாதிக்கவு மாட்டார்கள். அப்படி யுண்டென வெட்கத்துக்கஞ்சிச் சாதிப்பார்களேயானால், அவர்கள் பிஷப்புக்களுடைய ஏக ஐக்கியத்தைப்பற்றி வாதித்த வழக்குக்கு முற்றிலும் விரோத மாகுமே. ஆகையால் அப்படி சாதிக்கமாட்டார்கள். மேலும் புரோடெஸ்டாண்டாருக்குத் தங்கள் புத்தியு மனச்சாக்ஷியுமே வேதமா யிருக்கிறபடியால் ஒருவரையொருவர் தர்க்கித்து ஒன்றுக்கொன்று முரணாயிருப்பதே அவர்கள் தங்கள் மார்க்க விசேஷமாம். இந்தப்படி அவர்களுடைய பிஷப்புக்கள் ஒருவருக் கொருவர் முரணா யிருப்பது யாவருமறிந்த காரியம்.

சங்.—ஐயாவே! புரோடேஸ்டாண்டு பிஷப்புக்கள் என்னத்தினாலே அப்படி ஒன்றுக்கொன்று முரணா யிருக்கிறார்கள்?

உப.—சகோதரனே! அவர்கள் கிறீஸ்துவின் அப்போஸ்தல ஸ்தானத்தில் நின்று வந்த அப்போஸ்தலிக்குப் பிஷப்புக்கள் அல்ல. ஆனதால், யேசுநாதர் தமது திருச்சபையில் ஸ்தாபித்த எழு தேவத்திரவிய அநுமானங்களில் ஒன்றாகிய குருத்துவ வரமும், ஞான அதிகாரமும் பரிச்சேதம் அவர்களுக்கில்லாத படியால் பிஷப்புக்கள் என்னும் வெறும் பெயரைத் தங்களில் தாங்களே தரித்துக்கொண்டிருப்பதால் அவ்விதம் ஒன்றுக்கொன்று முரணாக விபரீதப் படுகிறார்கள். இதற்கு அத்தாட்சி வேதப்புரட்டலை நீக்குஞ் சஞ்சீவி 10-ம் அதிகாரத்தில் காண்க.

சங்.—ஐயாவே! அதில் இன்னொரு காரியம், அதாவது, திருச்சபை யானது கத்தோலிக்கு என்னும் பெயரை யுடைய ஒரே பொதுவான சபை யென்றிருக்க, முத்தையபிள்ளை யவர்கள் இதற்கு விரோதமாய் "ஒருசபை இன்னொரு சபைக்கு எதிரிடையாக இருந்ததென்று" சொல்லுகிறார்களே அந்தப்படி வெவ்வேறான அநேகம் சபைகள் இருந்ததுண்டோ?

உப.—பரிச்சேத மில்லை, கத்தோலிக்கு என்பதுக்குள் அப்படிப்பட்ட எதிரிடையான பல பல சபைகளும், விரோதப் போரான கொள்கைகளும் இருந்ததாகவுமில்லை. அப்படி யிருந்திருக்கவுமாட்டாது. அந்தப்படி இருக்கவுங் கூடாது. ஏனென்றால், இத்திருச் சபையில் யேசுநாதரும், இஸ்பிரீத்து சாந்துவானவரும் என்றைக்கும் இடைவிடாமல் வாசமா யிருக்கிறார்கள். (அர்ச். மத். 28-20; அர்ச். அருள. 14-16, 26; 16-13, 14, 15.)



சங்.—அப்படியானால், முத்தையபிள்ளை யவர்கள் அவ்விதம் சாதிக்க வேண்டியதேன்?

உப.—அது மேற்காட்டிய வேத வசனங்களை உணராப் பிசகு. ஆகிலும் தங்கள் புரோடெஸ்டாண்டு மார்க்கத்தை முன்னிட்டு அவ்விதம் சொல்லி யிருக்கலாம். ஏனென்றால் அந்தப் புரோடெஸ்டாண்டுக்குள் வேதத்துக்கொவ்வாப் பற்பல விபரீதக் கொள்கைகளும் அக்கொள்கைகள் ஒவ்வொன்றிலும் அநேகமான வகுப்புக்களும் உண்டா யிருக்கிறதுமன்றி, அதில் ஒரு வகுப்பார் போதிப்பதும், சாதிப்பதும், விசுவசிப்பதும் இன்னொரு வகுப்பாருக்குப் பொருந்தாமல் இந்தப்படி ஒன்றுக்கொன்று சரிப்படா நின்று சாதித்தும், வாதித்தும், எதிரிடையாகப் போதித்தும் அந்தந்தக் கூட்டம் தன்னைத்தான் ஒரு மெய்ச்சபையாக எண்ணங்கொண்டு போராடி நிற்பதே அப்புரோடெஸ்டாண்டு மார்க்கத்துக்குள்ள தன்மையானதால் அவர்கள் அப்படிச் சொல்லலானார்கள். இவைகள் மெய்யோ அல்லவோவெனத் தங்கள் இரோனியூஸ் பாதிரி தமிழ்ப் பூமிசாஸ்திரம் 429, 430-ம் பக்கங்களிலும், தங்கள் இங்கிலாந்து சரித்திரம் தமிழ்ப்புஸ்தகம் 434, 435-ம் பக்கங்களிலும், மற்றும் பிரசித்தப் பத்திரிகைகளிலும் காண்க.

சங்.—ஐயாவே! அதுபோகட்டும் இப்போது நான் அறிவிப்பதை சற்றுக் கவனியுங்கள். "பிதாக்களுள் மகாத்துமா என்று பேர்பெற்ற அகுஸ்தீன் என்பவர் (மத். 8-12-ம்) வசன வியாக்கியானத்தில் மரியம்மாள் யேசுவைத் தன் கர்ப்பத்தில் சுமந்த மாம்சசம்பந்தத்தைப் பார்

க்கிலும்; அவரைத் தன் இரக்ஷகராக உள்ளத்தில் அமைத்த விசுவாசப் பந்தனத்தினாலேயே பாக்கியவதி என்னும் பேர் பெற்றாள் என்றும், அதற்கு மேற்கோளாக (லூக்கா 11-27, 28) உம்மைச் சுமந்த கர்ப்பமும், நீர் பாலுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றவைகள் என்று சத்தமிட்டுச் சொன்ன ஒரு ஸ்திரீக்கு உத்தரமாக யேசுநாதர் சொன்னதின் கருத்து: பாக்கியவதி என்று நீங்கள் சொல்லும் என் தாய், என்னைக் கர்ப்பத்தில் சுமந்ததினால் அல்ல, தேவனுடைய வசனத்தைக் காத்துக்கொண்டதினாலேயே அப்பெயர் பெற்றாள் என்று சொல்லியதாம் என்று உதாகரித்து, மரியம்மாள் யேசுவை விசுவாசத்தினால் தன் உள்ளத்தில் அமைக்காமல் கர்ப்பத்தில் மாத்திரம் தரித்தவளாய் இருந்துவிட்டாளானால் அவளுக்கு அச்சம்பந்தத்தினால் யாதொரு பலனுமில்லை என்றும், மாம்சத்தினால் இரக்ஷகருக்குச் சகோதரர் என்று பேர்பெற்றவர்கள் அவரை விசுவசியாதபடியால் இரத்தக்கலப்பான மாம்ச சம்பந்தத்தினால் அவர்களுக்கு என்ன பலன் உண்டாயிற்று என்றும், வெகு தெளிவாய்க் காட்டுகிறார். பிதாக்களுடைய வாக்கியம் ரோமைச் சபைக்கும் பிரமாணமாயின் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள்" என்று முத்தையபிள்ளை யவர்கள் நம்மைக் கேட்கின்றார்களே இதற்கு மறுமொழி என்ன? இது உண்மையோ?

உப.—சகோதரனே! அது உண்மையென்று சொல்வதற்கு அதில் பிசகு மெத்தவாயிருக்கிறது. மகா வேதசாஸ்திரியும் அர்ச்சியசிஷ்டவருமாகிய அகுஸ்தின் என்பவர் பிசகாயுள்ள விபரீத வியாக்கியானஞ்செய்வாரோ? ஆகையால் அது அவர் எழுதினதாகத் தோற்றவில்லை. ஆனால் ஒருவேளை அவர் எழுதிய இரண்டொரு வார்த்தைகளை வைத்துக்கொண்டு புரோட்டெஸ்டாண்டார் உண்டுபண்ணியகட்டு விசேஷமாயிருக்கலாம். அல்லது அவர் எழுதிய கருத்துக்கு விரோதமான மொழி,



பெயர்ப்பாயிருக்கலாம். அப்படிக்கல்ல அது உண்மைதானென்றால் அவர் எழுதிய இன்னபுத்தகம் இன்ன இடத்தில் என்று எடுத்துக் காட்டவேண்டுமே. அப்படிக்கில்லாமல் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாத இரண்டொரு வேத வசனங்களைக் குறிப்பிட்டுக்கொண்டு இதோ பாருங்கள் அகுஸ்தீனுடைய வியாக்கியானம் என்றுகொண்டுவந்தால் அவைகளை நம்புவதெப்படி? ஆகிலும் அதிலுள்ள பிசகுகளையறிய அவ்வியாக்கியானத்தைப் பரிசோதிப்போமாக.

1-வது.—அர்ச். மத். சுவி. 8-ம் அதி. 12-ம் வசனத்தில் தேவதாயாராகிய அர்ச். மரியம்மாளைப் பற்றியாவது, அவளுக்கடுத்த சம்பந்தத்தைப் பற்றியாவது, அல்லது பொதுவான விசுவாச முயற்சிகளைப் பற்றியாவது யாதேனும் வசனிக்கப்படவுமில்லை, குறிப்பேனும் துலங்கப்படவுமில்லை. மேற்காட்டிய அவ்வசனத்திலோவென்றால், "இராச்சியத்தின் மக்கள் புறம்பானஇருளிலே தள்ளப்படுவார்கள், அங்கே அழுகையும் பற்கடிப்புமிருக்கும்" என்று நமது இரட்சகர் திருவுளம்பற்றியதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனதால் இவ்வசனத்திற்கும் மரியம்மாளைப்பற்றி அவர்கள் எடுத்துக்காட்டிய அவ்வியாக்கியானத்திற்கும் யாதேனும் சம்பந்தப்படவில்லை. இது அதிலுள்ள முதற்பிசகாயிருக்கின்றது. ஆகிலும் அவ்வசனத்திற்கு அதன் அடியிற் கண்ட வியாக்கியானத்தை ஒரு ஆதாரமாய் எடுத்துக்காண்பித்ததாகச் சொன்னபோதிலும், பின்வரும் (அர்ச். லூக். 11-27, 28) இவ்வசனங்களை அதற்கு மேற்கோளாக எடுத்துக்காட்டுவதில் மெத்த விபரீதமிருக்

கின்றது. எப்படியென்றால் "மரியம்மாள் யேசுவைத் தன் கர்ப்பத்தில் சுமந்ததைப்பார்க்கிலும்" என்ற (மத். 8-12) இவ்வசன வியாக்கியானத்திற்கு நேர்விரோதமாக "என்னைக் கர்ப்பத்தில் சுமந்ததினால் அல்ல" என்று இரட்சகர் சொன்ன கருத்தாக மேற்கோளான (லூக். 11-28) இவ்வசனத்திற்கு உளாயிடப்பட்டிருக்கின்றது. ஆனதால், "சுமந்ததைப்பார்க்கிலும்" "சுமந்ததினால் அல்ல" என்ற இவ்விரண்டிற்கும், எவ்வளவோ வேற்றுமை யிருக்கின்றது. இது அதிலுள்ள இரண்டாம் பிசகு. ஆனால் அவ்வசனத்தின் எதார்த்தம் யாதெனில் அதில் குறிக்கப்பட்ட ஸ்திரீயானவள் கர்த்தரை நோக்கி "உத்தசத்தமாய்க் கூப்பிட்டு உம்மைச்சுமந்த உதரமும் நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றவைகளாமே" என்றபோது, அதற்குக் கர்த்தர் மாறுத்தரமாக "சர்வேசுரனுடைய வாக்கியத்துக்குச் செவிதந்து அதை யநுசரிக்கிறவர்கள், அதைவிடப் பாக்கியவான்களென்றருளிச்செய்தார். இதில் யேசுநாதருடைய உத்தம கருத்தாவது நீ, என் தாயைப்பற்றிப் புகழ்ந்து சொன்னவை உள்ளதுதான். ஆயினும் அதைவிட (அல்லது அதைப்பார்க்கிலும்) தேவவசனத்துக்குச் செவிதந்து அதின்படி நடக்கிறவர்கள் அதிகமும் பாக்கியவான்களென்றுரைத்ததாய் விளங்குகின்றது. இந்தப்படியே திருச்சபையும் அதின் பூர்வ பிதாக்களும் வியாக்கியானித்துபதேசித்துவந்த பொதுவான கொள்கையெனத் தெரியவருகின்றது.

2-வது,—ஷெ வணக்கத்தவறில் காட்டிய வியாக்கியானத்திலோ "மரியம்மாள் யேசுவைத்தன்



கர்ப்பத்தில் சுமந்த மாம்ச சம்பந்தத்தைப்பார்க்கிலும் அவரைத் தன் இரட்சகராக உள்ளத்தில் அமைத்தவிசுவாச சம்பந்தத்தினாலேயே பாக்கியவதியென்னும்பேர்பெற்றாள்" என்றும் அப்பால் இதை திருஷ்டாந்தப்படுத்தும் மேற்கோளானதில் "பாக்கியவதியென்று நீங்கள்சொல்லும் என் தாய் என்னைக்கர்ப்பத்தில் சுமந்ததினால் அல்ல, தேவனுடைய வசனத்தைக்காத்துக் கொண்டதினாலேயே அப்பெயர்பெற்றாள்" என்றும் இதை யேசுநாதருடைய கருத்தாகத்தீர்மானித்துக்கொண்டு "மரியாள் யேசுவை விசுவாசத்தினால் தன் உள்ளத்தில் அமைக்காமல் கர்ப்பத்தில் மாத்திரம் தரித்தவளாய் இருந்துவிட்டாளானால், அவளுக்கு அச்சம்பந்தத்தினால் யாதொருபலனுமில்லை" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதில் சத்தியத்தோடு அசத்தியத்தையுங் கலந்து வாசிப்போருக்கு மலைவைக்கொடுக்குந் தன்மையாயிருக்கின்றது. அன்னப்பட்சியானது பாலோடுகலந்த தண்ணீரை நீக்கிப் பாலைப்புசிக்குமென சொல்லுமாப்போல் அவ்வியாக்கியானத்திலுள்ள அசத்தியத்தை நீக்கிச் சத்தியத்தைத்தெளிவிப்போம். அதாவது மேற்காட்டிய வியாக்கியானத்தில் யேசுநாதருடைய மாம்ச சம்பந்த ஐக்கியத்தை முழுதும் புறக்கணிப்பதாகவும், அவரை இரட்சகரென விசுவசிக்கும் விசுவாச சம்பந்தத்தைமட்டும் உறுதிபடுத்துவதாகவும், கருத்துக் கொள்ளலாகின்றது. மேலும் இரட்சகரென்ற விசுவாச சம்பந்தம் அவருடைய மாம்ச சம்பந்தத்தில் இல்லையென்றால் அவருடைய ஆத்துமத்திலோ, தெய்வீகத்திலோவென்றும் தெரியப்படுத்தவில்லை. இதுவும் அவ்வியாக்கியானத்திலுள்ள மூன்றாவதான பிசகு.

அன்றியும் கூவிச்சொன்ன ஸ்திரீயானவள் இரட்ச
கருடைய மேலான ஞானத்தையும், போதனைகளை
யும் அற்புத வல்லமைகளையும் பார்த்து (அர்ச்.
மத்தேயு 12-22, 45; அர்ச். மாற்கு 3-22, 29;
அர்ச். லூக்கா 11-14, 28) அவைகளைத் தன்மன
தில் சிந்தித்து இப்படிப்பட்ட மேலான காரியங்
களைச் சொல்பவருஞ், செய்பவருமான இவர் தெ
ய்வீக மானவரே யல்லாது வேறல்லவென விசு
வசித்துத் தெய்வீகமான இவரைத் தன் கர்ப்பத்
தில் சுமந்துபெற்றுப் பால்கொடுத்த உதரந்தின்
தாயானவள் எவ்வளவோ பாக்கியம் பெற்றவள்
என்று தன் மனதில் உறுத்தி அதைத் தன்னிரு
தயத்திலுள் தாங்கொண்ணாமல் வாய்விட்டு அவ
விதம் உரத்தசத்தமாய்க் கூவிச்சொல்லிப் புகழ்ந்
ததாக விளங்குகின்றது. மீளவும் அவளுடைய
அந்தச் சத்தம் எப்படிப்பட்டதென்றும், எதிரொ
லுண்டானதென்றும் அவ்வசனங்களை வாசிப்
போரே தெரிந்துகொள்ளலாமே. இரட்சகர் அப்
போது ஸ்திரீக்கு மறுமொழியாக சொன்னது யா
தெனில் (என்னைச்சுமந்த கர்ப்பமானது பாக்கியம்
பெற்றதுதான் என்றாற்போல) "அதைப்பார்
க்கிலும் தேவனுடைய வசனத்துக்குச் செவிகொ
டுத்து அதை அநுசரிக்கிறவர்கள் (அதிக) பாக்கி
யவான்கள்" என்கிறார். இதில் அவர் தமது மாம்ச
சம்பந்தத்தை எவ்வளவெனகிலும் புறக்கணித்த
தாகவல்ல. அந்த ஸ்திரீயானவள் தம்மைத் தேவ
னென்று தன் உள்ளத்தில்கொண்ட விசுவாசத்
தையும் தமது மாம்ச ஐக்கியத்தைப்பற்றி தமது
தாயாரைப் புகழ்ந்தேத்திய அவளின் ஆசைப்பெ
ருக்கத்தையும் அவர் வியந்துகூறி உறுதிபடுத்து
கிறதாகவே அதில் கருத்தாகுகின்றது. ஆனதினு



லேயே "உம்மைச்சுமந்த உதரம் பாக்கியம்பெற்ற
து. அதாவது நீர் தேவனாயிருக்க உம்மைத் தன்
மாம்ச ஐக்கியத்தில் உடன்படுத்திப் பெற்ற தா
யானவள் பாக்கியம் பெற்றவள் என்றதற்குக் கர்
த்தர் மறுமொழியாக அது உண்மையென்று உ
றுதிபடுத்தினாற்போல) அதைப் பார்க்கிலும் தே
வனுடைய வசனத்துக்குச் செவிதந்து (அதாவது
நீ விசுவசிக்கிறபடி நாம் தேவன்தாமே அந்தப்
படி உன்னைப்போல நமது வசனத்துக்குக் காது
கொடுத்துக் கவனமாய்க்கேட்டு) அதை அநுசரி
க்கிறவர்கள் (அதிக) பாக்கியவான்கள் என்றாற்
போலாயிற்று. ஆனதால் நீ சொல்வதும் பாக்
கியம் பெற்றதுதான்; ஆனால் நான் சொல்வதாகிய
இது அதைப்பார்க்கிலும் அதிக பாக்கியம் என்று
அவ்விருசம்பந்தமான பாக்கியங்களையும் அல்லது
நன்மைகளையும் யேசுநாதர் உறுதிப்படுத்துவதாக
வே பிரத்தியட்சமாய் விளங்குகின்றது. ஆகையா
ல் அர்ச். அகுஸ்தீன் சொன்னதாக இவர்கள் எடு
த்துக்காட்டிய வியாக்கியானத்தில் விபரித்திருக்கி
ற கருத்துப்படி. "மரியம்மாள் யேசுவை தன் இர
ட்சகராக உள்ளத்தில் அமைந்தவிசுவாச சம்பந்
தத்தினாலேயே, பாக்கியவதி என்னும்பேர்பெற்
றாள்" என்றாவது அல்லது அவ்வியாக்கியானத்தி
ன் மேற்கோளானதில் சொல்லிய கருத்துப்படி.
"பாக்கியவதி என்று நீங்கள்சொல்லும் என்தாய்
என்னைக்கர்ப்பத்தில் சுமந்ததினாலல்ல. தேவனு
டைய வசனத்தைக் காத்துக்கொண்டதி னாலே
யே அப்பெயர்பெற்றாள்" என்றாவது (அர்ச். லூக்.
11-27, 28) இவ்வசனங்களில் இரட்சகர் கருத்
துற்றதாக எவ்வளவெனகிலுந் துலங்கவில்லை.
அவ்வசனங்களில் ஸ்திரீயானவள் இரட்சகரை

நோக்கி அவருடைய மாதாவைப்பற்றிப் புகழ்ந்ததற்கு அவர் அதைப்பார்க்கிலும் அதிக பாக்கியம் இன்னதென எல்லாருக்கும் பொதுப்பட விளம்புகிறாரே யல்லாது (28-ம்) இவ்வசனத்தில் தனிப்பட தமது தாயைமட்டும் சுட்டிக்காட்டி அத்திருத்தாயாருடைய விசுவாசத்தைப்பற்றியாவது, அவள் அநுசரிக்கவேண்டிய மற்றும் விஷயங்களைப்பற்றியாவது ஒன்றுமில்லை. அப்படியிருக்க அவருடைய தாயாரைப்பற்றி மாத்திரம் அப்படிச்சொன்னதாக கருத்துவைப்பது அவ்வியாக்கியானத்திலுள்ள நான்காம்பிசகு. ஆனால் இரட்சகர் உரைத்த அதில், இதன் அடியிற்காட்டும் விதம் இன்னமும் ஒருவகையிற் கருத்துக்கொள்ளலாம். அதாவது முன்னமே தமது தாயார் தேவவசனங்களுக்குச்செவிதந்து அவைகளைத் தன்மனதிற் காத்துச் சிந்தித்து அநுபவித்து வந்தபாக்கியம் இன்னதென இறந்தகாலத்தைப்பற்றியும், அச்சமயத்தில் அந்தஸ்திரீ தம்மை விசுவசித்துத் தமது தாயாரைப் புகழ்ந்த அவளின் பற்றுதலான பாக்கியத்தை ஸ்திரப்படுத்தும் நிகழ்காலத்தைப் பற்றியும் இனி எல்லாரும் அவ்விருவருக்கொப்ப அப்பாக்கியத்துக்குப் பங்காளிகளாகவேண்டுமென எதிர்காலத்தைப்பற்றியும் அவர் கருத்துற்றிருக்கலாம் என்பதே. இப்படி இருக்க யேசுநாதர் தமது மாம்ச ஐக்கிய சம்பந்தத்தைப்பற்றி ஸ்திரீயானவள் புகழ்ந்த அதற்கு ஒப்புக்கொண்டவராக கர்ப்பத்தில் சுமந்த "அதைப்பார்க்கிலும் என்ற வசனத்துக்கு" கர்ப்பத்தில் சுமந்ததினால் அல்ல என்று அவர் தமது மாம்ச ஐக்கியத்தைப் புறக்கணித்தாற்போல இவர்கள் எண்ணி யேசுநாதர் தமது வசனங்களில் ஆமென்றும் அமெனென்றும் ஒரே சத்



தியமுள்ளவரா யிருக்க (2-கொரி. 1-18, 19) இவ்வசனங்களுக்கு விரோதமாய் ஆமென்றும் அல்லவென்றும் அவர் பொய்சொன்னதாக அவ்வியாக்கியானத்தில் அர்த்தப்படுத்தி யிருக்கிறார்களே யல்லாது நமது இரட்சகர் வசனித்த வசனங்களுக்கு உள்ளபடியாயுள்ள வியாக்கியானமாய்க்காணோம்.

மேலும் மரியம்மாள் தேவகுமாரனைத் தமது கர்ப்பத்தின் கனியாக சுமந்துபெற்ற மாம்ச சம்பந்த ஐக்கியத்தினால் யாதொரு பலனுமில்லை என்று சொல்வது அவ்வியாக்கியானத்திலுள்ள பெரிய குறைவாயிருக்கின்றது. ஏனெனில் தேவகுமாரன் மரியம்மாளிடம் பெற்ற மாம்ச ஐக்கிய சம்பந்தத்தினாலேயே மனுக்குலத்தைப் பசாசின் அடிமைத்தனமாகிய பாவத்தில் நின்று மீட்டு இரட்சித்தார் என்பது வேதப்பிரமாணமாயிருக்க அதினால் யாதொரு பலனுமில்லையென்று சொல்வது நியாயம் ஆகுமோ? ஆனதால் மரியம்மாள் மனிதர்களுடைய அவ்விரட்சணியத்துக்காகத் தமது சரீரத்தைத்தானே தேவசுதனோடிணைத்துக்கொள்ளச் சம்மதித்து (அர்ச். லூக். 1-38) அவரைத் தமது கர்ப்பத்தில் சுமந்து பெறும் தாயானது மெத்தப்பாக்கியமும் அதிகபலனும் என்றல்லவோ சொல்லவேண்டும். அப்படி யிருக்க "மரியம்மாள் தேவகுமாரனைத் தன் கர்ப்பத்தில் சுமந்த மாம்ச சம்பந்தத்தினால் யாதொரு பலனுமில்லையென்று எப்படிச் சொல்லலாம்." இது அவ்வியாக்கியானத்திலுள்ள குறைவுமட்டுமல்ல; வேதசத்தியத்துக்கு முற்றிலும் விரோதமாகவும் இருக்கின்றது. இதோபாருங்கள் தேவனெடுத்த மா

ம்ச சம்பந்தத்தினால் மரியம்மாளுக் குண்டான
பாக்கியத்தை, அதேதெனனில் இஸ்பிரீத்து சாந்து
வினால் ஏவப்பட்ட அர்ச். எலிசபேத்தம்மாள்
தேவதாயாரை நோக்கி புகழ்ந்ததாவது "விசுவ
சித்தவளாகிய நீரோ பாக்கியவதி. ஏனென்றால்
ஆண்டவரால் உமக்கு வசனிக்கப் பட்டவைகள்
நிறைவேறும்" என்கிறாள் (அர்ச். லூக். 1-45)
விசுவாசத்தினாலுண்டான இந்தப் பாக்கியமானது
மரியம்மாளிடத்தில் நிறைவேறப்போகிற மாம்ச
சம்பந்தத்தினாலே வந்த பாக்கியமேயல்லாது
வேறல்ல. அந்தப்படியே மரியம்மாளும் தேவ
குமாரன் தம்மிடத்தில் மாம்ச சம்பந்தமாக உற்
பவித்துப் பிறப்பதினால் தம்மைப் பாக்கியவதியெ
ன்று தேவதிர்மானமாய்ச் சொல்லுகிறாள். அதா
வது "இக்காலமுதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பாக்கியமுள்ளவளென்று சொல்லும்,
ஏனென்றால் வல்லப மிக்கவர் பெருமை யுள்ள
வைகளை என்னிடத்திற் செய்தருளினார்" என்கி
றாள். (அர்ச். லூக். 1-48, 49) ஆனதினால் அர்ச்.
எலிசபேத்தம்மாள் உதரத்தில் தேவன் உற்ப
வித்து மாம்ச ஐக்கியமாய்ப் பிறப்பாரென "விசு
வசிக்கப்பட்டது நிறைவேறும்." ஆனதால் "நீர்
பாக்கியவதி" என்றும் அந்தப் பரிசுத்த மரியம்
மாளிடம் தேவன் தாமே மாம்சமாயவதரித்துப்
பிறந்ததும் "பெருமை யுள்ளவைகளை என்னிடத்
தில் செய்தருளினார்." ஆனதால் "நான் பாக்கிய
வதி" என்றும் (அர்ச். லூக். 11-27) இவ்வசனத்
தில் குறிக்கப்பட்ட ஸ்திரீயானவளும் தேவன்
உற்பவித்துப் பிறந்த மாம்ச சம்பந்தத்தைப் பற்
றி "உம்மைச் சுமந்த உதிரம்" (அதாவது) உம்
மைச் சுமந்து பெற்றுப் பால்கொடுத்த தாயான



வள் பாக்கியம் பெற்றவளாமே என்றும்; கருத்
துற்றவர்களாய் இம்மூவரும் ஒருவாய்ப்பட தே
வன் கருவாய், உருவாய் மரியம்மாளிடம் உற்பவி
த்துப் பிறப்பதான மாம்ச சம்பந்தத்தையும் தெய்
வீகமகிமையையுங் குறிப்பிட்டே அவருடைய அ
த்தாயார் "பாக்கியவதி" என்று தங்களுக் கருள்
பூண்ட தெய்வீகத் தீர்மானமாயுள்ள அவளுடை
ய பேறுபலனைப் புகழ்ந்துரைத் திருக்கிறார்கள்.
வேதசத்தியம் இப்படியிருக்க, இதற்கு விரோத
மாய் "மரியம்மாள் யேசுவைத் தன் கர்ப்பத்தில்
சுமந்த மாம்ச சம்பந்தத்தினால் அவளுக்கு யா
தொரு பலனுமில்லை." அதினால் அவள் பாக்கிய
வதியுமல்ல என்றாற்போல் சொல்வதா? மேற்
காட்டிய வேதவசனத்திற்குத் தகுதி. ஆனால்
அர்ச். அகுஸ்தீன், இவ்விதமாய் வியாக்கியானித்த
தாக இவர்கள் சொல்லுகிறபடியால் அவர் இப்
படிச் சொல்வாரோவென மெத்த சந்தேகத்திற்
கிடமாயிருக்கிறது. ஆகிலும், சிலவேளை விசுவா
சத்தைப் பற்றிய உபமானக் கருத்தாக அவர்
சொல்லியிருந்த போதிலும் அதில் மரியம்மாள்,
தேவனுடைய தாயார் அல்லவென்று சொல்லவு
மில்லை; சொல்லுங் கருத்தாகத் துலங்கவுமில்லை,
ஆகையால் மரியம்மாள், தேவமாதா அல்லவெ
ன்று இவர்கள் கொண்ட கருத்துக்கிசைய அர்ச்.
அகுஸ்தீன் எழுதினதாகக் கொண்டு [illegible] வியாக்
கியானம் அவர் எழுதியிருந்த போதிலும், அது
தங்களுக் கநுகூலமாகாமல் பிரதிகூலமாம் என்ற
றியவும்.

மீளவும் "மரியம்மாள் யேசுவை விசுவாசத்
தினால் தன் உள்ளத்தில் அமைக்காமல் கர்ப்பத்

தில் மாத்திரம் தரித்தவளாய் இருந்து விட்டாளா
னால் அவளுக்கு அச்சம்பந்தத்தினால் யாதொரு ப
லனுமில்லை" என்று அவ்வியாக்கியானம் தன்னில்
நிர்ணயிக்கிறதே யல்லாமல் அவள் தேவனுடை
ய தாயார் என்பதை ஆட்சேபிக்கிறதில்லை. ஆன
தினால் அதின் நிர்மானத்தின்படி மரியம்மாளுக்கு,
விசுவாசத்தினா லுண்டாகு மறுமையின் பலன்
இல்லாவிட்டாலும், தேவனைக் கர்ப்பத்தில் சுமந்
து பெற்றதினாலுண்டான தேவமாதா என்கிற
பட்டமும், அதற்குண்டான சங்கை வணக்கமும்,
அந்தம்மாளுக்கு இல்லாமற் போகுமோ? மே
லும் இராசாவைப் பெற்ற தாயானவள் அவ்விராய
னுடைய அதிகாரத்தை அங்கிகரியாமலும், அவ
னுடைய நன்மைகளின் பேரில் நம்பிக்கை வையா
மலும் இருந்து விட்டாளானாலும் பிரசைகள் அ
வளை இராயனுடைய தாயார் என்று சொல்லு
வார்களே யல்லாது வேறுவிதம் சொல்லார்களல்
லவோ? ஆகிலும் அவள் இராசாவினுடைய அ
திகாரத்தை அங்கிகரித்து அவனுடைய நன்மைக
ளின்பேரில் நம்பிக்கை வைப்பாளேயானால் இரா
சாவினாலும் கனமாய் மதிக்கப்பட்டு, அவனால்
மெத்த நன்மைகளை யடைந்து குடிகளாலும் இரா
ஜினியெனப் புகழ்ப் படுவாளாமே. இந்தப்பிரகா
ரம், மரியம்மாள் பரலோக, பூலோக, தெய்வீக
இராசாவைத் தமது கர்ப்பத்தில் சுமந்து பெற்றதி
னாலே தேவனுடைய மாதா என்ற பேரடைந்த
துமல்லாமல் அவரை விசுவசித்து அவரைப்பற்
றியும், அவராலும், அவருடையவும் பரம இரகசி
ய வேதவசனங்களை எல்லாம் தமது உள்ளத்தில்
அமைத்துத் தமதிருதயத்திற் காத்து, மனதில்
தியானித்து எக்காலங்களிலும் தமது தேவதிருக்



குமாரனைப் பின்பற்றுகிறவளாயிருந்ததால் (அர்ச்.
லூக். 1-37, 55; 2-19, 34, 35, 51; அர்ச்.
அருள. 2-1, 19, 25; அப். நட. 1-14) இதுகளின்
பேறுபலனாக கர்த்தர், உரைத்தபடி (அர்ச். லூக்.
11-28) அந்தாயார் தம்மைக் கர்ப்பத்தில் சுமந்து
பெற்றதினா லுண்டான பாக்கியத்தைப் பார்க்கி
லும் விசுவசித்தவளாகிய நீரே பாக்கியவதி என்ற
வேதவாக்கியப்படி (அர்ச். லூக். 1-45) பரலோ
கத்தில் அதிக பாக்கியத்தையும் மேலான நன்மை
களையும் பெற்று இரட்சகர் அளித்த வாக்குத்தத்
தப்படி (காட்சி. 2-26. 28; 3-21) பரலோக
பூலோக இராக்கினியாக முடி சூட்டப்பட்டிருக்கி
றாள். (காட்சி. 12-1.)

3-வது.—"மாம்சத்தினால் இரட்சகருக்குச்
சகோதரர் என்று பேர்பெற்றவர்கள் அவரை விசு
வசியாத படியால், இரத்தக் கலப்பான மாம்ச சம்
பந்தத்தினால் அவர்களுக்கு என்னபலன் உண்டா
யிற்று" என்று அவ்வியாக்கியானத்திற்கு மேற்
கோளாகச் சொன்னதின் முடிவுரையாகச் சொல்
லப்பட்டிருக்கின்றது. ஆனால் தேவதாயார் எப்
போதும் கன்னி மகிமை யுடையவ ளானதால்
(எசேக். 44-2) அக்கன்னித் தாயாரிடம் அற்புத
மாய் அவதரித்துப் பிறந்த தேவசுதனைத் தவிர,
அந்தேவ தாயாரிடம் பிறந்ததாக சகோதரம்
வேறே பிள்ளைகள் கிடையாது. ஆனதால், "இர
ட்சகருக்குச் சகோதரர் என்று பேர்பெற்ற" அ
வர்கள் இன்னாரென்று அவ்வியாக்கியானத்தில்
விளக்கிக் காட்டாததால் இது அதிலுள்ள ஐந்தா
ம்பிசகா யிருக்கின்றது. ஆகிலும் அத்தேவதா
யார் யூதர் குலமானதினாலே இரட்சகருக்குச்

சகோதரர் என்று சொல்லப்பட்டவர்கள் அவரை
விசுவசியாத அந்த யூதர்களும், அம்மாதாவுக்குக்
கிட்டின பந்துவா யிருந்தவர்களுடைய பிள்ளைக
ளுமே யல்லாது வேறல்ல. ஆனால் இந்த பந்து
வானவர்களுடைய பிள்ளைகளில் அநேகர் அவரை
விசுவசித்து அவரைப் பின்பற்றினவர்களானதால்
அவரை விசுவசியாத மற்ற யூதர்களைப்பற்றியே
அவ்வியாக்கியானத்தில் அவ்விதம் சொல்லப்படு
வதாக நாம் நினைக்கத்தக்கதா யிருக்கின்றது. அத்
தப்படி அவருடைய சகோதரர் என்று சொல்லப்
பட்ட அந்த யூதர்கள் அவரை விசுவசியாமல்
அவரின் இரட்சணிய பலன்களுக்குத் தூரமான
வர்களான போதிலும், அவர்கள் அவருடைய
சகோதரர் என்றே சொல்லப்பட் டிருக்கிறார்கள்
அல்லவோ? அந்தப்பேர் அவர்களைவிட்டு மாறி
னது மில்லையே. இது விசுவாசத்தினால் அல்ல,
அவருடைய பிறப்பின் யூதர்குல உறவாகச் சொ
ல்லப்பட்டு வந்ததாமே. இந்தப்படி மரியம்மா
ளும் தேவகுமாரனைத் தன் கர்ப்பத்தில் மாத்திரம்
தரித்தவளாய் இருந்துவிட்டபோதிலும் அந்தே
வகுமாரனைப் பெற்ற தேவதாயார் என்ற பேர்
விசுவசியாத அவர்கள் நிமித்தம் தடுக்கப்படாமல்
மதிக்கப்படுவ தாகவே எண்பிக்கின்றது. ஆகிலு
ம் [illegible]யம்மாள் தேவதாயார் என்று சொல்லப்
பட்ட [illegible]னை மகிமைக்கு அந்த யூதர்களைச் சம்
பந்தம் பாராட்டி [illegible]ணையிடுவதற்குத் தகுதியல்லே;
ஏனெனில் மரியம்மாள் தேவகுமாரனைத் தன் கர்
ப்பத்தில் சுமந்து தம துதரத்தின் கனியாகப்
பெற்றாள். ஆனதினாலே தேவமாதா என்ற மகி
மையின் பட்டப்பெயர் அந்தாயாருக்குத் தகுதி
என்றும் சொல்லக் கூடியதுமாமே. அந்த யூதர்



கள் அவரோடு கூட உடன்பிறந்தாரல்ல. ஆன
தால் அவருடைய சகோதரர் என்ற அந்தப்பேர்
அவர்களுக்குத் தகுதியற்றதும், சொல்லக்கூடா
ததுமான வெறும்பெயரே யல்லாது மற்றப்படி
யல்ல. இன்னமும் மரியம்மாள் தமது தேவ தி
ருக்குமாரனை இரட்சகராக உள்ளத்தில் அமைத்
துக்கொண்ட விசுவாச சம்பந்தத்தினாலேயும்,
தேவமாதா என்னும் பட்டத்திற்கும், அதின் பே
றுபலனுக்கும் அதிக உடந்தையாகி பரலோகத்தி
லும் அம்மேலான பட்டத்தினால் மெத்த புகழ்
கூறப்படுகின்றாள். அந்த யூதர்களோ அவரை
விசுவசியாததால், அவருடைய சகோதரர் என்ற
பேருக்கும், அதின் பலனுக்கும், மோக்ஷ மகிமை
க்கும் அபாத்திர ரானார்களாமே. நியாயம் இப்
படி யிருக்க மரியம்மாள் தேவ திருக்குமாரனைப்
பெற்ற மாம்ச சம்பந்தத்தினாலே அவளுக்கு யா
தொரு பலனுமில்லை, அதினால் அவள் பாக்கிய
வதியு மல்லவென்று அத்தேவ திருக்குமாரனின்
இரத்த உறவற்ற அவிசுவாசிகளான யூதர்களை
அத்தாட்சியாகக் குறிப்பிட்டுக் கொண்டுவந்த வி
யாக்கியானம் வேத வியாக்கியானம் அல்லவென்
றறியவும். இதைத்தானே முத்தையாபிள்ளை யவர்
கள் வெகுதெளிவென மெச்சி "பதில் என்னவெ
ன" வினவுகின்றார்கள்.

ஆகையால் சகோதரனே! [illegible]யம்மாள் தே
வமாதா அல்ல வென்று மறுப்பதற்கு ஆதாரமாக
புரோடெஸ்டாண்டுக்கள் அர்ச். அகுஸ்தீன் எழு
தினதாகக் கொண்டுவந்த அவ்வியாக்கியானம் த
குதியற்றதுமன்றி, அவர்எழுதினதாக நம்பப்பட
த்தக்கதுமல்ல. மேலும் அர்ச். அகுஸ்தீன், தேவ

மாதாவைப்பற்றி இவ்வித விபரீதங்கள் எழுதவுமாட்டார். அம்மாதாவைத் தேவமாதா அல்லவென்று வேதத்திற்கு விரோதமாய்ப் பதிதருக்கொப்ப மறுத்துச் சொல்லவுமாட்டார். இதற்கு அத்தாட்சியாக அவர்தாமே உண்டாக்கின தியான புஸ்தகம் 10-ம் அதிகாரத்தில் "மாசில்லாத கன்னியுமாய், என் ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்துவைப்பெற்ற தாயுமாய்ப்பரிசுத்த தேவமாதாவுமாயிருக்கிற அர்ச். மரியாயி என்பவளே! ஆண்டவருக்குத் தேவாலயமாக நின்றவளாகி, அவனை எங்களுக்காக வேண்டி மன்றாடத் தயைபுரிந்தருள வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றெழுதி யிருக்கிறார். இப்படியிருக்க அந்த வியாக்கியானத்தைக் கொண்டு ஆண்டவர் பேரிலும், அர்ச். அகுஸ்தீன் பேரிலும், (அதைப்பார்க்கிலும் என்ற வசனத்திற்கு அதினா லல்ல என்று சொன்னதாக) வம்பாய் குற்றம்சாட்டுகிற புரோடெஸ்டாண்டுக்கள் அர்ச். அகுஸ்தீன் மேற்காட்டிய தமது தியானபுஸ்தகத்தில் மரியம்மாள் தேவமாதாவெனப் புகழ்ந்தேத்திய வசனங்களுக்கு மறுமொழி என்ன சொல்லுவார்கள்.

சங்.—ஐயா! புரோடெஸ்டாண்டுக்களுடைய பிசகு இன்னதென நன்றாய்த் தெரியவருகின்றது. இது இருக்கட்டும், இன்னமும் அந்த அதிகாரத்தில் முத்தையபி[illegible]யவர்கள் சொல்லுவதைப் பாருங்கள் அதாவது:—[illegible]ில் மிகவும் பேர்போன ஜெரோம் என்பவரைப்பற்றி ரோமைச் சபையைச்சேர்ந்த இதிகாச கர்த்தனாகிய டியுபின் என்ற சாஸ்திரி சொல்வது எப்போதும் பூர்வாபர விரோதமாகப் பேசுவது இவருடைய வழக்கம். இவருடைய புத்தி படபடப்பும், மூர்க்கமுமுள்ளது. வாதிகள் பேரில் உக்கிர கோபங்கொள்வார். தமக்கு இயற்கையான மூர்க்கவெறியினால் மெய்மறந்து



விவாத விஷயத்தை அளவுக்கு மிஞ்சிப்பாராட்டி (நியாயப்படி அல்ல) தன் மனோராச்சியப்படி இகழவும், புகழவும், தள்ளவும், தழுவவும் செய்வார் என்றும், எபேசியர் நிருபவியாக்கியானத்தில் கிறீஸ்து தேவதூதர்களுக்காக மரித்தார் என்றும் பிரசங்கியின் புஸ்தகத்தில் சூரியனுக்கும், சந்திரனுக்கும், ஆத்துமா உண்டென்று இவர் சாதித்தார் என்றும், இவருடைய வேதவியாக்கியானத்தில் பல தவறுதல்களும், யூதர்களுடைய அவபத்திக்கும், ஆதி கிறீஸ்தவர்களுடைய அறிவீனத்திற்கும், அநுகூலமான அநேக அபிப்பிராயங்கள் உண்டென்றும், இவர் இன்னொரு பிதாவாகிய ஓரிஜன் என்பவரை வாதத்தில் கண்டிக்கும்போது, தன்னுடைய வீணான அபிப்பிராயங்களில் பலதை விட்டுவிட்டார் என்றும், சிலசமயங்களில் இயற்கையான அர்த்தத்திற்குப் பதிலாக உபமான அர்த்தஞ் சொல்லுவார் என்றும், இது அவருடைய வியாக்கியானத்தி லுள்ள பெரிய குறைவு என்றும், பிதாக்கள் என்று பேர் பெற்றவர்களில் பலர் பலநூல்கள் எழுதியிருந்தும் அவைகளில் ஒன்றாவது நமக்கு வந்து எட்டவில்லை, எல்லாம் காலாந்தரத்தில் அழிந்துவிட்டன, ஆதி கிறீஸ்துவர்கள் இவைகளைத் தங்களுக்குப் பிரமாணமாகக் கைக்கொண்டிருப்பார்களானால் இவைகள் இப்படி அழிந்து போகவிடாமல் எப்படியும் காப்பாற்றி வைத்திருப்பார்கள், அப்படி யில்லாதபடியால் இப்பொழுது அவர்கள் வாக்கியங்களாக நமக்குக் கிடைத்திருக்கிற தெல்லாம் கூடி இயுசிபியஸ் என்றவருடைய நூலில் இன்னின்னார் இப்படிச் சொல்லி யிருக்கிறார்கள் என்று காட்டி[illegible]ருப்பதைத் தவிர வேறொன்றும் நமக்கு இல்லை; இவைகள் சம்பந்தமின்றித் துண்டு துண்டுகளாய் மாத்திரம் இருப்பதால், இவைகள் கட்சிகளுடைய குதர்க்கத்துக்கும் அவரவர் தம் தம் அபிமானத்திற்கும், இசையத் திருப்பி வாதிப்பதற்குத்தான் உதவும் என்று மேற்காட்டிய ரோமான் இதிகாச கர்த்தனாகிய டியுபின் சொல்லுகிறார். காரியம் இப்படி யிருக்க முன்பின் சம்பந்தமின்றி இங்கும் அங்கும் அகப்பட்டதை மாத்திரம்

பொறுக்கிச் சேர்த்து எழுதிய சில வாக்கியங்களை வைத்துக் கொண்டு பிதாக்களுடைய அபிப்பிராயம் இது தான் என்று நாம் நிச்சயம் அறிகிறது எப்படி? அப்படியே நிச்சயமாய் அறிய ஏதுவுண்டாயிருந்த போதிலும் கூட அவைகள் தேவ வசனத்தோடு ஒத்துவாராத பட்சத்தில் அது நமது அநுஷ்டானத்திற்கு உதவத்தக்கதல்ல. ஆதலால், ஆத்தும இரட்சிப்புக்கென்று ஆண்டவர் அருளிய வேதத்தைத் தவிர மற்றெதையும், எந்த மனுஷருடைய அபிப்பிராயங்களையும் அது விஷயத்தில் நாம் அங்கீகரிக்கவாவது கைக்கொண்டு நடக்கவாவது கடமைப் பட்டவர்கள் அல்லவென்று மேற்காட்டிய பிரகாரம் நமது யுத்தியும் அநுபவமும் வேதத்தோடொத்துச் சாட்சி பகருகிற படியால், வேதாட்சரத்தில் கற்பிக்கப் பட்டதற்கு மேலாக மரியம்மாளைக்குறித்து விசுவசிப்பதும், போதிப்பதும் பிசகானது மாத்திரமல்ல; தேவபத்திக்கு இடையூறும் அவபத்திக்கு அநுகூலமு மானதென்று பிரத்தியட்சமாய்க் காண்கிறோம்" என்றதாய் ஷை பிள்ளை யவர்கள் தமது முதல் அதிகாரத்தை முடித்திருக்கிறார்கள். ஆகையால் அந்த "டியுபின்" யார்? அவர் எப்படிப் பட்டவர்? அவர் பேரால் இவர்கள் சொல்லிய தெல்லாம் உண்மையோ? அது விஷயங்களைச் சற்றுவிளக்கிக் காட்டும்படி ஐயாவே உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உப.—சகோதரனே! கேளும் ரோமைசபையின் இதிகாச கர்த்தனென்று முத்தையபிள்ளை யவர்கள் கத்தோலிக்குத் திருச்சபையைப் பாராட்டிப் பேசும், அந்த டியுபின் இத்திருச்சபையின் இதிகாச கர்த்தனோ அல்லது அதற்கெதிர்சேதி யார்க்கக் கர்த்தனோவென நாம் இப்போது விளக்கிக் காட்டும் அவன் ஒழுக்கத்தை முத்தைய பிள்ளை யவர் கண்டு இனி விழிக்கப்போகிறார்கள். அதாவது அந்த டியுபின் என்பவன், நோர்மாந்தி என்கிற நாட்டிலே 1657-ம் வருஷத்தில் பிறந்து,



கத்தோலிக்குத் திருச்சபையிலேயே வளர்ந்து, கல்வியிற் றேர்ந்து, சாஸ்திரி எனபேர் விளங்கினவனாயினும், இவனிடையில் ஏதோ மயக்கங்கொண்டு (முத்தையபிள்ளை யவர்கள் தமது தவறுதலில் எடுத்துக் காட்டிய பிரகாரம், அவன் ஜெரோம் என்னும் அர்ச். எரோனிமுஸ் என்பவரைத் தூஷிணிப்பதைப் போல) பூர்வ பிதாக்களாகிய மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுடைய சரித்திரத்தை அவன் எழுதி அச்சுப்பதிப்பித்து பிரசித்தப் படுத்திய புஸ்தகங்களிலும், பலவாய் உண்மைக்கடாதகோளும், குண்டியமும், பொறாமையுமான அநேகம் பேதங்களும், வசனத்தவறுகளும் (அபாண்டமாய் அவர்கள்பேரில்) எழுதியிருக்கக் கண்டதால் அப்பொய்ப் போதனைகளெல்லாம் தள்ளும்படி அர்ச். பாப்பானவர் அவனுக்கு அறிவித்தார். அவனோ வென்றால், தன் பிடிவாதத்தை விடாமல் அக்கட்டளையை மீறினபடியால் லுத்தேரைப் போல இவனும் திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளப்பட்டுச் சாபனைக்குள்ளானான். பின்னும் பிராஞ்சு தேசத்து மேற்றிராணியாராகிய "போசுவே" என்பவரும், மற்றச் சில வேதசாஸ்திர பண்டிதர்களுங் கூடி அவனை வரவழைத்து, அவன் அவ்வர்ச்சியசிஷ்ட பூர்வ பிதாக்கள் பேரில் உண்மைக்கு விரோதமாய், எழுதிய அநேகமான தப்பறைகளை ஒவ்வொன்றாய் எடுத்துக்காண்பித்தும், அவனதைத் தள்ள மனதில்லாதவனாய் ஜான்ஜீஸ்தர் என்ற பதிதரோடே சேர்ந்து அவர்களோடும் சிலகாலம் வாழ்ந்து, அப்பால் அவர்களோடே பொருந்தாமல் தன்னிஷ்டப்படி போதித்து வந்ததுமன்றி அர்ச். பாப்பானவர் எழுதிய உனிசேத்தென்னும் நிருபத்திற்கு வி

ரோதமாய் நின்று பிரான்ஸ் தேசத்தில், வெகு கலாபனைகளைச் செய்து கொண்டு வந்தான். அது நிமித்தமாக அத்தேசத்து இராயன் அவனைப் பிடித்துத் தூரதேசத்துக்கனுப்பிக் காவலுக்குள் வைக்கப்பட்டு 1719-ம் வருஷத்தில் மரித்துப் போனான். இப்படியாய் திருச்சபையில் நின்று தள்ளப்பட்ட அப்பதிதனை அத்திருச்சபையின் இதிகாசக் கர்த்தனென முத்தையபிள்ளையவர்கள் சாக்ஷியமாக எப்படிக் கொண்டுவரலாம். அவன் எழுதியதாகக் கொண்டுவந்த அவ்விஷயங்கள் எப்படி நம்பிக்கைக்குரியதாகும். அக்காலத்தின் பரிசுத்தவான்களுடைய வேதவியாக்கியானமான திருவுரை வசனங்களை விசுவசிக்க வது அல்லவென்றால், இக்காலத்திலுள்ள இப்பாவியின் அப்புறக்கணிப்பான அவ்வார்த்தைகளை நம்புவது யுக்திக்கொத்ததோ? ஆனதால் அவன் திருச்சபைக்கெதிர் சதிமார்க்கக் கர்த்தனேயல்லாது அதின் இதிகாசக் கர்த்தனல்ல. ஆனால் அவன் இவர்களுடைய மூற் பிதாவாகிய லுத்தேரைப் போலத் திருச்சபையில் நின்று தள்ளப்பட்டும், இவர்கள் வாதிப்பதற் கேற்றபடி அவனால் அப்பொய்யான தப்பறைகள் எழுதப்பட்டும் இவர்களால் அவைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுமிருப்பதால், இவன் ஒருவகையில் புரோடெஸ்டாண்டுகளுடைய இதிகாசக் கர்த்தனென சொல்லலாமேயல்லாது மற்றப்படியல்ல. மேலும் 1517-ம் வருஷத்திற்குப்பின் திருச்சபையில் நின்று தள்ளப்பட்ட பதிதர்களெல்லாம் புரொடெஸ்டாண்டுகளுள் அமைந்தவர்களாமே. ஏனென்றால் அதின் உண்மைப் பெயரும் அதில் கொண்டாடப்படுகிற



பற்பல கொள்கைத் தவறும், அதற் குடைய தென்றறியவும்.

சங்.—அப்படியானால் அந்த டியுபின் என்பவனை "ரோமைச் சபை" என்று அவர்கள் சொல்லுகிற கத்தோலிக்குத் திருச்சபையின் இதிகாச கர்த்தன் என முத்தையபிள்ளையவர்கள் கொண்டு வருவானேன்?

உப.—இவர்கள் என்னத்தைக் கண்டார்கள். இவர்களோ ஷாப்பிப்பர் ஆனதால், அவனுடைய சரித்திரத்தை உள்ளபடி பார்த்தவர்களுமல்ல, கேட்டவர்களுமல்ல. கிளிப்பிள்ளையைப் போலத் தம் குரு சொன்னதைக் கேட்டுத் தாமும் அந்தப்படி சொல்லியிருக்கின்றார்கள் போலவாம்.

சங்.—ஆகிலும் ஐயா, அந்த டியுபின், அர்ச். ஜெரோம், என்பவர் பேரில் சொல்லியிருக்கிறதெல்லாம், மெய்யாமோ?

உப.—பரிச்சேதமாகா, எப்படியெனில் அவன் அவ்வர்ச்சியசிஷ்டவர் பேரிலும், மற்றப் பரிசுத்த பிதாக்கள் பேரிலும், வேத விரோதமாயும், புண்ணிய முயற்சிக் கடாததாயும், குற்றம் பாராட்டி எழுதிய அக்கதைகளெல்லாம் அவன் தன்னில் பொய்யுரையாகக் கட்டி எழுதிய அவனுடைய தப்பறைகள் என, திருச்சபையினால் வேண்டிய அத்தாட்சியோடு கண்டிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இதனடியில் நாம் எடுத்துக்காட்டும் நியாயங்களைக் கொண்டும் அவனுடைய அசத்தியத்தை இன்னதெனக் கண்டறியலாம்.

1-வது.—அந்த ஜெரோம் என்ற அர்ச். எரோணிமூஸ், என்பவர் கல்வியிலும், வேதசாஸ்

திரத்திலும், பலபாஷைகளிலும், தேர்ந்த பாண்டித்தியரும் திருச்சபையின் சாஸ்திரிகளுக்குள் மேற்பட்ட மகாசாஸ்திரி எனப் பெயர் பெற்றவருமன்றி இவர் எபிரேயு, கிரேக்கு, கல்தேயா பாஷைகளில் வழங்கின வேதாகம நூல்களை வெகுநாள் கடைப்பிடித்து விபரீதமின்றி உத்தம பிரகாரமாய் லத்தீன் பாஷையிலே மொழி பெயர்ப்பித்து இக்காலம்வரையும் எற்றக் குறைத்தலின்றி யாவராலு மதிக்கப்பட்டு வருகின்றது. மீளவும் இவர் திருச்சபையின் எதிராளிகளை வெல்லத்தக்க அநேகம் பிரபந்தங்களையும் எழுதி யிருக்கிறார். அவைகளில் அநேகமாய் திருச்சபையில் இன்னமும் காப்பாற்றப்பட்டு வருகின்றது. மேலும் இவர் தாழ்ச்சி, பொறுமை, கற்பு, தேவசிநேகம், பிறர்சிநேகம், தபம் இது முதலிய புண்ணிய முயற்சி நிறைந்த பரிசுத்த தனத்தோடு அநேக வருஷம் திருச்சபையி லுழைத்துச் சில அற்புத வரங்களையும் அடைந்து, பெரிய மகாத்துமாவாய் 420-ம் வருஷத்தில் 81-வயதுடையவராய் மரித்து நித்திய சீவியத்தை யடைந்தார் என்று அவருடைய உண்மையான சரித்திரத்தை வாசிப்பதினால் தெரியவருகின்றது. அன்றியும் இவருடைய புண்ணிய முயற்சிகளையும், பரிசுத்த நிலைமைகளையும், அற்புத கிரியைகளையும், திருச்சபையானது பரிசோதிக்கலாகி இவரை அர்ச்சிய சிஷ்டவராகக் கொண்டாடியும் வருகின்றது. ஆனால் இவர் சிலவேளை கத்தோலிக்கென்றும், சாதாரண திருச்சபைக்கு விரோதமாய் எழும்பிய வேதப் புரட்டராகிய பதிதர்களை நியாயப்படி கண்டித்திருக்கலாம். (ஏனெனில் அக்காலத்தில் அநேகம் கள்ளப் போதகர்கள் எழும்பித் திருச்சபையைக் கலக்



கிறார்கள்). இதினால் அந்த பரிசுத்த மகாத்துமாவைக் குறைவு சொல்லுவது பிசகு. ஏனெனில் பதிதரைக் கண்டிக்கவேண்டியது வேதத்தின் சுபாவமேயும், திருச்சபையின் கடமையுமாம். எதினாலென்றால் ஆதியில் ஏவாளடைந்த போதனையான பாம்பின் விஷத்தைப்போலவே வேதப் புரட்டராகிய பதிதர்களுடைய போதனைகளும் ஆத்துமத்தைக் கொல்லும் கொடிய விஷமானதால், அதைக் கண்டித்து விலக்கவேண்டிய அவசியம். அந்தப்படி வேதாகமத்திலும் கண்டிக்கப்பட் டிருக்கின்றது. அதாவது பழைய ஏற்பாட்டின் இசராயேல் சபை "தலைமைக்கும் அதின் ஆசாரியத்துவ முறைமைக்கும் விரோதமாய் எழும்பிய கோரை, தாத்தான், அபிறோன், முதலிய பிரிவினைக்காரரை மோயீசன் கண்டித்தபோது கீழ்ப்படியாமற்போன அவர்களைத் தண்டிக்கும்படி தேவகோபமே அவர்கள்பேரில் வந்து ஒருவரையும் தப்பவிடாமல் சிலரைப் பூமி தன்வாயைத்திறந்து விழுங்கினதுமன்றிச் சிலரை அப்பூமியின் வாயில் நின்றெழும்பிய அக்கினிச் சுவாலை பட்சிக்கலாகி சாம்பலாய்த் தீர்ந்துபோனார்கள். (4-மோ. 16-31, 35) பின்னும் கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய போதனைகளைக் கேளாதிருக்கவும், அவர்களைத் தங்களில் நின்று நீக்கவும், வெகு கண்டிப்பாய்க் கட்டளை யிட்டிருக்கின்றது. (5-மோ. 13-5; எரே. 14-14, 23; 15-32; 27-15, 16; 29-8, 9) அப்படியே புதிய ஏற்பாட்டிலும் அர்ச். ஸ்நாபக அருளப்பர், பரிசேயர், சதுசேயர் என்ற யூதப் பிரிவினைக்காரரைப் பார்த்து "விரியன் பாம்பின் குட்டிகளே, வரப்போகிற (தேவ) கோபத்துக்குத் தப்பித்துக்கொள்

ளும் வகையை உங்களுக்குக் காட்டினவன் யார்? மனந்திரும்புங்கள்" என்று கண்டித்திருக்கிறார். (அர்ச். மத். 3-7) பதிதருடைய விஷம், எப்படிப் பட்டதென்று மேற்சொல்லிய பாம்பின் போல் அறிந்து கொள்ள வேண்டியது. அப்படியே நமது இரட்சகரும் அநேகம் விசை அவர்களைப் பார்த்துக் கண்டித்ததுமன்றி அவர்களுடைய துர்ப்போதனைகளாகிய "புளித்த மாவின்மட்டில் எச்சரிக்கையா யிருக்கும்படி தமது சீஷர்களுக்குப் படிப்பித்திருக்கிறார்." (அர்ச். மத். 16-6; மாற். 8-15) பின்னும் கள்ளத் தீர்க்கதரிசி அல்லது (கள்ளப் போதகர்களாகிய பதிதர்) உள்ளே பறிக்கிற ஓநாய்களா யிருக்கிறபடியால், அவர்கள் மட்டிலும் எச்சரிக்கையா யிருக்கும்படி கற்பிக்கிறார். (அர்ச். மத். 7-15) அப்போஸ்தலர்களும் தங்கள் காலத்தில் எழும்பிய பதிதர்களை வெகுவாய்க் கண்டித்து (அப். நட. 15-24; கலா. 2-4; ரு. 10-12, 2-தீமோ. 2-17, 18; அர்ச். இராய. 2-ம் திரு. 2-ம் அதி.; அர்ச். அருளப். முதல் திரு. 4-3; அர்ச். யூதா நிருபம்) சபித்தும் (கலா. 1-9) சாத்தானுக்கு ஒப்புக்கொடுத் திருக்கிறதுந் தவிர (1-தீமோ. 1-20) காலாகாலத்தில் எழும்பும் வேதப் புரட்டர்களைப் பற்றியும் எச்சரித் தெழுதி யிருக்கிறார்கள். (அப். நட. 20-27, 30; உரோ. 16-17; கொலோ. 2-8) காட்சியாகமத்திலும், அவர்களைப்பற்றி மெத்தவும் கண்டிப்பாய் எழுதப்பட்டிருக்கிறது. (காட்சி. 2-ம் அதி 6, 14, 15, 21, 22-ம் வசனங்கள்.) மேலும் பிள்ளையின் துர்நடக்கைகளைக் கண்டு தகப்பன் அடித்தால், தகப்பன் பொல்லாதவனென்று சொல்வாருண்டோ? குரு தமது சீஷரின் அவிசுவாசத்



தையும், அதினாலுண்டாகும் கேடு பாடுகளையுங் கண்டித்தால், குரு கெட்டவனென்று சொல்லுவது அழகா? நியாயாதிபதி குற்றவாளியை ருசுவோடு தண்டித்தால், அநீதி என்று நிந்திப்பது பிசகல்லவா? நியாயம் இப்படி யிருக்க, அந்த சதிகாச கர்த்தனும், அவனை நம்பிய இந்த மதி மோசக்காரரும் கத்தோலிக்குத் திருச்சபையின் மெய்ம்மறைப் போதகரும், வேத வித்தியாபாரகருமான அந்த மேலான அர்ச்சியசிஷ்டவர் பேரிலும், மற்றும் பூர்வ பிதாக்கள் பேரிலும் அப்படி இப்படி யென்று காய்மகாரத்தால் இல்லாததும் பொல்லாததுமான வம்புச் செய்திகளை யுண்டு பண்ணிக் கொண்டு குற்றம் பாராட்டுவது புரோடெஸ்டாண்டாருடைய பிசகுமட்டுமல்ல; வேதத்திற்கும் விரோதமான கொடும்பாவமுமா யிருக்கின்றது. (காட்சி. 13-6; அர்ச். லூக். 10-16.)

2-வது.—"கிறீஸ்து தேவதூதருக்காக மரித்தார் என்றும், சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஆத்துமா உண்டென்றும், அர்ச். ஜெரோம் என்பவர் போதித்ததாகவும், சாதித்ததாகவும், அந்தடியுபிரேடே புரோடெஸ்டாண்டார் ஒத்து சாதிப்பது முற்றிலும் பிசகு. மகா வேதசாஸ்திரியான அவர் வேதசாஸ்திரத்திற்கும், திருச்சபைப் போதனைக்கும் விரோதமாய் போதித்தார் என்ற நம்பக்கூடியதல்ல. எப்படியெனில் திருச்சபை தன் கொள்கைக்கு விரோதமாய் யாதொருவர் யாதொரு போதனையைப் போதிக்கக் கண்டால் உடனே தன் ஐக்கியத்தை விட்டுத் தள்ளுகிற அச்சத்திய திருச்சபை அவரின் துர்ப்போதனையோடு எப்படித் தன் ஐக்கியத்தில் அவ

னை வாழச்செய்யும்? மகா வேதசாஸ்திரி யென்றும், அர்ச்சியசிஷ்டவர் என்றும் எப்படி அவருக்குப் பட்டங்கொடுக்கும். மேலும் இவருக்கு முன் மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மகா வேத சாஸ்திரிகளென எழும்பி யிருந்த தேர்துல்லியான், ஒரிஜன் முதலியவர்கள் எவ்வளவு சாஸ்திரிகளாயினும் அளவுக்குமிஞ்சித் திருச்சபைக்கு விரோதமாய்ப் போதித்ததால் அவர்களைத் திருச்சபை தன் ஐக்கியத்தைவிட்டுத் தள்ளியிருக்க, இவர் அப்படி போதித்திருப்பாராமாகில் எப்படி தன் ஐக்கியத்தில் சேர்க்கக்கூடும். ஆகையால் அதெல்லாம் பிசகு; ஆனால், ஒரிஜனைப்பற்றியும், அவன் எழுதின தவறுள்ள நூல்களைப் பற்றியுங் கண்டித்திருக்கலாம். ஆனபோதிலும் அர்ச். ஜெரோம் ஒரிஜனை முகமுகமாய்க் கண்டித்தாற் போலவும், அப்படி கண்டிக்கும்போது தன்னுடைய விஞ்ஞான அபிப்பிராயங்களில் பலதை விட்டுவிட்டார் என்றும், சில சமயங்களில் இயற்கையான அர்த்தத்திற்குப் பதிலாக உபமான அர்த்தஞ் சொல்லுவார் என்றும், டியுபின் சொன்னார் போலவும் இவர்கள் எடுத்துக் காட்டி அவர் பேரில் குறை சொல்லுவது மெத்த பிசகு. ஏனெனில், ஒரிஜன் 27[illegible]-ம் வருஷம் மரித்தவன். அர்ச். ஜெரோம் 361-ம் வருஷத்திற்குப்பின் ஞானஸ்நானம்பெற்றெழும்பிய வேதசாஸ்திரியானதைக் கொண்டு அவனுடைய தவறான நூல்களைக் கண்டித்ததுக்கேயக அவனை முகமுகமாய்க் கண்டித்தாற்போல் எழுதுவது என்ன நியாயம்? இது நம்பக்கூடிய இங்காசமாமோ? ஆகையால் அந்த டியுபினும், அவனை நம்பிய புரோடெஸ்டாண்டாரும் பூர்வ பிதாக்களைப் பற்றித் தந்திரமாய்



நுழைத்துச் சொல்லும் காரியங்களெல்லாம் பொய்யே யல்லாது நம்பத்தக்க மெய்யெனலாகாது. மேலும் கத்தோலிக்குத் திருச்சபையின் பேரிலும், அதின் பிதாக்கள் பேரிலும் பாடாந்தரமான பொய்கள் சொல்வது புரோடெஸ்டாண்டாருக்கு வழக்கமென அவர்கள் தாமே தமிழில் அச்சுப்பதிப்பித் திருக்கிற இங்கிலாந்து தேச சரித்திரத்தினால் தெரியவருகின்றது. (இங். சரி. 39-ம், 399-ம் பக்.)

3-வது.—"பூர்வ பிதாக்கள் எழுதிய நூல்கள் எல்லாம் காலாந்தரத்தில் அழிந்துவிட்டன" என்று டியுபின் சொல்லுவதை நம்பிய முத்தைய பிள்ளை யவர்கள் "இங்கும் அங்கும் அகப்பட்டதை மாத்திரம் பொறுக்கிச் சேர்த்து எழுதிய சில வாக்கியங்களை வைத்துக்கொண்டு, பிதாக்களுடைய அபிப்பிராயம் இதுதான் என்று நாம் நிச்சயமாய் அறிகிறதெப்படி" என்று சொல்லுகிற படியால், அந்த டியுபின் என்கிறவன் 1657-ம் வருஷத்திற்குப்பின் உண்டானவனாச்சுதே, இவன் பூர்வ பிதாக்களுடைய காரியாதிகளை எப்படி அறிந்தான்? இவன் அந்த மகாத்துமாக்களைக் குறித்து இப்படி அப்படி என்று எழுதினதற்கு ஆதாரமென்ன? இயுஸ்பியஸ் என்றவருடைய நூலில் நின்றெடுத்துப் பேசியிருக்கிறான் என்பார்களாக்கும், திருச்சபை ஆதாரமன்னியில் அதைத்தான் எப்படி நம்பத்தகும்? அந்த இயுசிபியஸ் என்ற சரித்திரக்காரன் செமியரியானரைச் சேர்ந்த பதிதனாச்சுதே, அப்படியிருக்க அவன் நம்பத்தகுந்தவனோ? ஆகிலும் அவன் எழுதின சரித்திரத்தில் அநேகமானது உண்

மைக் கெடுத்துக்கொண்ட போதிலும், அவன் 338-ம் வருஷத்தில் மரித்துப்போனவனாயிருக்க, 361-ம் வருஷத்துக்குப் பின்னுண்டான அர்ச். ஜெரோம் முதலான பிதாக்களுடைய நூல்களையும், அவர்களுடைய வரலாறுகளையும் அவன் எப்படி கண்டறியக்கூடும்? காரியம் இப்படியிருக்கப் பிதாக்கள் நூல்களையும், பிதாக்கள் நூல் என்பதுகளையும் நம்பாத இவர்கள் இந்த டியுபின் சொல்வதை மெய்யென நம்பி அதை உதாரணமாக வெளியிடுவது தங்களுக்கு வெட்கமென காண்கிறோம்.

4-வது.—"பிதாக்கள் எழுதிய நூல்கள் எல்லாம் அழிந்து விட்டன" என்பது பிசகேயன்றி நிசமல்ல. இதற்கு அவர்களின் வணக்கத்தலைவில் எழுதப்பட்டிருக்கிற வாக்குமூலமே சாக்ஷியாம். அதாவது அந்நூல்கள் எல்லாம் காலாந்தரத்தில் அழிந்து விட்டன. ஒன்றாவது நமக்கு வந்து எட்டவில்லை என்று முதலாவது சாதித்து, 2-வது இங்கும் அங்கும் அகப்பட்ட சில நூல்கள் உண்டு என்றாற்போல் சொல்லுவதால் எல்லாம் அழிந்துவிட்டன வென்றது பிசகானதென வெளியாகுகின்றது. இப்படிப்பட்ட அசத்தியஞ் சாதிப்போர் சொல்லு மற்றவை எல்லாம் மெய்யாமோ? ஆகையால் இவர்கள் அதில் சொல்லப்பட்டதெல்லாம் நம்பப்படத் தக்கதல்ல. மேலும் பூர்வ பிதாக்களுடைய நூல்களும், சரித்திரங்களும் எத்தனையோ பிரபந்தங்கள் இன்னமும் திருச்சபையில் காப்பாற்றப்பட்டு, அதின் மெய்விசுவாச உபதேசத்தை அத்தாட்சியோடு திடப்படுத்தி வருகின்றது. இதற்குப் புரோடெஸ்டாண்



டார் எழுதிய சபை சரித்திரங்களில் தானே வேண்டிய அத்தாட்சி கொடுக்கலாம்.

5-வது.—பூர்வ பிதாக்கள் எழுதிய நூல்களில் சிலதுகள் அழிந்துவிட்டது மெய்யே. ஆனால் எல்லாம் அழிந்து விட்டதாகச் சொல்லுவது பொய்யே. ஆகிலும் அப்படி சிலதுகள் அழிந்துவிட்டதால் இருக்கிற மற்றவை பிசகெனத் தள்ளுவாருண்டோ? இந்தப்படி வேதாகமத்தில் (3 அல்லது 1-இராசா. 11-41; 1-நாளா. 29-30; 2-நாளா. 9-29; 12-15; 13-22; 33-19) இவ்வசனங்களால் குறிக்கப்பட்டிருக்கிற நாத்தான் பிரபந்தம், காதின் பிரபந்தம் ஆகியா எழுதின தீர்க்கதரிசனம், சாலோமோன் நடபடி, எலி எழுதின தரிசனம், செமாயின் புஸ்தகம், அதோவின் வம்மிசத் தட்டவணை, ஈதோவின் சரித்திரம், ஓசாயின் பிரபந்த முதலிய இவ்வாகமங்கள் ஒன்றையுங் காணோமே. எல்லாம் அழிந்துவிட்டனவாய்த் தெரியவருகிறதே. ஆனதைப்பற்றி இருக்கிற மற்ற வேதாகமங்கள் பிசகெனத் தள்ளலாமோ? இவ்வாகமங்களிலு முதலாய் சில வாக்கியங்கள் சம்பந்தமின்றி இருக்கிறதே. இது நிமித்தம் மற்றவையெல்லாம் நம்புவதெப்படி? என்று சந்தேகிப்பாரில்லையே. புரோடெஸ்டாண்டார் இவைகளைச் சிந்திப்பார்களாக.

6-வது.—பூர்வ பிதாக்கள் முதலிய மற்றும் ஆசிரியர்கள் எழுதிய நூல்களை அங்கீகரிக்கலாகாதென்பதற் காதாரமான [illegible]க்காக "ஆண்டவர் அருளிய வேதத்தைத் தவிர மற்றெதையும் எந்த மனுஷருடைய அபிப்பிராயங்களையும் அதுவிஷயத்தில் நாம் அங்கீகரிக்கவாவது, கைக்கொண்டு

நடக்கவாவது கடமைப் பட்டவர்களல்ல" என்பதாய் முத்தையபிள்ளை உணர்த்துவதால், இவர்கள் கைக்கொள்ளுவதும் புரோடெஸ்டாண்டு மார்க்கத்தில் வழங்கி வருவதுமான அநுஷ்டானங்கள் அநேகமாய் இது விஷயத்தில் தடுக்கப்படுகின்றது. அவைகளைப் பின்வரும் சம்பாஷணைகளில் வெளியாக்குவோம். ஆகிலும் உதாரணமாக அவர்களில் நடந்த ஒரு சங்கதியை இதில் சுருக்கமாக எடுத்துரைப்போம். அதாவது:—1855-ம் வருஷத்தில் தாங்கள் அச்சுப்பதித்த நற்போதகமென்னும் பத்திரிகை 323-ம் பக்கத்தில் சொல்லி யிருக்கிறபடி முந்தின பாகத்தில் நாம் எடுத்துக்காட்டிய கோரம் ஐயருக்கும், அவருக்கு மேலான பிஷப்புக்கும் ஞானஸ்நானத்தினா லுண்டாகும் மறு பிறப்பை அல்லது மறு ஜென்மத்தைக்குறித் துண்டான விவாத வழக்கைத் தீர்க்கிறதற்கு வேதாகமத் தண்டையிலோ, மற்றெவரண்டையிலோ போனார்களென்றும், அதற்காகக் கூடிய விக்டோரியா ராணியின் பெரிய ஆலோசனை சங்கத்தாரும், பெரிய பெரிய பிஷப்புக்களும் அதை நிவிர்த்தி செய்வதற்கு அல்லது நியாயஞ் சொல்லுவதற்கு வேதாகமத்தையோ? அல்லது தங்கள் முன்னோர்களாகிய புரோடெஸ்டாண்டு பிதாக்கள் எழுதிய பிரமாணங்களையும், நூல்களையுமோ? அதற்காதாரமாக கைக்கொண்டு அவ்வழக்கைத் தீர்த்தார்களென்றும் முத்தையபிள்ளையவர்கள் இதுவரையும் வாசித்திரார்கள் போலவாம். அப்படியானால் அவைகளைக் கூர்ந்து பார்த்து தங்கள் புத்தி யுக்தியினால் உணரக்கடவார்கள். வேதம் வேதம் என்று வெறும்பிதுக்காய்ப் பேசுவது என்னமதி?



*       *       *
*       *       *

"கட்டிச் சுருட்டுவோர் கக்கத்தில் வைப்பர் கருத்
தில்லையார்
பட்டப்பகலை இரவென்று கூறிடும் பாதகரே"

*       *       *
*       *       *
*       *       *

"ஆற்றிற் கிடந்து துறைதெரியாமல் அலைகின்ற
ரே."

என்று உலக ஞானிகள் உணர்த்துவதுபோல பையில் எனச் சில ஆகமங்களடங்கிய புஸ்தகத்தை வேதமெனக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு அதின் உண்மையையும், கருத்தையும் அறியாமல் அவ்வேதம் போதும், வேதம் போதும் என வெளிக்கு மெய்ப்பாய்ச் சொல்லிக்கொண்டு, பிதாக்கள் நூல் வழக்கென இதற்குப் பல இடையூறு பேசிக்கொண்டு கடைசியாய் (மீனையும், விடக்கையுமிழந்த இகலனைப்போல) இதையும் விட்டு, அதையும் விட்டு (ஆற்றின் துறை தெரியாமல் அதின் ஆழத்திற் கிடந்து மல்லாடுவது போல) மோக்ஷகரை ஏறுவதற்கான வேதத்தின் துறைதெரியாமல், அதின் ஆழ்ந்த கருத்தில் கிடந்து ஒருவரோடொருவர் மல்லாடி, ஒருவரை யொருவர் மறுத்து, கடைசியாய் தங்கள் அவிசுவாச சந்தேகத்தில் அமிழ்ந்துப் போகிறது தங்களுக் கநுகூலமோ பிரதி கூலமோ? என்று சிந்தித்துப் பார்ப்பார்களாக.

மேலும் புரோடெஸ்டாண்டார் வேதத்தினுள்ள பரம இரகசியமான ஆழ்ந்த கருத்துக்களை

அறிகிறதற்கு சத்தியத்தைக் காக்கிற தூணும்
அஸ்திவாரமுமா யிருக்கிற ஒயோன் பருவதமா
கிய திருச்சபை யண்டையிற் போகாமலும்,
(1-தீமோ. 3-15; இசையாஸ். 2-2, 3; மீகாஞ
ஸ். 4-1, 2) அதின் விசுவாசப் பிரமாணத்தோ
டொத்து அதற்குப் பூர்வ பிதாக்களுரையிடும் வி
யாக்கியானத்தை அங்கீகரித்து, அதின் மெய்வழி
நடவாமலும், வேதத்திற்கு அவரவர், தம் தம் புத்
தியை ஆதாரமாக வைத்து, ஒருவரை யொருவர்
வாதித்து, மறுத்து, பற்பல கொள்கைகளாய்ப்
பிரிந்து, தம் தம் அபிப்பிராயப்படி சாதிப்பதை
யே வேதப்பிரமாணமாக கைக்கொண்டு அதை
விசுவசிப்பதும்; போதிப்பதும் பிசகானதுமாத்
திர மல்ல. தேவபத்திக்கு இடையூறும், அவ
பத்திக்கு அநுகூலமுமானதென்று பிரத்தியட்ச
மாய்க் காண்கிறோம்.

சந்.—ஐயாவே! "வேதாட்சரத்தில் கற்பிக்கப்ப
ட்டதற்கு மேலாக மரியம்மாளைக் குறித்து விசுவசிப்ப
தும், போதிப்பதும், பிசகானதுமாத்திரமல்ல, தேவ
பத்திக்கு இடையூறும், அவபத்திக்கு அநுகூலமுமான
தென்று பிரத்தியட்சமாய்க் காண்கிறோம்" என மூத்
தையபிள்ளை யவர்கள் மொழிந்ததை அவர்கள் பேரில்
தானே மாறியடிப்பது என்ன?

உப.—சகோதரனே! நீரோ சிந்தித்துப்பாரும்
முந்தி நாம் காட்டிய வேதவசனத்தோடும், பி
தாக்கள் நூல் வி[illegible]ரிக்கும் கருத்தோடும், மரிய
ம்மாள் தேவமாதா [illegible]ய திருச்சபை விசுவசி
ப்பதும், போதிப்ப[illegible]ம், பிசகா யிருக்கின்றதா?
அவ்வேதாட்சரத்[illegible]ற்கும், பிதாக்கள் நூல் போ
திப்பதற்கும் [illegible]ருச்சபை விசுவசிப்பதற்கும் மே



லாகத் தன் புத்தியை யுயர்த்தி அவைகளுக்கு வி
ரோதமாக போதிப்பதும், சாதிப்பதும், பிசகாயி
ருக்கின்றதா? பின்னும் அவர்கள் மரியம்மாளை
தேவமாதா என்று விசுவசிப்பதும், போதிப்ப
தும், தேவபத்திக்கு இடையூறு என்று சாதிப்
பதும் பிசகானதுமட்டுமல்ல, அவர்கள் தங்கள்
கல்விப்பெருமைக்கு மகா ஈனமுமாயிருக்கின்றது.
அதெவ்வாறெனில் மரியம்மாளைத் தேவமாதா அ
ல்லது தேவனுடைய தாயார் என்று சொல்லும்
போது அம்மரியம்மாளைத் தாமே தெய்வமென்
று பாவித்துச் சொல்லுவதாக அவர்கள் எண்
ணும் அவபத்திக்கு அநுகூலமாகாமல், அத்திரு
த்தாயாரிடம் உற்பவித்துப் பிறந்தவர் தேவனு
மனுஷனு மொன்றான மெய்த்தேவன் என்று உறு
தியாய் விசுவசிப்பதற்கு தூண்டுதலும், அவர்
பேரில் பக்தி வைப்பதற்கு மெய்யாகவே அநு
கூலமுமென இவர்கள் அறியாமற் போனார்கள்
என்பதே. இந்தப்படி அருள்வேத ஆரம்பமுதல்
இதுவரையும் அவரை விசுவசித்து, அவர்பேரில்
பக்திவைத்து, புண்ணியநெறியில் ஞானச்சுடராய்
விளங்கி, மறுமையில் மோக்ஷ அநுகூலமடைந்த
பாப்பானவர்களும், மேற்றிராணிமார்களும், குரு
ப்பிரசாதிகளும், சந்நியாசிகளும், கன்னியாஸ்திரி
களும், இல்லறத்தோராகிய இராசாக்களும், இரா
க்கினிகளும், மற்றும் ஸ்திரீ புமான்களும், எத்த
னையோ ஆயிரம் கணக்கில் அடங்கா. இதைவி
ட்ட இக்காலத்துப் புரொடெஸ்டாண்டாரும், இ
வர்களோடொத்த முற்காலத்துப் பதிதருமோ
வெனில், மரியம்மாள் தேவனுடைய தாயார் அ
ல்ல, அவளை வணங்கலாகாது என்றும், திருச்ச
பை பாரம்பரையாய்க் கற்பிப்பதையும், பூர்வபிதாக்

கள் நூல் போதிப்பதையும் அங்கீகரிக்கலாகாது, அது தவறு என்றும், மாறி மாறி "காற்றினலடிக்கப்பட்டு அங்குமிங்கும் அலையும் காரிருள் மேகம்போலவும், மார்க்கந்தப்பி நடக்கிற நட்சேத்திரங்களைப் போலவும் (வேதவாக்கியங்களுக்கு மேலாகத் தங்கள் புத்தியை உயர்த்தி) தங்கள் சுயலச்சைகளை நுரைபோலாக்குகிற உக்கிரத்தையுடைய கடலின் அலைகளைப்போலவும், தங்கள் இச்சையின்படி நடந்துகொண்டு இதமாய்ப்பானவைகளைப் போதித்து, (அர்ச். யூதா. 12 முதல் 19-ம் வசனம்வரை") எண்ணிறந்த பல கொள்கையாய்ப் பிரிந்துகொண்டு தேவபக்திக்கு இடையூறும், அவபக்திக்கு அநுகூலமாயும் ஓடித்திரிவதை நெடுகிலும் நாம் பிரத்தியட்சமாய்க் காண்கிற கண்காட்சிதானே.

## 3-ம். அதிகாரம்.

[தேவமாதாவைப்பற்றிப் புரோடெஸ்டாண்டுக்களுடைய நிந்தனைகளை எடுத்துக்காட்டி, அதற்குப் பரிகாரமாக அவளுடைய மேலான மகிமையைப் புகழ்ந்து கூறிய.]

### சம்பாஷணை.

சங்.—ஐயாவே! தாங்கள் முந்தின அதிகாரத்தில் சொல்லியபடி புரோடெஸ்டாண்டாருடைய அவிசுவாசங்களையும், அவபக்தியாய்ப் பிரிந்து கிடக்கும் பல தவறுள்ள கொள்கைகளையும் நான் கண்டும், கேட்டும், வாசித்தறிந்துமிருக்கிறேன். அது இருக்கட்டும், இன்னமும் முத்தையபிள்ளையவர்கள் தமது தவறுநூல் இரண்டாம் அதிகார்த்தில் தேவமாதாவைப்பர்றி வாதிப்பதைப் பார்த்தீர்களோ?

உப.—ஆம், அதில் எறக்குறைய முதல் அதிகாரத்தில் சொல்லப்படுகிற ஆட்சேபனைகளைப் போலவே பல தப்பறையா யுரைக்கப்பட்டிருக்கின்றது. ஆகிலும் அநுவிஷயத்திலும் சிலகாரியங்களை இதில் எடுத்துக்காட்டி சமாதானிப்போம். அதாவது:—"யேசுநாதர் தமது தாயாரை நிந்தித்து நடத்தினார் என்று புரோடெஸ்டாண்டார் சொல்லுவது சுத்தத் தவறு" என்று சவுந்தரநாயகம் பிள்ளையவர்கள் தாம் பின் தெரிவிப்பதற்கு முன் அட்டவணையாக எடுத்துரைத்திருப்பதை முத்தையபிள்ளையவர்கள் தம் நூலில் எடுத்துக்காட்டிக்கொண்டு, "யேசுநாதர் புண்ணிய மூர்த்தி என்று விசுவசிக்கிற கிறீஸ்துவர்களில்

எவர்கள் யேசுநாதர் தமது தாயாரை நிந்தித்து நடத்தினார் என்று சொல்லுகிறார்களோ நாம் அறியோம்' என (போன்சு பிலாத்தைப்போல் கை கழுவி ஒப்புக்கொடுத்து) "அப்படிச் சொல்லுகிற புரோடெஸ்டாண்டார் எங்கேனும் இருப்பாராயினும் அவர்பேச்சு நமக்குப் பிரமாணம் அல்ல என்று போக்குச் சொல்லுகிறார்கள். ஆனால் புரோடெஸ்டாண்டு என்பது ஒரேபேரா யிருக்க, அவர்பேச்சு இவருக்குப் பிரமாணம் இல்லையென்று எப்படிச் சொல்லலாம். அப்படியானால் அவருக்கு இவர் பேச்சுப் பிரமாணம் இல்லை என்பார் அல்லவோ? இப்படியாய்த்தான் ஒருவரை யொருவர் மறுத்து சலஞ்சாதிப்பது அவர்களுடைய தொழிலும், கொள்கையுமன்றி புரோடெஸ்டாண்டு என்கிற பெயரும் அக்கொள்கைக் கொத்ததாம். ஆகிலும் இப்புரோடெஸ்டாண்டாரும், அப்புரோடெஸ்டாண்டாரும் அப்படிச் சொல்லவில்லை என்று சமயத்துக்குத் தக்காப்போல் மறுத்தாலும், இவர்கள் தாமே தேவமாதாவைப்பற்றி நிந்தனைகள் சொல்லவில்லையோ?

சக்.—ஐயாவே! அப்படி யவர்கள் என்ன நிந்தனை சொன்னார்கள்?

உப.—சகோதரனே! அதுகளேதென்றால் தேவகுமாரனுக்குத் தாயாரான மரியம்பாளை தேவமாதாவெனச் சொல்லக்கூடாதென்றும், அவளை வணங்கக்கூடாதென்றும் தாங்க ளந்தத் தவறு நூலில் சொல்லுவது அத்தேவ தாயாருக்கு நிந்தனையல்லவோ? மேலும் இப்புரோடெஸ்டாண்டார் முன் பாளையங்கோட்டையில் அச்சுப்பதிப்பித்த புதிய ஏற்பாடு பொருளடக்கம் ௨-ம் பங்கு



386-ம் பக்கத்தில் "யாக்கோபு, யோசே, சீமோன், யூதா இவர்கள் யேசுவின் தாயாகிய மரியாளால் பிறந்தவர்களா யிருக்கலாமென்பது சிலருடைய கொள்கையாம்" என்றும், "அப்படியானால் யாக்கோபு அவருடைய (அதாவது யேசுநாதருடைய) சொந்தச் சகோதரனும், அவருக்கு இளையவனுமாமே" என்றும், "இந்தத் தாற்பரியம் வேதத்திற்கு விரோதமானதுமல்ல, ஏனென்றால் மரியாள் என்றைக்குங் கன்னியா யிருந்தாளென்பதற்கு வேத ஆதாரமில்லை" என்றும் தேவதாயாருடைய கன்னிமைக்கு விரோதமாய் சாதிக்கும் அப்புரோடெஸ்டாண்டாருடைய கொள்கை இப்புரோடெஸ்டாண்டாருடைய தாற்பரியத்தினால் நிச்சயம் பெற்றாற்போல் தீர்மானமாயும், உறுதியாயுஞ் சாதிப்பது அத்தேவதாயாருக்கு நிந்தனையல்லவோ? இப்படிச் சாதிப்பவர்கள் இந்த முத்தையபிள்ளை யவர்களைச் சேர்ந்த புரோடெஸ்டாண்டாரே யல்லாது, மற்ற எவர் மேலும் "அப்படிச் சொல்லுகிற புரோடெஸ்டாண்டாருடைய பேச்சு நமக்குப் பிரமாணம் அல்ல" என்ற இவர்கள் அத்தேவதாயாருடைய மாசற்ற கன்னிமைக்கு விரோதமாய் அப்படிச் சொல்லுகிற அப்புரோடெஸ்டாண்டாருடைய கொள்கையுங், கட்டுக்கதையுமான பேச்சு இப்புரோடெஸ்டாண்டாருக்கு வேதவிரோதமற்ற பிரமாணமாய்ப் போனதென்ன? சகோதரனே! புரோடெஸ்டாண்டார்களுடைய கபடதந்திரங்களை இவ்விஷயத்தில் நன்றாய்க் கவனித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது. மீளவும் அப்புரோடெஸ்டாண்டார் சொல்லுகிற "யாக்கோபு, யோசே, சீமோன், யூதா" என்ற இவர்கள் வேறே தாய்தகப்பன்மார்

களுக்குப் பிறந்தவர்களென்று முந்தின சம்பாஷணையில் வேதவாக்கிய அத்தாட்சியோடு திருஷ்டாந்தப்படுத்தி யிருக்கிறோம். அப்படியிருக்க, “இந்தத் தாற்பரியம் வேதத்திற்கு விரோதமானதல்லவென்று” எப்படிச் சொல்லலாம். இவர்களா “வேதத்தை ஒரு தரத்தைப்போல் பலதரமும் ஆராய்ந்தோராவார்.” அப்படிப் பொய்யாய்ச் சாதிப்பது வேதத்துக்கு விரோதமும், கொடும் பாவமும் எனவே தீர்மானிக்கவேண்டியது. மேலும் அப்படி அவருக்குக் கூடப்பிறந்தவர்கள் இருந்தால் அல்லது புரோடெஸ்டாண்டார் சொல்லுகிறபடி “யாக்கோபு அவருடைய சொந்தச் சகோதரனும், அவருக்கு இளையவனுமா யிருந்தால் நமது ஆண்டவர் மரணம் அடையும் வேளையில், தமது தாயாரை, கிட்டேநின்ற இன்னொரு சீஷனை நோக்கி இதோ உன் தாய்’ என்று அந்த சீஷனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியதென்ன? அந்த சீஷனும் அது முதல் அந்தேவதாயாரைத் தமது வீட்டில் வைத்து (அர்ச். அருள. 19-27) தமது தாயாராக பாவித்துப் பராமரிப்பானேன்? அன்றியும் பரிசுத்த மரியம்மாள் தேவ திருக்குமாரனைத் தமது கர்ப்பத்தில் சுமந்து பெறுவதானிமித்தம் என்றைக்குங் கன்னிமையா யிருக்கவேண்டும் என்பது தேவ தீர்மானமாம். அந்தப்படி “கர்த்தர் என்னோடே சொன்னதாவது, இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப் பட்டிருக்கும் ஒருவரும் அதற்குள் பிரவேசிப்பதில்லை. ஏனெனில், இஸ்ராயேலின் தேவனாகிய கர்த்தர் அதற்குள் பிரவேசித்தார். ஆகையால் அது பூட்டப்பட்டிருக்கும் (எசே. 44-2) என்று கர்த்தர் திருவுளம்பற்றி யிருக்கிறார். இந்தத் தீர்க்கதரிசன



வாக்கியத்தைக்கொண்டு பரிசுத்த மரியம்மாள் அத்தேவ குமாரனைப் பெறுமுன்னும், பெற்றபோதும், பெற்றபின்னும் கன்னிமை யுடையவளென்று வேதகற்பனையா யிருக்கின்றதுமன்றி, அவள் நமது இரக்ஷகரைப் பெற்றபின் எப்போதும் மாசணுகாத தேவ திருக்கன்னித் தாயார் என்று திருச்சபை பாரம்பரை யுபதேசமாக நமக்கு வெளிப்படுத்துகின்றது. இப்படிப்பட்ட வேதாட்சரங்களிருக்க “மரியாள் என்றைக்குங் கன்னியாயிருந்தா ளென்பதற்கு வேத ஆதாரமில்லை” என்று அப்பொரு ளடக்கத்தில் துணிகரமாய்த் தேவதாயாரின் கன்னிமைக்குப் பழுதுபேசி நாவதிப்பது நிந்தனையல்லவோ? இப்படியாய் தேவதாயாரை நிந்திக்கிற புரோடெஸ்டாண்டாருக்கு எதிரிடையாய் அந்த புரோடெஸ்டாண்டு பாதிரிகளில் பேர்பெற்ற ஒருவராகிய டாக்டர் பயர் என்பவர் கண்டித்து, மேற்சொன்ன எசேக்கியாசின் தீர்க்கதரிசனத்தைச் சுட்டிக்காட்டி “கர்த்தருடைய தாயாராகிய மரியம்மாள் அவருடைய பிறப்புக்கு முன்னும், அவர் பிறக்கும்போது மாத்திரமல்ல, அவர் பிறந்த பின்னும் எப்பொழுதும் ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்தமான கன்னியா யிருக்கிறாள்’ என்று தாம் எழுதிய (விசுவாசப் பிரமாண விளக்கம் 111-ம் பக்கத்தில்) மேற்காட்டிய வேத ஆதாரத்தோடு திருஷ்டாந்தப்படுத்தி யிருக்கிறார். இப்படியிருக்க தேவமாதாவினுடைய கன்னிமைக்குப் பழுதுபேசுவது நியாயமோ? மீளவும் இந்த புரோடெஸ்டாண்டாரைப் போல அக்காலம் 366-ம் வருஷத்தில் எழும்பின பதிதர்களாகிய யோவீனியானர் களும், 380-ம் வருஷத்தில் எழும்பின பதிதர்களாகிய எல்விதிக்

என்பவர்களும், தேவதாயாருடைய பிற்கால கன்
னிமைக்குப் பழுதுபேசினதால் திருச்சபைக்குப்
புறம்பாய் தள்ளப்பட்டார்கள். ஆகையால் இக்
காலத்து இந்த புரோடெஸ்டாண்டாரும் தேவ
மாதாவை நிந்திப்பதில் அக்காலத்துப் பதிதருக்
குடைந்தையானார்கள்.

சங்.—ஆம், ஐயா! யேசுநாதர் தமது தாயாரை நிந்
தித்து நடத்தினார் என்று, எவர்கள் சொல்லுகிறார்க
ளோ நாம் அறியோம் என்ற இப்புரோடெஸ்டாண்
டார்கள் தாமே அத்தேவ தாயாருக்கு நிந்தனையாக அத்
து றசொல்வது எவ்வளவு பிசகாயும், மதிபிசகாயுமிருக்
கின்றது. ஐயாவே! அது இருக்கட்டும், இன்னமும்
இதன்பின் அவர்கள் சொல்வதை சற்றேகவனியுங்கள்.
அதாவது:—“ஸ்திரியே உமக்கும் எனக்கும் என்ன”
என்ற வசனத்தின்பேரில் தாம் தமது தெய்வச்செய்
கையைச் செய்யும்போது தமது மாதாவுக்குக் கீழ்ப்ப
டிந் திருக்கவில்லை என்று அர்த்தமாகிறதொழிய வே
றொன்றுமில்லை என்று சவுந்தரநாயகம் பிள்ளை யவர்கள்
சொன்னதாயும் ஆனதைப்பற்றி “முந்தின அதிகாரத்
தில் யேசுநாதருடைய மனுஷத்தன்மையையும், தேவ
தன்மையையும், ஒன்றாகக்குழப்பி மரியம்மாள் யேசு
நாதருடைய தேவதன்மைக்கும் மாதா தான் என்று
சாதித்தவர்கள் இவ்விடத்தில் அதைமறந்து யேசுநாத
ருடைய மனுஷதன்மையையும், தேவதன்மையையும்,
வேறாகப்பகுத்து தாம் தமது தெய்வச்செய்கையைச்
செய்யும்போது தமது மாதாவுக்குக் கீழ்ப்படிந்திருக்க
வில்லை என்று எப்படிச்சொல்லத் துணிந்தார்களோ
என்பதாயும் “யேசுநாதர் தமது தெய்வச்செய்கையைச்
செய்யும்போது தமது மாதாவுக்குக் கீழ்ப்படியவில்லை”
என்றால் அவர் தமது மனுஷதன்மைக்குரிய செயல்
களில் மாத்திரம் தமது மாதாவுக்குக் கீழ்ப்படிந்திருந்
தாரென்றும் ஆகவே மரியம்மாள் யேசுநாதருடைய ம
னுஷதன்மைக்கு மாத்திரம் மாதாவே யொழிய அவ
ருடைய தேவதன்மைக்கு மாதா அல்ல என்றும், அவர்



கள் வாக்கினாலேயே ருசுவிளங்குகிறது என்பதாயும்,
அவர்கள் சாதிப்பதென்ன?

உப.—“நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாக்கென்றது” போல யேசுநாதருடைய தே
வசுபாவத்தையு மனுஷசுபாவத்தையும் இரண்டா
ளுக்கொப்ப பிரித்து வாதிப்பதற் கேற்றவித
மாய் முத்தையபிள்ளை யவர்கள் அதனோடு தாம்
பிசகாய் விழுந்துகொண்ட தாயினும் சவுந்தர
நாயகம்பிள்ளை யவர்களுடைய கருத்து அதுவி
ஷயத்தில் பரிச்சேதம் இரண்டாக பிரிப்பதல்ல.
எப்படி யெனில் தாம் தமது தெய்வச்செய்கை
யைச் செய்யும்போது என்றசொல் தெய்வீகத்
துக்கடுத்த இரட்சணியம் அதற்குரிய பிரசங்கம்,
போதனைகள், அற்புதங்கள் இவைகளாகிய தமது
தெய்வச் செய்கைகளைச் செய்யும்போது தமது
மாதா லௌகீகக் காரியங்களை எண்ணி அவைக
ளில் தலையிடும்போது தேவனும் மனுஷனும் ஒன்
றாயிருக்கிற தேவனை அவர் அவைகளுக்கு ஒத்
து கீழ்ப்படிந் திருக்கவில்லை என்கிற அர்த்தம்
போல தமக்குள் நிர்மானமற்ற ஒரு எண்ணமாகச்
சொல்லுகின்றார்களே யல்லாது மற்றபடியல்ல.
இக்கருத்தை உற்று உணராமல் இரண்டாக அல்
லது வேறாகப்பகுத்தார்கள் என்பது பிசகல்லவா?
இந்தப்படி வேத உபதேச வினாவிடைகள், “அ
வர் மனுஷ சுபாவத்தில் பாடுபட்டார்” என்று
சொல்லியிருக்கிறதை ஒரு ஆதாரமாகவைத்து அ
வரை இருவராகப்பகுத்து இருசெயலையும் ஒரே
ஆளில் நிறைவேற்றுகிற இரட்சணிய செயலுக்கு
விரோதமாய் வாதிக்கலாமா? அப்படி பகுத்துப்
பிரித்தால், இரட்சணியம் [illegible]

த்தில் நிறைவேறக்கூடியதாமோ? அவர் சிலுவையிலே அறையுண்டு மரிக்கும்போது "என் தேவனே என் தேவனே" என்றதையும், "பிதாவே! உம்முடைய கரங்களில் என்னாத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்" என்றதையும் (அர்ச். மத். 27-46. லூக். 23-46.) ஒரு ஆதாரமாகவைத்து அவர் தமது தேவசுபாவத்தைவிட்டு பிரிந்து மனுஷசுபாவத்தில் அப்படிச்சொன்னார் என்றும், ஆகவே யேசுநாதர் அச்சமயத்தில் தேவதன்மையற்றவராயிருந்து இரட்சணியம், அவரின் இருதன்மையுமுடைய ஓரே ஆளில் நிறைவேறாமல் அவருடைய மனுஷதன்மையில் மட்டும் நிறைவேறினது என்றும் சொல்லுவது சரியாமா? பரிச்சேதமாகாவல்லவோ, அப்படியிருக்க "தாம் தமது தெய்வீகச்செய்கையைச் செய்யும்போது தமது மாதாவுக்குக் கீழ்ப்படிந்திருக்கவில்லை" என்றதைக்கொண்டு மரியம்மாள் "யேசுநாதருடைய மனுஷதன்மைக்கு மாத்திரம், மாதாவே ஒழிய அவருடைய தேவதன்மைக்கு மாதா அல்ல" என்பதாய் தங்களுக்கு ருசுக்கிடைத்துக் கொண்டதைப்போல மெச்சிக்கொண்டு சலஞ்சாதிப்பதும், இருதன்மையுமுடைய ஓரேதேவ ஆளுக்கு மரியம்மாள் மாதாவாயிருக்கிறாள் என்ற, சத்தியவேத மெய்விசுவாசத்துக்கு அடாத விபரீதவார்த்தைகள் சொல்வதும் நியாயமாமா? இது மெத்தப்பிசகல்லவா? மேலும் அவரைப் பங்குபடுத்தி மரியம்மாள் அவருடைய மனுஷத் தன்மைக்கு மட்டும், மாதாவென்று சொல்லுகிறது, காபிரியேல் சம்மனசானவர் சொன்ன மங்களவாக்கியத்திற்கும், அர்ச். எலிசபெத்தம்மாள், இஸ்பிரீத்துசாந்துவினால், ஏவப்பட்டுச் சொன்ன புகழ்ச்சிக்



கும், முற்றிலும் விரோதமாமென முந்தினசம்பாஷணையில், தெளிவாய்க் காட்டியிருக்கிறோம். ஆகிலும் அதின் சுருக்கமாவது சம்மனசானவர் மரியம்மாளை நோக்கி "உம்மிடத்தில் பிறக்கிறது தேவகுமாரன்" என்று, இருதன்மையுமுடைய ஓரே தேவாளைக்குறித்தும் அவரைப் பெற்ற மரியம்மாளை "என் ஆண்டவருடைய தாயார்" அதாவது தேவனுடைய தாயார் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது.

சங்.—ஆகிலும், ஐயா, சவுந்தரநாயகம்பிள்ளையவர்கள் எண்ணப்படி யேசுநாதர் தமது தெய்வீகச்செய்கையைச் செய்யும்போது அவருடைய தாயாரால் ஏதாவது தடுக்கலானதுண்டோ?

உப.—பரிச்சேதம் அத் திருத்தாயார் எப்பொழுதாயினும் தமது திருக்குமாரனுடைய இரட்சணிய செயல்களிலாவது மற்றெந்தக் காரியங்களிலாவது தடுக்கலா யிருந்ததில்லை.

சங்.—அப்படியானால் சவுந்தரநாயகம்பிள்ளையவர்கள் அப்படிச்சொல்வானேன்?

உப.—அதாவது தேவதாயார் தமது திருக்குமாரனை நோக்கி (இந்தக்கலியாண விருந்தில்) இரசம் இல்லையே என்றபோது யேசுநாதர் மறுமொழியாக "ஸ்திரீயே உமக்கும் எனக்கும் என்ன, என்னுடைய நேரம் வரவில்லையே" என்றதையும், "இதோ உமது தாயாரும் சகோதரரும் உம்மைத்தேடிவந்து நிற்கிறார்கள் என்று, இவ்வொருவனால் சொல்லப்பட்டபோது யேசுநாதர், என் தாயும், சகோதரரும் யார், என்று சொல்லி; அங்கே நின்ற தம்முடைய சீஷர்களைக்

காண்பித்து இதோ என் தாயும், சகோதரரும் என்றதையும்" குறிப்பிட்டு (அர்ச். அருள். 2-3, 4; மத். 12-46, 50) இதில் யேசுநாதர் கீழ்ப்படிந்திருக்கவில்லை என்ற ஓர் அர்த்தம்போல சொல்லுகிறார்கள். ஆகிலும் அச்சமயத்தில் முதலாய் தமது தாயார் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, தமது தெய்வீகச் செய்கையைச் செய்திருக்கிறார்.

சந்.—அப்படியிருக்கத் தமது தெய்வச் செய்கையைச் செய்யும்போது தமது மாதாவுக்குக் கீழ்ப்படிந்திருக்கவில்லை என்று சொன்னது எதுக்கு?

உப.—"ஸ்திரீயே உமக்கும் எனக்கும் என்ன? என்னுடைய நேரம் இன்னம் வரவில்லையே" என்றதினால் யேசுநாதர் தமது தாயாரை நிந்தித்துப் புறக்கணித்தார் என்று புரோடெஸ்டாண்டார் எண்ணும் எண்ணத்தைக் கண்டித்து, அதின்மட்டில் தமது அபிப்பிராயம் இன்னதென காட்டுகிறாரே யல்லாது, இது நிமித்தம் மரியம்மாள் அவருடைய மனுஷ தன்மைக்குமட்டு மாதாவென அவர் சொல்லுகிறதுமில்லை, அபிப்பிராயப் படுகிறதுமில்லை.

சந்.—"யேசுநாதர் தெய்வச் செய்கையைச் செய்யும்போது தமது மாதாவுக்குக் கீழ்ப்படிந் திருக்கவில்லை" என்பதைக் கொண்டு மரியம்மாள் அவருடைய மனுஷத் தன்மைக்குமட்டும் மாதாவென முத்தையபிள்ளையவர்கள் தீர்மானிப்பது நியாயமாமோ?

உப.—அது நியாயமல்ல, எப்படியெனில் மனுஷனானவன் தன் ஆத்துமாவாகிய புத்தி, நினைவு, மனதின்படி ஒரு காரியத்தைச் செய்யும்போது அதுவிஷயத்தில் தன்னைப்பெற்ற தாயானவளுக்குக் கீழ்ப்படிந் திராதநிமித்தம் அவள்



அம்மனிதனுடைய சரீரத்திற்கு மாத்திரம் தாயேயல்லாமல் அவனுடைய ஆத்துமாவுக்கும் சேர்த்து அவள் தாயல்ல என்பது நியாயமாகாதல்லவோ? அதுபோல "அவர் தெய்வச்செய்கையைச் செய்யும்போது தமது மாதாவுக்குக் கீழ்ப்படிந் திருக்கவில்லை" என்றதினால், தேவனும் மனிதனும் ஒன்றான அவருடைய ஒரு தன்மைக்கு மட்டும் மரியம்மாள் மாதா என்பது நியாயமாகாது.

சந்.—ஐயாவே! அது சரிதான், இன்னமும் ஒரு காரியம்; சவுந்தரநாயகம்பிள்ளையவர்கள் தாம் எழுதிய தேவமாதா வணக்கம் முந்தின அதிகாரத்தில் யேசுநாதருடைய மனுஷத் தன்மையையும், தேவத் தன்மையையும் ஒன்றாகக் குழப்பி, மரியம்மாள் யேசுநாதருடைய தேவத் தன்மைக்கும் மாதாதான் என்று சொல்லுவதாக முத்தையபிள்ளையவர்கள் சொல்லுவது நிசமோ, பிசகோ?

உப.—அது முற்றிலும் பிசகு, அவர் அந்நூல் முழுவதிலும் இயேசுநாதரைக் குறித்துப் பேசுந் தன்மையில் அவர் தேவனும், மனுஷனும் ஒன்றானவர் என்று வேதத்திற்கும், திருச்சபை விசுவாசப் பிரமாண போதகத்திற்கும் ஒத்தகருத்தாய்ச் சொல்லுகிறாரே யல்லாது, அவருடைய தேவ சுபாவத்தையும், மனுஷ சுபாவத்தையும் ஒன்றாய்க் கலப்பித்துக் குழப்பிவிட்டதாக வாவது அல்லது இன்னொருவிதம், முத்தையபிள்ளையவர்கள் சொல்லுவதுபோல ஒன்று நிரித்து மற்றொன்றாக மாறிவிட்டதாக வாவது, அதில் எவ்வளவேனும் கருத்தாகிறதில்லை என அதை வாசிப்போர் தெளிவாய் அறியலாம். அன்றியும் மரியம்மாள் யேசுநாதருடைய தேவத்தன்மைக்கும் மாதாதான் என்று சொல்லுவதாய் அதில் வெ

ளிப்படுகிறதில்லை. இது முத்தையபிள்ளை யவர்கள் வாயில்நின்று வந்த பொய்யாயிருக்கின்றது. அப்படித் தன்மைக்கு மாதா என்றல்ல, இரண்டு தன்மையும் ஒன்றானவரான ஒரே ஆளாகிய தேவகுமாரனுக்கு மாதா என்றதாய் அதில் பிரத்தியட்சமாகின்றது.

சந்.—அப்படியிருக்க முத்தையபிள்ளை யவர்கள் ஏன் இப்படி பொய்சொல்லத் துணிந்தார்கள்?

உப.—பொய் சொல்லுவது புரோடெஸ்டாண்டாருக்கு இயல்புதான். மேலும் அவர்கள் இது விஷயத்தில் வாதித்துச் சாதிப்பதற்கு அப்படியும், இப்படியும் பலவிதம் குழப்புதல் செய்தால்தான் அவர்கள் எடுத்தகாரியம் அநுகூலமாகும்.

சந்.—மரியம்மாள், தேவனும், மனுஷனும், ஒன்றானவருக்கு மாதா என்றால், இரண்டு தன்மையும் ஒன்றாய்க் குழப்பின தென்றாகாதோ?

உப.—பரிச்சேதமாகா. தேவகுமாரன், மரியம்மாளிடம் கர்ப்பமாயுற்பவித்து மனுஷத் தன்மையைத் தம்மோடிணைத்துக் கொண்டதாகுமே யல்லாது மற்றப்படியல்ல.

சந்.—யேசுநாதருடைய தேவத்தன்மையும், மனுஷத் தன்மையும் ஒன்றாகக் குழப்பிக்கலந்து விட்டதென்பதும் அல்லது ஒன்று திரிந்து மற்றொன்றாக மாறிவிட்ட தென்பதும் வேதத்துக்கு விரோதமான பிசகுதானே?

உப.—ஆம், யேசுநாதருடைய தேவசுபாவமும் மனுஷசுபாவமும் அந்த ஒரேதேவ ஆளில் இணைக்கப்பட்டுப் பிரிக்கப்படாதிருக்க அது பிரிந்திருக்கிற தென்றும், குழப்பிக்கலந்து போன தென்றும், அல்லது ஒன்றுதிரிந்து மற்றொன்றாக



மாறிவிட்டதென்றும், இன்னமும், தன்மை தன்மை என்று இரண்டாளுக்கேற்பப் பிரித்து அந்தந்தச்செயலை அந்தந்தத் தன்மையிற் பேசவேண்டுமென சாதித்து இதற்குரிய விதமாய், மரியம்மாள் ஒருதன்மைக்கு மாதாவேயல்லாமல், இருதன்மையுமுடைய ஆளுக்கு மாதா அல்லவென்றும் போதிப்பதுஞ், சாதிப்பதும், தர்க்கிப்பதும், வேதத்துக்கு விரோதமானது மாத்திரமல்ல, அநேகம் ஆத்துமாக்களைக் கெடுக்கிற அவிசுவாசத்திற்கு அநுகூலமான கொடும்பாவமுமா யிருக்கின்றது. ஐந்தாம், நூற்றாண்டில் எழும்பின இவ்வகைப் பதித அவிசுவாசிகளை அக்காலத்திலுள்ள மெய்விசுவாசிகள், பொதுச்சங்கமாகக்கூடி திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளினார்கள்.

சந்.—ஐயாவே! அது மெய்தான், இப்போது நான் சொல்லுவதைச் சற்றுக் கவனியுங்கள். அதாவது:—தேவமாதாவைத் தமது திருக்குமாரன் ஸ்திரீயே என்றுரைத்த சொல்லானது வேதபுஸ்தகத்தில் எழுதிய மூலப்பாஷையின்படி அது அன்பையும், மரியாதையையுங் குறிப்பதாய்ச் சவுந்தரநாயகம்பிள்ளை யவர்கள் பல நியாயங்களை எடுத்துக்காட்டி, ஐயையோ! இதைப் புரோடெஸ்டாண்டார் எப்போ கண்டுபிடிப்பார்களோ என்றதற்கு முத்தையபிள்ளை யவர்கள் சரியான மறுமொழி கொடாமல் வேத வசனத்தையும், அதன் பொருளையும் அறிந்துகொள்வதற்கு அவசியகமான சாதனங்களையும், ஒரு முறைபோல பலமுறையும் வாசித்து, யோசித்துச், சிந்தித்துத் தெளிவடைய வேண்டும் என்கிற பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறோமே யல்லாமல் வேத ஆராய்ச்சியையும், தன் மனச்சாட்சியையும் தூர வைத்துவிட்டு, சொன்னதைச்சொல்லுங் கிளிப்பிள்ளைபோல சுவாமிமார் சொல்லிக்கொடுத்ததை மாத்திரம் சொல்லப் படித்து, மௌடீகத்தில் ஆழ்ந்து கிடக்கவேண்டும் என்கிற ஏற்பாடாவது, வழ

க்கமாவது, எங்களுக்குள் இல்லையென்று, தங்களை மேன்மைபாராட்டி நம்மை இகழ்ந்து மூடத்தனத்தில் ஆழ்ந்து கிடப்பதாக தூஷித்துப் பரியாசம் பண்ணுகிறார்களே இது சரியோ?

உப.—"கடைசி நாட்களில் இப்படிப்பட்ட பரியாசக்காரர் தோன்றுவார்கள்" என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. (அர்ச். இராயப்பர் 2-ம் நிரு. 3-3) இவர்கள் இப்படித் தூஷிப்பதினாலும் பரியாசம் பண்ணுவதினாலும், கத்தோலிக்கருக்கு ஒன்றுமில்லை. அம்மூடத்தனம் அவர்களுக்கே உரியதாம். எப்படியெனில் மேற்காட்டிய வேதவசனத்தில் இன்னமும் எழுதியிருக்கிறபடி இந்தப்பரியாசக்காரர் தங்கள் மனச்சாட்சிக்கேற்ற சுய இச்சைகளையே அதில் பொருள் படுத்திக்கொண்டு பலமுறையும் வேத வசனத்தையும், தங்கள் சாதனங்களையும்; வாசித்து, யோசித்து, சிந்தித்துத் தெளிவடையப் பார்த்தாலும் அதினால் அவர்கள் தெளிவடையாமல், அழிவடைகிறார்கள் என்பது உண்மை. அது எப்படியும் போகட்டும். இப்போது சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைபோல சுவாமிமார் சொல்லிக்கொடுத்ததை மாத்திரம் நாம் படித்தறிந்து அதின்படி நடந்து திருச்சபையோடே ஐக்கியமாயிருப்பது வேதத்துக்கொத்த நியாயமோ என்றும், அல்லது முத்தையபிள்ளையவர்கள் சொல்லுகிறபடி தன் மனச்சாட்சியைக் கிட்டவைத்து அதின்படி வேத ஆராய்ச்சிசெய்து பற்பலகொள்கையாய்ப் பிரிந்திழிவுபட்டு, எண்ணிறந்த மார்க்கங்களாய்ப் புரொடெஸ்டாண்டு அழிந்துகிடப்பது, வேதத்துக்கொத்த நியாயமோ என்றும், அவர்கள் சொல்லுகிறபடி இப்போது அவ்வேத வசன-



த்தை வாசித்து, யோசித்து, சிந்தித்துத் தெளிவடைவோம். அதாவது:—நமது இரட்சகராகிய தேவன் தமது அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் வழியான குருமார்களுக்கும் திருவுளம் பற்றினதாவது "நீங்கள் உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சணியமடைவான் விசுவசியாதவனோ வெளிற் குற்றவாளியாகத் தீர்வையிடப்படுவான். (அர்ச். மாற். 16-13,16.) இதில் குருமார் சொல்லுவதை அல்லது, பிரசங்கிப்பதைப் படித்தறிந்து விசுவசிக்கச்சொல்லியிருக்கின்றதா அல்லது வேதாகமத்தையும் அதின் சாதனத்தையும் ஒவ்வொருவனும் ஒரு முறையைப்போல் பலமுறையும் வாசித்து, யோசித்துச், சிந்தித்துத் தெளிவடைந்து அவனவன் தன் தன் மனச்சாட்சியின்படி நடக்கச்சொல்லியிருக்கின்றதா? இதற்கு முத்தையபிள்ளையவர்கள் என்ன மறுமொழி சொல்லுவார்களோ அல்லது நம்மையவர்கள் சொல்லியபடி மௌனத்தில் ஆழ்ந்து கிடப்பார்களோ தெரியவில்லை. மீளவும் குருமார்களின் போதனையைக் கேட்டு அதின்படி நடக்கிற கத்தோலிக்குச் சத்தியவேதம் கிறீஸ்துவர்களுடைய பிரபலியத்தையும் அது உலகமெங்கும் எத்தனை கோடியாய்ப் பெருகியிருந்தாலும் (இசையா. 6-17; எபே. 4,11,12,15; திமொ. 3-16) இவ்வாக்கியங்களின்படி அதின் ஏக ஐக்கிய ஒருமை பெருமையையும், இதைவிட்டு வழுவி வேதபுஸ்தகத்தை அவரவர் கையிலே வைத்து ஒரு முறைபோல பலமுறையும் வாசித்து, யோசித்துச், சிந்தித்துத் தெளிவடைகிறோமென்று பெருமை பேசுகிற புரொ-

டெஸ்டாண்டுக்களுடைய பிரபல்லியமான பலத
வறுகளையும்; அது உலகத்தில் எந்தெந்த இடங்
களில் உண்டோ அந்தந்த இடங்களிலுண்டான
அக்கூட்டங்கள் (உரோ. 16 17; 1-கொரி. 1-10,
எபே. 4,5,6,11,14,15; எபி. 13-8,9) இவ்வாக்
கியங்களுக்கு விரோதமாயும், (1-கொரி. 1-11,12)
இவ்வாக்கியங்களின் படியேயும் ஒன்றுக்கொன்
றெவ்வா விபரீத பல கொள்கையாய் ஐக்கியம
ற்று அவிசுவாசத்தில் ஆழ்ந்து கிடக்கிற சிறுமை
யையும், முத்தைப்பிள்ளை யவர்கள், தம் முன்னு
க்குவைத்து வாசித்து, யோசித்துச், சிந்தித்துத்
தெளிவடையக் கடவார்கள்.

சந்.—அப்படியானால் புரோடெஸ்டாண்டார் தங்
கள் ஐயர்மார் சொல்லும், புத்திபோதனைகளைக்கேட்டு
நடக்கிறதில்லையோ?

உப.—அந்தப்படி தங்கள் ஐயர்மார் சொல்
லுவதைக்கேட்டு நடப்பார்களேயானால், இவர்க
ள் இப்படி பரியாசவார்த்தைகள் சொல்லவுமாட்
டார்கள். அப் புரோடெஸ்டாண்டும் பலவழிப்
பட்டு எண்ணிறந்த மார்க்கங்களாய்ப் பிரிந்து அ
விசுவாசத்தில் ஆழ்ந்து போகவுமாட்டாது.

சந்.—ஆனால் அவர்கள் ஆணும் பெண்ணும் ஆளு
க்கோர் பைபில் புஸ்தகத்தைக் கையிலெடுத்துக்கொ
ண்டு தங்கள் ஐயர்மார் சொல்லும் பிரசங்கத்தைக்கேட்
கக் கோவிலுக்குப் போகிறார்களே?

உப.—ஆம், அதுவாஸ்தவம் ஆனால் தங்கள்
ஐயர்மார் சொல்லும் பிரசங்கங்களைக் கேட்டு இ
வர்கள் உணர்வடைய வேண்டுமானால் ஆளுக்கோ
ர் பைபில் அவசிய மில்லையே, அது எதுக்கென்று
நீர் அறிந்தீரோ?



சந்.—ஐயாவே! அதின் விபரம் நான் அறிந்ததில்
லை, அவைகளைச் சற்றுத் தெளிவிக்கவேண்டும்?

உப.—நல்லது, இப்போது நான் சொல்லப்
போகிறதைக் கவனித்துக்கேளும். ஐயர் உயர்ந்த
மேடையில் நின்று தமதிடமா யிருக்கிற பை
பிலைத் திறந்து வாசிக்கும்பொழுது அதிற்கூடிய
ஒவ்வொருவரும் தங்களிடம் இருக்கிற பைபிலைத்
தாங்களுந் திறந்துபார்த்து ஐயரவர்கள் சரியாய்
வாசிக்கிறார்களோ அல்லவோ வென்றும், அப்
பால் அவர் அவைகளை விஸ்தரித்து, அல்லது வி
யாக்கியானித்துப் பிரசங்கிக்கும் பொழுது, தங்
கள் மனச்சாட்சிக் கேற்ற வண்ணம் அவைகளை
விஸ்தரித்துப் பேசுகிறார்களோ, அல்லது அத
ற்கு விரோதமாய்ப் பேசுகிறார்களோ என்றும்
அறிய அல்லது குற்றம் பிடிக்கவுமே அல்லாது
மற்றொன்றுக்காகவு மல்ல.

சந்.—அப்படியானால் அப்புரோடெஸ்டாண்டார்
வேதத்தில் எழுதப்படாத எத்தனையோ பல காரியங்க
ளில் தங்கள் ஐயர்மார் போதனையை அங்கீகரித்து நட
க்கிறார்களே அது எதுக்கு?

அவர்கள் ஆணும், பெண்ணும்
ஆ [illegible] பில் வைத்துத் தலைப்புமுதல்
க [illegible] றைபோலப் பலமுறையும் வா
சி [illegible] துச், சிந்தித்துத் தெளிவடைய
லே [illegible] ற பிரமாணம் தங்களுக் கிருந்த
போதிலும் கூட்டசியாய் வேத ஆராய்ச்சியையும்
தங்கள் மனச்சாட்சியையும் தூர வைத்துவிட்டு
"சொன்னதைச்சொல்லு கிளிப்பிள்ளை போல
ஐயர்மார் சொல்லிக் கொடுத்ததை மாத்திரம்
சொல்லப்படித்து, மௌடீகத்தில் ஆழ்ந்துகிடப்ப

தும் உண்டு. இப்படி யிருக்க முத்தையபிள்ளை யவர்கள் அந்த ஏற்பாடாவது வழக்கமாவது எங்களுக்குள் இல்லையென்று தங்கள்மனச்சாட்சியைத் தூரவைத்துவிட்டுப் பொய்யாய்ச் சாதிப்பது நியாயமாமோ?

சந்.—ஐயாவே! அது இருக்கட்டும், இப்போது (ஷை) வணக்கத்தவறு II-ம் அதிகாரத்தின் கடைசியாய்ச் சொல்லி யிருப்பதைப் பார்த்தீர்களோ?

உப.—ஆம், அதில் விசேஷம் ஒன்றுமில்லை; ஆகிலும் சிலதை எடுத்துக்காட்டி இந்த அதிகாரத்தை முடிப்போம். அதாவது தேவமாதாவைப் பற்றிச் சுவிசேஷகர் ஒன்றும் விசேஷம் பேசாதிருப்பதால் தேவமாதா நமது வணக்கத்திற்கு பாத்திரமானவளல்ல வென்ற புரோடெஸ்டாண்டாருடைய ஆட்சேபனைகளை மறுப்பதற்கு, சவுந்தர நாயகம் பிள்ளை யவர்கள், அர்ச். லூக்கா சுவிசேஷத்திலும், அர்ச். அருளப்பர் சுவிசேஷத்திலும், தேவமாதாவைப்பற்றி எழுதி யிருக்கிற பல விசேஷங்களில் முத்தையபிள்ளை யவர்கள் சிலதை எடுத்துக்காட்டிக்கொண்டு அதை மறுப்பாரொருவருமில்லை என்றும், ஆனால் அது விவாதாம்சம் அல்ல, மரியம்மாள் தேவமாதா [illegible] நாம் அவளை நோக்கிப் பிரார்த்தித்து [illegible]ண்டு மென்றும், ரோமைச்சபை உபதே[illegible] விஷயத்தைப்பற்றிச் சுவிசேஷங்களிலாவ[illegible]ருபங்களிலாவது யாதொரு பிரமாணம் உண்டாவென்று கேட்கிறோம் என்பதாயும், மரியம்மாளைக்குறித்து கிருபையினால் நிறைந்தவள் என்றும் ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளென்றும் சொல்லுகிற வேதவாக்கியங்களை உதாகரிப்பதில் பயனொ



ன்றுமில்லை. மரியம்மாள் யேசுநாதருக்குத் தாயாராகும்படி கிருபை பெற்றதினிமித்தம் ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப் பட்டவளென்று நாங்களும் விசுவசிக்கத்தான் செய்கிறோம். ஆனால் அது நிமித்தம் அவள் தேவமாதா வென்றும், அவளை வணங்கவேண்டு மென்றும் நியாயம் ஏற்படுமா என்பதாயும், பாக்கியவதி என்னும் வேதத்தின் பொருள் இன்னதென்றும் அது தன் கர்ப்பத்தினா லல்ல, விசுவாசத்தினால் கிடைத்த தென்றும், விசுவாசமின்றி மாம்ச சம்பந்த காரணமாய் யாதொரு பலனும் வராதென்றும் சிரேஷ்ட பிதாவாகிய அகுஸ்தீன் என்பவர் நிரூபணம் செய்திருப்பதை முந்தின அதிகாரத்தில் கண்டுகொள்ளலாம் என்பதையும், யேசுநாதருடைய அப்போஸ்தலர்களில் ஒருவராவது இவ்விஷயத்தைப்பற்றி ஒன்றும் பேசாதிருக்கையில் இவ்வணக்கம் உண்டானதற்குக் காரணம் அஞ்ஞானமார்க்கத்தி லிருந்து கிறிஸ்துமார்க்கத் தமைந்த முன்னோர்களில் சிலர் இறந்துபோன பெரியோர்களைத் தெய்வமாகப் பாவித்து வழிப்படும் அஞ்ஞான வழக்கத்துக்கு இசைய மரியம்மாளை தேவமாதாவென்றும், அவளை வணங்கவேண்டு மென்றும், இன்னும் இதுபோன்ற பல கோட்பாடுகளையும் காலாந்தரத்தில் கொண்டுவந்து சபையில் நுழைத்துவிட்டார்கள் என்றும், அவைகளைப்பற்றி அடிக்கடி விவாதமும், பிரிவினையும் உண்டாயிருந்தது என்றும் சபை சரித்திரங்களில் கண்டறியலாம் என்பதாயும் வரையப்பட்டிருக்கின்றது. ஆனால் மரியம்மாளைக்குறித்து சுவிசேஷகர்கள் சொல்லவேண்டிய அளவு சொல்லி யிருக்கிறார்கள் என்று அவர்கள் ஒத்துக் கொண்டாற்போல மரியம்மாள் யேசுநா

திருக்கு தாயாகும்படி கிருபை பெற்றதினிமித்
தம் ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்
று நாங்களும் விசுவசிக்கத்தான் செய்கிறோம். மே
ன்றாலும் ("பழமைபகுருநாடி கருணைத்திற" என்ற
மொழிப்படி) அதனிமித்தம் அவள் தேவமாதா
வென்றும், அவளை வணங்கவேண்டு மென்றும்
நியாயம் ஏற்படுமோ? அவிசேஷங்களிலாவது, திரு
சபங்களிலாவது யாதொரு பிரமாணமும் உண்டா
வென்று தங்கள் வழக்கப்படி வாதிக்கின்றார்கள்.
ஆனால் இதைக்குறித்து முந்தின சம்பாஷணைகளி
ல் மறுக்கப்படாத அத்தாட்சியோடு ஒப்பிக்கலா
யிற்று. ஆகிலும், சவுந்தரநாயகம்பிள்ளை யவர்கள்
எடுத்துக்காட்டும் (அர்ச். லூக். 1-28, 41, 42)
இவ்வேத வசனங்களை யெடுத்துரைத்த இவர்கள் அ
தற்குச் சரியான மறுமொழி கொடாமல் "கிருபை
யினால் நிறைந்தவள், ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்
கப் பட்டவள்' என்று சொல்லுகிற வேதவாக்கிய
ங்களை உதாகரிப்பதில் பயன் என்ன! இதினிமித்
தம் அவள் தேவமாதா என்றும், அவளை வணங்க
வேண்டுமென்றும் நியாயம் ஆகுமோவென்ற இவர்
கள் கேள்விக்கு அதில் உள்ளபடி எடுத்துக்கா
ட்டி, நியாயம் ஏற்படுவதை ரூபகாரப் படுத்து
வோம்.

1-வது—"கிருபையினால் நிறைந்த மரியா
யே வாழ்க, கர்த்தர் உம்மோடிருக்கிறார், ஸ்திரீக
ளுக்குள்ளே நீர் ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்று
தேவதூதன் போரால் வசனித்த அம்மங்களமும் இ
து போல எலிசபெத்தம்மாள் "நீர் ஸ்திரீகளுக்கு
ள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள், உமது கர்ப்பத்
தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது" என்று இவ்



பிரீத்து சாந்துவானவரால் புகழ்ந்த வசனமும்
எப்படிப் பட்டதென்று முத்தையபிள்ளை யவர்க
ள் நன்றாய்ச் சிந்திக்கவேண்டியது. அதாவது, தே
வன் தம்முடைய குமாரனை மரியம்மாளுக்கு மக
னாகத் தந்து, ஆதி தீர்மானத்தின்படி (1-மோசே.
3-15) இருவரும் மனிதர் இரக்ஷணிய செயலுக்
காக பூமியின் சாபம் (1மோசே. 3-17, 19) அணு
காத புதிய சிருஷ்டிகளாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்
கிறார்கள். (எபே. 4-24; கொலோ. 3-9) என்றும்,
"ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள்'
அதாவது உலகம் உண்டானதுமுதல் உலகம் மு
டிவுவரையு முண்டான ஸ்திரீகள் அல்லது தேவ
னால் தெரிந்து கொள்ளப்பட்ட ஸ்திரீகளுக்குள்
ளே தேவகுமாரனுக்கு மாதாவாக விசேஷ ஆசீ
ர்வாதம் பெற்றவள் என்றும் "கிருபையினால் நி
றைந்த மரியாயே" அதாவது சென்மபாவமு
தல் யாதொரு பாவ மாசணுகாத (தேவன் தம
து குமாரனை எடுப்பிக்கும் பரிசுத்த பூமியாக) தம
து கிருபையின் வரத்தை மரியம்மாள் மட்டில்
பூரணநிறைவாய் அளித்திருக்கிறார் என்றும், (மே
லும் கிருபையானது பாவத்திற்கு அடிமைப்ப
ட்ட தல்லவென்று தெளிவாய் விளங்குகிறது.
உரோ. 5,16, 17) "தேவன் உம்மோ டிருக்கி
றார்." அதாவது தேவன் மரியம்மாளைத் தமது
திருக்குமாரனுக்கு மாதாவாகத் தெரிந்து உருவா
கினது முதல் எக்காலங்களிலும் அந்தம்மாளோ
டிருந்து, அவளுடைய பரிசுத்தத்தை விளங்கச்
செய்கிறார் என்றும் விசேஷமாகின்றதல்லவோ?
ஆனதினாலேயே தேவதூதன் மரியம்மாளை நோக்
கி "நீர் தேவனிடத்தில் கிருபை பெற்றிருக்கி
றீர்; இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருள

உந்தமானவருடைய வல்லமை உமக்கு நிழலி
டும். ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்
தயானது தேவகுமாரன் எனப்படும்." (அர்ச்.
லூக். 1-30, 35) என்று உரைத்திருக்கிறார். மரி
யம்மாள் தேவமாதா அல்லது தேவனுடைய தா
யார் என்பதற்கு இதைப்பார்க்கிலும் ஒரு பிரமா
ணம் வேண்டுமோ? அந்தப்படி மரியம்மாளிட
த்தில் பிறக்கிறவர் "தேவகுமாரன்" என்றால் ம
ரியம்மாள் அத்தேவகுமாரனுக்கு மாதா அல்லா
மல் பின்னை எவருக்கு மாதா? அன்றியும் இதில்
முத்தையபிள்ளை யவர்கள் கூறுதல்படி அவரு
டைய மனிதத்தன்மை மரியம்மாளிடத்தில் பிறந்
தது. அவள் அம்மனிதத் தன்மைக்குமாத்திரம்
மாதா என்று அத்தூதனானவர் சொல்லாமல்,
"உம்மிடத்தில் பிறக்கிறது தேவகுமாரனென்று"
தேவ திரித்துவத்தி லொன்றான அத்தெய்வீக
ஆளைக் குறிப்பிட்டல்லவோ சொல்லுகிறார். ஆ
கையால் தம்மிடம் பிறந்த அந்தத் தேவனுக்கே
மாதாவென்று அவ்வாக்குப் பிரத்தியட்சமாய் வி
ளங்குகிறது. பின்னும் "உமது கர்ப்பத்தின் கனி
யும் ஆசீர்வதிக்கப்பட்டது என்றும், ஆண்டவரு
டைய தாயார் எழுந்தருளி என்னிடத்தில் வரும்
படி எதினால் எனக்குப் பாக்கியம் கிடைக்கலாயி
ற்று" (அர்ச். லூக். 1-42, 43) என்றும் இஸ்பி
ரீத்து சாந்துவானவரால் ஏவப்பட்டு, அர்ச். எலி
சபெத்தம்மாளால் வசனிக்கப்பட்ட அந்தக் கர்ப்
பத்தின் கனியானவர் யார்? அந்தத் தேவதூத
னால் அறிவிக்கப்பட்ட அத்தேவகுமாரன் அல்ல
வோ? அந்தப்படி "ஆண்டவருடைய தாயார்"
என்றால் யார்? தேவனுடைய தாயார் என்றல்ல
வோ அர்த்தமாகிறது. இப்படி மரியம்மாள் தே



வதாயார் என்று அத்தேவ வசனங்கள் தெளி
வாய் அறிவிக்கப்பட்டிருக்கிற நியாயங்களுக்கு
மேல் இன்னம் ஓர் நியாயமும், ஏற்பாடும் வேண்
டுமோ? புத்தி யுக்தி யுடையோராகிய இவர்க
ளுக்கு இதை விஸ்தரித்துக் காட்டவும் வேண்
டுமா?

2. வது.—தேவ தூதனானவர் மரியம்மாளை
நோக்கி, "கிருபை நிறைந்த மரியாயே வாழ்க,"
என்கிறார். "வாழ்க" என்றவார்த்தையானது வ
ணக்கமோ, அல்லது வணக்கத்தவறோ? மேலும்
"வாழ்க" என்பது "ஸ்துதித்தல், தோத்திரித்
தல், வந்தித்தல் வணங்கல்" என அகராதி முத
லிய நூல்களில் காணலாம். இலக்கண இலக்கிய
விற்பன்னர்களுக்கு இவைத்தெரியாத் தன்மையு
மல்ல. இந்தப்படி "பூர்வ கிறீஸ்துவர்களும் இ
றந்துபோன இரத்தசாட்சிகளை (அதாவது வேத
சாட்சிகளை) நோக்கி, நீங்கள் வாழ்கவென்று
தோத்திர வார்த்தைகளைச் சொன்னார்கள்" என்று
புரோடெஸ்டாண்டாராகிய தாங்கம்பாடியார் எழு
திய சபைசரித்திரம், 142-ம் பக்கத்திற் சொல்
லப்பட்டிருக்கின்றது. ஆகையால் தேவதூதன்
தாமே, அத்தேவதாயாரை ஸ்துதித்து வணங்கி
யிருக்க நமது இரட்சகர் நிமித்தம் அத்தாயாரு
டைய பிள்ளைகளாகிய நாம் அவளை வணங்குவத
ற்கான திருச்சபையின் ஏற்பாடு என் நியாயமாக
மாட்டாது. இவ்வித உதாரணங்களைக்கொண்டு
மரியம்மாள், "தேவமாதா" வென்றும் அவளைப்
பிரார்த்தித்து வணங்குவது, நியாயமுமன்றி, உத்
தமதனமென்றும், திருச்சபை உபதேசிக்கும் வி
ஷயங்கள் சுவிசேஷத்தின் அஸ்திவார தெய்வீக
வாக்கியங்களா யிருக்க, இவைகளைப் பார்க்கிலும்

"வேதத்திலிருந்து வேறு ஆதாரங்காட்டவும் வேண்டுமோ? இன்னமும், பழைய ஏற்பாடு வேதாகமத்தில் அக்காலத்திலுள்ள மகாத்துமாக்கள் தேவதூதர்களை வணங்கிப் பணிந்து பிரார்த்தித்ததாக (1-மோசே. 18-2; 19-1, 4; மோசே. 22-31; யோசு. 5-14) வாசிக்கிறோமே. அப்படியிருக்க அத்தேவதூதர்களுக்கு மேலாயுயர்த்தப்பட்டவளுமாய், அவர்களால் ஸ்துதித்து வணங்கப்பட்டவளுமாய் தேவதிருக்குமாரனைத் தாமே தமது கர்ப்பத்தில் சுமந்து பெற்றவளுமாய் ஆதி ஏவையை வஞ்சித்த பசாசாகிய பாம்பின் தலையை நசுக்கி, அதை ஜெயங்கொண்ட புதிய ஏவாளுமாய், தெய்வீக சிம்மாசனத்தண்டையிலிருக்கிற அத்தேவதாயாரை நாம் ஏன் வணங்கிப் பிரார்த்திக்கக்கூடாது? அப்படி அந்தம்மாளை வணங்கக்கூடாதென்றும், அவள் அத்தேவகுமாரனுடைய தாயல்லவென்றும் சுவிசேஷங்களிலாவது, நிருபங்களிலாவது யாதொரு பிரமாணம் உண்டாவென்று நாமும், அவர்களைக் கேட்கிறோம். உண்டென்றால் புரோடெஸ்டாண்டார் அவைகளைக் காட்டல் வேண்டுமே? அதற்கேலாமையுடையோராகிய இவர்கள், யானையைச் சுளகினால் மறைத்தாற்போல மரியம்மாளைத் தேவமாதாவென்கிற விஷயத்தைப்பற்றியாவது, அவ்வணக்கத்தைப்பற்றியாவது சுவிசேஷகர் யாதொன்றும் கற்பிக்கவில்லை என்று பொய்க்கஞ்சாமல் தேவமாதாவைப்பற்றிய அவ்விஷயங்களை மறைத்து அல்லது குறைத்து அசத்தியம் சொல்வது இவர்கள் மேட்டிமைக்குத் தகுதி.

சங்.—ஐயாவே! இது போகட்டும், யேசுநாதருடைய அப்போஸ்தலர்களில் ஒருவராவது இவ்விஷயத்தைப்



பற்றி ஒன்றும் பேசாதிருக்கையில் இவ்வணக்கம் உண்டானதற்குக் காரணம் பிந்தியகாலத்தில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்துக் கிறீஸ்துவமார்க்கத் தமைந்த முன்னோர்களில் சிலர் இறந்துபோன பெரியோர்களைத் தெய்வமாகப் பாவித்து வழிப்படும் அஞ்ஞானவழக்கத்துக்கு இசைய மரியம்மாளைத் தேவமாதாவென்றும், அவளை வணங்கவேண்டுமென்றும், இன்னும் இதுபோன்ற பல கோட்பாடுகளையும் காலாந்தரத்தில் கொண்டுவந்து சபையில் நுழைத்துவிட்டார்கள் என்றும், அவைகளைப் பற்றி அடிக்கடி விவாதமும் பிரிவினையும் உண்டாயிருந்தது என்றும் அவர்கள் சொல்வதாக முந்தி கடைசியாய் நீங்கள் எடுத்துக்காட்டிய அவ்விஷயங்களின் விசேஷமென்ன?

உப.—அவர்கள் சொல்லும் அவ்விஷயங்கள் முற்றிலும் பிசகென இதனடியில் நாம் சொல்லப்போகிற நியாயங்களினால் கண்டறியலாம். 1-வது. மேலே நாம் எடுத்துக்காட்டிய வேதவசனங்களின்படியே மெய்ஞ்ஞான வழக்கத்திற்கு இசைய, மரியம்மாளைத் தேவமாதாவென்றும், அவளையும் மற்றப் பரிசுத்தவான்களையும் வணங்கவேண்டுமென்றும், ஏற்பாடான முறைமைகள் முன்னோர்களாகிய பூர்வ கிறீஸ்துவர்களுக்குள் உண்டாயிருந்ததென்றும், அவ்வேத வாக்கியங்களே தெளிவான திருஷ்டாந்தமாயிருக்கின்றது. ஆகையால் அவைகள் அஞ்ஞானத்திலிருந்து மெய்ஞ்ஞானத்துக்குப் புதிதாய் வந்தவர்களுடைய ஏற்பாடுமல்ல; இறந்துபோன பெரியோர்களைத் தெய்வமாகப் பாவித்து வழிப்படும் அஞ்ஞானகோட்பாடுமல்ல. 2-வது. அஞ்ஞானத்திலிருந்து மனந்திரும்பின சிலர் மாத்திரம் அப்படிப்பட்ட அவ்வஞ்ஞான மார்க்கத்தைத் திருச்சபையில் நுழைத்தால், மெய்ஞ்ஞானத்திலிருந்து வந்த பூர்

களும், திருச்சபையின் மற்றப் பெரியோர்களும்
அதை அங்கிகரிப்பார்களா? இவை புரோடெஸ்
டாண்டாருடைய பித்தலாட்டம். 3-வது. அப்
படிப்பட்டவர்கள் சிலபேரென்று சொல்வதால்,
அவர்கள் பெயரென்ன? அவர்கள் வந்தவழியெ
ன்ன? அவர்கள் செய்த தொழிலென்ன? அவர்
கள் இருந்த இடமென்ன? அதுகளின் விபரம்
முத்தையபிள்ளையவர்கள் சொல்லாததால், இவை
களை நாம் நம்பக்கூடாத சுத்தப் புரட்டு. 4-வது.
இன்னும் பல கோட்பாடுகளைக் காலாந்தரத்தில்
கொண்டுவந்து சபையில் நுழைத்துவிட்டார்க
ளென்றால் என்னென்ன கோட்பாடுகள், எந்தெந்
த காலத்தில், எவரெவரால், அப்படி நுழைக்க
லாயிற்று? இதினும் அவைகளைக்குறித்து விபர
ஞ் சொல்லாததால், அதுவும் குருட்டுச் செய்தி
யா யிருக்கின்றது. 5-வது. திருச்சபையானது,
வேதத்துக்கு விரோதமான எந்தத் துர்ப்போதனை
களையும் வகையறுத்து அப்படிப் போதிக்கிறவர்
களைப் பதிதராகத் தன் ஐக்கியத்திலிருந்து புறம்
பாகத் தள்ளி சபித்திருக்க தங்கள் அஞ்ஞான வழக்
கத்தை நுழைத்த, புதுக் கிறீஸ்துவர்களை மெய்ஞ்
ஞானிகளாக திருச்சபை ஏற்றுக்கொள்ளுமா? இ
து பதிதர் எழுதிய கட்டுக்கதை. 6-வது நரகத்
தின் வாசல்களாகிய பசாசுக்களின் அந்தகார அஞ்
ஞானமும், அவைகளால் ஏவப்பட்ட பதிதர்க
ளின் அவிசுவாச துர்ப்போதனைகளும், திருச்ச
பையை மேற்கொள்ளாதென்று தேவன் திருவா
க்கருளி யிருக்க, (அர்ச். மத். 16-18) அப்பசா
சின் வாசல்களாகிய அவ்வஞ்ஞானம் மேற்கொ
ண்டு, மெய்ஞ்ஞானமும் அஞ்ஞானமாய்ப் போன
தென்ன? தேவன் திருவாக்குப் பொய்யாய்ப்



போயிற்றோ? (தரங்கம்பாடி சபை சரி. 217-ம்
பக்.) இது பதிதர் தேவதூஷணம். 7-வது. தே
வன் திருவாக்கருளிய அக்காலத்தில்தானே மெ
ய்ஞ்ஞானத் திருச்சபை அஞ்ஞானத்தில் அமிழ்ந்
துபோயிற் றென்றால், தேவனருளிய சத்தியவே
தம் எங்கே யிருந்தது? அது உலகமெங்கும் எப்
படிப் பரம்பலாயிற்று. இப்போது அதின் நிலை
மையெங்கே? மேலும் தேவன்கட்டிய பலமா
ன அஸ்திவார திருச்சபை, அஞ்ஞானத்தால் அ
சைந்து விழுந்து சிதைந்து போனால், திரும்ப
அதை எடுத்துக்கட்ட வல்லவனார்? அல்லது
தேவன் திரும்பவந்து கட்டினாரோ? இதற்கு ம
றுமொழி என்ன? 8-வது. மரியம்மாளை "தேவ
மாதா" என்பதும், அவளை வணங்கிப் பிரார்த்திப்
பதும், அஞ்ஞானமானால் அவ்விதம் விரோதித்
துப் போதித்த பதிதனாகிய நெஸ்தோரியன்
மெய்ஞ்ஞானியாக வேண்டுமே? அப்படியிருக்க
அவனை அஞ்ஞானி என்று திருச்சபை சபித்துத்
தள்ள வேண்டியதென்ன? 9-வது. அவ்விஷயத்
தில் நெஸ்தோரியன் மெய்ஞ்ஞானியானால், அவன்
போதித்த அம்மெஞ்ஞான மார்க்கம் எங்கும் பர
ம்பி நிலைத்திருக்கவேண்டுமே, அது இப்போது
எங்கேயிருக்கிறது. புரோடெஸ்டாண்டார் அவ
ன் வகுப்பார் நாங்கள் தான் என்பார்களாக்கும்.
அது பொய்யாமோ? 10-வது. மரியம்மாளை தே
வமாதாவென்றும், அவள் வணக்கத்துக்குப் பாத்
திரமானவளென்றும் சொல்லுகிற வேதத்தின்
மெய்ஞ்ஞான விசுவாசத்தை அப்படியல்ல "பிந்
திய காலத்தில் அஞ்ஞான மார்க்கத்தி லிருந்து
கிறீஸ்துமார்க்கத் தமைந்த முன்னோர்களில் சிலர்
அஞ்ஞான வழக்கத்துக்கு இசைய மரியம்மாளை

தேவமாதா வென்றும், அவளை வணங்கவேண்டுமென்றும், காலாந்தரத்தில் கொண்டுவந்து சபையில் நுழைத்துவிட்டார்கள்" என்றால் அப்போது முத்தையபிள்ளை யவர்கள் எங்கேயிருந்து விழித்துப் பார்த்துக்கொண் டிருந்தார்கள்? இவர்களுக்கு ஊர் எங்கே, தேசமெங்கே, இவர்களுக்கு வயசு என்ன? இப்போதோ வருஷம் 1800-க்குமேலாகின்றதே. அப்படியல்ல சபை சரித்திரங்களில் கண்டறிந்தோம் என்பார்களாக்கும். வேதம் தவிர வேறெந்த மனிதர்கள் எழுதிவைத்ததும், பாரம்பரையுமான உபதேசங்களை நம்பலாகாதென்ற இவர்கள் தாமே தமது புத்தியைப் பல மனிதர்கள் எழுதிய சபை சரித்திர பாரம்பரையில் பூட்டி அதின்மட்டில் நம்பிக்கை வைத்ததென்ன? தாங்கள் வாதிப்பது அநுகூலமாவதற்கு அது மெய்யெனவோ? 11-வது. அந்த சபைச் சரித்திரம் கத்தோலிக்கர் எழுதினதோ, புரோடெஸ்டாண்டார் எழுதினதோ? ஆனால் கத்தோலிக்கர் எழுதினதை இவர்கள் நம்பார்களானதால் தங்கள் அநுகூலத்திற்குப் புரோடெஸ்டாண்டார் எழுதினதாயிருக்கலாம். அப்படியானால் புரோடெஸ்டாண்டார் 1517-ம் வருஷத்திற்குபின் னுண்டானவர்களாயிற்றே. முன்னடந்த காரியம் இவர்கள் எப்படிக் கண்டார்கள். இவர்களில் அவைகளைக் கண்டவர் யார், எழுதினவரெவர்? இந்தப் புரோடெஸ்டாண்டார் எழுதிவைத்திருக்கிற சபைச் சரித்திரம் நாம் பார்த்திருக்கிறோம், அதில் உண்மைக்கு அடாத கட்டு விசேஷம் அநேகமுண்டே, அவைகளை முத்தையபிள்ளை யவர்கள் எப்படி நம்பினார்கள். இது சரியோ? 12-வது. கத்தோலிக்கு முன்னோர்



கள் எழுதினதும், எழுதிவந்ததுமான உண்மையான சபைச் சரித்திரத்தையும், வேதசாஸ்திரங்களையும், பிரமாணங்களையும் புரோடெஸ்டாண்டு பின்னோர்கள் எழுதின சபைச் சரித்திரத்தையும், வேதசாஸ்திரங்களையும், பிரமாணங்களையும் வேதாகம வசனத்தோடொத்துப் பரிசோதித்த இக்காலத்துப் புரோடெஸ்டாண்டு சாஸ்திரிகளாகிய பெரிய பிஷப்புகளும், பிரபுக்களும், பாதிரிகளும், மற்றும் படிப்பாளிகளும், (நியூமென், மானிங்கு, அல்லய்ஸ், லார்ட் ரிப்பன், டென்பி, பூட் முதலானோரும் இன்னும் அநேகரும்) மனந்திரும்பி கத்தோலிக்குத் திருச்சபையில் சேர்ந்து அதின் உண்மைக்கு உடந்தையானதை இவர்கள் அறியார்களோ? அவர்களைக்குறித்து நாளடைவிற் கொண்டுவரும் தேச வர்த்தமான பத்திரிகைகள் எத்தனையாம்? அவைகளை இவர்கள் வாசித்திரார்களோ? ஆகையால் புரோடெஸ்டாண்டார்கள் எழுதிய சபைச் சரித்திரங்களும், வேதசாஸ்திரங்களும் பிரமாணங்களும் உண்மையானதென்றால், அதின் பெரியோர்கள் அப்புரோடெஸ்டாண்டை விட்டுவிடுவார்களோ? அதெல்லாம் "குசமசக்கு குசமசக்கு; அப்பா அப்பா கூறுகிறேன் சுய வேதசாஸ்திரந்தன்னை" என்று உலக ஞானிகளில் ஒருவர் மெய்ஞ்ஞானத்தை ஊன்றி விரித்துரைத் திருக்கும் வண்ணம் கத்தோலிக்கு மெய்ம்மறைக்கு விரோதமாய்ப் புரோடெஸ்டாண்டு புனைந்துரைத் தெழுதிய சரித்திர சாஸ்திர பிரமாணங்களெல்லாம் குசமசக்கே யல்லாது வேறென்ன?

## ௪-ம். அதிகாரம்.

[தேவமாதாவை வணங்கிப் பிரார்த்தித்து மன்றாடுவதைப் பற்றிய.]

### சம்பாஷணை.

சந்.—ஐயா, புரொடெஸ்டாண்டாருடைய பொய்யும், பிசகும் இப்போது தெரியவருகின்றது. இன்னமும் முத்தையபிள்ளையவர்கள் தமது தவறுதால் மூன்றாம் அதிகாரத்தில் நாம் தேவமாதாவைப் பிரார்த்தித்து மன்றாடுவதினால் அவளைத் தேவனைப்போல் பாவித்து அவளுக்குத் தேவ வணக்கம் செலுத்துகிறோமென்று புனைந்துரைத்தெழுதிய கருத்துக்களைப் பார்த்தீர்களோ?

உப.—ஆம், அதாவது நாம், தேவமாதாவை நோக்கிச் சொல்லாத சில வார்த்தைகளையும், இணைத்துச் சேர்த்துக் கட்டி முடித்திருக்கின்றார்கள். அவர்கள் சொல்லும் அவ்வார்த்தைகளெல்லாம் தேவாராதனைக் குறித்த கருத்துரைகளல்லாததால் அவைகளை இதில் நாம் ஒவ்வொன்றாய், எடுத்துக்காட்டுவது அவசியமல்ல. ஆகிலும் விவாத சம்பந்தமான சிலதுகளை மாத்திரம் இதன் பின்வரும் சம்பாஷணைகளில், எடுத்துக்காட்டி நியாயத்தைத் தெளிவிப்போம். மூந்த மூந்த அந்த அதிகாரத்தில் அஸ்திவாரமாகத் தேவமாதாவை நாம், வணங்குவது தேவனை வணங்குவதைப் போலல்ல என்று, சவுந்தராயகம்பிள்ளையவர்கள் சில நியாயங்களை எடுத்துரைத்திருப்பதாக முத்தையபிள்ளையவர்கள் எடுத்துக் காட்டிக்கொண்டு "மரி



யம்மாள் தேவமாதாவென்றும், நாம் அவளை வணங்குவது கடமையென்றும் ஏற்படுகிற பட்சத்திலேதான் அவ்வணக்கத்தின் தன்மையைப்பற்றி விசாரிக்க வேண்டியது. அது ஏற்படாதபடியால் இதில் விவகாரமே இல்லை" என்றவர்கள் மறுபடியும் அவ்விஷயத்தைப்பற்றி விவகாரம் துவக்குகின்றார்கள். அதாவது உன் தேவனாயிருக்கிற கர்த்தர் நாமே, நம்மைத்தவிர உனக்கு வேறுதேவர்கள் இல்லாமற் போவதாக. வானத்திலும் பூமியிலும் உண்டாயிருக்கிற வகைகளுக் கொப்பான யாதொரு சொரூபத்தையாகிலும், விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்கவும் வேண்டாம்; அவைகளைச் சேவிக்கவும், நமஸ்கரிக்கவும் வேண்டாமென்றும் தேவன் கட்டளையிட்டிருக்கிறபடியால், நாம் எவ்வகையான அவ பக்திக்கும் இடங்கொடாமல் தேவன் ஒருவரையே தொழுது நமஸ்கரித்து வணங்கவேண்டுமென்கிற வேதப் பிரமாணத்துக்கு நேர் விரோதமாக மரியாளை நோக்கி, "மாதாவே இரட்சியும், இதோ! எங்கள் அவசரங்களிலே நாம், வேண்டிக் கொள்ளுகிறதற்கு நீர் பாராமுகமாயிராதேயும், சகல ஆபத்துகளிலே நின்றும், எங்களைத் தற்காத்துக்கொள்ளும்" என்று இன்னும் பல இடங்களிலும் பல சொற்களைச்சேர்த்து இவையெல்லாம் தேவாராதனை போலவும், தேவ வணக்கம் போலவும் கருத்துற்றுப் பேசுகின்றார்கள். அப்படியானால், மனிதர் மனிதரை நோக்கிக் கைகுவித்து ஸ்தோத்திரவாழ்த்துதல் சொல்வதும், தரைமட்டாகக் குனிந்து சலாம்பண்ணுவதும், தொப்பி கழற்றி ஆசாரஞ் செய்வதும், கைகட்டிக் கால்கட்டி மகா ஒடுக்க வணக்கத்தோடே தங்கள் விண்ணப்பங்களைச்

சொல்லி ஐயாவே, ஐயனே, சுவாமி, மகா ராசாவே! என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்; இதோ நான் உமது அடைக்கலம் நீரே எனக்காதரவு இந்தவேளை எப்படியாவது என்னை இரட்சிக்கவேணுமென்று எத்தனையோபேர் தங்கள் அவசரத்திற்கும், சங்கடத்திற்கும், சமயத்திற்கும் தக்கதாய் இறைப்பார்க்கிலும், இரக்கத்தைப் பெறத்தரும் இனிமை பெருமையோடேத்திப் போற்றுதலான எத்தனையோ மேலான வார்த்தைகளோடு கெஞ்சி மன்றாடுகின்றார்கள். இவை எல்லாம், தேவாராதனை, தேவவணக்கமாகுமா? பரிச்சேதமாகா.

சந்.—அப்படியானால், தேவாராதனை தேவ வணக்கமாகிறதென்ன?

உப.—1-வது. பலி பூசையே தேவாராதனை. அப்படியே உலகத்தின் ஆரம்பகால முதல் கிறீஸ்து நாதர் வரையும் எக்காலங்களிலும் பழைய ஏற்பாட்டின் முறையாய்த் தேவ பலிபூசையாக ஆடு, மாடு முதலிய சுத்தமான மிருகத்தின் பலிகளைச் செய்துவந்தார்கள். பின்பு குறிக்கப்பட்ட காலத்தில், தேவகுமாரனாகிய கிறீஸ்துவானவர் முன் மிருகத்தின் பலிகளை நீக்கித் தம்மைத் தாமே மனுஷ இரட்சணிய பூரணப் பலி பூசையாகச் சிலுவையென்னும்பீடத்தில் ஒப்புக்கொடுத்து, அதை உலகமுடிவுவரையில் தொடர்ச்சியாய்த் தமது அப்போஸ்தலர்களும், இவர்கள் வழியான குருக்களும் நடப்பிக்கும்படிக்குத் திவ்விய நற்கருணைப் பலி பூசையைத் தாமே புதிய உடம்படிக்கையின் முறையாக ஏற்படுத்தி அது முதல் எக்காலங்களிலும் இடைவிடாமல் தமது திருச்



சபையில் அந்த நற்கருணைப் பலிபூசைத் தேவாராதனையாக நடந்தேறிவருகின்றது. இதுவே மெய்யான தேவாராதனையாம். 2-வது. இதோடு சேர்ந்த ஸ்துதி தோத்திர சங்கீதங்களும் அவரை நோக்கிச் செபிக்கும் செப வேண்டுதல் மன்றாட்டுக்களும் சரண சாஷ்டாங்க தண்டனங்களுமே தேவ வணக்கமாம்.

சந்.—இது இப்படியிருக்க முத்தையபிள்ளையவர்கள் எடுத்துக் காட்டுதலின்படி "நம்மைத்தவிர உனக்கு வேறு தேவர்கள் இல்லாமற்போவதாக, வானத்திலும், பூமியிலும், உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பானயாதொரு சொரூபத்தையாகிலும், விக்கிரகத்தையாகிலும் நீ, உனக்கு உண்டாக்கவும் வேண்டாம்: அவைகளைச் சேவிக்கவும், நமஸ்கரிக்கவும் வேண்டா" மென்று, கடவுள் கட்டளையிடுவானேன். அதின் கருத்தென்ன?

உப.—"திரியேகராகிய கடவுள் ஒருவரே, நம்மை உண்டாக்கினவரும், நம்மைக் காப்பாற்றுகிறவரும், நம்மை இரட்சித்து மோக்ஷபதவியைக் கொடுக்கிறவருமாயிருப்பதால், தம்மில் தாமாய்த் துவக்கமுமுடிவுமில்லாத அவரைத்தவிர வேறு தெய்வமில்லை, ஆனபடியால் வானத்திலும், பூமியிலும் அவரால் படைக்கப்பட்ட தூதர்கள், மனிதர்கள் முதலான எந்த வஸ்துக்களையும், மனிதரால் உருவாக்கப்பட்ட எந்த வடிவங்களையும், தெய்வமாக எண்ணலான கருத்தோடே அவைகளை நமஸ்கரித்துச் சேவித்து வணங்குதலென்னும் தேவாராதனை இந்த முதற்கற்பனையில் விலக்கப்பட்டிருக்கிறதேயல்லாது, பரலோகத்தின் தேவதூதர்களாகிய மோக்ஷவாசிகளையும், பூலோகத்தின் பெரியோர்களான மனிதர்களையும் வணங்கி மன்றா— வேண்டாமென்று இந்தக் கற்பனை

யால் பரிச்சேதம் விலக்கப்பட்டதல்ல. இதற்கு
இதனடியில் நாம் எடுத்துக்காட்டுகிற வேத வாக்
கியங்களையும், நியாயங்களையும் சற்றே கவனி
யும். அதாவது:— நீ உனக்கு யாதொரு சொ
ரூபத்தையும் உண்டாக்க வேண்டாமென்று கற்
பனையளித்த அக்கடவுள் தாமே “இரண்டு கே
ரூபீன்களாகிய சம்மனசுக்களின் ரூபங்களைச் செ
ய்து தேவாலயத்திலுள்ள கிருபாசனத்தின் மீ
தில் வைக்கும்படி கட்டளை யிட்டிருக்கிறார்.
(2-மோசே. 25-18, 22) இப்படியிருக்க, மே
ற்சொல்லிய கற்பனையின் கருத்தேதென்றால்
நீ உனக்குத் தெய்வமாக யாதொரு சொரூபத்
தையும் உண்டாக்க வேண்டா மென்பதேயல்
லாது, பரிசுத்தவான்களுடைய நினைப் பூட்டுத
லாகச் சொரூபங்களைச் செய்து தேவாலயங்களி
ல் வைப்பது அக்கற்பனையால் விலக்கப்பட்டத
ல்ல வென்பதே. அல்லாமலும் ஆபிரகாம், லோத்,
பாலாம், யோசுவே முதலான மகாத்துமாக்கள்
தேவதூதர்களைப்பணிந்து நமஸ்கரித்து வணங்கி
மன்றாடினதாக, வேதாகமத்தில் வாசித்து வருகி
றோமே அவைகள் தேவாராதனை வணக்கமா யிருக்
குமாகில் அந்நமஸ்காரத்தையும், விண்ணப்பத்தை
யும் அத்தூதர்கள் ஏற்றுக்கொள்வார்களா? தங்க
ளைத் தேவனுக்குச் சரிசமானமா யெண்ணின தூத
ர்களை முடியாத நித்திய நரகத்தில் தள்ளி பசாசுக்
களாய்ச் சபித்து ஆக்கினை இட்டிருக்க அம்மகாத்து
மாக்கள் வணங்கினது தேவாராதனை வணக்கமா
யிருந்தால் அதை ஏற்றுக்கொண்ட தூதர்களை
சும்மா விடுவாரா? 1-மோசே. 18-2; 19-1, 2;
4-மோசே. 22-31; யோசு. 5-14) ஆகையால் இவ்
வேதவாக்கியங்களிற் சொல்லப்பட் டிருக்கிறபடி



அம்மகாத்துமாக்கள் தூதர்களை வணங்கி மன்று
டின அவ்விஷயங்கள் தேவாராதனை வணக்கம்
அல்லாததால் நாம் தேவமாதா, தேவதூதர் முத
லிய அர்ச்சியசிஷ்டவர்களை வணங்கி மன்றாடுதல்
அக்கற்பனையால் விலக்கப்பட்ட தல்லவென்
றறியவும்.

சங்.—ஆனால் இன்னமும் அந்த அதிகாரத்தில்
முத்தையபிள்ளை யவர்கள் சொல்லுகிறபடி நாம் தேவ
னை நோக்கி நேராய்ச் செபித்து மன்றாடக்கூடாதோ?
தேவனுக்கு நாம் சொல்லுகிறது தெரியாதோ? அல்
லாமலும் தேவனுக்கும், மனிதருக்கும் மத்தியஸ்தர்
நமது இரக்ஷகராச்சுதே, அவரை நாம் உதவியாகத் தெரி
ந்துகொள்ளக் கூடாதோ? அப்படியிருக்க தேவமாதா
முதலிய அர்ச்சியசிஷ்டவர்களை நமக்கு மத்தியஸ்தரா
கத் தெரிந்துகொண்டு, அவர்கள் நமக்காக மன்றாடும்
படிக்கு உதவி தேடவ தேதுக்கு? அந்தப்படி தேவனும்
ஒருவரே, தேவனுக்கும், மனிதருக்கும் மத்தியஸ்தரும்
ஒருவரே, என்று வேதமும் நமக்குக் கற்பிக்கின்றதே?

உப.—சகோதரனே! இதற்கு நாம் சொல்ல
ப்போகிறதைச் சற்றே கவனியும். 1-வது. தேவ
னுக்குத் தெரியாத பரம இரகசியம் ஒன்றுண்டா?
மனிதர்கள் நினைக்கும் உள்ளாந்தரங்களை முத
லாய் அவர் அறிவார். ஆகையால் நாம் தேவனை
நோக்கி நேராய் வேண்டி மன்றாடுவது உத்தமந்
தான். அந்தப்படி நாள்தோறும் அந்தி சந்தியி
லும் தேவாராதனை, பூசை பலி நேரத்திலும் அ
வரை நாம் நேராய்நோக்கி நம்முடைய கண்களை
ஏறெடுத்து பிரார்த்திக்கிறோ மல்லவோ? அவரும்
நமது விண்ணப்பங்களைக்கேட்டுத் தயைபுரிவார்
என்பதில் எள்ளளவேனும் சந்தேகப்படுவாரோ
ருவருமில்லை. அந்தப்படி நமது இரட்சகரும் நமக்

காக மன்றாடி தயைபெற்றளிக்கும் மத்தியஸ்தரா
யிருக்கிறார் என்பதும் வாஸ்தவம். அதெவ்வாறெ
னில் அவரோ நமது பாவப்பரிகாரப் பலிபூசை
யில் மத்தியஸ்தராக இருப்பதால் அதனைத் திருச்
சபையானது உலகமெங்கும் எப்பொழுதும்
இடைவிடாமல் தெய்வீகத்துக் கொப்புக் கொடு
த்துப் பிரார்த்தித்து, ஆராதித்துக் கொண்டுவரு
கின்றது. இந்தப்படியே மோக்ஷத்திலுள்ள ஜெய
சில சபையாரும் தேவ சமுகத்தில் இப்பலிபூ
சைக் கொத்தபிரகாரம் அடிக்கப்பட்ட ஆட்டுக்கு
ட்டியின் வண்ணமா யிருக்கிற கிறீஸ்தவாகிய அந்
த மத்தியஸ்தர் முன்னிலைக்கு இப்பூமியில் போரா
டுகின்ற திருச்சபையின் பிள்ளைகளுக்காக வேண்
டிக்கொள்ளுகிறார்கள். (காட்சி. 5-6, 10; 6-10)
ஆகையால் நாம் தேவனை நேராய் மன்றாடிப் பிரா
ர்த்திப்பதோடும் கூட தேவமாதா, தேவதூதர்
முதலான அவர் பிரிய நேசர்களையும் தேவசமுக
த்தில் நமக்காக வேண்டிக்கொள்ளும்படி அவர்
களை நோக்கி மன்றாடி பிரார்த்திப்பது உத்தமமும்
தேவனுக்கும் அது பிரியமுமா யிருக்கிறதுமன்றி
அவர்கள் மன்றாட்டைக் கேட்டு அந்தப்படி நம
க்கு வேண்டிய உபகார நன்மைகளைச் செய்தும்
வருகிறார். இதற்கு மேற்காட்டிய வேதவாக்கியங்
களுமன்றி (சகரி. 1-12-13) இவ்வாக்கியங்களும்
நமக்கு வெளிப்படுத்துகின்றது. 2-வது. கடவுளை
நாம் நேராய் மன்றாடுவதும் அவர் தமது சித்தத்
தை நமக்கு நேராய் வெளிப்படுத்துவதும், உத்த
மமாயினும் அவர் தாமே தமது சித்தத்தை நமக்
கறிவிக்கவும், நமக்காக தம்மை மன்றாடவும் நமது
மன்றாட்டைத் தமது சன்னிதியில் ஒப்புக்கொடுக்
கவும் தமது தூதர்களையும் மற்றும் மோக்ஷவாசி



களையும் இப்பூமியிலுள்ள மகாத்துமாக்களையும்
தெரிந்து கொண்டாரே இதற்கு நாமென்ன
செய்யக்கூடும். இப்படியாய், தேவனுக்குச் சித்
தமா யிருக்கும் பொழுது இதற்கு விரோதம்
பேசுகிறவன் யாவன்? அப்படிப் பேசுகிறவன்
துஷ்டரா(?) ப்பா யிருக்கிறானென்றால், இராசா
வானவன் தனது இராச்சிய பரிபாலனத்தை
நடப்பிக்க வேண்டிய துரைத்தன அதிகாரத்
தையும் உத்தியோகஸ்தர் அந்தஸ்தையும் நிய
மித்தவிடத்தில் இதற்கு விரோதமாய் நாம் நமது
விண்ணப்ப களை இவர்களிடம் அறிக்கை யிட
வேண்டியதேன்? நேராய் இராசாவினிடத்தில்
அறிக்கையிட்டு அவருடைய இரக்கத்தைப் பெ
ற்றுக்கொள்ளக்கூடாதோ என்று சொல்லும், ம
தியினக்குடியானவனுக் கொப்பா யிருக்கிறான்.
ஆகையால் தேவன் தமது திருச்சபையின் இரா
ச்சிய பரிபாலனத்தை தேவதாயார், தேவதூதர்
முதலிய மோக்ஷவாசிகளைக்கொண்டும் பூலோக
விசுவாசிகளாகிய அர்ச். பாப்பு, மேற்றிராணியார்
முதலிய திருச்சபையின் பிரபுக்களைக் கொண்டும்
நடப்பித்து ஆளுகை செய்துவருவது மன்றி, அ
வர்களைக்கொண்டே தமது மகிமையையும், வல்ல
மையையும், நீதியையும், இரக்கத்தையும் வெளிப்
படுத்தி, மனிதர்களை மோக்ஷவழியில் நடப்பித்துக்
கொண்டு வருகிறார். இப்படிப்பட்ட பரலோக
(எபே. 3-10) பூலோக, (உரோ. 13-1; தீத்து.
3-1) துரைத்தன அதிகாரங்களை அசட்டை செ
ய்யக்கூடா தென்பதே (2-அர்ச். இராய. 2-10
அர்ச். யூதா. 8) வேதவாக்கியம்: 3-வது சர்வேசு
ரனும் ஒருவரே, சர்வேஸ்வரனுக்கும், மனிதருக்
கும் மத்தியஸ்தரும் ஒருவரே என்று நமது இர

ட்சகனைப் பற்றிய வேதவாக்கியம் வாஸ்தவம்.
இதைக் கத்தோலிக்கர் ஒருபோதும் ஒரு நிமிஷ
மென்கிலும், என்றென்றைக்கு மறந்து போகா
ர்கள். இதினால் பரலோகத்திலுள்ள தேவமாதா,
தேவதூதர் முதலிய மோக்ஷவாசிகளும், இப்பூ
லோகத்திலுள்ள அர்ச். பாப்பு, மேற்றிராணிமார்,
குருப்பிரசாதிகள் முதலிய விசுவாசிகளும் நடு
நின்று மன்றாடும் விண்ணப்பங்கள் விலக்கப்
பட்டதென்று சொல்லுவது பிசகு. எப்படியெ
னில் கிறீஸ்து இரக்ஷகர் தேவனுக்கும், மனிதரு
க்கும் நடுநின்று தேவகோபத்தை அமர்த்தவும்.
அவர்களைப் பசாசின் அடிமைத்தனத்தில் நின்று
மீட்டு இரட்சிக்கவும், பாவப்பரிகார மத்திய
ஸ்தராயிருக்கிறார். (அர்ச். மத். 20-28; உரோ.
8-20; எபே. 1-7; 1-தெச. 1-9, 10; 5-9; எபி.
2-14, 15; 1-இராயப். 1-19; 1-அருள். 2-1, 2.
3, 8) இன்னமும் அவரவர் மரித்தவுடன் ஆத்து
மத்துக்குத் தனித்தீர்வை யிடுகிற மத்தியஸ்தரா
யிருக்கிறார். (எபி. 9-27) பின்பு உலக முடிவில்
எல்லாரையும் ஆத்தும சரீரத்தோடுங் கூட எழுப்
பிச் சகலருக்கு முன்பாக ஆத்துமத்தோடும் கூட
சரீரத்துக்கும் பொதுவாய் நியாயத் தீர்ப்புக்
கொடுக்கிற மத்தியஸ்தரா யிருக்கிறார். (அர்ச். மத்.
25-31, 46; 2-கொரி. 5-10; காட்சி. 22-12)
இப்படி மேற்சொன்ன கிறீஸ்துவின் மீட்புக்கு
எல்லாரும் அழைக்கப்படவும், அவர்களுக்காக ம
ன்றாடவும், பரலோகவாசிகளும், பூலோக விசுவா
சிகளும் நடுநின்று, கிறீஸ்துவின் முன்னிலையில்
பரிந்து பேசுகிறவர்களுமா யிருக்கிறார்கள். அப்
படியே பழைய ஏற்பாட்டின் காலத்தில் வானதூ
தர்களும், மோசே முதல் சகல தீர்க்கதரிசிக



ளும், மகாத்துமாக்களும், தெரிந்து கொள்ளப்
பட்ட இசராயேல் சபைக்காகவும், மற்றப் பாவிக
ளுக்காகவும் நடுநின்று தேவ சமுகத்தில் பரிந்து
பேசி, தேவகிருபை அடைந்தார்கள். புதிய ஏற்
பாட்டின் காலத்திலும் இரட்சகர் தாமே தமது
அப்போஸ்தலர்களை நோக்கி பிதா என்னை அனுப்
பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்,
எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அ
வர்களுக்கு அவைகள் மன்னிக்கப்பட்டிருக்கும், எ
வர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்க
ளோ அவைகள் மன்னிக்கப்படாதிருக்கும் (அர்ச்.
அருள. 20-21, 22, 23) என்று திருவுளம்பற்றி
யிருக்கிறார். அதாவது சகலரையும் பாவ அடி
மைத் தனத்தில்நின்று மீட்டு இரட்சிக்கவும், அவ
ர்களைப் பிதாவோ டொப்புரவாக்கவும், மத்தியஸ்
தராக அவர் என்னை பலியா யனுப்பினதுபோல
அந்த மீட்புக்குச் சகலரையும் என் நாமத்தினால்
அழைக்கவும், பாவப்பொறுத்தல் கொடுக்கவும்,
நானும் உங்களை மத்தியஸ்தராகவும், சாட்சிகளா
கவும் அனுப்புகிறேன் (அர்ச். லூக். 24-48; அப்.
1-8; 10-42, 43) என்பதே. இந்தப்படி இரக்ஷக
ராகிய தேவகுமாரன் அப்போஸ்தலராக அனுப்ப
ப்பட்டதுபோல (எபி. 3-1) அந்த மீட்புக்கு மற்ற
வர்களையும் அழைக்கத்தக்கதாக அவருடைய சிஷ
ர்களும் அப்போஸ்தலராக (கலா. 2-7, 9; 1-தீமோ.
2-6, 7) அனுப்பப்பட்டார்கள் என்பது வேதவா
க்கியமாம். மேலும் ஒரு குடும்பத்தின் எசமான்
தன் வீட்டிலுள்ள சகலருக்காகவும் தேவனை மன்
றாடிப் பிரார்த்திக்கும்பொழுது, அவர்களுக்காக கி
றீஸ்துவின் முன்னிலையில் பரிந்துபேசுகிற மத்தி
யஸ்தனா யிருக்கிறான், அந்தப்படி ஒரு குருவா

னவர் தமது விசாரணைப்பங்கிலுள்ள சகல கிறீஸ்
தவர்களுக்காக மன்றாடி பிரார்த்திக்கும்பொழுது
அவர்களுக்காக கிறீஸ்துவின் முன்னிலையில் பரிந்
துபேசுகிற மத்தியஸ்தரா யிருக்கிறார். அப்படி
யே ஒரு பிஷப்பு அல்லது மேற்றிராணியார் தம
து மேற்றிராசன அதிகாரத்திலுள்ள குருக்கள்
பிரசைகள் முதலான சபையாருக்காக மன்றாடி பி
ரார்த்திக்கும் பொழுது, கிறீஸ்துவின் முன்னிலை
யில் அவர்களுக்காக பரிந்துபேசுகிற மத்தியஸ்த
ராயிருக்கிறார். அப்படியே அர்ச். பாப்பானவர்
உலகத்திலுள்ள சகல மேற்றிராணிமார், குருக்
கள் முதலிய திருச்சபை அடங்கலுக்காகவும் மன்
றாடி பிரார்த்திக்கும் பொழுது, கிறீஸ்துவின் மு
ன்னிலையில் அத்திருச்சபை முழுமைக்காக பரிந்
துபேசுகிற மத்தியஸ்தராயிருக்கிறார். அப்படி
யே பரலோக துரைத்தனத்தாரும், பூலோகத்தா
ருடைய மீட்புக்காக தேவ சன்னிதானத்தில் இ
டைவிடாமல் கிறீஸ்துவின் முன்னிலையாய் மன்றா
டி பிரார்த்திக்கிறவர்களானதால் (காட்சி. 5-8,
12) அவர்களும், இத்திருச்சபையாருடைய விண்
ணப்பங்களை ஒப்புக்கொடுத்து மன்றாடுகிற மத்தி
யஸ்தர்களா யிருக்கிறார்கள். இத்தப்படி சபை
யார் போதகருக்காகவும், போதகர் சபையாருக்
காகவும், ஒருவர் இன்னொருவருக்காகவும் கடவு
ளை நோக்கிச் செபிக்கும்பொழுது, ஒவ்வொருவரு
ம் கிறீஸ்துவின் முன்னிலையிற் பரிந்துபேசுகிற
மத்தியஸ்தரா யிருக்கிறோம். இவ்விதமாகவே கி
றீஸ்து இரக்ஷகரின் மத்தியஸ்தம் அவர் தமது
தெய்வீக சன்னிதானத்தில் விளங்கி நாமும் அவ
ரோடும், அவரிடமாயும் பரிந்துபேசுகிற ஆசாரிய
க்கூட்டமா யிருக்கிறோமென்று வேதம் வெளிப்



படுத்துகின்றது (அர்ச். இராய. 1-திரு. 2-9;
காட்சி. 1-6; 5-10; 20-6) அப்படி இல்லையென்
றால் நாம் ஒருவருக்காக ஒருவர் தேவனை நோக்
கிச் செய்கிற விண்ணப்பம் வீணாயிருக்குமே?

சந்தேகப்பா! இன்னமும் இதிலோர் கேள்வி; பூ
லோக அரசர்கள் சர்வ ஞானம், சர்வ வல்லமை, சர்வ
வியாபகம் இல்லாத மனிதர்களானதால் அங்கங்கே பற்
பல துரைத்தன உத்தியோகஸ்தரை ஏற்படுத்திப் பிர
சைகளை ஆளவும், பிரசைகள் அவர்களிடத்தில் தங்கள்
விண்ணப்பங்களைக்கொண்டு நீதி நியாயம் அடையவும்
வேண்டுமென்பது சரியே. ஆனால் தேவனுக்கோ சர்
வ ஞானம், சர்வ வல்லமை யிருக்கிறபடியாலும், அவர்
எங்கும் வியாபித்து எல்லாவற்றையும் அறிந்த சர்வஞ்
ஞரா யிருப்பதினாலும் மனித துரைத்தனம்போல் அவ
ருக்கு மற்றத் துரைத்தன உதவல்கள் எதுக்கு?

உப.—ஆம், அவருக்கு யாதொரு உதவல்
கள், மற்றும் பல உபகாரணத் துணைகள் அவசிய
மில்லை. இது வாஸ்தவம்; என்றாலும் வானம்,
பூமி, அவைகளில் அடங்கிய சகல வஸ்துக்களை
யும் ஒரு நொடிக்குள் உண்டாக்க வல்லமை யுடை
த்தான அச்சர்வ வல்லவருக்கு அவைகளைச் சிரு
ஷ்டிக்க ஆறுநாள் எதுக்கு? ஆதாம் ஏவாள் தாங்
கள் செய்த பாவத்தினிமித்தம் தோட்டத்தில் நி
ன்று துரத்துண்டபொழுது திரும்ப அதில் அவ
ர்கள் பிரவேசியாதபடிக்குச் சுடரொளி வீசுகின்ற
பட்டயத்தைக் கையிற்பிடித்து நிற்கின்ற கேருபீ
னின் காவல் எதுக்கு? பாவத்தினால் கெட்ட
உலகத்தை அழிக்க நாற்பது நாள் இரவு பகல்
மழையும், சலப்பிரளயமும் எதுக்கு? அதில் நின்
று நோயன்முதலிய எட்டுப்பேரையும், மற்றும்
சீவஜெந்துக்களையும் காப்பாற்றப் பேழை ஒன்று

எதற்கு? பார்வோன் செய்த கொடுங்கோன்மையைத் தண்டிக்கப் பத்துவித வாதைகள் எதற்கு? இசராயேல் சபையை நடப்பிக்க மோசே யென்னும் ஒரு தலைவர் எதற்கு? இப்படி வேதத்தில் அநேகமுண்டு. ஆனால் இப்படிப்பட்ட உதவல்களெல்லாம் தேவன் தமக்கு சர்வ ஞா[illegible] வல்லமைக்குறை என்றதுபோல தாம் தேடிக் கொண்டாரோ? இல்லை, அப்படிப்பட்ட உதவல்கள் அவருக்கு அவசியமில்லை. ஆயினும் தமது வல்லமை, மகிமை, பெருமை, ஆண்மை முதலியதுகளை மனித அந்தஸ்தாருக்கும், அவர்கள் சுபாவத்திற்கும் ஏற்றவிதமாய் அவர்களுக்கு விளங்கச்செய்யப் பரலோகத்திலும் அவ்விதமான ஒழுங்குகளையும், துரைத்தன ஏற்பாடுகளையும் செய்திருக்கிறாரென்பது வேதப் பிரமாணம். அவர் எங்கும் நிறைந்தவராய், ஏகாதி கர்த்தனாயிருந்தும் இப்படி ஏற்படுத்திய அவர் சித்தத்துக்கு விரோதம் பேசுகிறவன் யாவன்?

சங்.—இவைகள் நியாயந்தான். ஆயினும் முத்தையபிள்ளையவர்கள் அவ்வதிகாரத்தில் சொல்லும் வேறுவிதமான ஆட்சேபனைகளாவது:—தேவனை வணங்கும் வணக்கம் வேறு, மரியம்மாளைக் கனப்படுத்தி உபசரிக்கும் வகை வேறென்றால் அவ்விரண்டுக்குமுள்ள வித்தியாசம் செய்கையிலும், வார்த்தையிலும் விளங்கவேண்டும். அப்படியில்லாமல், சர்வ வல்லவனை நோக்கிப் பிரார்த்திப்பது போலவே மரியம்மாளையும் நோக்கிப் பிரார்த்திக்கிறதும், அவ்விரு பிரார்த்தனையும் சொல்லிலும், பொருளிலும் ஒன்றாயிருக்கிறதும், காண்போமானால், அவ்விரு வணக்கமும் ஒன்றுபோலதான் என்று ஏற்படுகிறதல்லவா என்றும், மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒத்து திரிகரண சுத்தியாய் வழிப்படுவதல்லவா என்றும், இன்னமும் இப்படி அநேகமான பல



வசனங்களால் மரியம்மாளைத் தெய்வத்தோடிணைத்து, அவருக்குச் சமமாய்ப் பேசுகின்றார்களே அதென்ன?

உப.—ஆம், அவர்கள் சொல்லும் அப்பொருளுரை இசை விளக்க வார்த்தைகளெல்லாம் மயக்கும் தர்க்கவாதிகளுடைய சித்து வித்தைகளைப்போல அல்லாது மற்றப்படி ஒன்றுமல்ல. இதற்கு விபரம் முந்தி நாம் தெளிவாய்க் காட்டியிருக்கிறபடியால் அதின் உண்மைப் பிரமாணங்களை அறிந்துகொள்ளலாமே. ஆனால் "தேவனை நோக்கிப் பிரார்த்திப்பது எப்படியோ அப்படியே சொல்லிலும், பொருளிலும் கிஞ்சித்தும் பேதமில்லாத ஜெபத்தை மரியாளை நோக்கி (நாம்) ஜெபிக்கிறதாக" முத்தையபிள்ளையவர்கள் விவகரித்து இப்படி தேவனை நோக்கி ஜெபித்துச் சொல்லும் அவ்வார்த்தையின் பொருளாகவே தேவமாதாவையும் நோக்கிப் பொருள் கொண்டு சொல்லி ஜெபிக்கிறோமென்று தாம் தாமே தவறாய்க் கருத்தூற்றிக்கொண்டு நாமே அவ்விரு வணக்கத்தையும் ஒன்றுபடுத்தும் உதாரணவாதிகளாக நம்மைத்தாமே அவர்கள் சாட்சியாய்க் கொண்டுவந்து குற்றங்காண்பது வெகு சாமர்த்தியந்தான். மேலும் இது விஷயங்கள் எப்படியிருக்கிறதென்றால் கருத்தை அறியாமல் வார்த்தையின் பொருளைக் கொண்டு குற்றம் பிடிக்கிற மதியீனனுக் கொப்பாயிருக்கின்றது. எப்படியெனில் ஒரு இராச்சியத்தை யாளுகிற அரசன் தனது இராசதானி வீதியில் தம்மைப்போல் ஒரு சிலையைச்செய்து அதை எல்லாரும் பார்க்கத்தக்கதாய் ஒரு கம்பத்தி லேற்றிவைத்து ஒரு காவலனையும் அதினருகில் நிறுத்தியபோது அவ்வழியே போகி

றவர்களும் வருகிறவர்களும் இதோ இராசாவைப்
பாருங்களென்று சொல்ல இதைக்கேட்ட அந்த
வன் அவர்கள் கருத்தை அறியாமல் சொற்பொ
ருளாகிய வார்த்தையைப்பிடித்து உயிரற்ற இச்சி
லை இராசாவோ என்று அவர்களை வாதைப்படு
த்தினால் அவ்வழிப்போக்கரான அறிஞர் இவன்
என்ன மதியீனன், கருத்தை அறியாமல் சொற்
குற்றம் பிடித்துத் துன்பப்படுத்துவது நியாயமா
என்பார்கள். அவ்வாசனும் அவனைப்பார்த்து ஆ!
மதியீனமான நடுவனே! நம்முடைய பிரசைகள்
நம்மை எப்பொழுதும் நினைக்கவும், அதினால் நம்
முடைய மகிமை விளங்கவும் செய்த இந்த நம்மு
டைய கருத்தை நீ அறியாமல் அப்பிரசைகளைத்
துன்பப்படுத்தின கேதுக்கென்று அவனைச் சி
றைச்சாலையிற் போடுவிப்பானல்லவோ? இவ்வி
தமாய் இராசாவின் கருத்தும், பிரசைகள் கருத்
தும் ஒன்றுபட்டிருக்க இதை அறியாத விவேக
மற்ற அந்நடுவன் சிறைச்சாலையில் அடைக்கப்
பட்டான். மேலும் உலகத்தில் அநேகம் பெண்டு
கள் இறந்துபோன தங்கள் புருஷர் அல்லது பெ
ரியோர்களை நினைத்து என் இராசாவே என் மந்தி
ரியே என்று ஒப்புச்சொல்லி அழுதோலமிடும்
வழமையைப்போல் ஊரிலொரு பெண்டானவள்
அவ்வாறழுத ஒப்பாரியை அவளருகில் நின்ற சே
வகர் கேட்டு இராச்சியத்தையாளும் இராசாவும்
மந்திரியும் வேறாயிருக்க இவளிப்படி ஓலமிட்டழு
லாமோ எனக் கருத்தையறியாமல் சொல்லைப் பொ
ருளாக்கி அவளைக் குற்றக்காரியாக நியாயஸ்தல
த்துக்குக் கொண்டுபோனால் அந்நியாயாதிபதி இச்
சேவகருடைய விவேகத்தை மெச்சிக்கொள்ளத்
தக்கதாமோ? இந்தப்படியே [illegible]தையபிள்ளை



யவர்களும் இஞ்சித்தும் கருத்தை அறியாமல்
"மாதாவே இரட்சியும் இதோ எங்கள் அவசரங்
களில் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர்
பாராமுகமாயிராதேயும், சகல ஆபத்துகளிலே
நின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளும்" இப்
படி பலவாய்ப்பட்ட சொல்லையே தேவ பொரு
ளாகக்கொண்டு விவாதத்தை நடுநின்று முடிப்ப
து என்ன நியாயம். இது மேற்சொன்ன மதி
யீன நடுவனுக்கொப்பாயும் விவேகமற்ற அச்சே
வகருக்கொப்பாயும் மெச்சிக்கொள்ளத் தக்கதல்
லவோ. அப்படியாவது "என் தெய்வமாகிய மாதா
வே பரலோகமும் பூலோகமும் படைத்த சர்வ வல்ல
மையுள்ள பரம ஈஸ்வரியே! நீரே எங்கள் தெய்
வம், நீரே எங்கள் தஞ்சம், நீரே எங்கள் அடைக்
கலம், மரியாயே என் தெய்வமே உம்முடைய பா
தத்தில் விழுந்து இரக்கத்துக்காக மன்றாடுகிற அ
டியேனை நோக்கிப்பாரும், என் நிர்ப்பாக்கியத்
துக்கு இரங்கியருள், பரிசுத்தக்கன்னித்தாயாகிய
தெய்வமே உன் கிருபை கிடைத்தால் நான் பாவ
த்துக்கும் பசாசுக்கும் பயப்படேன்" என்று இப்
படிப் பலவாய்ப்பட அம்மாதாவையே தெய்வ
மாக வாக்கினால் திருச்சபைக் குறிப்பிட்டுச்சொ
ன்னால் இவையே சொல்லிலும் பொருளிலும் ஒ
ன்றான கடவுளுக்குச் சமமாய் மரியாளை நேசித்து
பூசித்து வந்தித்து வழிபட்டு வணங்குகிறதாகும்.
இப்படியாக உதாரணப் படுத்துவார்களேயானால்
அவர் காரியம் கெட்டி. அப்படிக்கில்லாமல் பொ
ய்யும் புலையும் அணுவணுவாய்ச்சேர்த்து உருவா
க்கினும் அவைகள் தமிழில் எவ்வகைப்பேணா
யும் சங்கித்துச் சொல்லும் வார்த்தையான
தால் அவைகளைத் தேவனுக்குரிய பொரு

ளென் றெடுப்பது வெகு விந்தையும் மதிமயக்க
மும் அல்லவோ?

மேலும் வேதாகமத்தில் தேவதூதர்களையும் இசாயேல் சபையின் பெரியோர்களையும் ஆண்டவன் என்றும், தேவர்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (1-மோசே. 18-3; 19-2; 2-மோசே. 21-6; 22-28; சங். 82-6; 138-1; அர்ச். அருள. 10-35; 1-கொரி. 8-5) கருத்தையறியாமல் மேலான எவ்வகைப்பேரையும் பொதுப்பட வழங்கிப் போற்றி அவர்களுடைய உபகார சகாயத்தைப் பெற உபசார வண்ணமைச்சொற்களைத் தனிப்பட தேவனுக்குரிய பொருளாகக்கொண்டு அவ்வொரே சர்வ வல்லமையுடைத்தான தெய்வத்தை வானோர் பூதலத்தோரோடு சமமாக்குகிற முத்தையபிள்ளையவர்கள் மேற்காட்டிய அவ்வேத வசனங்களுக்கு என்ன மறுமொழி சொல்லுவார்கள். ஏனென்றால் "உன் கர்த்தராகிய தேவன் நாமே நம்மைத்தவிர உனக்கு வேறே தேவர்கள் இல்லாமற்போவதாக" வென்று கர்த்தராகிய தேவன் திருவுளம்பற்றி யிருக்கிறாரே. ஒருவேளை இதன் கருத்து வேறென்பார்களோ? மீளவும் புரொடெஸ்டாண்டார் தங்கள் பெரிய கண்காணிமாரை லார்ட் பிஷப்பென்று சொல்லுகிறார்களே, லார்ட் என்றால் ஆண்டவர் என்னும் பயன்தருமல்லவோ? இப்படியே தங்கள் சிறிய செப புஸ்தகம் 18-ம் பக்கத்தில் இராசாத்தியவர்களை "கிருபையுள்ள சுயாதிபதியுமாய், ஆண்டவருமாயிருக்கிற விக்டோரியாள் என்னப்பட்ட எங்கள் இராசாத்தியை" என்று கூறியிருக்கின்றார்கள். (இவை எமது எண்ணப்படி கூறினும் புரொடெஸ்டாண்டு த



மது எண்ணப்படி கூறலாகாவண்ணமாம்.) இப்படியாய் சொல்லும் பொருளும் ஒன்றாக வாழ்த்தி தேவனுக்குரிய நாமத்தை மனிதருக்குரியதாய்க் கொண்டாடிவரும் இந்த புரொடெஸ்டாண்டு தேவனுக்கு முன்பாக என்ன மறுமொழி சொல்லும். ஏனென்றால் நம்முடைய நாமத்தை வேறொருவருக்கும் கொடோமென்று சர்வேசுரனு ஙிய ஆண்டவர் வசனித்திருக்கிறார். ஐயோ! புரொடெஸ்டாண்டே அவர் மனுஷர்கள் தம்மைப் பிரியாசம் பண்ணவாவது தமக்குரிய கனத்தைச் சிருஷ்டிகளுக்குச் செலுத்தவாவது ஒட்டானென்று பின் புஜணி பேசுகிற நீ, கடவுளுக்குச் சமமாய் மற்றவர்களை நேசித்துப் பூசித்து வந்தித்து வழிப்படுவது நியாயமா?

சக்.— ஐயா, முத்தையபிள்ளை யவர்கள் கருத்தையறியாமல் சொல்லைத் தேவ பொருளாக்கி வெகு விந்தையாய்ப்பேசுவது தங்கள் படிப்பின் கனத்துக்கு ஈனந்தான். இது நிற்க, இன்னமும் அவர்கள் சொல்லுகிற ஒரு காரியங்கேளுங்கள் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூர்வாயாக" என்று (மத். 22-37) வேதம் கற்பிக்கிறது என்பதாயும் நாம் இதற்கு விரோதமாய் "மரியாளே வாழ்க வானத்திலும் பூமியிலுமுள்ள சகல அதிகாரங்களும் பெற்றிருக்கிற உலக ராக்கினியே வாழ்க" என்று சொல்லுகிறதாயும் இன்னமும் அநேகமாய் உண்டுபடுத்தி அதனோடு சேர்த்துப் பேசுகின்றார்களே அவைகளைப் பார்த்தீர்களா?

உப.—ஆம், பார்த்தேன் நாம் தேவமாதாவை நோக்கிச் செபிக்குமுறையை ஒழுங்கீனமாய்த் தாறுமாறாக்கிப் பொய்யும் புரட்டும் பலவாறாய்ச் சேர்த்தெழுதியிருக்கிறார்கள். இது இவர்

கள் தன்மைக்குத்தகுதியாமா? மேலும் இப்படி
பொய் பேசுந்தன்மை புரோடெஸ்டாண்டுக்கு
டைய சுபாவ வழக்கமென்று முன்னமே நான் சொ
ன்னேனே; அதாவது தட்டானானவன் தானுரு
வாக்கும் ஆபரணத்துக்குச் சில தாதுவர்க்கப்
பொடி சேர்க்காவிட்டால் ஒன்றோடொன்று பொ
ருந்துமா? நீதியாசனக் கோர்ட்டுக்குப் போகிற
வன் இல்லாத சில பல இசைவிணக்கமான வார்த்
தைகளைச் சேர்க்காவிட்டால் அவன் வழக்கு வெல்
லுமா? அப்படிப்போலவே இவர்கள் தேவமாதா
வின்பேரில் தீராப்பகையாயெடுத்த வம்புவழக்குச்
செல்லவும் வெல்லவும் இல்லாச் சில வார்த்தை
கள் சேர்த்துக்கட்டி உண்டுபண்ணல் அதிசயமல்
லவாம். ஆகிலும் உள்ளகாரியத்தில் இரண்டொ
ன்றெடுத்துப்பேசுவோம். முதலாவது "மரி
யாளே வாழ்க" என்பதாம். இவ்வாழ்த்துதல் நாம்
நூதனமாய்ச் சொல்லுந் தன்மையல்ல. அருள்
வேத ஆரம்ப தேவ அறிக்கையாக மேலோகத்
தில் நின்று சுவிசேஷ சோபனங் கொண்டுவந்த
சம்மனசானவர் அந்தம்மாளை வாழ்த்தி ஸ்துதித்து
வந்தித்த மங்கள வேதப்பிரமாணமே இதற்குப்
பீடிகைபோட்டு வாதிக்கும், பேதமைகளேது
க்கு? இரண்டாவது, மரியம்மாளை நோக்கி "உ
லக இராக்கினியே" என்பதாம். நாம் சொல்லு
வது இம்மட்டுமல்ல; பரலோக பூலோக இராக்
கினியே என புகழுகின்றோம். இவை நம்மாலல்ல;
தேவன்தாமே அந்தம்மாளுக்கு அந்த மகிமைப்
பட்டம் சூட்டினர். அதைக்குறித்து அவரோடே
அவர்கள் வாதாட வேண்டியது, மேலும் இரா
சாவைப்பெற்ற தாயானவள் இராக்கினியென்று
பிரசைகளால் வாழ்த்தப்படுவதுபோல் பரலோக



பூலோக இராசாவாகிய தெய்வ மைந்தனைப் பெற்
ற தாயானவளும், பரலோக பூலோக இராக்கினி
என அந்த மகிமைப்பேறடைந்து, கிறீஸ்து இராச்
சியத்தின் கிறீஸ்தவ பிரசைகளால் வாழ்த்தப்
படுவது அதிசயமுமல்ல; நூதனமுமல்ல; வே
தப் பிரமாணமே.

சங்.—சரிதான் ஐயா, முன்னமே தாங்கள் எடுத்
துக் காட்டியபடி சம்மனசானவர் வாழ்த்திப் புகழ்ந்தி
ருக்க நாம், அந்தம்மாளை வாழ்த்திப் புகழ்ந்தேத்தக்
கூடாதென்பது என்ன மதியீனம். இது நிற்க, தேவ
தாயார் பரலோக பூலோக இராக்கினி என்பதற்கு வேத
ப்பிரமாண மென்ன?

உப.—அதாவது, யேசுநாதரைப் பின்பற்று
கிறவர்களாய் சோதனைகளால் வரும், துன்பமா
கிய சிலுவையைக் கையில் ஆயுதமாகப் பிடித்துக்
கொண்டு தாழ்ச்சி, பொறுமை, கற்பு, விசுவா
சம், நம்பிக்கை, தேவசிநேகமென்னும், ஆயுதபா
ணங்களையும், தரித்துக்கொண்டு எதிராளியாகிய
சாத்தானோடு போர் புரிந்து, முடிவு பரியந்தம்
அவருடைய கிரியைகளில் நிலை நின்று ஜெயங்
கொள்ளுகிறவனுக்கு "என்னுடைய பிதாவினிட
த்தில் நான் பெற்றதுபோல, ஜனங்களின்மேல் அ
திகாரத்தைக் கொடுப்பேன் அவன் இருப்புக்கோ
லால் அவர்களை ஆளுவான்" (காட்சி. 2-25, 26)
என்றும், இந்தப்படி அவர்கள் ஜீவ கிரீடம் தரிக்
கப் பட்டவர்களாய் அவரோடுகூட இராசரீகம்
செய்வார்களென்றும், (2-திமோ. 2-12; அர்ச்.
யாக. 1-12) வேதம் வசனிக்கின்றது.

சங்.—மெய்தான், ஆனால் தேவமாதாவைப்பற்றி
அப்படிச் சொல்லப்படுவதாகக் காணப்பட வில்லையே?

உப.—தேவமாதாவைப்பற்றி அந்தப்படி கு
றிப்பிட்டுச் சொல்லப்பட்டு விட்டாலும் மேற்கா
ட்டிய புண்ணிய நற்கிரியைகளைக் கைக்கொண்டு
தங்கள் முடிவுபரியந்தம் கிறீஸ்துவைப் பின்பற்றி
நடக்கிற சகல புண்ணிய ஆத்துமாக்களுக்கும்
தேவன் பொதுவாய் வாக்குத்தத்தம் பண்ணப்
பட்டிருப்பதால், தேவ தாயாருக்கு இந்த இராச
ரீக மகிமை இல்லாமற்போகுமோ? இதோ அத்
தேவதாயார் தேவனுடைய வாக்குத்தத்தத்தை
தமது திருக்குமாரனைப்பற்றி அதிக உன்னத மே
ன்மையாய் அடைந்தவள்; உலகத்திலுண்டான
சகல புண்ணிய ஸ்திரீகளைப்பார்க்கிலும் அதிகமா
ன ஆசீர்வாதத்தைப் பெற்றவள் (அர்ச். லூக்.
1-28) அன்றியும் தேவமாதா தமது திருக்குமா
ரனைத் தேவாலயத்துக்குக் கொண்டுபோய்க் கா
ணிக்கையாக ஒப்புக்கொடுத்த பொழுது, சிமி
யோன் என்னும் மகாத்துமா அக்குழந்தையைக்
கையில்வாங்கி ஏந்திக்கொண்டு சர்வேசுரனை ஸ்
தோத்தரித்து, பின்னும் அவர்களை ஆசீர்வதித்து
அத்தெய்வீக பிள்ளையின் தாயாராகிய மரியம்மா
ளை நோக்கிச் சொன்னதாவது, இதோ இவர் இச
ராயேலில் அநேகருக்குக் கேடாகவும் உத்தான
மாகவும் விரோதிக்கப்படும் குறிப்பாகவும் ஏற்ப
டுத்தப்பட் டிருக்கிறார். அநேக இருதயங்களில்
நின்று சிந்தனைகள் வெளிப்படும் பொருட்டு உம்
முடைய ஆத்துமமும் ஒருவாளால் ஊடுருவப்படு
மென்றார். (அர்ச். லூக். 2-28, 35) ஆனதால் இ
ந்தவாள் எப்படிப்பட்டதென்று நன்றாய் சிந்தித்
தால், உலக இரட்சணியத்துக்காக தமது உதிரப்
பிறப்பான தேவ திருக்குமாரன்பட்ட சகிக்கொ
ணாத ஒவ்வொரு பாடுகளையும் தமது கண்களி



னாற் கண்டு காதுகளினால் கேட்டு அவைகளை இ
ருதயத்திற் காத்தனர். இது மனமுருகிப் பட்டது
யர் மனிதர்வாக்கினாற் சொல்லவே முடியுமோ? அல்
லாமலும் தமது அத்திவ்விய திருக்குமாரன் க
டைசியாய் உயிர் விடும்பொழுது அத்தாயார் பட்
டதுயர் அந்தவாளால் குறிப்பிடப்பட்டிருக்கின்
றது. இந்தப்படி வாக்குத்தத்தின் கர்த்தரை
ப் பெற்றவளுமாய் பாவமில்லாமற் பரிசுத்தத்
தின் பூரணம் உடையவளுமாய் ஆதி ஏவையால்
பசாசுக்கடிமையான மக்களைத் தமது உதரக்கனி
யினால் மீட்ட புதிய ஏவையுமாய் மேற்சொல்லிய
படி தமதுதிருக்குமாரன் பட்டபாடுகளை யெல்
லாம் நினைவில் நினைத்து தமது பாசத்தின் கூர்மை
யுள்ள வாளால் தமதிருதயத்தை ஊடுருவ குத்தப்
பட்டு சகல வேதசாட்சிகளைவிட அதிக வேதனை
யநுபவித்த மேலான வேதசாட்சியுமாய், முன்
சொல்லிய தாழ்ச்சி, பொறுமை, கற்பு, விசுவா
சம், நம்பிக்கை, தேவசிநேகம் பிறர்சிநேக முத
லிய மேலான புண்ணியங்களோடு தமது திருக்கு
மாரனைப் பின்பற்றிப் பசாசை ஜெயித்து அதன்
தலையைத் தன் காலால் நசுக்கி முடிவு பரியந்தம்
நிலைநின்ற உத்தம ஜெய சீலியாய் தமது திருக்
குமாரனின் சிம்மாசனத் தண்டையில் அண்டிய
இத்தேவ தாயாருக்கு அவ்வாக்குத்தத்தத்தின்
இராசரீகம் இல்லாமற் போகுமோ? இதோ தேவ
திருக்குமாரன் சிலுவையில் மரிக்குந்தருணத்தில்
தமது தாயாருக்கு மகனாகத்தந்த அர்ச். அருளப்ப
ருக்கு அத்தேவதாயார் மோக்ஷத்தில், பரலோக
பூலோக இராக்கினியாக, முடி தரிப்பிக்கப்பட்டி
ருக்கிறதை தேவன் தாமே அத்தம்மாளைக் காட்
சியால் காண்பித்திருக்கிறார்.

சங்.—ஐயாவே, அதின் விபரங்களைச் சற்றுத் தெளிவா யுரைக்கவேணும்.

உப.—தேவதாயார் 56-ம் வருஷத்தில் மரணமடைந்து மூன்றுதினத்திற்குப்பின், தமதாத்துமம் சரீரத்தோடு மோட்சத்துக் கெழுந்தருளி அங்கே இராக்கினிப்பட்டம் சூட்டப்பட்டு முடிதரிப்பிக்கப்பட்டாள். அப்பால் ஏறக்குறைய 39 வருஷத்திற்குப்பின் அர்ச். அருளப்பர் தேவலோக காட்சி கண்டெழுதியபோது, இவர் தமது தாயாராக நேசிக்கும்படி கர்த்தரால் ஒப்புக்கொடுக்கப் பட்டிருந்த தேவதாயார் பரலோக பூலோக இராக்கினியாக கிரீடம் தரிப்பிக்கப் பட்டிருக்கிறதை இந்த அப்போஸ்தலர் கண்டு திருப்தியடைய தேவகாட்சி கொடுக்கப்பட்டது. அதேதெனில், "ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஒருஸ்திரீ சூரியனை அணிந்து பாதங்களின் கீழே சந்திரனையும் தன்னுடைய சிரசின் மேல் பன்னிரண்டு நட்சேத்திரங்களுள்ள கிரீடத்தையுடைவளாய்க் காணப்பட்டதாமே." (காட்சி. 12-1) ஆனதால் அந்த ஸ்திரீயானவள், நமது இரட்சகராகிய தேவனைப்பெற்ற தாயார் என்பதற்கு அக்காட்சியின் 12-ம் அதிகாரம் முழுமையும் வாசிக்க சந்தேகமில்லாமல் தெளிவாயிருக்கின்றது. இப்படி "சூரியனை யணிந்தவளாய்" அதாவது தெய்வீக ஒளியின் சூரியனாகிய தேவசுதனானவரை தன் கர்ப்ப உற்பத்தியாய் சுமந்து பெற்றதினால் பரலோகத்திற்கு இராக்கினியாகவும் "சந்திரன்மேல் நின்றவளாய்" அதாவது தமது மாம்ச ஐக்கியத்தைக்கொண்டு அத்தேவசுதன் பூமியின் சாபத்தை நீக்கிப் பசாசின் இராச்சியபாரத்தை மிதித்து அதைச் ஜெயித்ததினால் பூலோகத்



துக்கு அரசியாகவும், "பன்னிரண்டு நட்சேத்திரங்களுள்ள கிரீடத்தைத் தன் சிரசின்மேல் தரித்தவளாய்" அதாவது இஸ்ராயேலின் பன்னிரண்டு கோத்திரங்களோடு அப்போஸ்தலர்களின் பன்னிரண்டுகோத்திரங்களாகிய வரிவேத, அருள்வேத, பரலோக பூலோக திருச்சபை அனைத்துக்கும் நம்முடைய திருக்குமாரனோடு கூட இராசரீக இராக்கினியாய் வீற்றுள்ளவளாக அப்பரலோகக்காட்சி நமக்குப் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்துகின்றது. ஏனென்றால் பழைய ஆதாம், ஏவாள் தங்கள் பாவத்தால் இழந்துவிட்ட பரலோக சிம்மாசனத்தைப் புதிய ஆதாம் ஏவாள் தங்கள் பரிசுத்தப் பரிகார மீட்பால் அதைப்பெற்றடைந்து அச்சிம்மாசனர்களாகி தங்கள் பின்னடியாரும் அதில் பங்குபெறச் செய்கின்றார்கள்.

சங்.—அப்படியிருக்க, இக்கருத்துக்களை அறியா முத்தையபிள்ளை யவர்கள், நாம் மரியம்மாளை, தேவமாதாவென அழைப்பதாலும் அவளைப் பரலோக பூலோக இராக்கினி எனப் புகழ்வதாலும், அவளைத் தேவசன்னிதியில் நமக்காகவேண்டிக்கொள்ள மன்றாடி பிரார்த்திப்பதாலும் தேவனுக்குச் சமமாய் அந்தம்மாளை நேசித்துப் பூசித்து வந்தித்து வழிபட்டு வணங்குகிறதாக சொல்லுகின்றார்களே அது சரியோ?

உப.—பரிச்சேதம் அது சரியல்ல, எப்படியெனில் ஒருவன் பட்டப்பகலில் தன் கண்கள் இரண்டையும் சிக்கென மூடிக்கொண்டு உலகமெல்லாம் இருட்டிப்போய் விட்டதென்றால், இது அவனை எல்லாரும் நிந்திக்கத்தக்க பரியாசத்துக்குரிய வார்த்தையே யல்லாது மற்றப்படி யல்லவே. மேலும் அவன் தனக்குமட்டும் அது இருட்டென்னும், மற்றோருக்கு அப்பட்டப்பகல் இருட்

டாகா. இதுபோலவே முத்தையபிள்ளை யவர்களும் தமது புத்தியின் கண்களைச் சிக்கென மூடிக்கொண்டு நாம் தேவமாதாவை தேவனுக்குச் சமமாய் நேசித்து பூசிக்கிறோமென தமக்குத்தாமே நிந்தனையாக பரியாசத்துக் குரிய வார்த்தையாய்ச் சொல்லிக்கொண்டார்களே யல்லாது, மற்றப்படி கத்தோலிக்கரில் எவராவது அந்தம்மாளை தேவனுக்குச் சமமாய் நேசித்து பூசிப்பதான பலிபூசை ஆராதனை செய்வாருமில்லை. அல்லது அக்கருத்தோடு அவளை வந்தித்து வணங்குவாருமில்லை. ஏனென்றால் கத்தோலிக்குச் சாதாரண திருச்சபைக்கும் அதின் பிள்ளைகளாகிய கிறீஸ்துவர்களுக்கும் திரித்துவமாகிய அவ்வொரே மெய்யான கடவுளே அல்லாது வேறெதெய்வம் இல்லை என்பதும் அவர் ஒருவருக்கே பூசைபலி ஆராதனை செய்வித்து எல்லாத்தையும் பார்க்க அவரை நேசித்து பூசிக்கவேணுமென்பதும் அதின் விசுவாச பிரமாணமும், அதின் திருவேத கற்பனைகளின் வாக்கியமுமாமே.

சந்.—அப்படியானால் முத்தையபிள்ளை யவர்கள், எடுத்துரைத் திருக்கிறபடி, "உன்தேவனாகிய கர்த்தரிடத்தில் உன்முழு இருதயத்தோடும், உன்முழு ஆத்துமாவோடும், உன்முழு மனதோடும், அன்பு கூர்வாயாக" என்று (மத். 22-27) வேதம் கற்பிக்கிறதை நாம் கைக்கொண்டு அவர் ஒருவரையே நேசித்து பூசித்தாலென்ன? மற்றவரை ஏன் நாம் நேசிக்கவேணும், வணங்கவேணும்?

உப.—அது நமது இரட்சகர் திருவுளம்பற்றின முதற்கற்பனை யாயினும் அதற்கொத்த இரண்டாம் கற்பனையாக உன்னைப்போல உன் புறத்தியானையும் அன்பு கூர்வாயாக (அர்ச். மத். 22-38, 39) என்று வேதம் கற்பிக்கிற அவர் திருவாக்



கைப் பார்த்துணரவில்லையோ; ஆகையால் நமது புறத்தியாரை நேசிக்கக் கற்பித்த ஆண்டவர் தமது தாயார் முதலான தமது உத்தம பரிசுத்த நேசர்களை (அர்ச். அருள். 15-9, 14) நாம் நேசித்து வந்திக்கத் தடைசெய்வாரோ? பரிச்சேதம் தடைசெய்யார். ஏனென்றால் அவர்கள் அவரோடேகூட பரலோகத்தில் மகிமைபெற்றிருக்கிறார்களே (கொலோ. 3-4; அர்ச். அருள். 1-நிரு. 3-2; காட்சி. 2-25; 3-2) அப்படியே வரிவேத பூர்வ பிதாக்களும் வானோர்களை வந்தித்து நேசித்திருக்கிறதை முன்னமே நாம் தெளிவாய் காட்டியிருக்கிறோம்.

சந்.—ஐயாவே, இவையெல்லாம் முத்தையபிள்ளையவர்கள் கண்டறிந்துணராதபடிக்குக் கண்மூடி வாயில் வந்ததெல்லாம் வம்பாய்ச் சொல்லுகிறது சரியல்லதான். இன்னமும் அவர்கள் சொல்லும் ஒரு விசேஷமாவது லேயோன் என்னும் ஒருபெரியவர் ஒருதரிசனம் கண்டாராம். அதில் இரண்டு ஏணி வானத்திற்கு நேரே வைத்திருந்தது. அவற்றுள் ஒன்று சிவப்பு நிறமாயும் அதன் உச்சியில் கிறீஸ்து இருக்கிறதாகவும், மற்றொன்று வெள்ளையாயும் அதன் உச்சியில் மரியாள் இருக்கிறதாகவும் கண்டாராம். சிவப்பு ஏணியில் ஏற அநேகர் பிரயாசப்பட்டும் சில பழுக்கள் மாத்திரம் ஏறி பின்விழுந்து விட்டார்களாம். பின்னும் மாறி மாறி திரும்ப திரும்ப ஏற ஏற வழுவி வழுவி விழுந்துகொண்டே இருந்தார்களாம். ஒருவராவது பழுமுடிய ஏறி உச்சிவந்து எட்டவில்லை, இவர்கள் இப்படித் தட்டழிகிற சமயத்தில் வெள்ளை ஏணியில் ஏறிப்பாருங்கள் என்று ஒருவாக்கு உண்டாயிற்று, அதில் அவர்களில் ஒருவராவது, ஒருதரமாவது விழாமல் உடனே ஏறி விட்டார்களாம், மரியாளும் வருமுன்னே கைநீட்டித் தூக்கிவிட்டாளாம், என்பதே இது உண்மையோ இதன் விசேஷமென்ன?

உப.—இது அர்ச். அஞ்சுசாய பிரான்சீஸ்கு என்கிறவருக்கு உத்தம சிநேகிதனான அந்த லேயோன் என்கிற சந்நியாசியார் கண்ட உண்மையான காட்சி என்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் அது சிகப்புநிறமில்லை. யேசுநாதர், சாய்ந்து கொண்டிருந்த ஏணி பொன்னிறமும், அவர் திருத்தாயார் சாய்ந்து கொண்டிருந்த ஏணி வெண்மை நிறமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளைப்பற்றி புரோடெஸ்டாண்டார் ஒருவித கதையாய் எண்ணி பரியாசத்துக்குரிய வண்ணம் எழுதியிருந்த போதிலும் இவை பொதுத்தீர்வையில் யேசுநாதருடைய நீதி விளங்குதலைப்பற்றியும், இதன் மத்தியகாலங்களில் தேவமாதாவினுடைய மன்றாட்டினால் அவருடைய இரக்கம் விளங்குதலைப்பற்றியும், அவ்வுத்தம பக்தர் கண்ட காட்சியென்று மறுபாஷையிலிருக்கிற அதை உள்ளபடி வாசிப்போர் தெளிவாய் அறியத்தக்கதாம். இந்தப்படி எத்தனையோ காட்சிகள் காணப்பட்டிருக்கிறதாய் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. விசேஷமாய் கோத்திரப்பிதாவாகிய யாக்கோபென்பவர், சம்மனசுகள் ஏறுகிறதும், இறங்குகிறதுமான ஒரு ஏணி வானமட்டும் எட்டி நின்றதைக் காணவில்லையோ? (1-மோசே. 28-11) அப்படியே அர்ச். அருளப்பர் கண்ட காட்சியில், யேசுநாதருடைய நியாயத்தீர்ப்பின் காலத்தில் அவருடைய நீதிதான் விளங்குமென்பதாய் தெரிய வருகின்றது. மேலும் அச்சமயத்தில் அவருடைய நீதி யகோத்துக்கொத்தபடியே அவருடைய வல்லமைக்குரிய மகிமையும் விளங்கப்படுமென்று வாசிக்கிறோம். எப்படியெனில், அவருடைய சிரசும் மயிரும்



வெண்பஞ்சைப் போலவும், உறைந்த பனியைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள், அக்கினிச்சுவாலையைப்போலிருந்தன. அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருந்தன. அவருடைய சத்தம் பெருவெள்ளத்தின் இரைச்சலைப்போலிருந்தது. அவருடைய வாயிலிருந்து இருபுறம் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது. (காட்சி. 1-14, 15, 16) இதுபோலவே அந்த லேயோன் என்ற மகாத்துமா கண்ட காட்சியும் யேசுநாதருடைய நியாயத்தீர்ப்பின் காலத்திலுண்டான அவருடைய நீதிவிளங்குதலை வெளிப்படுத்துகிறதேயல்லாது, அதின் இடையில் அவரிடத்திலுண்டான அன்பை நீங்கலாக்குகிறதல்லவே. இந்தப்படி தமது பிள்ளைகள்பேரிலுண்டான கிறீஸ்துவின் அன்பை அவருடைய அத்திருத்தாயார் கெஞ்சி மன்றாடி இரங்குதருபவளாய் அக்காட்சி பிரஸ்தாபித்தலாயிருக்க, அதினால் அத்தாயாரை "கிறீஸ்துவுக்கு மேலாக உயர்த்துகிறோம் என்று சாதிப்பதும் அது அஞ்ஞானம் போலவும் அவபக்திபோலவும் தங்களில் உசாவுதல்கொண்டு, கிறீஸ்துவின் அன்புக்கும் வேதப் பிரமாணத்துக்கும் பெரிய விரோதம்போல வாயில்வந்தபடி உளறுவதும் என்ன நியாயம்?

சந்.—ஐயாவே! அவர்கள் உளறுவது இருக்கட்டும், இன்னமும் அவ்விதமா [illegible] யாய்ச் சொல்லி முடிக்கும் சிலகாரியங்களாவன: "உரோமை சபையானது தன்னை ஆதிச்சபை என்று சொல்லியும் வேதத்தை விட்டு விலகி அப்போஸ்தலர்களுடைய அநுஷ்

டானங்கள் அனைத்தையுந் தவிர்த்து மனுஷியாகிய மரி
யம்மாளைத் தெய்வத்துக்குச் சமமாக உயர்த்தி அவளையும்
மற்றும் பரிசுத்தவான்களையும் சிருஷ்டியாகிய தேவதூத
ர்களையும், தொழுது சேவிக்கிறது" என்றும் இவ்விதவழ
க்கம் பலவாத் தெய்வமென்று வழிபடும் அஞ்ஞான
மார்க்கத்திலிருந்து உண்டானதோ, ஒன்றான மெய்த்
தெய்வமாகிய கடவுள் ஒருவனையே வழிபட்டு வணங்க
வேண்டும் என்கிற சத்திய வேதத்திலிருந்து உண்டான
தோ? என்று புத்திசாலிகள் யோசித்துப்பாருங்கள், என்
றும் பின்னும் இதற்குத்தாட்சியாக சிருஷ்டிகளை வணங்
கும் இந்த அஞ்ஞானவழக்கம் சபையில் சில இடங்களி
ல் நுழையக்கண்ட அத்தனேசியார் என்பவர், அதைப்ப
ற்றித் தமது அபிப்பிராயத்தை வெளியிடுகிறார், என்றுஞ்
அதாவது (வெளி. 19-10) இவ்வாக்கியத்தின் படி
யோவான் தேவதூதனை வணங்கினதையும் தேவதூதன்
அதைத்தடுத்ததையும் எடுத்துக்காட்டிக் கடவுள் ஒருவ
னைமாத்திரம் நாம் தொழுது வணங்கவேண்டும் என்
பது தேவதூதர்களுக்கும் தெரிந்த விஷயமாயிருக்கி
றது, அவர்கள் மற்றவர்களைப் பார்க்கிலும் மகிமையில்
விசேஷித்தவர்களாயிருந்தும் வணக்கத்துக்குப் பாத்தி
ரரல்ல, அவர்களை வணங்கப்படாது. ஏனென்றால் அவ
ர்கள் சிருஷ்டிகளே யன்றி வேறல்ல. அவர்களும் நம்
மைப்போலத் தேவனை வணங்க வேண்டியவர்கள், ஆத
லால் வணக்கம் தேவன் ஒருவருக்கே உரியது என்று
பின்னும் பலவேத.வாக்கியங்களைக் கொண்டு சிருஷ்டி
வணக்க கண்டிதம் செய்கிறார், என்றும் திருச்சபையா
கிய, மணவாட்டியும் தன் மணவாளனாகிய யேசுநாயக
னைத்தவிர மற்ற யாருக்காயினும் தன் அன்பையும், வ
ணக்கத்தையும் செலுத்தாமலும் கறைபடாமலும் இருப்
பதல்லவோ கடமை. அதைவிட்டு விவஸ்தை இன்றி
வேதநெறி இழந்து வேண்டியவாறு செய்வது வெட்
கப்படத்தக்கதாகுமே யொழிய வேறென்ன, என்றும்
உரைக்கின்ற இவைகளுக்கு விடை என்ன?

உப.—1-வது. அவர்கள் "ரோமைச் சபை
யென்று தனிப்பட தப்பாய்ச் சொல்லுகிற கத்



தோலிக்குத் திருச்சபையானது ஆதி சபை என்
பதுவான்தவம். இதைப் புரொடெஸ்டாண்டார்
ஒருபோதும் மறுக்கார்கள். ஆனால் அத்திருச்ச
பையானது வேதத்தைவிட்டு விலகிற்றென்ப
தும், அப்போஸ்தலர்கள் அநுஷ்டானங்கள் அனை
த்தையும் தவிர்த்துவிட்டதென்பதும் பொய்க்
கஞ்சாமல் பேசும் புரொடெஸ்டாண்டின் குண
மேயன்றி வேறல்ல. எப்படியெனில் ஆதி சபை
யாகிய கத்தோலிக்குத் திருச்சபையானது வேத
த்தை விட்டு விலகி அப்போஸ்தலர்கள் அநுஷ்
டானங்கள் அனைத்தையும் தவிர்த்து விட்டதோ
என்றும் அல்லது, மூன்றாம்நூற் சிலவான வருஷ
ங்களுக்கு முன்னே எழும்பின புரொடெஸ்டாண்
டென்னும் இப்புதிதமார்க்கம் தன்னைக் கிறீஸ்து
மார்க்கமென்று சொல்லிக்கொண்டு, அவருடைய
மெய் வேதத்தையும் புண்ணிய வழிபாடுகளையும்
விட்டு விலகி அப்போஸ்தலர்கள் அநுஷ்டானங்
கள் அனைத்தையுந் தவிர்த்து அவர்கள் ஒருமிப்
பின் விசுவாசமார்க்கத்தைக் குலைத்துப் பங்கப்படு
த்தி விட்டதோ என்றும், புத்திமான்கள் வேதத்
தையும் திருச்சபையில் நடைபெற்றுவந்த உண்மைச் சரித்திர ஆகமங்களையும் வாசித்து
யோசித்துப் பார்ப்பார்களே யாகில், அதன்மெய்
விளங்கும்.

2-வது.—மரியம்மாளைக் கிறீஸ்துவுக்கு மே
லாகவாகிலும் தெய்வத்துக்குச் சமமாகவாகி
லும் உயர்த்துகிறோம் என, புரொடெஸ்டாண்டு
வாய் மதங்கொண்டு மூர்க்கத்தனம் பேசுகின்ற
தேயன்றி மற்றப்படியல்ல. ஆனால் அம்மரியம்
மாளையும் தேவதூதர் முதலான மோக்ஷவாசிக

ளையும் வணங்குவது அஞ்ஞான மார்க்கத்திலிருந்து உண்டானதோ, ஒரே கடவுளை ஆராதிக்கும் மெய்ஞ்ஞான மார்க்கத்திலிருந்துண்டானதோ? வென்று முந்தின சம்பாஷணைகளில் நாம் எடுத்துக்காட்டிய வேதவுதாரண நியாயங்களை அவ்வேதத்தோடொத்து சிந்தித்து பார்ப்பார்களேயானால், அவ்வணக்கம் அற்ப சந்தேகமின்றி அம்மெய்ஞ்ஞான சத்திய வேதத்திலிருந்துண்டானதென்று பிரத்தியட்சமாய் விளங்கும்.

3-வது.—அர்ச். அத்தனாசியார் தேவமாதா முதலான மோட்சவாசிகளை வணங்குவது அஞ்ஞான வழக்கமென்று அபிப்பிராயங்கொண்டு அவர் கண்டிதம் செய்ததாய் புரோடெஸ்டாண்டார் கொண்டுவந்த அவ்வேத வுதாரணம் அர்ச்சியஷ்டவர்களை, அவர்கள் வணங்காக் கருத்துக்குப் பிரதிகூலமேயன்றி அநுகூலமல்ல. அதெப்படியெனில் அர்ச். அத்தனாசியார் எடுத்துக்காட்டியதாய் புரோடெஸ்டாண்டு கொண்டுவந்த (காட்சி. அல்லது வெளிப்படுத்தல் 19-10-ல்) யோவானென்கிற அர்ச். அருளப்பர் தேவதூதன்பாதத்தில், விழுந்து வணங்கினதும் அப்போது அத்தேவதூதன் அதைத்தடுத்து தேவனைத் தொழுதுகொள்ளும் என்றதும் மெய்யே. இவை ஓர்தரம் நடந்ததல்லவே இரண்டுதரம் நடந்த விசேஷமாம். (காட்சி. 22-8) முந்தினதும் பிந்தினதுமான இவ்வேதவசனங்களால் பரிசுத்தவான்களையும் மற்றப் பெரியோர்களையும் வணங்கக் கூடாதென்கிற சட்டமிருக்குமேயானால், இரண்டாவதாகவும் அவ்வப்போஸ்தலர் அத்தேவதூதன் பாதத்தில் விழுந்து வணங்குவாரோ, மேலான தேவ வரங்



ளைப் பெற்றிருந்த அந்தப்பெரிய அப்போஸ்தலர் இவ்வணக்கம் தேவனுக்குரியதென்றும் தேவதூதர்முதலிய சிருஷ்டிகளுக் கடுத்ததல்லவென்றும் அறியாமலிருந்தாரோ? அவ்வணக்கம் தேவகற்பனைக்கு விரோதமான பாவமாயிருக்குமேயாகில், முதலாவது தேவதூதனால் தடுக்கப்பட்ட பாவமென்றறிந்திருந்தும், இரண்டாவதும் மீறி அந்தப்படிக்குச் செய்து பாவத்தைக் கட்டிக்கொள்ளுவாரோ? ஆகையால் இவ்விஷயங்களைப் புத்திசாலிகள் நன்றாய்க் கவனித்துணர்ந்தால், அது தேவவணக்கமல்ல யாவரையும் வணங்கும் பொதுவணக்கமென தெளிவாய் அறியலாமே. ஆனால் அவர் வணங்கவும், தேவதூதன் தடுக்கவும் இரண்டிசைச் சம்பவித்ததெதினாலென்றால், இவர்கள் இருவரும் தேவவரப்பிரசாதம் பெற்ற பெரியோர்களும் பரிசுத்தர்களுமாயிருப்பதால் ஒருவருக்கொருவர் [illegible]தலை அநுசரித்தார்களே யல்லாது மற்றப்படியல்ல. அதெப்படியெனில் அவ்வருமையான சம்மனசானவர், தேவசமுகத்திலிருந்துவந்த தூதனானபடியால் அவருக்குச் செய்யவேண்டிய வணக்கத்தைத் [illegible] கீழ்ப்படிதலின் சுபாவமேயாய் அர்ச். அருளப்பர் அப்படிச்செய்தார். தூதனானவரோ இவர் சர்வேசுரனால் அழைக்கப்பட்ட உத்தம அப்போஸ்தலனாய் தம்மைப்போலத் தேவவரப்பிரசாதம் பெற்ற மகாபெரிய பரிசுத்தருமாயிருக்கிறாரென அறிந்து தமது கீழ்ப்படிதலின் குணத்தால் அப்படிச் செய்யாதபடிக்குப் பாருமென, அதைத் தடுத்து மரியாதை செய்தாரேயன்றி, இதினால் பெரியோர்களையும், மோட்சவாசிகளையும் வணங்கக்கூடாதென்றாவது அல்லது அது தேவவணக்

சத்துருக்குரிய சிருஷ்டிவணக்கப் பாவமென்றாவது எவ்வளவேனும் நாலங்கக்காணோம். அன்றியும் தேவதூதர் முதலிய மோக்ஷவாசிகளை வணங்க வேண்டியது அவசியமான வேதமுறைமை என்றாற்போலவும், அது தேவதற்பனைக்கு விரோதமான பாவமுமல்ல, அவருடைய மகிமைக்குக் குறைவுமல்ல, என்றாற்போலவும், முந்தின சம்பாஷணைகளில் நாம் எடுத்துக்காட்டிய பழைய ஏற்பாடு வேதாகம வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. ஆகையால் மோக்ஷத்தில் வாழும் பரிசுத்தவான்களை வணங்குவது உலகமுண்டான பூர்வகாலமுதல் எக்காலத்திலும் நடந்தேறிவந்த வேத சத்தியமென்றுணர்க.

மீளவும் அர்ச். அத்தனாசியார் தேவதூதர்களை வணங்கப்படாதென்று கண்டிதம் செய்தாற்போல அவர்பேரால் இவர்கள் கொண்டுவந்த உதாரணம் சுத்தப்புரட்டு [illegible]யாவது அவர் எழுதிய இன்ன புஸ்தகம், இத்தனையாவது அதிகாரமென குறிப்பையாவது காட்டி அதிலுள்ளபடி திருப்பிக்கொடுத்தால், அதின் உண்மை இன்னதென அறியலாம், அதையுங் காணோம், அப்படியிருக்க அது சுத்த புரட்டென்பதற்குச் சந்தேகமா? மேலும் பூர்வ பிதாக்களுடைய பேச்சுக்களாவது செய்கைகளாவது வேதவசனத்திற்கு ஒத்துவராதபட்சத்தில் நமக்குப் பிரமாணமாகா என்ற இவர்கள் தீர்மானப்படி அப்பூர்வ பிதா சொல்லியதாக இவர்கள் கொண்டுவந்த (1-மோசே. 18-2, 3; 19-1; 4-மோசே. 22-31; யோசுவா. 5-14; 1-இராசா அல்லது 1-சாமு. 28-14) இவ்வசனங்களுக்கு ஒத்துவராத அப்பேச்சுகளை விவஸ்தையின்றி எப்படி வேதப் பிரமாணமாகக்



கொண்டுவரலாம். அன்றியும், பூர்வ பிதாக்களென்று பேர்பெற்றவர்களில் பலர் பல நூல்கள் எழுதியிருந்தும் அவைகளில் ஒன்றாவது நமக்கு வந்து எட்டவில்லை எல்லாம் காலாந்தரத்தில் அழிந்து விட்டன, என்ற இவர்களுக்கு அப்பூர்வ பிதாக்களில் ஒருவராகிய அர்ச். அத்தனாசியார் என்பவர் எழுதிய அந்நூல்மட்டும் எப்படி கிடைக்கலாயிற்று? இவ்விஷயத்தில் முன் சொன்னதை மறந்துவிட்டார்களோ, அப்படி அல்லவென்றால், இரண்டிலொன்று பொய்யாயிருக்க வேண்டுமே. அப்படிப் பொய் சொல்லுகிறவர்களுடைய பேச்சை எப்படி நம்பலாகும். ஓரே விஷயத்தில் ஒரே வாயில் நின்று உண்டு, இல்லை என்கிற இரண்டு வார்த்தை எப்படிப் புறப்படலாகும். உடும்புக்கல்லோ இரண்டு நாக்கு. மனிதனுக்கும் அப்படி உண்டா? என்ற ஆச்சரியம்போல இவர்கள் வாயில் நின்றும் எப்படி இரண்டு நாக்குப் புறப்படலாயிற்றோ தெரியவில்லை. ஓ புரோடெஸ்டாண்டரே! நீங்கள் எவ்வளவுதானும் இப்படி [illegible]க்கிக் குந்தி நடப்பீர்கள் ஒன்றில் [illegible]நின்றும் ஆமென்றும் சொல்லுங்கள். ஒன்றில் அல்லவென்று சொல்லுங்கள், இரண்டும் ஒரு வாயில் நின்று புறப்படுகிறதே, அசுத்த ஆவியும் வெட்கமின்றி பலவாறாய்ப் பேசித்திரியும் வேசைக்கொப்பவென்றறியுங்கள். இப்படியாய் அனலுமின்றி குளிருமின்றி (வஞ்சகமுறைக்கும்) வெது வெதுப்புள்ளவர்களை நமது வாயில் நின்று வாந்திபண்ணுகிறோம் (காட்சி. 3-16) என்று கர்த்தருரைக்கிறார். இவைகளை உணர்ந்து பாராமல் தம் மனதில் கொண்டதெல்லாம் மாணிக்கமென வாதாடுவது என்ன, இது புத்தியோ?

மேலும் திருச்சபையில் பேர்போன பூர்வ பிதாக்களில் ஒருவருமாய் வேதசாஸ்திர பண்டிதருமா யிருந்த அர்ச். அத்தனாசியார், தேவ தூதர்களை வணங்கப்படாதென்று வேதத்துக்கு விரோதமாயும் பெரியோர்களை வணங்கும் மனிதர்களுடைய சாதாரண நாகரீக ஆசாரத்துக்குக் குறைதலாயும் போதிப்பாரோ? இது புரோடெஸ்டாண்டாருடைய பிசகே யன்றி வேறல்ல.

4-வது.—கத்தோலிக்குத் திருச்சபையாகிய கிறீஸ்துவின் உத்தம பத்தினியானது "தன் மணவாளனாகிய யேசு நாதரைத் தவிர மற்ற யாருக்காயினும் தன் அன்பையும் வணக்கத்தையும் செலுத்தாமலும் கறைபடாமலும் இருப்பதல்லவோ கடமை. அதைவிட்டு விவஸ்தை இன்றி வேதநெறி இகழ்ந்து வேண்டியவாறு செய்வது வெட்கப்படத்தக்க பரவேசி ஜாதிய வேறென்ன" என்று திருச்சபையின்பேரில் அவதூறு சொல்ல அஞ்சாமல் புரொடெஸ்டாண்டார் புலம்பித் திரிவதால், அவர்கள் தங்கள் வெட்கக்கேட்டை வெளியிற் கொண்டுவர நம்மை வலிய ஏவுகின்றார்கள் போலவாம். அதாவது இப் புரோடெஸ்டாண்டு திரியேக தேவனை ஆராதிக்கிறோம் என்று சொல்லி அவர் அருளிய திருவேத வசனங்களை காமவிகாரமாய் புரட்டி (அர்ச். இரா. 2-திரு. 3-16; யூதா. 4) கிறீஸ்துவை விசுவசிக்கிறோம் என்று சொல்லி அவருடைய ஏகசிந்தையான (அர்ச். அருள. 17-20, 23) திருச்சபையின் விசுவாசப் பிரமாணத்திற்கு விரோதமாய் தாங்கள் வேசைகளைப்போலப் பல் மார்க்கங்களை யுண்டுபண்ணி, திரிந்து தங்கள் இச்சைகளின்படி நடக்கின்றது



(யூதா 16) இதுதான் விவஸ்தை இன்றி வேதநெறி இகழ்ந்து வேண்டியவாறு செய்து தன் மனம்போலே போதிக்கின்ற வேசைத்தனமான பாவமென்றறியவும். இதை விட்டுக் கடவுள் நேசித்தவர்களை நாமும் நேசித்து அவர்களை வணங்குவது உத்தமதனமான வேத நெறியல்லவோ.

# 5-ம். அதிகாரம்.

[தேவமாதா பரலோகத்தி லடைந்திருக்கிற மேலான நிலைமையைப் பற்றிய]

## சம்பாஷணை.

சந்.—ஐயாவே! இப்போது முத்தையபிள்ளை யவர்கள் தமது வசனக்கத்துவது 4-ம். அதிகாரத்தில் தேவமாதா பரலோகத்தி லடைந்திருக்கிற மகத்துவம் நிலைமை என்னவென்பதைப் பற்றி வாதிப்பதைப் பார்த்தீர்களா?

உப.—ஆம், முந்தின அதிகாரங்களில் பலவாறாய்ப் பேசினதுபோலவே இதிலும், மாறி மாறி விழுந்துகொண்டு போகிறார்கள். இதற்கு நாம் முந்தின சம்பாஷணைகளில் அம்மாதா பரலோகத்திலடைந்திருக்கிற மகிமையையும், மற்றுமுண்டான விஷயங்களையுங் குறித்து வேதவசன நியாயங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தி யிருப்பதால் பேசவேண்டிய நியாயம் வேறில்லை அவைகளைக் கண்டுணர்க.

சந்.—ஆகிலும் ஐயாவே! விவரித்தியாக்கத்தக்க சில சந்தேகமான காரியங்கள் இதிலுமுண்டு. அவைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்லுகிறேன் சற்றுக் கவனிக்கவேண்டும். அதாவது "தேவன் மரியம்மாளை என்ன நிலையில் வைத்திருக்கிறார்" என்றும் அதைப்பற்றி நாம் செய்யவேண்டிய கடமை என்னவென்றும், முத்தையபிள்ளை யவர்கள் கேட்கின்றார்கள், இதற்கு விடை என்ன?

உப.—தேவன் அந்தம்மாளைப் பரலோக பூலோக இராக்கினியாக ஏற்படுத்தி (காட்சி. 12-1



முதல்) பழைய ஏற்பாட்டில் முன் குறிப்பாக காட்டியபடி (1-இராசா. 2-13) தேவகுமாரன் தமது வலது பாரிசத்தில் தம்முடைய தாயாருக்கு ஆசனத்தைக் கொடுத்து ஜெயங்கொண்டவருக் களித்த வாக்குத்தத்தத்தின்படி, (காட்சி. 2-26, 27; 3-21) தமது திருக்குமாரனைப் பின்பற்றிப் பசாசை ஜெயங்கொண்டதினால் (அர்ச். மத். 2-13; 14, 15; காட்சி. 12-13 முதல் 17 வரை) சிம்மாசனபதியாக வைத்திருக்கிறார்: அதை முன்னிட்டு அந்தம்மாளுக்கு நாம் செய்யவேண்டிய கடமை என்னவென்று கேட்டால், தேவகுமாரன் தமது தாயாருக்குக் கீழ்ப்படிந்து சங்கை செய்ததுபோல (அர்ச். லூக். 2-51; அர்ச். அருள. 2-1 முதல் 9 வரை) நாமும் அந்தம்மாளுக்குச் சங்கைசெய்து காபிரியேல் சம்மனசு அந்தம்மாளை வாழ்த்தினதுபோல் (அர்ச். லூக். 1-28) நாமும் அந்தம்மாளை வாழ்த்தி வணங்கி அர்ச். எலிசபெத்தம்மாள் அம்மரியம்மாளை "என் ஆண்டவருடைய தாயாரே" (அர்ச். லூக். 1-43) என்று புகழ்ந்ததுபோல நாமும் அத்தேவதாயாரைப் புகழ்ந்து அர்ச். அருளப்பர் தேவகட்டளைப்படி (அர்ச். அருள. 19, 27) தன் தாயாராகப் பாவித்ததுபோல நாமும் அந்தம்மாளைத் தாயாராகப் பாவிக்கக் கடமைப்பட்டவர்களா யிருக்கிறோம்.

ஆகையால் அதுவிஷயத்தில் வேதத்தை ஆராய்ந்து பார்த்து அதில் கற்பித்திருக்கிற பிரகாரஞ் செய்வதுதான் நமது கடமை என்று அவர்கள் சொல்லிக்கொண்ட வாக்குறுதிப்படி, மேற்காட்டிய வேதவசனங்களை நன்றாய் ஆராய்ந்துபார்த்து சந்தேகமின்றி நம்மோடே இவர்களும் அத்தேவ

தாயாரை வாழ்த்தி ஸ்துதித்து வணங்க மிக்க
கடமை பெற்றிருக்கிறார்கள். இதில் வாக்குமாறி
னால் பவிசுமாறிப் போகுமென்ற பழமொழிப்
படி இவர்களுடையது மென்றறிக. அன்றியும் வி
சுவசிக்கவேண்டிய பிரதான சத்தியங்களைக் குறி
த்து புரோடெஸ்டாண்டார் இப்படி அப்படிஎன்று
வேண்டியவாறு, அவரவர் இஷ்டப்படி மனோராஜ
ஜியம்பண்ணி அவைகளைத் தங்களுக்கு விசுவாசப்
பிரமாணமாக்கிக் கொண்டு பல மார்க்கக்கொள்
கையாய் அநுஷ்டிப்பது பெரும்பிசகானது மாத்
திரமல்ல, ஏக மெய்யான மார்க்கத்துக்கு விரோ
தமான கொடும்பாவத்தின் வழிகளானதால் இது
விஷயத்திலும் அவர்கள் நன்றாய் கவனித்துப்பா
ர்த்து அவைகளை விட்டு விட்டுக் கத்தோலிக்கென்
னும், ஏகசத்திய திருச்சபையோ டயிக்கியமாகி,
அதின் உத்தம மெய்மார்க்கத்தில் நடக்கக்கட
மை பெற்றிருக்கிறார்க ளென்று அறியவும்.

ஈ௩.—இன்னமும் அந்த அதிகாரத்தில் "பாவநா
சராகிய கிறீஸ்து யேசுவை விசுவாசக் கண்களினால்
தரிசித்து அன்பின் கரங்களால் தழுவி அருட்பிரசாதத்
தைப் பெற்றுக்கொள்ளாமல் மாம்ச சம்பந்தத்தினால்
தேவ அருளைப் பெற்றுக்கொள்ளலாம் என்கிற அபிப்
பிராயம், தேவ வசனத்திற்கு முற்றும் விரோதமானது"
என்றும் இதற்கு உதாரணமாக (மத். 3-8) "ஆபிரகாம்
எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்
லிக்கொள்ளாதிருங்கள், தேவன் இந்தக் கல்லுக்களினா
லே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்ல
வராயிருக்கிறார் என்று யோவான் ஸ்நானகன் புத்தி
சொன்னதையும்" யேசுநாதர் தாமே ஸ்திரீக்கு மறுமொ
ழியாக "இதைப் பார்க்கிலும் அதிக பாக்கியவான்கள்
இன்னாரென்று திருவுளம்பற்றினதையும், பின்னும் என்
தாயார் என் சகோதரர் யார் என்று சொல்லித் தமது கரங்



களைச் சீஷர்களுக்கு நேரே நீட்டி இதோ இவர்களே
என் தாயும் சகோதரரும் பரலோகத்தில் இருக்கிற என்
பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவ
னே என் சகோதரனும் சகோதரியும், தாயுமாயிருக்கிறா
ர்கள்" என்றதையும் எடுத்துக்காட்டி "ஆகவே (யேசுவி
ன் மாம்ச சம்பந்தத்தினால் யாதொரு பலனும் இல்லை
என்றாற் போல) மரியாள் தேவவார்த்தையை விசுவசி
யாதிருந்தால் யேசுவை விசுவசியாத அவருடைய சகோ
தரரைப்போலவே இவளும்தன் மாம்ச சம்பந்தத்தினால்
யாதொரு பலனையும் அடைந்திருக்கமாட்டாள்" என்
றும் முத்தையபிள்ளை யவர்கள் உரைக்கின்றார்கள்.

உப.—இவைகளைக் குறித்து இரண்டாம்
அதிகாரத்தில் வேத வுதாரணத்தோடும் வேண்டி
ய நியாயத்தோடும் நீர்க்கமாயும் தெளிவாயும் எடு
த்துக்காட்டி யிருக்கிறோம். ஆனாலோ அவர்கள்
திரும்பத் திரும்ப, அவ்விஷயங்களைத் தானே எடு
த்துக்காட்டி தேவன் எடுத்த தேவமாதாவின் மாம்
ச சம்பந்தத்தை மறுத்து, தேவனும் மனுஷனும்
ஒன்றானவர் என்கிற கிறீஸ்துவினது விசுவாசப் பிர
மாணத்தைக் குலைத்து அம்மாம்ச சம்பந்தத்தினால்
அவருடைய அருட்பிரசாதத்தைப் பெற்றுக்கொ
ள்ளக் கூடாதென மருள் விழுந்து, அப்படி மாம்ச
சம்பந்தத்தினால் தேவ அருளைப்பெற்றுக் கொள்
ளலாம், என்கிறது தேவவசனத்திற்கு குற்றமும்
விரோதமுமெனச் சாதித்து இதற்கு உதாரண
மாக இரண்டொரு வசனங்களை எடுத்துக்கொண்
டு, இப்படி அப்படி என மனுஷர்களைச் சந்தேகப்
பாவத்தில் விழத்தாட்டிக் கொண்டு வருகிறார்கள்.
இது இவர்களுக்குச் சரியா? கிரியைகளில்லாத
விசுவாசம் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்
என்றதுபோல (அர்ச். யாக. 2-17, 20) மரியம்
மாளின் மாம்ச சம்பந்தமின்றி விசுவாச சம்பந்

தம் தனிப்பட இரட்சணியப்பலனாதுமா? இதை
இவர்கள் அறியாமற் போனதேன். ஒருவன்
நான் யேசுவை முழுமனதோடே விசுவசிக்கிறே
னென்றுசொல்லி, இவர் இணைந்துக்கொண்ட அ
ம்மாம்ச சம்பந்தமான பலியையும் அதின் திருப்
பொருளாய், உண்டு பண்ணப்பட்ட தேவதிர
விய அநுமானங்களையும் அசட்டை பண்ணினா
னானால், அவன் அவருடைய வரப்பிரசாதங்களைப்
பெற்று நித்திய சீவியத்தை அடையக் கூடுமான
வனாவானோ? இந்தப்படி தம்முடைய மாம்ச சம்
பந்தத்தை அசட்டைபண்ணின யூதர்களை யேசு
நாதர் கண்டித்துப் புத்திசொன்னது மன்றி "நீங்
கள் மனுமகனுடைய மாம்சத்தைப் புசியாமலும்
அவனுடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலு
மிருந்தால் உங்களிடத்தில் சீவியத்தைக் கொண்
டிருக்க மாட்டீர்களென்று மெய்யாகவே, மெய்
யாகவே, உங்களுக்குச் சொல்லுகிறேன். என்
மாம்சத்தையும் புசித்து என்னிரத்தத்தையும் பா
னம் பண்ணுகிறவனுக்கு நித்திய சீவியமுண்டு.
பின்னும், கடைசி நாளிலே நான் அவனை உயிர்ப்
பிப்பேன்" என்று திருவுளம் பற்றியிருக்கிறார்,
(அர்ச். அருள. 6-51, 55) மீளவும் அப்போஸ்த
லராகிய அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறபடி
"தேவகுமாரன் பசாசினுடைய அதிகாரத்தை
அழிக்கும்படிக்கும் சீவகாலமெல்லாம் அதின் மர
ண பயங்கரத்திற்கு அடிமையா யிருந்த யாவரை
யும் விடுதலை பண்ணும்படிக்கும் மாம்ச இரத்த
தேக முள்ளவராக (எபி. 2-14, 15) ஸ்திரீயினிட
த்தில் பிறந்து (கலா. 4-5) அம்மாம்ச சம்பந்த
மான திரு இரத்தத்தினாலேயே நமக்குப் பாவம
ன்னிப்பாகிய மீட்புண்டாக்கி (கொலோ. 1-14)

5322



நம்மைப் பரிசுத்தப்படுத்தி யிருக்கிறார்." (அர்ச்.
அருள. 17-19; 1-கொரி. 1-2; எபி. 13-12;
அர்ச். அருள. 1-திரு. 1-7) இப்படி யிருக்க அவ
ருடைய மாம்ச சம்பந்தத்தினாலே தேவ அருளைப்
பெற்றுக்கொள்ளலாம் என்கிற அபிப்பிராயம்
தேவ வசனத்திற்கு முற்றும் விரோதமானது,
என்று புரோடெஸ்டாண்டார் சஞ்சாதித்து ம
னிதர்களை முற்றிலும் மயக்கிக் கெடுப்பது மேற்
காட்டிய வேதவசனங்களுக்கு எவ்வளவு விரோத
மானது என்று அவர்கள் தாமே அவ்வசனங்
களை உற்று உணரக்கடவார்கள். இந்தப்படி தே
வகுமாரனைக் காலால் மிதித்தாற்போலத் தன்னைப்
பரிசுத்தஞ்செய்த அவருடைய மாம்ச சம்பந்த
மான திரு இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி
அதினால்வரும் கிருபையின் அருட் பிரசாதத்தை
நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்
குப் பாத்திரவானாயிருக்கிறான் என்பதையும் நன்
றாய் யோசிக்கக் கடவார்கள். (எபி. 10-29) மே
லும் இது விஷயத்தில் இவர்கள் எடுத்துக்காட்டு
கிற விசுவாச சம்பந்தமாகிறதென்ன? தேவன்
மரியம்மாளிடத்தில் எடுத்த மாம்ச சம்பந்தத்தை
நம்மில் நிச்சயப்படுத்தி அதினால் நாம் அடைய
வேண்டிய மீட்பையும் வரப்பிரசாதங்களையும் நம்
பிக்கையோடு பெற்றுக்கொள்ளுகிற உறுதியே
அல்லாது மற்றப்படி வேறென்ன? அல்லாமலும்
அவர்கள் உதாரணமாக எடுத்துக்காட்டிய (அர்ச்.
மத். 3-9) இவ்வசனத்தில் யேசுநாதருடைய அம்
மாம்ச சம்பந்தத்தினால் ஒருபலனும் இல்லை என்று
என்னத்தைக் கண்டார்களோ தெரியவில்லை. ஆ
னால் அர்ச். ஸ்நாபக அருளப்பர் அதில் கண்டிக்
கச் சொல்லியிருக்கிற புத்தியோ, யூதர்கள் தம்

களை ஆபிரகாமின் பிள்ளைகளென மேன்மைபாராட்டிக் கிறீஸ்துவானவர் தேவகுமாரனென்று விசுவசியாமல் அவருடைய இரட்சணிய செயலின் மாம்ச சம்பந்தத்தை அசட்டைபண்ணும் குற்றத்தை இஸ்பிரீத்து சாந்துவானவரைக் கொண்டு அவர் முன்னறிந்தவராய்க் கண்டித்தலாக (அர்ச். அருள. 8-33, 38) இவ்வசனங்களைக் கொண்டு தெளிவாய் அறியலாமே. இது தவிர இன்னமும் அவர்கள் எடுத்துக்காட்டிய இரண்டு உதாரணங்களில் முதலாவது யேசுநாதர் தாமே ஒரு சமயத்தில் தம்மைநோக்கி, ஒருவன் இதோ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மைத்தேடி வெளியில் நிற்கிறார்கள், என்றதற்கு கிட்டேநின்ற தம்முடைய சீஷர்களைச் சுட்டிக்காட்டி இதோ என் தாயாரும் சகோதரரும், எனெனில் பரமண்டலங்களிலே யிருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் எவனும் எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாயிருக்கிறார்கள் என்று கர்த்தர் திருவுளம் பற்றினதினாலே தாமெடுத்த மாம்ச சம்பந்தத்தையும், தமது தாயாரையும் புறக்கணித்தாரென்று புரோடெஸ்டாண்டார் எண்ணலானாற்போலவோ இந்தப்படியே யேசுநாதர் ஒரு சமயத்தில், என்னை நோக்கி ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லுகிற எவனும் மோக்ஷ இராச்சியத்திற் பிரவேசிப்பதில்லை, ஆனால் பரமண்டலங்களி லிருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவன் தான் மோக்ஷ இராச்சியத்திற் பிரவேசிப்பான் (அர்ச். மத். 7-21) என்றதினாலே தம்மைத் தாம் புறக்கணித்தாற்போலவாமோ? ஆனதால் ப்ரோடெஸ்டாண்டார் இவ்வசனத்தையும், அவ்வசனத்தையும் நன்



றாய்க்கவனித் துணர்வார்களே யானால் தாங்களெடுத்த கச்சக்கு எடுத்துக்காட்டிய அவ்வசனங்கள், அநுகூலமாகாவென் றறிவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. 2-வது ஸ்திரீயை நோக்கி யேசுநாதர் சொன்ன வசனங்களுக்கு இதின் 85-ம் பக்கம் முதல் வாசித்துணர்க.

சங்.—இன்னமும் அந்த 4-ம் அதிகாரத்தில் சவுந்தரநாயகம் பிள்ளையவர்கள் சொல்லிய சில காரியங்களை எடுத்துக்காட்டி அதற் காட்சேபனையாக, அவர்கள் சொல்லுகிறதாவது: "யேசுநாதர் இப்போது இரட்சணிய கிரியைகளை நிறைவேற்றிப் பரலோகத்தில் வெற்றிவேந்தராய்த் தமது தேவமகிமையில் வீற்றிருக்கும் காலத்தில், மரியாளுக்குக் கீழ்ப்படிந்து அவள்சொற்படி கேட்டு நடக்கிறார் என்று சொல்வது எவ்வளவு பெரிய பாவம்" என்றும், மரியம்மாள் இம்மையில் இருந்ததை விட கோடா கோடிபங்கு அதிக அறிவும் வல்லமையும் பெற்று மற்றெல்லாரிலும், மேலாயிருக்கிறாளென்று எண்ணிக்கொள்வோம். அதனால் என்ன மரியாள் ஒரு சிருஷ்டி தானே சிருஷ்டி கர்த்தாவுக்கே உரிய விசேஷ லட்சணங்களாகிய சர்வஞ்ஞான சர்வ வியாபக மில்லாமல் மரியம்மாள் ஏககாலத்தில் எங்கும் வியாபித்து எல்லாருடைய ஜெபங்களையும் கேட்கவும் இருதய சிந்தனைகளை அறியவும் எப்படிக் கூடும் என்றும், மரியாளுக்கு ஜெபத்தைக் கேட்கத்தக்க அளவு சர்வஞ்ஞத்துவம் உண்டென்று ஒத்துக்கொண்டால் தோஷம் என்னவென்று கேட்டால் அப்பொழுது தேவனுடையதும் சேர்த்து இரண்டு சர்வஞ்ஞான சர்வ வியாபக முண்டென்று ஒத்துக்கொள்ளவேண்டும். அப்படியானால் ஒரு சர்வஞ்ஞான சர்வ வியாபகத்துள் மற்ற சர்வஞ்ஞான சர்வ வியாபகம் அடங்கியாவது அடங்காமலாவது இருக்கவேண்டும். அவ்விருவகையில் எப்படி யிருந்தாலுஞ் சரி, சர்வஞ்ஞான சர்வ வியாபகமென்னும் இலட்சணங்கள் தாய் மலடி என்பதுபோல, சுயவிரோத தாஷ்டாந்தமாய் சர்வஞ்ஞானம் சர்வஞ்ஞான

மல்ல சர்வ வியாபக மல்லவென்று முடியும் என்றும் மேலும் இவ்வித வாதங்களெல்லாம் அரணின்றிக் கட்டாகிலதுபோலப் பிரமாணமின்றி மனம்போன வழி யெல்லாம் சென்று வாதிப்பவர்களுக்கு அடுத்ததேயன்றி வேதப் பிரமாணத்தைத் தங்கள் விசுவாசத்திற்கும் அனுஷ்டானத்திற்கும் ஆதாரமாக ஒப்புக்கொள்ளும் கிறீஸ்தவர்களுக்கு அடுத்ததல்ல" என்றும் வேதத்தை ஆராய்ந்து பார்த்தால் மறுமையி லுள்ளவர்களுக்கும், இம்மையிலுள்ளவர்களுக்கும் சம்பந்தமில்லை என்று ருசுவாகிறதே யொழிய இவர்கள் ஜெபத்தை அவர்கள் கேட்டு பலன் அளிக்கத்தக்க நிலையில் அவர்களைக் கடவுள் வைத்திருக்கிறதாக ருசுப்படவில்லை" என்றும் இவைகளுக்குதாரணமாக (பிர. 9-6; 2-இராசா. 22-20; எசா. 63-16. 2-இராசா. 2-9) இவ்வேத வசனங்களை எடுத்துக்காட்டி "இப்படி வேதம் பல இடங்களிலும் இம்மையைப் பற்றிய அறிவு மறுமையிலிருக்கிறவர்களுக்கு இல்லை என்றும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளை இம்மையில் இருக்கும்போதே செய்துகொள்ள வேண்டுமென்றும் தெளிவாய்க் கற்பித்திருக்க அதற்கு விரோதமாக உத்தேசிப்பதும், அவ்வுத்தேசத்தை ஆதாரமாகக்கொண்டு மரியம்மாளையும், மற்றும் பரிசுத்தவான்களையும் நோக்கிப் பிரார்த்திப்பதும் வணங்குவதும், மகா பாவமல்லவா" என்றும் இன்னமும் பலவாறாய் வம்பு பேசிக்கொண்டு கடைசியாய் "திருவடி வணக்கங்களையும் சிபாரிசுகளையும் தேடிக் கூட்டிச் சேர்த்துக்கொள்வ தெல்லாம் தெய்வபக்திக்குப் பிரதிகூலமேயன்றி அநுகூலமல்ல" வென்று அவ்வதிகாரத்தை முடித்திருக்கிறார்கள். ஐயாவே! இவைகளுக்கு என்ன நியாயம் சொல்லுகிறீர்கள்?

உப.—1-வது. யேசுநாதர் பரலோகத்தில் தமது தாயாருக்குக் கீழ்ப்படிந்து அவள் சொற்கேட்டு நடக்கிறார் என்றது பெரிய பாவமாயிருந்தால் கடவுள் தாமே, இவ்வுலகத்தின் மனிதர்களுடைய சொற்கேட்டு நடந்தது அதைப்பார்க்கிலும் எவ்வளவோ பெரிய பாவமா யிருக்க வேண்டியதாகும். அதாவது இசுராயேல் சனங்களுக்காக மோயிசன் பரிந்து பேசின பொழுது, தேவன் அதைக்கேட்டு அந்தச் சனங்களுக்குச் செய்ய வேண்டிய தீங்கைச் செய்யாமல் நிறுத்திவிட்டதாகத் தெரியவருகின்றது (2-மோசே. 32-11-14) இப்படித் தேவன் அம்மனிதனுடைய சொற்கேட்டு நடந்த அது பெரிய பாவமாயிருந்தால், யேசுநாதர் தமது தாயார் சொற்கேட்டு நடக்கிறார் என்ற இது சின்ன பாவமாயிருக்கலாம். வேதப் பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி தேவ சமுகத்தில் நடந்ததும் நடக்கிறதும் நடக்கவேண்டியதுமான தமது நேச பரிசுத்தர்களுடைய மன்றாட்டு விஷயங்களை, மகா பாவமென்றால் இதைப் பார்க்கிலும் பெரிய ஞானம் உலகத்தில் உண்டோ? ஆனாலோ பரலோகத்தின் பரிசுத்தவான்களை நாம் வேண்டிக்கொள்ளச் சொல்வதும், அவர்கள் நமக்காக தேவசமுகத்தில் மன்றாடுவதும், அம்மன்றாட்டுக்கு தேவன் இரங்கி நமக்கு வரும் தீங்கை விலக்கி நன்மையைக் கட்டளையிடுவதும் பாவம் என்று சொல்லும் நாக்குகள் பழைய பாம்பின் நஞ்சினையுடைய கொடும் விஷமுடைத்தானதே அல்லாமல் மற்றப்படி அவைகள் பாவமல்ல. இதற்கு மேற்காட்டிய மோயீசன் பரிந்து சொன்ன மன்றாட்டுமன்றி இதற்கொத்தபடி இன்னமும் வேதாகமத்தில் வேண்டிய அத்தாட்சிகள் கொடுக்கலாம்.

மீளவும் யேசுநாதர் உலகத்தில் தன் மாதா சொல்லுக்குக் கீழ்ப்படிந்திருந்தவர் இப்போது பரலோகத்திலும் சில காரியங்களில், அவர் மாதா

வுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறாரென்று எண்ணுவது நியாயமே என்ற சவுந்தர நாயகம் பிள்ளையவர்களின் மொழிக்கு வியாமேதென்றால், யேசுநாதர் இவ்வுலகத்தி லிருக்கும்பொழுது தமது தாயாருக்குக் கீழ்ப்படிந்து அதாவது சங்கை செய்து அல்லது சொற்கேட்டு அவள் மன்றாட்டுக்குச் செவிகொடுத்தனர், இப்போது தமது பக்கம் வலது பாரிசத்திலிருக்கிற மாதா சொற் கேட்டு அவள் மன்றாட்டுக்கிரங்கி மனிதர்களுக்கு சகாயம் செய்கிறார் என்பதாமே. இறைவா பாவம் கீழ்ப்படிந்தார், அதாவது சொல்கேட்டார் அல்லது மன்றாட்டுக் கிரங்கினார் என்பதில் என்ன பாவ மிருக்கிறது இவைகளைப் பாவமென்று யார் சொல்லக் கூடும். வேதம் வாசித் தறிந்துணர்ந்த விற்பன்னர் அவைகளைப் பாவமென்று பரிச்சேதம் சொல்லத் துணியார்களென் றறியவும். இன்னமும் அவர்கள் சொல்லுகிறபடி அவர், இப்பொழுது இரட்சணியகிரியை நிறைவேற்றி பரலோகத்தில் வெற்றிவேந்தராய்த் தமது தேவ மகிமையில் வீற்றிருக்கும் காலத்திலென்றால் அவர் பூலோகத்தி லிருக்குங்காலத்தில் அத்தேவ தன்மையாகிய மகிமை அவரை விட்டு விலகி இருந்ததோ? மேலும் இப்போதவர் பரலோகத்தில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் வண்ணமாய் தேவ சிங்காசனத்தண்டையில் நிற்கின்றார் (காட்சி. 5-6) என்பதற்கு வகை என்ன? தவிர இரட்சணிய செயல்களில் தமது மாதாவாவது மற்றெவராவது தலையிட ஒட்டாமல் சகலத்தையும் தமது திருச்சித்தப்படி செய்து முடித் திருக்கவென்றால் அவர் இவ்வுலகத்தில் தமது திருச்சித்தப்படி அவ்விரட்சணிய செயலை நடத்தும்போது தமது மாதா எதிலா



வது தலையிட்டு அவர் திருச் சித்தத்துக்கு விரோதமாய்த் தடுத்ததுண்டோ? பரிச்சேதமில்லை. அத்தேவதாயாரோ வென்றால் ஆதி தேவ தீர்மானத்தின்படி (1-மோசே. 3-15) அவ்விரட்சணிய செயலுக்குத் தாமும் உடன்பட்டவளாய் வாளால் ஊடுருவப்பட்ட (அர்ச். லூக். 2-35) தமது வியாகுலம் நிறைந்த இருதயத்தை அதற்காக ஒப்புக்கொடுத்து தேவ சித்தத்துக் கமைந்த மனதோடு பொறுமை என்னும் கயிறுகளால் தம்மை இறுகக்கட்டி விசுவாச மென்னும் கேடயத்தைக் கையிற் பிடித்து பசாசோடே போர் புரிந்து (காட்சி. 12-13, 17) கடைசிபரியந்தம் தமது திருக்குமாரனைப் பின்சென்று, அதை ஜெயங்கொண்டது மன்றி மனித இரட்சணிய செயலுக்காக தேவகுமாரன் சிந்தின திரு இரத்தம் அவளுடைய இரத்தமா யிருந்தது. ஆகையால் அம்மாதாவின் வியாகுலமெவ்வளவோ அவ்வளவாகவே தமது ஒரே மகன்மட்டில் பாசமும் நேசமும் வைத்திருப்பாள் என்பதற்குச் சந்தேகமில்லை. நேசத்துக்கும் பாசத்துக்கும் தக்கதாய் வியாகுலமுமுண்டு. இந்தப்படி மகனும் தமது தாயார்மட்டில் அவ்வளவான பாசமும் நேசமும் வைத்து கீழ்ப்படிந்து சங்கைசெய்து அவள்சொற்கேட்டு மன்றாட்டுக்கிரங்கி மனிதர்களுக்குச் சகாயம் (அர்ச். அருள. 2-3, 5) செய்துவந்திருக்கிறார். அதுபோலவே இப்போது பரலோகத்திலும் தமது மாதாவுக்குச் சங்கையும் மகிமையும் கொடுத்துத் தமதருகிலிருத்தி அவள்கேட்கும் மன்றாட்டுக்கிரங்கி அவளுடைய சந்ததியாராகிய தமது சகோதரருக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து வருகிறார் என்பது உறுதி. இதற்கு நாளடைவில் திருச்ச

மையில் எக்காலங்களிலும் அத்தேவ தாயார்பேரால் நடந்தேறிவரும் எண்ணிறந்த புதுமைகள் அத்தாட்சியா யிருக்கின்றன.

2-வது.—மரியம்மாள், தெய்வமுமல்ல அதற்கடுத்த சர்வஞ்ஞான சர்வவியாபகமும் அவளுக்கு இல்லவேயில்லை, இது வாஸ்தவம். அப்படி அவளுக்கு உண்டென கத்தோலிக்கரில் ஒருவராயினும் சொல்வாருமில்லை சொல்லவும் மாட்டார்கள், சொல்லப்போவாருமிலர். ஆனால் அப்படிச்சொல்லும் தேவதூஷண வார்த்தை புரோடெஸ்டாண்டார் வாயில் நின்று பொய்யாய்ப் புறப்பட்டதே யல்லாது மற்றப்படியல்ல. அத்தேவ தாயார் ஒரு சிருஷ்டிதான். இதை மறுப்பார் ஒருவருமில்லை, தேவதூதர்களும் ஒரு சிருஷ்டிதான் இது சத்தியம், இவர்களுக்குச் சர்வஞ்ஞான சர்வ வியாபகம் இல்லவே யில்லை, இதுவும் மெய்தான். ஆனபோதிலும் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி, "பூமியில் தவஞ்செய்கிற ஒரு பாவியினிமித்தம் சர்வேசுரனுடைய சம்மனசுக்க ளிடத்தில் சந்தோஷமிருக்கு" மென்று, கர்த்தர் தாமே திருவுளம்பற்றி யிருக்கிறார் (அர்ச். லூக். 15-10) இதற்கு மார்க்கமென்ன? இப்படி பூமியில் நடக்கிற காரியங்களை அறிகிற சர்வஞ்ஞானம் அவர்களுக்கு எப்படி கிடைக்கலாயிற்று? அன்றியும் அர்ச். சின்னப்பர் தாங்கள் மற்றவர்களால் படும் உபத்திரவ துன்பங்களைக் குறித்து நாங்கள் உலகத்திற்கும் தூதருக்கும் மனிதருக்கும் வேடிக்கையானோம் (1-கொரி. 4-9) என்பதால் சர்வ வியாபகமில்லாத தூதர்கள், நாம் இந்த உலகத்தில் பசாசுக்கணங்களோடு செய்கிற



போராட்டத்தின் யுத்த வேடிக்கையை எப்படிக் கண்டார்கள். இன்னமும் அந்த அப்போஸ்தலர் தாமே கொலோசேயிலுள்ள கிறீஸ்துவர்களுக்கு, நான் தேகத்தின்படி தூரமாயிருந்தும் ஆவியின்படி உங்களுடனே கூட இருந்து உங்கள் ஒழுங்கையும் கிறீஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன். (கொலோ. 2-5) என்றெழுதியிருக்கிறார்; இவர் தமது கண்ணுக்கெட்டாத அவ்வளவு தூரமான இடத்தில் நடக்கும் ஒழுங்கையும் இருதய இரகசியமான விசுவாசத்தின் உறுதியையும் இவர் தமது ஆத்துமாவின்படி கண்டறிந்ததெப்படி? இந்த சர்வஞ்ஞான சர்வவியாபகம் எப்படி இவருக்குக் கிடைக்கலாயிற்று? ஆயினும் இவைகள் சர்வஞ்ஞானம் சர்வவியாபகம் என்று சொல்லக் கூடுமானதாமோ, அப்படியே முத்தையபிள்ளையவர்கள் கருத்துப்படி அதுவகள் சர்வஞ்ஞானம் சர்வவியாபகம் என்றதாய் வைத்துக்கொண்டாலும், சிருஷ்டிகளாகிய வானோர் பூதலத்தோருக்கு அப்படிப்பட்ட சர்வஞ்ஞானவியாபகம் இருக்கும்போது பரலோக பூலோகம் யாவுக்கும் சிருஷ்டி கர்த்தாவாகிய சர்வஞ்ஞான சர்வவல்லமை சர்வவியாபக முடைத்தான தேவசுதனைப்பெற்ற மகா பரிசுத்த தாயாருக்கு அப்படிப்பட்டவாம் இல்லாமற் போகுமோ? முத்தையபிள்ளை யவர்கள், இவைகளைப்பற்றித் தமது தவறு நூல், 27-ம் பக்கத்தில் எடுத்துக் காட்டிய மெத்த ஞானங்களை மேற்காட்டிய வேதவாக்கியங்களோடு ஒத்துப்பார்த்தால் சுத்த பயித்தியமாகத் தோன்றுமே யல்லாது மற்றப்படியல்ல. தவிர தூதர்கள் முதலான மோக்ஷவாசிகள், பூலோகத்தில்

நடக்கும் காரியங்களைக் காண்கிறதும் ஜெபமுதலிய இருதய சிந்தனைகளை அறிகிறதும், தேவனுக்கொத்த சர்வஞ்ஞான சர்வ வியாபகம் என்று சொல்வது பிசகு. இவ்விஷயத்தில் அப்படிப்பட்ட சர்வஞ்ஞான சர்வவியாபகம் அவர்களுக்கும் உண்டெனச் சொல்லுகிறதானால், முத்தைய பிள்ளையவர்கள் எண்ணப்படி இரண்டு சர்வஞ்ஞான சர்வவியாபகமல்ல, அம்மோக்ஷ வாசிகள் எல்லார்மட்டிலும் எத்தனையோ சர்வஞ்ஞான சர்வவியாபகம் வேண்டியதிருக்கும். இவைகள் ஆதியிற் பசாசுகளாய்த் தள்ளப்பட்ட அநேகமான சில வகுப்புத்தூதர்களெண்ணங் கொண்ட ஆங்காரத்துக்கொத்த தேவதூஷணமும், நிந்தனை வார்த்தைகளுமேயாம். அப்படியானால் சர்வஞ்ஞான சர்வவியாபகமில்லாத அவர்களுக்குக் காணக்கூடாத காரியங்களைக் காணவும், அறியக்கூடாத காரியங்களை அறியவும் தங்களுக்கெப்படி யுண்டாயிற்றென்று கேட்டால் இப்போது சொல்லப்போகிறதை நன்றாய்க் கவனியுங்கள். அதாவது கடவுளால் தற்சுபாவ ஒளிபெற்றிலங்கிய சூரியனைப்போலச் சந்திரன் முதலான சில பல கிரகங்கள் அவ்விதபூரண ஒளிபெறுமற் பிரபையற்றதாயினும் அச்சூரியனில் நின்று பிரகாசிக்கும் ஒளியைப்பெற்று இரவில் பூமிக்குப் பிரகாசத்தைக் கொடுக்கின்றதல்லவோ? அதுபோல அம்மோக்ஷவாசிகளும் சர்வஞ்ஞானம் சர்வவல்லமை சர்வவியாபகமுடைத்தான கடவுளிடத்தில் நின்றே பற்பல வரங்களுள்ள அருட் பிரசாதத்தைப் பெற்றுப் பூலோகத்தில் நடக்கும் சகல காரியங்களையும், மனிதர்கள் வேண்டிக்கொள்ளும் விண்ணப்பங்களையும் பிரத்தியட்சமாய்க் கண்டறிந்து நமக்குச்



சகாயம் பெறுகிறார்கள். (உரோ. 12-6; 1-கொரி. 12-8, 11) இவ்வேதவசனங்களில் அறிவிக்கப்பட்டிருக்கிற கடவுள் ஒருவராலேயே செய்யக்கூடுமான சர்வவல்லமையுள்ள அற்புதங்களையும் மற்றும் பற்பல காரியங்களையும் அவருடைய அருள்வரப்பிரசாதங்களைப் பெற்ற அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், மோயீசன் முதல் மற்ற மகாத்துமாக்கள் எத்தனையோ அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் இவர்களுடைய சொந்த வல்லமைகளாமோ? ஆகையால் சிருஷ்டிகள் செய்யக்கூடாத அற்புத வல்லமைகளையும் அறியக்கூடாத இருதய சிந்தனைகளையும் சொல்லக்கூடாத வருங்காரியங்களையும், ஒரு க்ஷணத்தில் எங்கும் செல்லக்கூடுமான சூட்சம், லகு, விரைவு, பிரகாசத்தையும் தேவ வரப்பிரசாதங்களால் பெற்றடைந்து நடப்பித்து வருகிறார்கள். இதுவே சிருஷ்டி கர்த்தாவுக்கும், சிருஷ்டிகளுக்கும் இருக்கிற வித்தியாசம் வேதநியாயம். இப்படி இருக்க மரியம்மாளுக்கு, ஜெபத்தைக் கேட்கத்தக்க அளவு சர்வஞ்ஞத்துவம் உண்டென்று நாமவர்களை ஒத்துக்கொள்ளச்சொல்லி விரும்புகிறுப் போலவும், அப்பொழுது தேவனுடையதும் சேர்த்து இரண்டு சர்வஞ்ஞான சர்வவியாபக முண்டென்று ஒத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் உதாகரிப்பது போலவும் உண்டு பண்ணிக்கொண்டு அப்படியானால் ஒரு சர்வஞ்ஞான சர்வ வியாபகத்துள் மற்ற சர்வஞ்ஞான சர்வ வியாபகம் அடங்கியாவது அடங்காமலாவது இருக்கவேண்டுமென்றும் அவ்விருவகையில் எப்படியிருந்தாலும் சரி, சர்வஞ்ஞான சர்வ வியாபகமென்னும் இலட்சணங்கள் தாய் மலடி என்பதுபோ

ல சுபாவிரோத தாரவஷ்டாந்தமாய் சர்வஞ்ஞானம் சர்வஞ்ஞானமல்ல, சர்வவியாபகம் சர்வவியாபகமல்ல, என்றும் அதற்கு வியாக்கியானமும் பண்ணிக்கொண்டு மனம்போக்கில் வாயில் வந்ததெல்லாம் வரிசையென, உளறுவது என்ன நியாயம்? பின்னும் தாய்மலடி என்று அதற்கோர் உவமைச் சொல்லும் பிரயோகித்துக் கொண்டார்கள். இது என்ன அலோகம், அவருக்குப் பிள்ளை ஏது? இதற்கு அர்த்தஞ்சொல்லாமல் மௌனத்தி லிருந்துவிட்டார்கள். நம்மைத்தான் மௌனத்தில் ஆழ்ந்து கிடப்பதாக முன் சொல்லிக்கொண்டார்கள். அதுபோகட்டும். வேதத்தை ஒரு முறைபோல் பல முறையும் மெத்தபடித்த ஞானிகளாகிய இவர்களுமா, மேலே நாம் எடுத்துக்காட்டிய வேதவுதாரணங்களைக் காணாமலும், கருத்தறியாமலும் மௌனத்தில் மாண்டு ஆழ்ந்து கிடக்கலாகும்; ஐயோ இதென்ன ஆச்சரியம்! அல்லாமலும் பரிசுத்தவான்கள் தேவசிம்மாசனத்தண்டை ஜெயகிரீடத்தைப்பெற்று ஆசனங்களி லுட்கார்ந்து சனக்கூட்டங்களை இருப்புக்கோலால் ஆள்வார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றதே (அர்ச். யாக. 1-12; காட்சி. 2-25, 27; 3-12, 21) இதற்குமேலான ஞானமும் மேலானவல்லமையும் வேண்டுமே, இவர்கள் எந்த ஞானத்தையும் எந்த வல்லமையையும் கொண்டு ஆள்வார்கள். நாம் வேண்டும் ஜெபத்தை அவர்களறியாதிருந்தால் இந்த மேலான வாக்குத்தத்தங்களும் பொய்யானதாகுமோ? மேலும் முத்தையபிள்ளை யவர்கள் சொல்லுமாப்போல இவ்வித வாதங்களெல்லாம் ஆய்கின்றி வட்டாடுவதுபோலப் பிரமாணமின்றி மனம்போன வழியெல்லாம் சென்று வாதிப்பவர்களு



க்கு அடுத்ததேயன்றி, வேதப்பிரமாணத்தைத் தங்கள் விசுவாசத்துக்கும் அநுஷ்டானத்திற்கும் ஆதாரமாக ஒப்புக்கொள்ளும் கிறீஸ்தவர்களுக்கு அடுத்ததல்ல. ஏனென்றால் தங்கள் மனம்போன வழியெல்லாம் சென்று வாதித்துப் போராடுகின்ற புரொடெஸ்டாண்டு மார்க்கம் எத்தனையோ பலவழியாய்ப் பிரிந்து சிதறுபட்டுக் கிடக்கின்றது என்றும் வேதப்பிரமாணத்தைத் தங்கள் விசுவாசத்துக்கும் அநுஷ்டானத்திற்கும் ஆதாரமாக்கைக்கொண்டு நடக்கும் கிறீஸ்துவின் கத்தோலிக்கு மார்க்கமோ, ஏகபரிசுத்தமா யிருக்கின்றது என்றும் அறியவேண்டியது. ஆகையால் இத்திருச்சபையின் ஏகமெய்வழியிற் சென்று தேவதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சர்வேசுரன் மனுஷாவதார இரட்சணிய தாதாவாகப் பிறக்கச் சித்தமாகி அந்தப்படி அவர் தம்மைச் சுமந்து பெறத் தெரிந்துகொண்ட தமது உத்தமதாயாரை அவரவர் தன் தன் மட்டில் ஏத்திப்புகழ்ந்து ஸ்துதித்து மன்றாடுவது அந்த இரட்சகரைத் தேவனென்று, விசுவசிக்கும் மெய்க்கிறீஸ்தவனுடைய உத்தமதனமென்றும் அறியக்கடவோமாக.

3-வது.—மறுமையி லுள்ளவர்களுக்கும், இம்மையிலுள்ளவர்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால், "அர்ச்சியசிஷ்டவர்களுடைய சமுதீதப் பிரயோசனத்தையும் விசுவசிக்கிறேன்." அல்லது புரொடெஸ்டாண்டார் எழுதிக்கொண்டபடி "பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்தையும் விசுவசிக்கிறேன்" என்று தங்கள் விசுவாசப் பிரமாணத்தில் சொல்லுகிறார்களே, அந்தப் பரிசுத்தவான்கள் யார்? அவர்களு

டைய ஐக்கியமென்ன? அதில் சொல்லப்படுகிற
பரிசுத்தவான்கள் பரலோகத்தில், முடி சூட்டப்
பட்டு நித்திய சீவியத்தை யடைந்திருக்கிறவர்க
ளே யல்லாது வேறேயார்? அவர்களுடைய ஐக்
கியமென்ன? நமக்காகச் சர்வேசுரனுடைய சந்நி
தானத்தில் வேண்டிக்கொள்ளுகிற அந்நியோந்
நிய சிநேகமேயல்லாது வேறென்ன? அப்படி இ
ல்லை என்றால் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமெ
ன்னும் விசுவாசம் நம்மில் என்ன பலனளிக்கும்.
மேலும், மறுமையிலுள்ளவர்களுக்கும் இம்மையி
லுள்ளவர்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்
லுகிற இவர்கள் தங்கள் விசுவாசப் பிரமாணத்
தில் சொல்லுகிற அது, கள்ள விசுவாசமும் கபட
முள்ள பிரமாணமுந்தானே. அன்றியும், பரலோக
ஜெயசீல சபையாகிய பரிசுத்தவான்களுக்கும்
பூமியில் ஜெயங்கொள்ளத் திரியும் யுத்தச் சபை
யாகிய விசுவாசிகளின் கூட்டத்தாருக்கும் யா
தொரு சம்பந்த மில்லையென்றால், தேவதூதர்கள்
மோக்ஷத்தில் நின்றிறங்கிவந்து தேவ சித்தத்தை
மனிதர்களுக்கு அறிவித்ததும், அவர்களுக்கு உ
தவி செய்ததும், அவர்களுக்காக மன்றாடினதும்
எத்தனையோ விசை நடந்தகாரியம் இவைகள் எது
க்கு? பூலோக விசுவாசிகள் தங்கள் தபசுமுத
லிய நற்கிரியைகளால் பசாசோடே போராடி ஜெ
யங்கொள்ளுவதைப் பரலோக தூதர்கள் கண்டு
சந்தோஷங் கொண்டாடுகிறார்க ளல்லவோ, அவர்
களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமில்லை யென்
றால், இந்த அவர்களுடைய சந்தோஷம் எதுக்கு?
பின்னும் ஜெயங்கொண்டவர்களுக்குப் பரலோக
த்தில் ஜீவகிரீடந் தரிப்பித்து, பூமியின் சனக் கூட்
டத்தின்பேரில் அதிகாரத்தைக் கொடுப்போமெ



ன்று எழுதப்பட்டிருக்கிறதே இது பொய்யா
மோ? அவர்களுக்கும், நமக்கும் சம்பந்த மில்லை
யென்றால் அவர்கள் பூமியின் சனக் கூட்டங்களை
எப்படி ஆளுகை செய்வார்கள். மேலும், நான்கு
சீவன்களும் இருபத்து நான்கு மூப்பர்களும்,
பூமியின் விசுவாசிகளுடைய ஜெபங்களைத் தேவ
சமுகத்தில் ஒப்புக் கொடுத்து மன்றாடினார்கள்
(காட்சி. 6-10, 11; 8-10) என்று எழுதப்பட்டிரு
க்கிறதே அவர்களுக்கும், நமக்கும் சம்பந்தமில்லை
யென்றால் நம்முடைய ஜெபத்தை அப்படி ஒப்பு
க்கொடுக்கும், சம்பந்த மேதுக்கு? ஒவ்வொருவ
ரையும் ஒவ்வொரு சம்மனசானவரும், சன்மார்க்க
த்தில் தூண்டி காத்து வருகிறார்கள் என்று சொல
ப்பட்டிருக்கிறதே அவர்களுக்கும், நமக்கும் சம்
பந்தமில்லை என்றால் இந்தக்காவல் தனை எதுக்கு?
(1-மோசே 48-16; அர்ச். மத். 18-10; அப்.
நட. 12-15) ஆகையால் இவ்வளவு வேத உதார
ணங்களிருக்க மறுமையிலுள்ளவர்களுக்கும் இம்
மையிலுள்ளவர்களுக்கும் யாதொரு சம்பந்த மி
ல்லை என்றும், நம்முடைய ஜெபத்தைக் கேட்டு
நமக்குப் பலன் அளிக்கத்தக்க நிலையில் கடவுள்
அவர்களை வைக்கவில்லை என்றும், புரோடெஸ்ட
ண்டார் சாதிப்பது, வேதத்துக்கும் திருச்சபை
யின் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்துக்கும்
விரோதமான பெரிய அபத்தமா யிருக்கின்றது.

4-வது.—(2-இராசா. 22-20; பிர. 9-6; எசா:
63-16; 2-இராசா. 2-9) இவ்வேத வசனங்களைக்
கொண்டு பரலோகவாசிகளுக்கும் பூலோக விசு
வாசிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் அவர்கள்
நம்முடைய ஜெபத்தை அறியார்கள் என்றும்நியா

யப்படுத்த யோசிப்பது பிசகு. எப்படியென்றால், மனுஷ சிருஷ்டிப்பின் ஆரம்பம் தொடங்கி, யேசுநாதர் மனிதர்களுடைய இரட்சிப்பின் பாவப் பரிகாரப் பலியாக மரணத்தை யடைந்து ஜெய சீலராய் உயிர்த்தெழுந்து மோக்ஷத்துக்கு ஆரோகணமானதுவரையும், மரணத்தை யடைந்திருந்த பரிசுத்த பிதாப் பிதாக்கள், தீர்க்கதரிசிகள் முதலிய மகாத்துமாக்களைக் கல்லறைகளில் நின்று தம்மோடெழுப்பி மோக்ஷத்துக்கு அழைத்துக்கொண்டு போனார் என்பது வேத சத்தியம். (அர்ச். மத். 27-52, 53) ஆகையால், அவர்களுடைய ஆத்துமாக்கள், ஆதாம் ஏவாள் செய்த பாவத்தினால் அடைக்கப்பட்ட மோக்ஷவாசலை, இரட்சகர் தமது பலியின் திறவுகோலால் திறக்கிறவரையும் பாதாளத்திலுள்ள இன்பெருஸ் என்னும் ஒரு ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தபடியால் (சகரி. 9-11, 12; அர்ச். லூக். 16-26) அவர்கள் தேவதரிசனை அடையாமலிருந்தது மெய். அப்படி இருந்தபோதிலும், அந்த ஸ்தலத்திலே நின்று இசராயேல் சபைக்காகப் பரிந்துபேசி தேவனை மன்றாடினார்களென்று எழுதப்பட்டிருக்கிறது. (மக்க. 15-12; எரே. 15-1) இப்படி இருக்க நம்முடைய ஜெபத்தை அறியார்களென்றும் அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை என்றும் எப்படிச் சொல்லலாம். ஆனால் அவர்கள் சொல்லுகிறதற்கு அநுகூலமாக, அவர்கள் எடுத்துக்காட்டிய வேதவசனங்களை இப்போது சற்றுப் பரிசோதித்துப் பார்ப்போம். முதலாவது (பிரசங்கி. 9-6) "சூரியனுக்குக் கீழே இனி அவர்களுக்கு ஒருபொழுதும் பங்கில்லை, இது மெய். மரித்தவர்கள் இனி பூமியில் பிறந்த



வது அல்லது உயிர்த்தெழுந்தாவது, அவர்கள் இவ்வுலகின் லௌகிகப் பொருளை அநுபவிப்பார்களா? அல்லது இதில் எப்போதாயினும் பங்கு பெறுவார்களா? பரிச்சேதமில்லையே, இதைக்கொண்டு நம்முடைய ஜெபத்தை அவர்கள் அறியார்கள் என்று உதாரணம் காட்டவந்தது பெரிய ஆச்சரியந்தான். அவர்களுக்கும் நமக்கும் ஞான சம்பந்தமில்லை என்பதும் மகா யுக்திதான். ஆனால், அவ்வாக்கியத்தின் யதார்த்தம் இன்னதென அதின் முன்பின் வாக்கியங்களைக்கொண்டு அறியத்தக்கதேதென்றால், மரித்தவர்கள் இங்கே உயிரோடே இருக்கும்பொழுது செய்த நன்மையும் தின்மையும் அவர்கள் மரித்ததோடே நீங்கினதென்பதால் நன்மை செய்கிறவன் இனி பூமியில் வந்து பொல்லாங்கால் சேதப்படானென்றும், தின்மை செய்து மரித்தவன் இனி பூமியில்வந்து நன்மை யடையானென்றும் தெளிவாய் விளங்குகின்றது. இரண்டாவது (2-இராசா. 22-20) யோசியா இராசா நல்லவனாய் நடந்து கர்த்தருக்கு முன் தன்மனதைத் திருப்பினதினாலே, இந்த நன்மையின் ஸ்திதியிலே உன் பிதாக்கள் அண்டையில் உன்னை அழைத்துக் கொள்ளுவோம். எருசலேமுக்கு வரும் பொல்லாப்புக்களை இனி பூமியிலிருந்து உன் சரீரக் கண்களினாலே காண்பதில்லை என்று அருத்தமாகின்றதே யல்லாது பரலோகவாசிகள் பூலோகத்தின் காரியாதிகளை அறியார்கள் என்று எவ்வளவெனிலும் தொனிக்கிறதில்லை. மூன்றாவது, (எசா. 63-16) தேவரீர் எங்கள் பிதாவா யிருக்கிறீர். அதாவது நீரே எங்களைச் சிருஷ்டித்த பிதா, ஆபிரகாம் எங்களை உண்டாக்கின பிதா அல்லவென்றும் ஆபிரகாம் எங்களை அறி.

யான் அதாவது ஆபிரகாம், நாங்கள் இன்னின்ன
விதமாய் பிறந்து இன்னின்ன விதமாயிருப்போம்
என்று அவர் அறியார் என்றும், அவருடைய கு
மாரனாகிய "இசாயேலுக்குங்" கூட அந்தப்படி
நாங்கள் அறியப்பட்டவர்கள் அல்லவென்றும் எ
ங்கள் தகப்பனும், இரட்சகரும் நீரே என்றும் பூர்
வகாலமுதல் சகலத்திற்கும் ஆதிகாரணம் உம்மு
டைய நாமமே அல்லாது வேறொரு நாமம் இல்லை
என்றும், அது பிரஸ்தாபிக்கின்றதே யல்லாது
மறுமையி லுள்ளவர்களுக்கும், இம்மையி லுள்ள
வர்களுக்கும் சம்பந்தமில்லை என்றாவது, அல்லது
நாம் சொல்லுங் காரியங்களை அவர்கள் அறியார்க
ளென்றாவது அதில் வெளிப்படுகிற தில்லை. ஆன
தால் மரித்த பிதாக்கள் பூமியில் நடக்கும் காரிய
ங்களை அறியார்கள் என்பது பிசகு. எப்படியெ
னில் (அர்ச். லூக். 16-24, 29) இவ்வேத வசனங்
களில் சொல்லப்பட்டிருக்கிற ஐசுவரியவான், செ
த்து நரகத்தில் வேதனை யநுபவிக்கும்பொழுது
பிதாக்களின் ஸ்தலத்தில் சந்தோஷித்திருக்கிற ஆ
பிரகாமையும், அவர் மடியில் ஆறுதலடைந்திருக்
கிற இலாசருவையுங்கண்டு, தன் கண்களை யெறெடு
த்து அவரை நோக்கிச் சொற்பமென்கிலும் தான்
ஆறுதல் விரும்பியும் அது கிடைக்க ஏதுவில்லாத
தால், பின்னும் ஆபிரகாமை நோக்கி, தகப்பனே!
(பூமியில் வாழ்கிற) என் தந்தை வீட்டிற்கு நீரவ
னை (அதாவது இலாசருவை) அனுப்பும்படிக்கு
உம்மை மன்றாடுகிறேன், ஏனெனில் எனக்கு (அ
ங்கே) ஐந்து சகோதரருண்டு அவர்களும் வேத
னைகளுள்ள இந்த ஸ்தலத்துக்கு வாராதபடிக்கு
அவன் அவர்களுக்கு அத்தாட்சி கொடுக்கத்தக்க
தாக (அனுப்பும்) என்றான். அதற்கு ஆபிரகாம்



அவனைப் பார்த்து, அவர்களுக்கு மோயிசனும்,
தீர்க்கதரிசிகளு முண்டு இவர்களுக்குச் செவி
கொடுப்பார்களாக வென்றார். அதாவது அவர்
கள் போதிக்கிற உபதேசங்களையும் வேதப்பிரமா
ணங்களையும் கேட்டு, அதை அநுசரித்து நடப்
பார்களாக வென்பதாம். ஆகையால் மரித்துப்
போன பிதாக்கள், பூலோகத்தாருடைய காரியா
திகளை அறியார்களானால், ஆபிரகாம் மரணமடை
ந்த ஏறக்குறைய 300-வருஷத்திற்குப் பின்னுண்
டான மோயிசன் முதலான தீர்க்கதரிசிகளையும்,
அவர்கள் போதித்த வேதப்பிரமாணங்களையும் அ
ந்த ஸ்தலத்திலே யிருந்து, அவர் தாம் எப்படி
அறியலானார். ஆகையால் மேற்படி வேத உதா
ரணங்களைக் கொண்டு, பூர்வகாலங்களில் மரணம
டைந்த பிதாப்பிதாக்கள், தேவதரிசன மோக்ஷா
னந்தத்தைச் சேராவிட்டாலும் அதற்கடுத்த ஸ்த
லத்தில் மேசியாவை எதிர்நோக்கி தேவ அருட்
பிரசாதத்தோடிருந்து பூலோகத்தில் நடக்கும்
யாவையும் அறிந்துகொண்டிருந்தார்கள் என்ப
தாய் ருசுவாகின்றது. கடைசியாய் அவர்கள்
எடுத்துக்காட்டிய (2-இராசா. 2-9) இவ்வசனத்
தில் அறிவிக்கப்பட் டிருக்கிறதாவது எலியா எலி
சாவை நோக்கி நான் உன்னை விட்டு எடுத்துக்
கொள்ளப்படு முன்னே, நான் உனக்குச் செய்ய
வேண்டியது என்ன கேள் என்றதால், இம்மையி
லிருக்கிறவர்களுக்கும், மறுமையி லிருக்கிறவர்க
ளுக்கும், சம்பந்தமில்லை என்று அர்த்தமாகிறதி
ல்லை. அவர் மற்ற மனிதர்கள் மரிக்கும்பொழுது
தங்கள் நேசருக்குச் சொல்லும் வண்ணம் சுபாவ
ப்படி நான் இப்போது உன்னைவிட்டுப் பிரிந்து
போகிறேன், உனக்கு வேண்டியதைக் கேளென்

து தன் அன்பினிமித்தம் தன்னுடைய சேஷனுக்கும் சொல்லியிருக்கிறாரே யல்லாது மற்றப்படியல்ல. ஆகையால், தேவமாதாவை வணங்கி மன்றாடக்கூடாது, மோக்ஷவாசிகள் நம்மை யறியார்கள், அவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை, என்பதற்காதாரமாக புரோடெஸ்டாண்டார் எடுத்துக் காட்டிய மேற்படி வேத வாக்கியங்கள், தங்கள் கருத்துக்குப் பிரதிகூலமே யல்லாது அநுகூலமல்லவென்றறியவும்.

## 6-ம். அதிகாரம்.

[தேவதாயார் ஜென்மப்பாவமில்லாமல் உற்பவித்துப் பிறந்ததைப் பற்றிய]

### சம்பாஷணை.

சங்.—முத்தையபிள்ளை யவர்கள் சமது தவறுநூல் ஐந்தாம் அதிகாரத்தில் மரியம்மாள், பாவமில்லாமல் உற்பவித்தவள், என்று வேதத்தில் கூறப்படவில்லை என்றும் மற்ற மனுஷர்களைப்போலவே மரியாளும் பாவத்தோடு பிறந்தாளென்றும் சொல்லுகிறார்களே?

உப.—ஆனால் அவர்கள் வேதத்தைக் கவனித்துப் பாராமலும் சிந்தித்துணராமலும் சொல்லுகிறார்கள். அது பிசகு. எப்படி யெனில் ஆதாம், ஏவாள் இவ்விருவராலேயே உலகத்துக்குப் பாவம் உண்டாயிற்று. அதை நிவர்த்தித்து அதின் அடிமைப் பட்டவர்களை, மீட்கிறதற்கு அம்மனுகுலத்தினின்றே தம்மால் குறிக்கப்பட்ட காலத்தில் இரண்டு புதிய சிருஷ்டிகள் எழுப்பிக்க தேவன் சித்தமாகி அதற்குத் தம்மில் ஜெனிப்பித்த தம தொன்றான குமாரனையே புதிய ஆதாமாகவும், அவர் மனுஷாவதாரமாயுற்பவிக்கும் தாயைப் புதிய ஏவாளாகவும். இவ்விருவரையும் ஜென்மப் பாவக்கறை யில்லாமலே பிறப்பிக்கத் தீர்மானிக்கலானார். ஆனதினாலேயே தன் வாயின் விஷத்தால் ஆதி ஏவாளுக்குப் பாவத்தைக் காட்டிப் பிசாசுக்கு உடந்தையான பாம்பை நோக்கி உனக்கும் ஸ்திரீக்கும், உன்னுடைய வித்துக்கும் அவளுடைய வித்துக்கும் பகை உண்டாக்குவே னென்று,

திருவுளம்பற்றினார். (1-மோசே. 3-15) இதில்
தேவன் சுட்டிச் சொன்ன அந்த ஸ்திரீயானவள்
யார்? மரியம்மாளாகிய தேவதாயார் அல்லவோ?
அந்த வித்து ஆர்? அவளிடத்தில் பிறக்கப்போகிற
இரட்சகராகிய தேவகுமாரன் அல்லவோ? ஆகை
யால் உனக்கும் ஸ்திரீக்கும் உன்னுடைய வித்து
க்கும் அவளுடைய வித்துக்கும் பகை உண்டாக்
குவோம் என்றதினால், அப்பசாசால் உண்டான
தும் அதில் நின்று உற்பத்தியாகி வருவதுமான
சன்மப் பாவத்தைப் பகைத்து ஜெயிக்க இவ்விரு
வரும் அச்சன்மப்பாவ மின்றியே உற்பவமாகிப்
பிறக்கத் தேவ தீர்மானமென்றறியவும். மீளவும்
அவள் உன் தலையை நசுக்குவாள், என்றும் திருவு
ளம்பற்றி யிருக்கிறார். இந்தப் புதிய ஏவாள் அச்ச
ன்மப்பாவக் கறையோடு பிறப்பாளாகில் எப்படி
அந்தப்பசாசின் அக்கலையான பாவத்தை நசுக்கு
வாள். ஆகையால், இவ்வுறுதி தீர்மானத்தின்படியே
தேவமாதாவாகிய மரியம்மாள், அச்சன்மப் பாவ
க்கறையில்லாமல் பிறந்து கர்மப்பாவத்தினுடைய
நிழல்முதலாய் அண்டாமல் மாசற்ற கன்னி மகி
மையுடன் அந்த ஆதி சர்ப்பமாகிய பசாசை ஜெய
ங்கொண்டு முன் அறிவித்திருக்கிறபடி அந்த
ஜெயத்தின் அடையாளமாகவும் வரிவேத அருள்
வேத திருச்சபையின் பன்னிரண்டு கோத்திரங்க
ளின் கோத்திரங்கள் இவளுடைய சந்ததி என்னும்
அடையாள மாகவும், பன்னிரண்டு நட்சேத்திரங்
களை சிரசின்மேல் முடியாகத் தரித்தவளாயும்,
சன்மப் பாவத்தினால் வந்தபூமியின் சாபத்தை
மிதித்து ஜெயங்கொண்ட அடையாளமாகச் சந்தி
ரனை பாதத்தின் கீழ் மணையாகப் போட்டவளா
யும், தெய்வீக சூரியனாகிய வார்த்தையின் கர்த்



தரை யுற்பவிப்பதற்கான சன்மப்பாவ கர்மப்
பாவ மாசொன்றில்லாப் பூரண பரிசுத்த முடைய
வள் என்பதற் கடையாளமாகச் சூரியனை அணிந்த
வளாயும் இந்தப்படி பரலோக பூலோக இராக்கி
னியாக தமது திருக்குமாரனண்டையில் ஜீவகிரு
பாசனுகிப்பதியா யிருக்கிறாள் என்பதாயும் வேத
த்தின் முகவுரை ஆகமமும் வேதத்தின் முடிவுரை
ஆகமமும் வெகுவாய் பிரஸ்தாபிக்கின்றன.

2-வது.—"பிரியதத்தத்தினாலே பூரணமான
வளே வாழ்க கர்த்தருமுடனே பெண்சாதிகளு
க்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளும் நீரே (அர்ச்.
லூக். 1-28) என்று சம்மனசானவர் சொன்ன
மேலான வாழ்த்துதலால், தேவமாதா சென்மப்
பாவக்கறை இல்லாதவளென்று தீர்மானமாகிறது.
எப்படி என்றால் பிரியதத்தத்தினாலே பூரணமான
வளே அதாவது தேவன் தம்மோடொன்றான தம
து பிரியமான குமாரன் மனிதர்களுடைய இரட்
சணியத்துக்காக மனிதனாய்ப் பிறக்கச் சித்தமாகி
வாக்குத்தத்தஞ் செய்ததால் தாம், குறித்தகால
த்தில் அவர் சென்மிக்கப்போகிற தாயானவளும்
ஆதியிலேயே தேவன், தமது சித்தத்தில் நிருணயி
த்த வாக்குத்தத்தத்தின் பிரிய முள்ளவளென்றும்
பசாசின் சென்மமாசு அணுகாப் பூரண பரிசுத்த
சிருஷ்டியாக அமைத்துப் பிறக்க ஸ்திரீயானவ
ளென்றும் அதினால் தெளிவாய் விளங்குகின்றது.
அந்தப்படி இரட்சகர் வாக்குத்தத்தத்தின் கர்த்த
ராயிருக்கிறதுபோல அவரைப்பெற்ற தாயாரும்
தெய்வீகப் பிரியதத்தத்தின் மாதாவா யிருக்கி
றாள். மேலும் அத்தேவதாயார் சென்மப்பாவத்
தோடு பிறந்தவளானால் நிறைவான பரிசுத்தத்

தின் குறிப்பாக பூரணமானவளே, என்று அந்த சம்மனசானவர் சொல்ல ஏலலாகார். அவள் அச் சன்ம மாசணுகாதவளா யுற்பவித்துப் பிறந்திருல் மாத்திரம் அப்பூரண மென்னுஞ் சொல், அச்சம்மனசு வழியாய் தேவவார்த்தையாக புறப்படலாயிற்று. அல்லாமலும் அந்த சம்மனசானவர், "மரியம்மாளை நோக்கி கர்த்தரும்முடனே பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே என்றார். அதாவது, கர்த்தர் உம்முடனே யிருக்கிறார். இது நிகழ்காலத்தைக் காட்டியதல்ல இறந்தகாலத்தைச் சுட்டிக்காட்டி முக்காலமுதல் எக்காலத்திலும் உம்மோடே யிருக்கிறார் என்றும் ஆதி ஏவாள் முதல் உலக முடிவுவரை எக்காலத்திலுமுள்ள சகல ஸ்திரீகளுக் குள்ளே நீரே விசேஷமாய் ஆசீர்வதிக்கப்பட்டவள், என்றும் அவ்வசனத்தின் அறிவிப்பு தெளிவாய் விளங்குகிறது. ஆகையால் மரியம்மாள், தேவகுமாரனைப் பெற்ற தேவமாதாவா யிருந்தபோதிலும் செல்மப்பாவக் கறை அவளிடத்தி லிருக்குமாகில் மற்றப் பெண்பிள்ளைகளைப் பார்க்கிலும் அவள் விசேஷமாகளல்லோ. ஆனதைப்பற்றியே சம்மனசானவர் மரியம்மாளைச் சென்மப்பாவம் அணுகாதவ ளென்று விளக்கிக் காட்டும் பொருட்டாக, மற்ற பெண்பிள்ளைகளைப் பார்க்கிலும் அவள் விசேஷமுள்ளவளென தேவன் அவளோடிருந்து அவளுக்களித்த ஆசீர்வதித்தலை வியந்து கூறுகின்றார்.

௫-வது.—அர்ச். எலிசபெத்தம்மாளும் இஸ்பிரீத்து சாந்துவால் நிரப்பப்பட்டு முன் சம்மனசானவர் வாழ்த்திச் சொன்னது போலவே, இவளும் தேவமாதாவைப் புகழ்ந்து சொன்னதாவது;



"பெண்சாதிகளுக் குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளும் நீரே உம்முடைய திருவயிற்றின் கனியானது ஆசீர்வதிக்கப் பட்டதுமாமே" என்றாள். (அர்ச். லூக். 1-42) அதாவது ஆதியில் பாவத்தை நுழைத்த பசாசோடே போராடி அதின் அடிமைத்தனத்தில் நின்று மனுஷரை மீட்கும் பொருட்டு ஸ்திரீயையும், அவள் வயிற்றில் உற்பவித்துப் பிறக்கும் இரட்சகராகிய, வித்தையும் (1.மோசே. 3-15) குறித்து முன்னறிவித்த அந்த வாக்குத்தத்தத்தின்படி காலம் நிறைவேறினபோது, பிறந்த அந்த ஸ்திரீயையும், அவள் வயிற்றில் உற்பவித்த கனியாகிய வித்தையும் ஏற்கெனவே ஆசீர்வதித் திருப்பதாக அறிவிக்கின்றாள் எனெனில் புதிய ஆதாமாகிய கிறீஸ்து இரட்சகர் பசாசை ஜெயித்து மனிதர்களை இரட்சிக்க அவர் எடுக்கப்போகிற மனுஷ சுபாவ சரீரம் அப்பசாசினால் வந்த சன்மப்பாவக் கறையில்லாமல் பிறக்க, ஆசீர்வதிக்கப் பட்டதைப்போல அதற்குத் தகுதியுள்ள தாபாமாய் அவர் உருவாக்கப்போகிற மரியம்மாளுடைய ஆத்தும சரீரமும் சென்மப்பாவமில்லாமல் உற்பவிக்கும்படி. தேவன் முன்னமே அன்னம்மாள் வயிற்றில் அவள் சென்மிப்பை ஆசீர்வதித்தாரமே. ஆனதால் தானே, ஆதியில் ஸ்திரீயையும் அவள் வித்தையும் இரட்சணிய செயலாக தேவன் வாக்குத்தத்தம் பண்ணி இப்போதும் அந்த ஸ்திரீயையும் அவள் வித்தையும் அவர்கள் சென்மிப்பில் ஆசீர்வதிக்கிறார். ஆகையால் மேற்காட்டிய நியாயங்களினால் தேவமாதா சென்மப்பாவமில்லாமலே உற்பவித்துப் பிறந்தாளென்று வேதம் வெளியாக்குகின்றது.

சங்.— அப்படியானால், "கிறீஸ்துநாதர் அர்ச். ம
ரியாயிக்கும் இரட்சகரே" என்று சவுந்தரநாயகம் பிள்ளை
யவர்கள் (அர்ச். லூக். 1-47, 48) இவ்வசனங்களை எண்
பித்துச் சொல்லுகிறார்களே, மரியம்மாள் அப்படி செ
ன்மப் பாவத்தோடு உற்பவித்துப் பிறக்காவிட்டால்
எப்படி அவளுக்கு இவர் இரட்சகரா யிருக்கக்கூடும்?

உப.—அதாவது, இரண்டுபேர் சகோதரர்
கப்பலேறிப் போகும்போது ஒருவன் அதினி
ன்று தவறி சமுத்திரத்தில் விழுந்தான், மற்றொ
ருவன் விழ இருந்தான், அப்போது மாலுமி விழு
ந்தவனையுந் தூக்கி எடுத்து விழ இருந்தவனையும்
விழாதபடிக்குத் தற்காத்ததால் இந்த மாலுமி இரு
வருக்கும் இரட்சகனோ விழுந்த ஒருவனுக்குமட்
டும் இரட்சகனோ?

சங்.—இருவருக்கும் இரட்சகனாக விளங்குகி
ன்றது.

உப.—அப்படிப்போலவே, சென்மப்பாவத்
தில் விழுந்த மனிதர்களை இரட்சிப்பதற்காக இர
ட்சகர் தாம் உற்பவிக்கப்போகிற தமது மாதா
வானவள் அச்சென்மப் பாவத்தில் விழாதபடிக்கு
தற்காத்தார் என்பதே. ஆகையால் அவர் மற்ற
மனுஷருக்கு இரட்சகரா யிருப்பதுபோலவே தம
து மாதாவுக்கும் இரட்சகரா யிருக்கிறார்.

சங்.—தேவகுமாரன் பிறந்தபின் தமது சனங்களை
இரட்சித்தாரே யல்லாமல் அவர் பிறக்குமுன் இரட்சித்
தாரென்பது வேத விதியல்ல. அப்படியிருக்க, மரியம்
மாளைமட்டும் காத்து இரட்சித்தார் என்பது நியாய
மாகுமோ?



உப.—தேவகுமாரன் பிறக்கு முன்னிறந்த
மகாத்துமாக்களைத் தேவன் தெரிந்துகொண்ட அ
நேகருக்கு அவருடைய இரட்சணிய செயல்நிறை
வேறினதென்று வேதவிதியா லறிகிறோம். அப்ப
டியிருக்கத் தேவகுமாரன் தமது இரட்சணிய செ
யலுக்காகத் தமது தாயாரைக்காத்து இரட்சித்
தார் என்பதில் குறையென்ன? அப்படியே ஸ்நா
பக அருளப்பர் தமது தாய் வயிற்றில் கர்ப்பமா
யிருக்கும்போது தானே தமது சென்மப்பாவத்
தில் நின்று சுத்திகரிக்கப் பட்டாரென்று தெரிய
வருகிறதுமன்றி இது நிமித்தம், திருச்சபையில்
அவர் பிறந்த திருநாள், கொண்டாடப்பட்டு வரு
கின்றது. இது யேசுநாதருடைய இரட்சணிய செ
யலல்லவோ, அப்படியானால் மரியம்மாளை அப்பா
வம் அணுகாமல் ஏன் காத்து இரட்சிக்கக்கூடாது.
இதின் உட்சாரமேதென்றால், கிறீஸ்துவின் இர
ட்சணிய செய[illegible] அவ்விரட்சணிய செயலுக்காக
அவளைக்காத்து இரட்சித்த தென்பதேயாம்.

சங்.—அப்படியானால் பின்னுள்ளது, முன்னுள்ள
தை எப்படி இரட்சிக்கக் கூடும்?

உப.—தேவனால் கூடாதகாரியம் ஒன்றுண்
டா? மேலும் பின்னுள்ள யேசு என்னும் அவர்
பேர் பிரஸ்தாபமுள்ள இரட்சணியம், முன்னுள்
ளோரை அவர்கள் பாவங்களில் நின்று இரட்சித்
ததுபோல அத்தாயாரையும் அப்பாவங்க ளணு
காமல் காத்து இரட்சித்ததென்பதே இதற் கத்
தாட்சி.

சங்.—ஆனால் பாவமில்லாமல், பிறக்கிறது இரட்
சிப்பல்ல வென்று, புரோடெஸ்டாண்டார் சொல்லு
கிறார்களே?

உப.—அது அவர்கள் சொற்பப் புத்திக்கிசையச் சொல்லுந் தன்மையாயினும் தேவன் தாம் எடுக்கவேண்டிய மனுஷ சுபாவ சரீரம் பரிசுத்தமாகத் தமது மாதா அப்பாவத்தில் விழாதபடி காத்து இரட்சித்தார் என்பது முன்சொன்ன வேதவிதிப்படி நமது புத்தி நியாயத்துக்கு அது இரட்சணியமாகவே யிருக்கின்றது.

சந்.—யேசுநாதர் ஒருவனைத்தவிர பாவமில்லாதவர் ஒருவரும் இல்லை என்றும் ஆதிமுதல் இருந்தவர்களும் இருக்கிறவர்களும் இருப்பவர்களுமாகிய சமஸ்த ஜீவர்களுக்கும் யேசு ஒருவரே இரட்சகரென்றும், முரசறைந்தது போல வேதம் முறையிடுகிறது எனவும் இந்தப் பொது விதிக்கு விலகி, மரியம்மாள் பாவமில்லாமல் உற்பவித்தவள் என்றால் அது வேதத்தில் விதந்து கூறியிருக்கவேண்டும் எனவும் அப்படி ஓரிடத்தும் கூறாமையால் மற்ற மனுஷர்களைப்போலவே மரியம்மாளும் பாவத்தில் பிறந்தவளென்றே வேதம் வெளியாக்குகிறது எனவும், முத்தையபிள்ளை யவர்கள் சொல்லுகிறார்களே இதற்கு நியாய மென்ன?

உப.—1-வது. யேசுநாதர் ஒருவனைத் தவிரப் பாவமில்லாதவர் ஒருவரும் இல்லையென்றால் மற்ற மனிதர்களைப்போல தேவமாதாவும் பாவமுள்ளவளென்று புரோடெஸ்டாண்டார் நினைக்கிறார்களாக்கும். அப்படியானால் ஒரு சமயத்தில், ஒருவன் வந்து நமது இரட்சகரை நோக்கி "நல்ல போதகரே என்றதற்கு நீ, என்னை நல்லவனென்று சொல்வானேன் தேவன் ஒருவரே தவிர நல்லவன் ஒருவனு மில்லையே" (அர்ச். மாற். 10-17, 18) என்றதினால், யேசுநாதரும் மற்ற மனிதர்களைப் போலவே தம்மையும் பாவமுள்ளவரென்று சொன்னாற்போலாகுமோ? பரிச்சேதமாகா. இப்படி

யிருக்கத் தேவமாதாவைக் குறித்து, புரோடெஸ்டாண்டார் அப்படி எண்ணுவது பிசகு. 2-வது. சமஸ்த ஜீவர்களுக்கும், யேசு ஒருவரே இரட்சகரென்றால் கத்தோலிக்கர் இரண்டு மூன்று இரட்சகர் உண்டென்று சொல்லுகிறோமோ அவர் ஒருவரே மெய்யான இரட்சகராக விசுவசித்து, புரோடெஸ்டாண்டாரைப் போல அவருடைய இரட்சணிய செயலை அவவிசுவாசமாய்ப் பெற்றுக்கொள்ளாமல், பூரணமாய் முழு விசுவாசத்தோடே பெற்று வருகிறோம். 3-வது.—இந்தப் பொது விதிக்கு விலகி மரியம்மாள் பாவமில்லாமல் உற்பவித்தவள் என்றால் அது வேதத்தில் விசித்தமாக கூறியிருக்கவேண்டும் என்கிறார்கள். இது நியாயந் தானே இதற்கு நாம் மேலே காட்டியிருக்கிறபடி "உனக்கும் ஸ்திரீக்கும் உன்னுடைய வித்துக்கும், அவளுடைய வித்துக்கும் பகையை உண்டாக்குவோம், அவள் உன் தலையை நசுக்குவாள்" என்பது, தேவ தாயாரைப்பற்றி வேதத்தில் விசித்தமாக கூறப்பட்டில்லையோ? அன்றியும், "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே" என்றதும் "பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்றதும் வேதத்தில் அம்மாதாவின் மாசில்லாத் தன்மையைக் குறித்துவிதந்து கூறப்பட்டில்லையோ இவைகளைப் புரோடெஸ்டாண்டார் ஆழ்ந்தகருத்தோடுணர்வார்களாயின் தேவமாதா "பாவமில்லாமல் உற்பவித்தாள்" என்பதை மறுக்கார்கள். இப்படி யிருக்க "வேதத்தில் ஓரிடத்தும் கூறப்படவில்லை" என்றால் அவ்வேதத்தின் மூகவுரை ஆதியாகம வசனங்களைக் காணாயிவர்கள் நமது தவறு நூல் 11-ம் பக்கத்தில், வேதத்தை ஒரு முறைபோல் பல

முறையும் வா..தனோம், யோசிந்தோம், சிந்தித்
தோம் ஏ..பது சுத்த அபத்தம். 4-வது.—மற்ற
மனுஷர்களைப்போலவே மரியாளும் பாவத்தில்
பிறந்தவளென்றே வேதம் வெளியாக்குகிறது எ
ன்றால் அப்படி எங்கே சொல்லப்பட்டிருக்கிறது
"மரியாள் பாவத்தில் பிறந்தாள்" என்று வேதம்
வெளியாக்குகிற அவ்வசனங்களை இவர்கள் குறிப்
பிட்டு எடுத்துக்காட்டாமல் விட்டுவிட்டதென்ன?
அது இல்லாதபட்சத்தில் சொன்னதைச் சொல்
லும் கிளிப்பிள்ளையைப் போல புரோடெஸ்டாண்
டார் எல்லாருஞ் சொன்னார்கள், நானுஞ் சொன்
னேனென்று முத்தையபிள்ளை யவர்கள் சொல்
வார்கள் போலவாம்.

சங்.—ஆதாமுடைய சந்ததியில் மரியாளைமாத்தி
ரம் பாவமில்லாமல் காத்து இரட்சிக்கக் கூடுமானால்
அந்த முறையின்படி கூடிதாண்டவ ஆதாமையும் அவன்
சந்ததியார் அனைவரையும் பாவம் அணுகாமலே காத்து
இரட்சிக்கத்தடை என்னவென்றும், ஆதாம் பாவியானதி
னிமித்தம் அவன் சந்ததியாரும் பாவிகளானார்கள் என்
கிற பிரமாணம் தேவபிரமாணமே யானால் ஆதாமுடை
ய சந்ததியில் உற்பத்தியான மரியாள்மாத்திரம் பாவமி
ல்லாமல் பிறந்தாள் என்று உத்தேசிக்க என்னநியாயம்
இருக்கிறது என்றும், முத்தையபிள்ளை யவர்கள் சொல்
லுகிறார்களே இதற்கு நியாய மென்ன?

உப.—1-வது. இது விஷயத்தில் நாம் உத்
தேசிக்கிறதல்ல. தேவநீர்யான மென்று வேத
வாக்கியங்களினால் உரூபகாரப் படுத்தியிருக்கி
றோம். 2-வது—ஆதாமினுடைய சந்ததி மரியம்
மாள் மட்டு மல்லவே, அவளிடம் உற்பவமான
இரட்சகருங் கூட அந்த ஆதாமின் சந்ததியா யிரு
க்கிறார் என்று (அர்ச். லூக். 3-23, 38) இவ்வோ



ரிடத்து மட்டு மல்ல வேதாகமங்களில் பலவிடத்
தும் பார்க்கலாம். ஆனதால் இதை ஆதாமு
வைத்து இரட்சகரைத் தொடர்ந்து வரும் ஆதாமி
ன் சந்ததி வம்மிசவரிசையினால் இரட்சகர் அப்பா
வத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்று சொல்லு
கிற நாக்கு எவ்வளவு நிஷ்டூரமுடையது. அப்படி
ப்போலவே அவரைப்பெற்ற மரியம்மாளைக் குறி
த்து மிருக்கின்றது. ஆகையால் குறிக்கப்பட்ட
வித்தாகிய இரட்சகர் அச்சந்ததியின் பாவத்துக்கு
நீங்கலானார் என்பது வேதப்பிரமாண மானதால்
அவரைக் கர்ப்பமா யுற்பவிக்கக் குறிக்கப்பட்ட
ஸ்திரீயானவளும் அச்சன்மப்பாவ மணுகாதவள்
என்பதும்வேதப்பிரமாணமாம். இதைப்பற்றியே
"பிரியதத்தத்தினாலே பூரணமானவளே" என்று
(அர்ச். லூக். 1-28) கூறப்பட்டாள். 3-வது. ஆதா
முடைய சந்ததியில் மரியாளைமாத்திரம் பாவமில்
லாமல் காத்து இரட்சிக்கக் கூடுமானால் ஆதாமை
யும் அவன் சந்ததியார் அனைவரையும் பாவம் அ
ணுகாமலே காத்து இரட்சிக்கத் தடையென்ன
என்றால், மரியம்மாள் கட்டாயமாய்ப் பாவத்தில்
பிறக்கவேணும் என்கிறார்கள். அதற்கு நாம் உத்
தரவாதியா? தேவனிடத்தில் அவர்கள் நேராகக்
கேட்கலாமே; நீர் ஏன் மரியம்மாளை பாவத்தில்
உற்பவிக்க விடவில்லை, அவள் அப்படியானால்
ஆதாமையும் அவன் சந்ததியார் அனைவரையும்
பாவம் அணுகாமலே நீர் காத்து இரட்சிக்கக்கூ
டாதா? வேணுமானால் புரோடெஸ்டாண்டார்
இன்னமும் ஒருகேள்வி அதோடு சேர்த்துக்
கேட்பார்கள் போலும். அதாவது பரலோகம் பரி
சுத்தமுள்ள ஸ்தலமாயிற்றே. அதில் பாவம் எப்
படி நுழைந்து பரிசுத்தமான சில சம்மனசுக்க

றைப் பசாசாக்[illegible]விட்டது என்பதாம். ஏனெனில்
[illegible]றியாமல் அந்தக்கேள்வி கேட்டவர்
கள், இந்தக்கேள்வியும் கேட்பார்கள் போலவாம்.
மேலும் தேவதாயாரைப்பற்றி இப்படியெல்லாம்
வாதாடுவது என்ன முறை. அவள் புரோட்டெஸ்
டாண்டாருக்கு என்ன கொடுமை செய்தாள்.
யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபொழுது
அவரை இன்னாரென்று அறிய அச்சிலுவையின்
மேல் யூதருடைய இராசாவாகிய யேசுநசரேய
னென்று எழுதப்பட் டிருந்ததை அவருடைய
பகைஞராகிய யூதர்கள், அதை வேறு விதமாய்
எழுதும்படி பிலாத்தனிடத்தில் கேட்டதற்கு நா
ன் எழுதினது எழுதியாயிற்று என்றான். (அர்ச்.
அருள. 19-19, 22) இதுபோல புரோட்டெஸ்டா
ண்டாரும் தேவமாதாவுக்கு விரோதமாய் வழக்கா
டுவதில் என்ன சிலாக்கியம். அத்தேவதாயாரைப்
பற்றி தேவ தீர்மானம் நிறைவேறினது நிறைவே
றியாயிற்று இனியதி லிவர்கள் தலையிடுவது
சரியல்ல.

சங்.—இப்படிப்பட்ட நியாயங்களிருக்க இது விஷ
யத்தைப் பற்றி இன்னமும் முத்தையபிள்ளை யவர்கள்
சொல்லுகிற நியாயங்களைப் பாருங்கள். அதாவது மரி
யாள் பாவமில்லாமல் பிறந்திருப்பாள் என்கிற எண்
ணம் உத்தேசம் 700-வருடங்களுக்கு முன்னேதான்
ரோமைசபையில் முளைத்தது என்றும் முதலாவது பிரா
ன்சு தேசத்திலுள்ள (Lyon) 1140-ம் வருஷம் மரியா
ளின் பரிசுத்த ஜனன திருநாள் கொண்டாடினார்கள்,
என்றும் பிதாக்களுள் கடைசியானவரும் மகா பெரியவ
ரும் என்று ரோமானித்தாரால் மதிக்கப்பட்ட (St.
Bernard) பெர்னார்ட் என்பவர் இந்தச்செய்கையைக்
கண்டித்து லை சபைக்கு ஒரு நிருபம் எழுதினார் என்
றும், அதில் அவர் சொல்லுகிறதாவது: திருச்சபைக்



ருக் கிஞ்சித்தாயினும் தெரியாமலும் யுக்தி நியாயங்க
ளாலாவது பாரம்பரியங்களாலாவது ஸ்தாபனம்பெறாம
லும் இருக்கிற இந்த விஷயத்தை நூதனமாக சபையில்
கொண்டுவந்து நுழைக்க உங்களில் சிலர் துணிந்து
கொண்டது மெத்த ஆச்சரியமா யிருக்கிறது. பரிசுத்த
ஆவியினால் உண்டாகாமல் பாவத்தினாலுண்டான கர்
ப்பம் பரிசுத்தமானதென்று எப்படி ஸ்தாபிக்கக்கூடும்.
இதினால் பரிசுத்தமில்லாததைக் கொண்டு வந்து நு
ழைக்கிறீர்கள், பாவத்தைக் கனப் படுத்துகிறீர்கள்.
இப்படிப்பட்ட தகாத ஜனனம் மரியாளுக்கு இல்லா
திருக்கக் கடவது, என்றும் பின்பு திருச்சபையில்
கட்சி உண்டாகி வரவர பலத்து வாதம் மிகுத்து
ஒருவரை யொருவர் தூஷித்துப் பிரிவினை அதிகரிக்
கிற சமயத்தில் (IV. Sixtus) என்ற பாப்பானவர்
1483-ம் வருஷத்தில் இது விஷயத்தைப்பற்றி திருச்
சபை யாதொரு தீர்ப்புஞ் செய்யாததினால் உபயகட்சி
களும் ஒருவரை யொருவர் தூஷியாதபடி இருக்கக் கட
வர்கள் என்று கட்டளை பிறப்பித்தார் என்றும், அது
முதல் நெடுங்காலம் இந்த நூதனகொள்கையைக் குறி
த்து யாதொரு தீர்மானமும் இல்லாதிருந்தது என்றும்
இதைப்பற்றி பியூப் மில்னர் சொல்வது என்னவென
றால், மரியாளுடைய பிறப்பையும் மற்றும் பல விஷ
யங்களையும் குறித்துத் திருச்சபை யாதொரு தீர்மான
மும் செய்யாதிருந்ததற்கு முகாந்தரம் என்னவென்றால்,
அவ்விஷயங்களைப் பற்றி விகிதசாதனங்களிலாவது வா
க்கு மூலமாகிய பாரம்பரியத்திலாவது தெளிவும் நிச்
சயமுமானது ஒன்று மில்லாதபடியால் அவரவர் தம்
சொந்த அபிப்பிராயத்தை அங்கீகரித்துக் கொள்ளலாம்
என்பதே என்றும், இப்படி 700 வருஷக்காலமாய் பெ
ரிய பெரிய வேதசாஸ்திரிகளாலும் பாப்புக்களாலும்
யாதொரு தீர்மானமும் பெறாமல் அநிச்சயமாய்ச் சந்தே
கத்தில் விடப்பட்டிருந்த இந்த விஷயத்தை, சொற்ப
காலங்களுக்கு முன் (IX. Pius) என்கிற பாப்பானவர்
விசுவாசப் பிரமாணமாக்கி மரியம்மாளை உயர்த்தவும்
அவள் வணக்கத்தை முக்கியப்படுத்தவும் கருதி 1854-ம்

வருஷம் டிசம்பர்மீ 8உ ஒரு கட்டளையைப் பிறப்பித்து மரியாளின் பரிசுத்தப் பிறப்பை ரோமை சபையில் ஸ்தாபித்துக் கொண்டார் என்றும் சொல்லுகிற இவ் விஷயங்கள் எப்படி?

உப.—மரியாள் பாவமில்லாமல் பிறந்திருப்பாள் என்கிற எண்ணம் உத்தேசம் 700-வருடங்களுக்கு முன்னே தான் முளைத்தது என்று சாதிக்கிறது சுத்த அபத்தம். நாம், இந்த புத்தகம் 2-ம் அதிகாரத்தில், எடுத்துக்காட்டியிருக்கிறபடி, அர்ச். அகுஸ்தீன் என்னும் பெரிய வேதசாஸ்திரியார் தாம் எழுதிய தியான புஸ்தகம் 40-ம் பக்கத்தில் தேவமாதா மாசில்லாத கன்னியென்றுரைத்திருக்கிறார். மீளவும் அவர் எழுதின <u>தே நாத்துரா எத்துக்கிரா சியா</u> என்னும், புஸ்தகம் 36-ம் அதிகாரத்தில் "மற்ற மனிதர்களைப்போல தேவமாதாவும், சென்மப் பாவத்தோடே பிறந்தாள், என்று நான் சொல்லமாட்டேன். ஏனென்றால், ஆண்டவர் அவளிடத்தில் பிறந்ததினால் என்று வேண்டிய நியாயத்தோடு ஒப்பித்தெழுதியிருக்கிறார்" இப்படியே முற்பிதாக்களுள் அநேக மகாத்துமாக்கள் எழுதியும் அத்தேவ தாயாரை நோக்கி செபித்தும் வந்திருக்கிறார்கள். இதற்கு அப்போதுண்டான செபப் புஸ்தகங்களுமே அத்தாட்சியாயிருக்கிறது மன்றி, இந்த அதிகாரத்தில் எடுத்துக்காட்டிய வேறே வாக்கியங்கள் அதற்குப் பூரண விசுவாசத்தைக் கொடுக்கின்றது. இன்னமும் வேதாகமங்களில் மரியம்மாளுடைய பரிசுத்தமான சென்மிப்பின் முன்னடையாளமாகத் தேவன் தோற்றுவித்த குறிப்புகள் அநேகமுண்டு. இப்படியிருக்க 700-வருடங்



களுக்கு முன்னேதான் உரோமை சபையில் முளைத்தது எனச் சொல்லத்துணிவது நியாயமாமோ? 2-வது.—லியோன் பட்டணத்துக் குருமார் தேவமாதா சென்மப்பாவமில்லாமல் உற்பவித்த திருநாள் கொண்டாடினதும், அதை அர்ச். பெர்நர்து என்பவர் தடுத்ததும் வாஸ்தவம். ஏனென்றால் திருச்சபை அதற்குப் பூரண உத்தரவு கொடாமுன்னே திருநாள் கொண்டாடுவது சரியல்லவென்பதாய் ஒரு நிருபம் எழுதியிருக்கிறாரேயல்லாது, மேற்சொல்லிய பிரகாரம் அவர்பேரால் புரோடெஸ்டாண்டார் எழுதியிருக்கிறபடி, தேவமாதாவின் அமல உற்பவத்துக்கு விரோதமாய் அதில் தூஷணித்தெழுதப்படவில்லை. இதற்கு அவர் எழுதிய 174-ம் நிருபம் அத்தாட்சி. புரோடெஸ்டாண்டார் மேற்சொன்ன பிரகாரமே தேவமாதாவுக்கு நிந்தையாக, தாங்களே தங்கள் நவநூலில் அப்படி எழுதிக்கொண்டதாக விளங்குகின்றது. மேலும் அந்த அர்ச். பெர்நர்து என்கிறவர் தேவமாதாவை நோக்கிச் செபிக்கும்படி, அத்தேவ தாயாரின் இரக்கத்தைப் பெருவிக்கிற உருக்கமான ஒரு செபத்தை எழுதியிருக்கிறார். அதாவது, "மிகவும் இரக்கமுள்ள தாயே உமது அடைக்கலமாக ஓடிவந்து உம்முடைய உபகார சகாயங்களை யிரந்து, உம்முடைய மன்றாட்டுக்களினுதவியைக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக, ஒருபோதும் உலகிற் கேள்விப்பட்டதில்லை யென்று நினைத்தருளும் கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே தயையுள்ள தாயே இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை யண்டி வருகிறேன் பெருமூச்செறிந் தழுது பாவியாகிய நான்

உமது தயாளத்திற்குக் காத்துக்கொண்டு உமது
சமுகத்திலே நிற்கிறேன் அவதரித்த வார்த்தை
யின் தாயே என் மன்றாட்டைப் புறக்கணியாமல்
தயாபரியாய்க் கேட்டுத் தந்தருளும் ஆமென்"
இவை கத்தோலிக்குத் தமிழ்ச் செபபுஸ்தகங்களிற்
காணலாம். 3-வது.—இவைகளைக் குறித்து வா
வர, வாதமிகுந்து ஒருவர் ஒருவரைத் தூஷித்து
பிரிவினைகளை உண்டாக்கினார்கள் என்பதும் அப்
பால் (Sixtus IV.) என்கிற பாப்பானவர் கட்
களை அனுப்பினார் என்பதும், யாதொரு அத்தா
ட்சியின்றி குருட்டுமொழியா யிருப்பதால், அ
வை நம்பத்தக்கதல்ல. அன்றியும், பிஷப் மில்
னர் என்கிற சாஸ்திரி விதித சாதனங்களிலாவது,
வாக்கு மூலமாகிய பாரம்பரியத்திலாவது இவை
களைக் குறித்து நிச்சயமானது ஒன்றுமில்லை எ
ன்று அவர் எழுதியிருக்கமாட்டார். ஏனென்
றால் விதிதசாதனம், அதை பிரஸ்தாபிக்கின்றது
மன்றி பாரம்பரையான போதனைகளும் அதை
திருஷ்டாந்தப் படுத்துகின்றது. இப்படி யிரு
க்க அவரப்படி எழுதினார் என்பது நம்பத்தகா.
4-வது.—ஸ்ரீ IX-ம் பியுஸ் என்கிற பாப்பான
வர் தேவமாதாவின் அமல உற்பவத்தை, விசு
வாசப் பிரமாணமாக்கி எல்லாரும் அதை யநு
சரிக்கக் கட்டளையிட்டார் என்பது வாஸ்தவம்.
ஆனால், புரொடெஸ்டாண்டார் எடுத்துக்காட்
டி யிருக்கிறபடி, மூர்த்தி சங்கேதத்தில் விடப்ப
ட்டிருந்ததுமல்ல நூதனமுமல்ல. வேதத்தில்
தேவன் திருவாக்கருளியபடி பாரம்பரையாய், எ
க்காலங்களிலும் திருச்சபையில் அநுசரித் துப
தேசித்து வந்த வேத சத்தியமாமே. ஆகை
யால், புரொடெஸ்டாண்டார் தேவமாதாவின் அ



மல உற்பவத்தைக் குறித்து மேற்சொன்ன தெ
ல்லாம் அபத்தம்.

சந்.—அப்படியானால், ஸ்ரீ அர்ச். பாப்பானவர் ச
கல மேற்றிராணி மார்களையும் வேத சாஸ்திரிகளையும்,
சங்கங்கூடி வரச்செய்து, மரியம்மாள் சென்மப் பாவ
மில்லாமல் சென்மித்துப் பிறந்தாள் என்கிற தீர்மா
னஞ் செய்யவேண்டியதேன்.

உப.—ஆம் அது திருச்சபையில் எக்காலங்
களிலும் நடந்து வந்த முறைமை. எப்படியென்
றால் வேதப் பிரமாணத்தோடு பாரம்பரையாய்
நடந்துவருகிற வேதவிஷயங்களுக்கு யாதாமொ
ருவர் விரோதம் பேசவும் அல்லது போதிக்கவுந்
துணிவார்களே யானால், அப்படிப்பட்டவர்களு
டைய காரியங்களை விசாரிக்க அந்தந்தக்காலங்க
ளில் அர்ச். பாப்பானவர்கள் சகல மேற்றிராணி
மார்களையும், வேத சாஸ்திரிகளையும் சங்கமாகக்
கூடிவரச்செய்து எதிரிகள் போதிக்கிற அச்சாரிய
ங்களைப் பரிசோதித்து பாரம்பரையாய் நடந்து
வந்த வேதவிஷயங்களை வேதத்தின் வேண்டிய
அத்தாட்சியோடு, ருசு விளங்கச்செய்து அதை
விசுவாச சத்தியமாக யாவரும் கைக்கொண்டு
நடக்கத் தீர்மானிக்கிறதுமன்றி, அவைகளைக் குறி
த்து ஒருவரும் ஆட்சேபனை செய்யக் கூடாதென்
று வேதவிதி தீர்மானிக்கிறது திருச்சபையின் பூர்
வ வழக்கம். ஆனால், அர்ச். பாப்பானவராவது,
கூடிய திருச்சபை சங்கத்தாராவது பூர்வ பூர்வ
மாய் பாரம்பரையாய் நடந்துவந்த வேத சத்திய
ங்களில் ஒன்றைக் குறைக்கிறதுமில்லை நவமாய்
ஒன்றைக் கூட்டுகிறதுமில்லை. அந்தப்படியே தே
வமாதாவின் அமல உற்பவத்தின்பேரில், சிலர்

எழும்பி, ஆட்சேபித்ததால், IX-ம் பியூஸ் என்கிற அர்ச். பாப்பானவர், பூர்வவழக்கப்படி, பொதுவான சங்கம் கூடிவரச்செய்து அம்மாதாவுடைய அமலோற்பவம், வேத சத்தியமென்றும் பூர்வ முதல் அநுசரித்துவந்த பாரம்பரை யென்றும் வேண்டிய அத்தாட்சியோடு தீர்மானிக்கலாகி எதிரிகளுடைய வாயை யடைத்து, இனி அதற்கு விரோதம் பேசுகிறவர்கள், சபிக்கப்பட்டவர்களென்று வேதவிதிப்படி தீர்மானிக்கப்பட்டது. (அர்ச். மத். 18-17; 1-திமோ. 1-16, 20) இதற்கு அக்காலத்தில் கூடிய சங்கத்தாரோடு, அர்ச். பாப்பானவர் 1854-ம் வருஷம் செய்த தீர்மான விளம்பரத்தைக் காண்க.

சந்.— இப்படியிருக்க முத்தையபிள்ளை யவர்கள், சொல்லுவதேதெனில். மேற்காட்டிய சங்கதியைக் கவனிக்கும்போது ரோமை சபையில் பலகாலங்களிலுமிருந்த பலருடைய சித்தனைகளிலுமுண்டான பலவேறுவகைப்பட்ட அபிப்பிராயங்களெல்லாம் வேதோபதேசங்களாகவும் விசுவாசப் பிரமாணங்களாகவும் இவ்வாறென்றும் அக்காலங்களிலிருந்த அறிவாளிகளும் வேதப்பண்டிதர்களும் இந்த அபிப்பிராயங்களெல்லாம் அபத்தமென்றும் வேதவிரோதமென்றும் அறிந்து வெளிப்பட்டபோதிலும், சபையின் அதிகாரத்திற்கும், தண்டனையின் கொடுமைக்கும் அஞ்சி பயந்து தைரியமினத்தினால் வேதகட்டளையையும் மனச்சாட்சியையும், தூரவைத்துவிட்டு பாப்புவின் கட்டளைக்கு அடங்கும்படி கேட்டது. காரியம் இப்படியிருப்பதால், ரோமை சபையின் உபதேசங்கள் வேதப்பிரமாணத்திற்கு விரோதமானாலும்சரி வேறெவ்விதமானாலுஞ்சரி, அவைகளை ஆராய்ந்து பார்ப்பவர்யார்? வேறு விதமாய் நினைத்தாலும் கூட தண்டனை விதித்திருக்கிறார்கள். இதினால் மரியம்மாளின் வணக்கம் மேற்கொண்டு பரவிவிட்டது, என்கிறார்கள் ஐயா இதற்குவிடை என்ன?



உப.—1-வது. பலகாலங்களிலுமிருந்த பலருடைய அபிப்பிராயங்களெல்லாம் வேதோபதேசங்களாகவும், விசுவாசப் பிரமாணங்களாகவும் அமைந்த விதம் இவ்வாறென்று, புரோடெஸ்டாண்டார் சொல்ல வருகிறார்களாக்கும். இவைதான் கள்ளி அடுத்த வீட்டை நம்பாளென்ற பழமொழிபோலவாம். எப்படியெனில் நாம், முந்தின சம்பாஷணைகளில் அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறபடி பலரும் பற்பல அபிப்பிராயங்களை வேதப்பிரமாணமாக கைக்கொண்டு எண்ணிறந்த கூட்டங்களாய்ப் பிரிந்து பலவழிப்பட்டுக்கிடக்கிற இப்புரோடெஸ்டாண்டுகள், தேவனருளிய திருமறையைத் தனக்கு விசுவாசப் பிரமாணமாகக் கைக்கொண்டுவருகிற அவ்வேத விஷயங்களில் எக்காலங்களிலாவது, எவராவது ஒன்றைக் குறைக்காமலும் நவமாய் ஒன்றைக் கூட்டாமலும் உலகமெங்கும் பரவி, அர்ச். பாப்பென்னும் ஒரே தலையின் கீழ் ஏகவிசுவாச சபையாக அமைந்துவரும் கிறீஸ்துவின் பத்தினியாகிய கத்தோலிக்குத் திருச்சபையை நன்றேயொத்த தன்னைப்போலென்று சொல்வது நியாயமாமோ? மேலும் பலவழிப்பட்ட இப்புரோடெஸ்டாண்டு தன்னைப் பத்தினியாகக் காட்டி கர்த்தருடைய சபையை அப்படி இப்படியென்று வெட்கமில்லாமற் சொல்வது எவ்வளவு பிசகு. வேசியும் பத்தினியாகத் தன்னைப் பிலிக்கிக்கொள்வது தனக்கு மகிமையாமோ? ஆகையால் பலருடைய அபிப்பிராயங்களடங்கியது, புரோடெஸ்டாண்டோ கத்தோலிக்கோ வென்று இக்காலத்தில் வெட்டவெளியாயறியலாமே. 2-வது.—அக்காலத்திலிருந்த அறிவாளிகளும் வேதபண்டிதரும் தண்டனைக்கு

அஞ்சி பாப்புவின் கட்டளைக்கு அடங்கி இருந்
தார்கள் என்றால், தைரியமற்று வேதசத்தியத்
தை விடுகிறவர்களை அறிவாளிகளென்றும் வேத
பண்டிதரென்றும் சொல்லலாமோ? இவை புரோ
டெஸ்டாண்டு மெச்சிக்கொள்ளத் தக்கதே யல்
லாது மற்றப்படியல்ல. ஏனென்றால் இவர்களுக்
குத் தங்கள் மனச்சாட்சியே வேதம், இது நிமித்
தமே அந்த அறிவாளிகள் மனசாட்சியைத் தூர
வைத்து விட்டதாகச் சொல்லுகிறார்கள். மே
லும் திருச்சபையில் ஆதிமுதலிதுவரையும் எத்
தனையோ அறிவாளிகளும் வேதபண்டிதரு மிருந்
திருக்கிறார்கள். அவர்கள் தண்டனைக்குப் பயந்து
வேதகட்டளையைத் தூரவைத்துவிட்டு பாப்புவி
ன் கட்டளைக்கு அடங்கி யிருந்தார்களென்பது
அத்தப்பிசகு. ஆனால், தங்கள் மனதின்படி நட
க்கிற மனசாட்சியைத் தூரவைத்து விட்டார்க
ளென்பது மெய்யே. ஏனென்றால் திருச்சபை
யின் பொதுவான கொள்கையையும் அதின் விசு
வாசப் பிரமாணத்தையும் விட்டு தன் மனசாட்சி
அதாவது தன்னிஷ்டப்படி வேதவிர்த்தி செய்து
கொள்வது திருச்சபையின் பொதுவான விசுவா
சத்தையும், அதின் ஐக்கியத்தையும் விட்டு நீங்கி
பல மார்க்கங்களாய்ப் பிரிந்து கடைசியாய்த் தெ
ய்வமேயில்லை என்று சாதிக்கும் நாஸ்திகமாகிய
மனசாட்சியிற் கொண்டுபோய் விடுகின்ற கொ
டும் பாதகத்திற்கு ஏதுவாகும். இதற்கு இந்த
புரோடெஸ்டாண்டே அத்தாட்சி, அதாவது இப்
புரோடெஸ்டாண்டு, தன் மனசாட்சியின்படி தி
ருச்சபையின் பொதுவான வேதவிசுவாசத்தை
விட்டுப் பிரிந்த முந்நூற்றுச் சில்வான வருஷத்
துக்குள் தன்னில் நூற்றுக்கு மேலாகப் பிரிந்து



கடைசியாய் யூனிட்டேரியாகி பின்பு தெய்வமே
இல்லையென்று சாதிக்கும் நாஸ்திகத்தின் கொடு
முடியைப் பெற்றுக்கொண்டது (இதற்கு புரோ
டெஸ்டாண்டு ரோனியூஸ் தமிழ் பூமிசாஸ்திரம்
429 முதல் காண்க) இதுதான் தங்களை மெச்சி
வேதத்தைக் கையில் வைத்து மனசாட்சியின்
படி போதிக்கிற வேதம்.

அன்றியும் மேற்சொன்ன வேதபண்டிதர்
களும் அறிவாளிகளுஞ் செய்திருக்கிற பிரபந்தங்
களையும் மற்றுமுண்டான நூல்களையும் பார்வை
யிடுங்கால் திருச்சபையின் போதனைகளுக்குத் தீர்
க்கமாக சாட்சிகளும் வேத அத்தாட்சிகளுமா
யிருந்திருக்கிறார்களே யல்லாது தண்டனைக்கு அ
ஞ்சி வேதகட்டளையைத் தூரவைத்து விட்டவர்க
ளாக பரிச்சேதும் காணப்படமாட்டாது. மீளவும்
அப்படிப்பட்ட மகாத்துமாக்கள் இத்திருச்சபை
யில் எத்தனையோ பேர் வேதசாட்சிகளும் அர்ச்சிய
சிஷ்டவர்களுமாய்ப் பரலோக சிம்மாசனங்களில்
வீற்றிருக்கிறார்கள். அவர்கள் செய்த அற்புதங்
கள் எத்தனையோ ஆயிரம் அவர்கள் வேதகட்ட
ளைகளை தூரவைத்துவிட்டு பயங்காளித் தனமாய்
மனிதர்களுடைய பல அபிப்பிராய கட்டளைக
ளுக்கு மாத்திரம் அடங்கினவர்களானால், வேத
சாட்சிகளாகி அர்ச்சியசிஷ்டபே ரடைவார்களா?
அவர்களால் தேவ அற்புத வல்லமைகள் நடக்
குமா, இதெல்லாம் யோசியாமல் அறிவாளிகளும்
வேத பண்டிதர்களும் வேத கட்டளையைத் தூர
வைத்து விட்டார்கள் என்பது புரோடெஸ்டா
ண்டு தங்கள் தாறுமாறான கொள்கைக்கு அநுச
ரணையாக எடுத்துக்கொண்ட சத்தப்புரட்டே யல்

லாது மற்றப்படியல்ல. 3-வது.—ரோமை சபை
யின் உபதேசங்கள் வேதப்பிரமாணத்திற்கு வி
ரோதமானாலும் சரி, வேறெவ்வித மானாலும் சரி
அவைகளை ஆராய்ந்து பார்ப்பது யார்? வெளியிடு
வது யார்? வெறுவிதமாய் நினைத்தாலும் கூட
தண்டனை விதித்திருக்கிறார்கள். இதினால் மரிய
ம்மாள் வணக்கம் மேற்கொண்டு பரவிவிட்டது
என்றால், இவ்விந்திய தேசத்தில் கத்தோலிக்கு
வேதம் அப்போஸ்தலராகிய அர்ச். தோமையார்
காலமுதலுண்டாகி 1800-ம் வருஷத்திற்குமே
லாகிறதே அப்படியிருக்க, தேவமாதாவின் வண
க்கம் அர்ச். பாப்புவின் கட்டளையால் இவ்விடத்
தில் நூதனமாயுண்டானதென்று யார் சொல்லக்
கூடும்? மேலும் அத்தேவதாயாரை நிலைங்காத
வர்களும் அவ்வணக்கத்துக்கு விரோதம் பேசின
வர்களும் ஆதிமுதலிவ்விடத்தில் எத்தனையோ
பேருண்டு. அவர்களுக்கு நடந்த தண்டனை என்ன?
இப்படியே மற்றத் தேசங்களிலுமென்றறியவும்.
இப்படியிருக்கத் திருச்சபையின் பேரில், கொடு
மையாய்ச் சொல்லுகிற குண்டணிகள் புரொடெ
ஸ்டாண்டாருடைய கட்டுக்கதையே யல்லாது ம
ற்றப்படியல்ல. அப்படி திருச்சபையில் யாதொ
ரு கொடுமையும் தண்டனையும் நடந்திருப்பது மி
ல்லை, நாம் அறிந்தமட்டில் நடக்கவு மில்லை.
4-வது.—கடைசியாய் இவர்கள் நினைக்கிறபடி ம
னிதர்களுக் கஞ்சிய பயத்தினாலும் மற்றெவ்வித
கொடுமையினாலும் மரியம்மாளின் வணக்கம் உ
ண்டாகாமல் தேவசுதன், மனிதனா யவதரிக்க
மரியம்மாளை தெரிந்துகொண்ட மேலான அந்தஸ்
தைக்கண்டு காபிரியேல் சம்மனசானவர் வாழ்த்தி
வணங்கினதி னிமித்தமும் இஸ்பிரீத்து சாந்துவி



னால் ஏவப்பட்ட எலிசபெத்தம்மாள், அத்தேவ
தாயாரைப் புகழ்ந்து துதித்ததினிமித்
தமும் தேவன்தாமே அத்தாயாரைக் கொண்டு
எக்காலங்களிலும் தமது தாசருக்குச் செய்துவ
ருகிற எண்ணிறந்த புதுமைகள் அநேகமான நன்
மைகள் நிமித்தமும் அம்மாதாவின் வணக்கம் மே
ற்கொண்டு எங்கும் எவ்விடத்தும் கடைசியாய்
உலகமெங்கும் பரவிவிட்டது. இதற்கு பாப்பா
னவர்களும் திருச்சபையாரும் என்ன செய்வார்
கள். தேவதீர்மானத்தை அவர்களால் தடைசெ
ய்யவும், மட்டுக்கட்டவும் கூடுமா? அத்தேவதா
யாருக் கெதிர்படைகளாகிய இப்புரொடெஸ்டா
ண்டுக்கு அவ்வணக்கம் கசப்பாயிருக்குமாகில் தே
வனிடத்தில் முறையிட்டுக் கொள்ளட்டுமே அவர்
சித்தத்துக்கு எதிர் பேசுகிறவன் யாவன்?

சந்.—ஐயா, மெய்தான் தேவமாதாவின் வணக்கம்
எக்காலத்திலும் தலைமுறை தலைமுறையாக வழங்கிவ
ருவதால், இது மனிதர்களுடைய ஏற்பாடென்று சொ
ல்வதற்கிடமில்லை, தேவன் அத்தம்மாளைக் கொண்டு
செய்து வருகிற எண்ணிறந்த அற்புதங்கள் அதற்கு
அத்தாட்சி என்பது மெய்யே. இக்காலத்தில் முதலாய்
அத்தேவதாயாரைக் கொண்டு நடக்கிற அற்புதம் எத்த
னையோ கேள்விப்படுகிறோம்.

உப.—ஆம், அதற்கு யாதொரு சந்தேக
மோ. இப்போது நடந்துவருகிற விசேஷங்களில்
இரண்டு பிரதானமான காட்சியைச் சொல்லுகி
றேன் கேளும் அதாவது;—இந்த நூற்றாண்டில்
சிலகாலத்துக்கு முந்தி பிராஞ்சு தேசத்தில், சா
லேத் நகரைச் சேர்ந்த மலையின்மேல் மாடு மேய்த்
துக்கொண்டு நின்ற இரண்டு பத்தியுள்ள பிள்ளை
களுக்கு தேவமாதா காட்சியானாளென்பது பிரசி:

தமான செய்தி, அதை IX-ம் பியூஸ் என்கிற பாப்பானவர் ருசுவிளக்கி அத்தேவதாயார் பேரால் ஒரு தேவாலயம் கட்டப்பட்டிருக்கின்றது. அதில் எத்தனையோ புதுமைகள் நடந்தேறினது, இதுபோலவே பிராஞ்சுதேசத்தின் தென்பாகத்தில் லூர்துபட்டணத்து மேற்புறமாக மலையைப் போலொத்த பிரமாண்டமான பாறையிலுள்ள குகையில் 14 வயதுடைய பெர்னர்த்தென்னும் பத்தியுள்ள ஒரு பெண்ணுக்கு 1858-ம் வருஷம் பெப்பிரவரிமீ 11ௗ அமலோற்பவமாதா தரிசனையானதும், அதில் நடந்தேறிவருகிற புதுமைகளும் பிரசித்தமான செய்தி. இப்போது அதில் பிரதானமான தேவாலயங் கட்டப்பட்டிருக்கிறதுமன்றி அதைத் தரிசிக்கும்படி இங்கிலாந்து, ஐயர்லாந்து, அமெரிக்கா, முதலிய பலதேசங்களிலிருந்து போகிற சனங்களின் தொகைக் கணக்கிலடங்கா. எத்தனையோ புரொடெஸ்டாண்டுகள் அவிடத்துக்குப்போய் அதின் விசேஷங்களைப் பார்வையிட்டு ருசுவிளக்கி வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லவாகிலும் இவர்கள் அறியார்களா அல்லது இவர்கள்தாமே அவைகளைப்போய்ப் பார்த்தறியலாமே. மேலும் இக்காலத்தில் நடந்தேறிவருகிற தேவ அற்புத விசேஷங்களை நம்பாவிட்டால் முற்காலத்தில் நடந்ததை இவர்களில் நம்புவர் யார்? புரொடெஸ்டாண்டார் ஒன்றையு நம்பார்கள். ஏனென்றால் தங்கள் மார்க்கத்தில் எப்போதாவது எவராலாவது யாதொரு அற்புதமும் நடக்காத குறையே அதற்குக் காரணம். இதற்கு அவர்கள் சொல்லுகிற போக்காவது, அப்போஸ்தல பிதாக்களோடே அற்புதவரம் நின்றுவிட்டதென்பார்கள். இது சுத்த அபத்தம். வேதாக



மத்தில் தேவவாக்கு அப்படிச் சொல்லுகிறதில்லை. எக்காலத்திலும் திருச்சபையில் அற்புதங்கள் நடந்தேறிவருமென்பதேயாம். (அர்ச். மாற். 16-17, 20; அர்ச். அருள. 14-12, 14) அப்படியே கத்தோலிக்குத் திருச்சபையானது தேவ அருள் வரம்பெற்றதென தன்னில் நடக்கும் பற்பல அற்புதங்களாலும் பிரத்தியட்சமான காட்சிகளாலும் எங்கும் பிரபல்லியமாகி வருகின்றது.

சந்.— ஐயாவே, ஆம் தேவமாதா கொடுத்த அத்தாட்சிகளும் அதினிடமாய் நடந்தேறிவருகிற புதுமைகளும் உண்மையே, இதில் சந்தேகப்படவொருவருமில்லை இதற்கு மெய்யைக்காட்டுகிற வர்த்தமான பத்திரிகைகள் அநேகமாய் அத்தாட்சி கொடுக்கின்றன. ஆனால் தேவமாதாவை வணங்கும் வணக்கம் தவறாயிருக்குமானால், அத்தாயாரைக்கொண்டு தேவன்தாமே அவ்வற்புத கிரியைகளை நடப்பிப்பாரா? தேவனைப் பெற்றதினால் அவளைத் தேவமாதாவென்று வணங்கும் கத்தோலிக்குப் பிள்ளைகளுக்கு அம்மாதாவைக் காட்டிகொடுக்கச் செய்வாரா? அவைகளை அங்கீகரித்து பிரபல்லியப் படுத்தும் கத்தோலிக்குத் திருச்சபையானது தன் ஒருமைப்பாட்டில் காப்பாற்றி அதனோடு வாசம்பண்ணுவாரா? ஆனது நிமித்தம் மரியம்மாள் தேவமாதா என்றும் அவள் தமது திருக்குமாரன் மூலமாய் நமக்காக மன்றாடுகிற மத்தியஸ்தி என்றும் தேவசுதனை திருக்கர்ப்பந்தரிக்க தானும் பாவமில்லாமல் உற்பவிக்க தேவ அருள்வரம்பெற்ற அமலோற்பவியென்றும் அவளை வணங்கி ஸ்துதித்து வழிபடும் செய்கை வேதத்துக்கும் புத்திக்கும் ஒத்த சர்வநியாயமாயிருக்கிறதென்றும் யாதொரு சந்தேகமின்றி பூரண விசுவாசத்தோடு அத்தேவ தாயாரை, ஏத்திப்போற்றி வணங்கத்தக்கவர்களாயிருக்கிறோம். அப்படி சந்தேகப்படுகிறவர்களும் மறுத்துச் சொல்லுகிறவர்களும் வேதத்துக்கும் புத்திக்கும் சர்வவிரோதிகளேயல்லாது மற்றப்படியல்ல வென்றிப்போது என்மனதில் தீர்மானிக்கலாகிறேன்.

உப.—ஆகிலும் முத்தையபிள்ளை யவர்கள் தமது அவையினால் கடைசியாய் சொல்லி முடித்திருப்பதில் சிலதைக் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அதாவது வேதம் கடவுளால் அருளப்பட்டது மெய்யானால் அவர் அந்தப் பிரமாணத்தைக்கொண்டே நம்மெல்லாரையும் நியாயந்தீர்ப்பதும் சத்தியமானால் நாம் அதற்கு விரோதமான யாதொன்றும் எந்த முகாந்தரத்தினாலும் செய்யத்துணியாமல், அந்தப் பிரமாணப்படி திரிகரணசுத்தியாய் அவரை வழிபட்டு வணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம், ஆதலால் ரோமைச்சபையாவது வேறெந்தச் சபையாவது வேதநெறியை விட்டு மனிதருடைய அபிப்பிராயங்களையும் கட்டளைகளையும் தனக்குப் பிரமாணமாக்கித் தன் இஷ்டப்படி நடக்குமாகில், அதற்கு நாம் வேதவசனத்தைக் கூறி எச்சரிக்கவேண்டிய கடமை நமக்குண்டு. அதெங்ஙனமெனில் (பிரசங்கி. 11-9) உன்மனதின் வழிகளிலும் கண்காட்சிக்குரியவைகளிலும் நட; ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி என்பதே.

வேதம் கடவுளால் அருளப்பட்டது மெய், அவர் அந்த வேதப் பிரமாணத்தைக் கொண்டே நம்மெல்லோரையும் நியாயந் தீர்ப்பது சத்தியம். நாம் அதற்கு விரோதமான யாதொன்றும் எந்த முகாந்தரத்தினாலும், செய்யத் துணியலாகாதென்பது உண்மை. இதற்கு விரோதமாய் புரோடெஸ்டாண்டாரோ கடவுளால் அருளப்பட்ட கத்தோலிக்கு ஏக சத்தியவேதத்தை விட்டு விலகி, லுத்தேர், கல்வீன், கார்லோஸ்தா, முதலிய பற்



பல மனிதர்களுடைய அபிப்பிராயங்களையும், கட்டளைகளையும், தங்களுக்குப் பிரமாணமாக்கித் தன் தன் இஷ்டப்படி பல மார்க்கமாய்த் திரிவதை இச்சம்பாஷணையின் பல இடங்களிலும், உரூபகாரப்படுத்தி யிருக்கிறேன். ஆகையால் மேற்காட்டிய வேதவாக்கியத்தின்படி தேவன் அவர்களை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அவர்களே தங்களை அறியக்கடவீர்கள், ஏனென்றால் கிறீஸ்து திருச்சபைக்கு ஒளியும், திருச்சபை உலகத்துக்கு ஒளியுமாயிருக்கின்றது. (எசா. 60-1, 2, 3, அர்ச். மத். 5-14) அந்தப்படி கிறீஸ்துவாகிய ஒளியைப்பெற்று உலகத்துக்குப் பிரகாசிக்கின்ற சபை கத்தோலிக்குத் திருச்சபையே யல்லாது வேறொன்றல்ல. எப்படியெனில் அவர் ஒருவராயிருப்பதுபோல (அர்ச். அருள. 17-17, 23) அவர் அஸ்திவாரப்படுத்திய இக் கத்தோலிக்குத் திருச்சபையும், ஒரே மெய்விசுவாச போதனையையுடைய ஏக பரிசுத்தச் சபையாயிருக்கின்றது. ஆனதால் உலகத்தில் இரண்டுவகை மார்க்கமாத்திரமுண்டு; அதாவது சத்தியம் அசத்தியம். சத்தியமானது சர்வேசுரனால் அருளிச்செய்யப்பட்டுக் கத்தோலிக்கென்னும் அவ்வேகத் திருச்சபையால் போதிக்கப்பட்டு மோக்ஷத்திற்குப் போகிற ஒரே மெய்யான மார்க்கமா யிருக்கின்றது, அசத்தியமோவென்றால், பசாசினால் ஏவப்பட்ட பல மனிதர்களால் பல காலங்களில் பற்பலவிதமாய்ப் போதிக்கப்பட்டு எண்ணிறந்த கூட்டங்களாய்ப் பிரிந்து நரகத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிற பலவித பொய்யான மார்க்கமா யிருக்கின்றது. ஆனதினால், கிறீஸ்து இரட்சகர் ஏற்படுத்திய கத்தோலிக்குத்

திருச்சபையை விட்டுப் பலவிதமாயும் அன்னியமாயுமிருக்கிற புரோட்டெஸ்டாண்டு முதலான பற்பல அஞ்ஞானமார்க்கங்களில் உதித்துப் பிரகாசிப்பாரோ இல்லை. ஆகையால் அவருடைய கத்தோலிக்குத் திருச்சபையானதே அவருடைய ஒளியைப் பெற்று இவ்வுலகத்துக்கு ஒளியாயிருக்கின்றது. இந்தத் திருச்சபையின்றி ஒருவனும், மோக்ஷத்துக்குப் போகக்கூடாது. (யோவே. 3-22) "இதோ இந்தத் திருச்சபைக்கு விரோதமாய்க் கூடுகிற கூட்டமாகிய எந்த மதமும், அல்லது எந்தக் கொள்கையும் சர்வேசுரனால் கூடுகிற கூட்டமல்ல; அது தன்னாலே கூடுகிறபடியால் விழும். (எசா. 54-15; 17) பின்னும் இத்திருச்சபைக்கு விரோதமாய் உருவாக்கப்படும் (போதகங்களாகிய) ஆயுதமெல்லாம் வாய்க்காதேபோம். இதற்கு விரோதமாய்ப் பகைத்தீட்டாய் எழும்பும் எந்த நாவையும் அது குற்றப்படுத்தும்" அதைச் சேவியாத சாதிகள் அழிந்து பாழாய்ப் போம். (எசா. 60-12) பலவிதமான போதகத்தினாலே, நிலையற்றுத் திரியும் புரோட்டெஸ்டாண்டார் இதை நன்றாய்க் கவனிக்கக் கடவார்கள்.

கடைசியாய் ஒன்று சொல்லி முடிப்போம். கிறீஸ்துவை விசுவசிக்கிறேன். வேதத்தை நிதமும் ஒரு தரத்தைப்போல் பலதரமும் வாசிக்கிறேன் என்று புரோட்டெஸ்டாண்டார் பெருமை பாராட்டினாலும் திருச்சபையின் ஒரே மெய்யான வழியிற் சென்று தேவமாதாவின் உதவி மன்றாட்டையும் தெய்வீக சிம்மாசன சபையின் அந்நியோந்நிய ஐக்கியத்தையும் நாடாமல் பரலோக மோக்ஷ பதவியைச் சேரலாமென்பது பிசகு.



அன்றியும், "ஜீவிய அப்பம் நானே என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான் என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகம் அடையான். நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்குமென்று நமது இரட்சகர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்" என்பதும் வாஸ்தவம். என்றாலும், ஓ! நேசர்களே அவைகள் அவருடைய வழியும் வாசலுமாயிருக்கிற திருச்சபையின் ஐக்கியத்தை விட்டு வேறு வழியாய் நுழைகிறவனுக்கு அந்த நித்திய ஜீவன் கிடைக்குமென்பது பிசகு. ஏனென்றால் ஆட்டுக்கிடையின் வாசலின் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் நுழைகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். (அர்ச். அருள். 10-1.) கிறீஸ்துவே ஆட்டுக்கிடையாகிய திருச்சபையின் வழியும் வாசலுமாயிருக்கிறார். (6-69-ம். வச.) ஆகையால் கர்த்தர் தமது திருச்சபையை நோக்கி: உரைக்கிறதாவது "இனி நாம் உன் சத்துருக்களுக்கு உன் தானியத்தை ஆகாரமாகக் கொடோம். நீ, பிரயாசப்பட்ட உன் கொடிமுந்திரிகைப் பழரசத்தை அந்நிய புத்திரர் குடிப்பதுமில்லை, என்று கர்த்தர் தமது வலதுகரத்தின் மேலும் தமது வல்லமையினுடைய புயத்தின் மேலும், ஆணையிடுகிறதுமன்றி, அதைச்சேர்த்தவர்கள் தானே அதைப்புசித்துக் கர்த்தரைத் துதிப்பார்கள் அதைக்கூட்டி வைத்தவர்களே என் பரிசுத்த ஸ்தலத்தின் பிரகாரத்தில் அதைக் குடிப்பார்கள் வாசலின் வழியாய்ப் பிரவேசியுங்கள், பிரவேசியுங்கள், (எசா. 62-8, 9, 10) என்று கர்த்தர் தமது தீர்க்கதரிசியைக் கொண்டு திருவுளம்

பற்றி யிருக்கிறபடி அழியாத நித்திய சீவியத்தையும் பசியாத நித்திய ஞானபோசனத்தையும் தாகமில்லாத நித்திய பானத்தையும் அநுபவிப்பது திருச்சபையும் அதின் புத்திரருமேயன்றி இத்திருச்சபையை விட்டுப் பிரிந்த அந்நிய புத்திரர் அதை யநுபவியார்கள் என்பதே தேவதீர்மானம். மேலும், பரலோக நித்திய சீவனைப் பெற்றுக் கொள்வதற்குத் தலையாகிய கிறீஸ்துவும் அவருடைய சரீரமாகிய திருச்சபையும் வழியும் வாசலுமானதால் தலையில்லாமல் உடலைக்கொண்டும், உடலில்லாமல் தலையைக்கொண்டும் அந்த நித்திய சீவியத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாதென்பதே தெளிவாம்.

ஆகையால், தேவமாதாவுடையவும், மற்றப் பரிசுத்தவான்களுடையவும் வணக்கத்தைப் பற்றியும் திருச்சபையின் மற்றப் போதனைகளைப் பற்றியும், வேதத்தில் எத்தனையோ உதாரணங்களும் திருச்சபை பாரம்பரையிலும் பிதாக்கள் பிரபந்தங்களிலும் எத்தனையோ அத்தாட்சிகளும், இருந்தபோதிலும் அவைகளெல்லாம் பார்த்துணராமல் புரோடெஸ்டாண்டார் பின்னும் வேதம் வேதம் என்று சொல்லுவதுபோல முத்தைய பிள்ளை யவர்களும், தமது தவறு நூலில், திருச்சபைப் போதனைகளும் பிதாக்கள் நூல்களும் பாரம்பரை நியாயங்களும் நமக்குப் பிரமாணமாக வேதம் வேதம் என்றே (அதையும் ஆராய்ந்துபாராமல்) அடிக்கடி சொல்லத் துணிந்தார்கள், அப்படி சாதித்தபோதிலும், வேதத்தில் எழுதப்படாத அநேகம் பாரம்பரை நியாயங்களை வேதசத்தியமாக அநுசரித்து வருகிறார்கள். அவைகளை



நாம் ஒவ்வொன்றாய்க் கேட்கவேண்டிய கேள்விகளை இச்சமயத்தில் நிறுத்தி அவர் தங்கள் மார்க்கத்துக்கு அஸ்திவாரமிட்ட புரோடெஸ்டாண்டு என்ற ஒரே கேள்வியை மட்டும் கேட்டு இப்புத்தகத்தை முடிப்போம்.

அதாவது, தலையான அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பர் என்கிற கல், அல்லது பாறையின்மேல் ஸ்தாபிக்கப்பட்ட (அர்ச். மத். 16-18) புதிய உடன்படிக்கையின் (அர்ச். லூக் 22-20) (அப். நடபடி. 20-28) கிறீஸ்துவின் அருள்வேத கத்தோலிக்குத் திருச்சபைக்கு அப்போஸ்தலர்கள் அஸ்திவாரமும் அந்த அஸ்திவாரத்துக்கு கிறீஸ்துவே மூலைக்கல்லுமா யிருக்கிறார். (எபே. 2-19, 22) போடப்பட்ட இந்த அஸ்திவாரத்தைத்தவிர வேறே அஸ்திவாரத்தை ஒருவனும் போடக்கூடாது. (1-கொரி. 3-11) என்பதே இதற்குத் தீர்க்கதரிசன வாக்கியங்களும் அத்தாட்சி கொடுக்கின்றன.

இப்படி யிருக்க இத்திருச்சபையின் அஸ்திவாரத்திற்கு விரோதமாய் 1529-ம் வருஷத்தில் (18-ம். வரு) தமிழில் அச்சுப்பதிப்பித்த புரோடெஸ்டாண்டு சபை சரித்திரம், 4-47-ம் பக்கம். புரோடெஸ்டாண்டு என்னும் வேறொரு அஸ்திவாரத்தைப் போடும்படி புதிய ஏற்பாட்டின் அருள்வேத ஆகமங்களிலாவது, பழைய ஏற்பாட்டின் வரிசைத ஆகமங்களிலாவது ஏதாகிலும் ஒரு அற்ப உதாரணங்களுண்டோ? மேலும் லுத்தேர், கல்வின், கார்லோஸ்தர், சுயிங்கிலியூஸ், மேலந்தோன் முதலானவர்களால், புரோடெஸ்டாண்டார் என்

லும், இந்த எதிரான அஸ்திவாரம் போடப்படு
மென்றும் அது போடப்பட்ட இந்த முந்நூற்று
ச்சில்வான வருஷத்துக்குள் ஏறக்குறைய நூற்
றுக்குமேலான பலவழிப்பட்ட மார்க்கங்களாய்ப்
பிரிந்து அதது, தன்னிஷ்டப்படி போதிக்குமெ
ன்றும், பிரிந்த அது ஒன்றுக்கொன்று விரோத
மாய்ப் போதித்து பல கொள்கைகளை உண்டாக்
கினும், எல்லாம் ஈடேறத்தக்க மெய்யான சபைதா
னென்றும் ஷை வேதாகமங்களில் யாதொரு தீர்க்
க தரிசன வாக்கியங்களெங்கிலும் கிறீஸ்து இர
ட்சகரின் வாக்குத்தத்தமானதும் அப்போஸ்த
லர்களுடைய போதனைகளெங்கிலு முண்டோ?
உதாரணப்படுத்துங்கள். ஏனென்றால் கிறீஸ்து
தமது இராச்சியமான திருச்சபை ஆகவேண்டிய
காரியங்களில் அல்லது அப்படி இப்படியாகுமெ
ன்று வேதாகமங்களில் முன்னறிவிக்க வேண்டி
யது அவசியகம். (அப்படியே அறிவிக்கப்பட்டு
மிருக்கின்றது. புரோடெஸ்டாண்டைப் பற்றி
அப்படி அறிவிக்கப்பட்டதுண்டோ) அப்படி அ
றிவியாவிட்டால் அது அந்தரத்திற் கட்டின கோ
ட்டையைப் போலவாம். அது விழும், அதை
நம்பி அடிபிடித்தேறுவதும் விழுகிறதற் கேதுவாம்.
ஓ புரோடெஸ்டாண்டே! மேற்சொல்லியபடி
வேதாகமத்தில் ஏதாகிலுமுண்டா வென்று, உன்
னில் நீ நன்றாய்க் கவனி.

ஆகையால் இதற்கு முத்தையபிள்ளை யவர்க
ளும், சுவிசேஷ சங்கத்தாராகிய மற்றப் புரோ
டெஸ்டாண்டுக்களும் மறந்து போகாமல், மேற்
சொன்ன கேள்விக்குத் தங்கள் கையிலிருக்கிற
வேதாகம புஸ்தகத்தை ஒரு தரத்தைப்போல் பல



தரமும் புரட்டி யுருட்டி ஒவ்வொரு வாக்கியத்
தையும் நன்றாய்ப் பரிசோதித்து மறுமொழி கூற
க்கடவார்கள்.

சத்தியத்தைக் காக்கிற தூணும் அஸ்திவார
முமா யிருக்கிற சீவனுள்ள தேவனுடைய சபை
யாகிய தேவாலயத்திலே நடக்கவேண்டிய வகை
யை நீ அறியும்படிக்கு இவைகளை உனக்கெழுதி
னேன். (1-தீமோ. 3-15.)

இராச்சியமும், வல்லமையும் மகிமையும் அ
வருடையவைகளே.

மனுக்குலம் மாசுகொள்ளுமுன் இந்தப் பர
ம நாயகியைச் சர்வேசுரன் தெரிந்துகொண்டார்,
அவளைத் தமது ஆலயத்தில் வாசஞ் செய்யச்
செய்தார்.

மாசற்ற கன்னியின் புகழ்ச்சியையும் அவ
ளுடைய மேலான நாமத்தையும் என்னாளும் களி
கூர்ந்து வாழ்த்துவாயாக.

மாசற்றகன்னியே! சகல சத்துருக்களிடத்
தில் நின்று எங்களைக் காத்தருளும்.

ஆண்டவரை வாழ்த்தக் கடவோம். சர்வே
சுரனுக்குப் புகழுண்டாகக் கடவது ஆமென்.

முற்றிற்று.

# தேவமாதாவை வணங்குவதற்குரிய நியாயங்கள்.

இராகம்—உசேனி—ஏகதாளம்.

பல்லவி.

பிரியமக்காரரே வாரும்-எங்கள்,
மரியன்னை பதஞ்சேரும் (பிரி)

அநுபல்லவி.

முடுகு.

தெரியாமலே தர்க்கஞ் செய்தி வொன்னகண்டோ
தேவாலயந் தன்னிற் தெய்வம் வொன்வாருண்டோ
தருவைத் தள்ளிக்கனி தனைப்புகழ் வாருண்டோ
தாயைத் தள்ளிப்பிள்ளை தன்னைக் கொண்டவர்பின்னோர்
சம்மதப்படுமோ உமையறு சும்மாவிடுமோ
தாயின்பரைபுற்றீரே சேயின்பலகைபெற்றீரே (பிரி)

சரணங்கள்.

தேவாதி தேவனைச் சேயாக ஈன்றது
சேருடர்க்கெட்டாத பாக்கியம்—மணிச்
சிற்றுதரந்தனிற் பத்துமாதம் அந்தச்
சேயைச்சுமந்ததும் யோக்கியம்—பல
ஜீவர்க்குமூட்டுவோனுக்குமூட்டிடும்
செய்கையுமே கனசிலாக்கியம்—பின்னும்
சீராட்டிப் பாராட்டித் தாலாட்டியே அந்தச்
சேய்வளர்த்தது மறை வாக்கியம்—கலம்

முடுகு.

தாவும்உயிர்க்கெல்லாம் தாய்தந்தையானவன்
தாயெனக்கூப்பிட்டுச் சங்கைசெய்தான்-பின்னும்
காவலனுக்காயு முப்ப தாண்டுமட்டும்
கலக்தொருகுடியாக நிலந்தனில் வாழ்ந்தது
கன்னியர்தானே இதுபெரும் புண்ணியந்தானே
கட்டுக்கதையோசொல்லும் இஷ்டப்படியேசெல்லும் (

அன்னைபிதாவை வணங்கச் சொன்னோன்தன
தன்னையையேவெறுப் பானோ—அந்த



அன்னையைப்போற்றி அடிதொழுவோரை
அதட்டிமுறுமுறுப் பானோ—நிதம்
மன்னுயிர்க்காகத் தன்மாதாபுரியுமன்
றாட்டுகளைமறுப் பானோ—அந்த
மாசில்லாக் கன்னியை யேசுநீர் பேசிடும்
வம்புகளைப்பொறுப் பானோ—பண்டு

முடுகு.

தன்னனை சொற்படி நீரை ரசமாக்கித்
தன்முதல் அற்புதஞ் செய்தான் இதுவன்றி
பன்னும் அருளப்பர்க் கின்தா யெனக்காட்டிப்
பாருக்குந் தாயெனப் பயன்படச் சொன்னது
பார் அறியாதோ பகைவர்கள் ஊர் அறியாதோ
[illegible]டனே அம்மை நகைத்திடுவான்கம்மை (பிரி)

சர்ப்பத்தலையை நசுக்குவாள் பெண்ணொன்று
சாமிசொன்னது அறி யீரோ—அந்தச்
சத்தியவாக்கிது உத்தமிக்கேயென்றும்
சத்தியம்நீர்குறி யீரோ—பரன்
சொற்படியானவர் மங்களஞ்சொல்லித்
துதித்ததும்நீர்தெரி யீரோ—அந்தச்
சுந்தரியாதம் வணங்கோமென்றீர் தேவ
தூதர்க்கும்நீர்பெரி யோரோ—பாரில்

முடுகு.

அற்புதமாகின்றி உற்பவமான
அமலகுணாகரி விமல மனோகரி
மர்புயக் கற்பலங் காரி யில்லாவிடில்
வானிடம் வாழ்பரன் மானிடனாகியே
வந்திடுவானோ நலமெல்லாம் தந்திடுவானோ
வாதங்களையேவிட்டுப் போதங்களையேதொட்டுப் (பிரி)

பாவமனிதரைச் சங்கைமரியாதை
பண்ணித் தினந்துதித் தீரோ—பல
பட்டப்பேர் சொல்லியே இஷ்டமா யெல்லாம்
பணியும்படி விதித் தீரோ—ஆதி
தேவதாயைக் கன்னிகா ரத்தினத்தைத்
திகழும் அவமதித் தீரோ—ஐயோ

பிறக்கிடையாத் திவ்வியத்தை யீனச்
சித்திடச் சம்மதித் ... திரோ—செழும்

முடுகு.

காலைத் துதிப்பது பூவைப் பற்றியல்லோ
காளைத் துதிப்பது வீணைப்பற்றி யல்லோ
ஆலைத் துதிப்பது பாலைப் பற்றியல்லோ
ஆயைத் துதிப்பது சேயைப் பற்றியல்லோ
ஐபமென் காரணம் இனி நீங்கள் டம்பாலே வேறாம்
அஞ்சொற்குயிலின் தாயை நெஞ்சுற்றிட இதுவேயோ (பி)

சூரியன் தன்னொளி வாங்கி யுலகுக்குச்
சோதி தருமதி போலும்—மேகம்
நீருமழைகொண் டுலகுக் குதவும்
ஆறவு குளங்களைப் போலும்—அன்னை
சோரா வரங்கள் சுதனிடம் வாங்கிச்
சொரிவாள் நமக்குமேன் மேலும்—அந்தத்
தாயகுணாளி கீர்த்திப்பிர தாபத்தைச்
சொல்ல வொண்ணு தெவ ராலும்—மழை

முடுகு.

நீரிழந்து கெடு நெற்பயிர் போலவும்
நேர்வழி விட்ட குருடர்கள் போலவும்
சார்கொம் பிழந்து தளர்கொடி போலவும்
தனிமர மேறிக்கை விட்டவர் போலவும்
தாயைக்கை விட்டீர் பிரபஞ்ச மாயைக்குட் பட்டீர்
தர்க்கங்களை யேகட்டு வர்க்கங்களை யேவிட்டுப் (பிரி
திரவியவான்கட்குக் கைகட்டி வாய்பொத்திச்
சிரம்வணங்கித் தெண்டம் புரிவீர்—பின்னும்
தேகரீர் ஐயரே ஆண்டவரே யென்று
திருமுகம் அவருக்கு வரிவீர்—பல
தரமும் அவரைப் புகழ்ந்து பிரபந்தங்கள்
சாற்றியே அச்சிடத் தெரிவீர்—அவர்
தாய்தந்தை முதலோர்க்குத் தாசானுதாசராய்த்
தாள்பணிந்து கொண்டு திரிவீர்—ஆதி

முடுகு.

பரமன் அன்னை அருளின் கன்னையைப்
பசாசின் தலையிற் பதித்த பதத்தியைத்



மலர்மரியைத் தொழோமென்றீர் பேய்க்கந்தத்
மேலுள்ள பழம் பணையாலுமக்குச்செய்
திர யிதுவே அதின்றுமே மந்திரமிதுவே
லந்தனையேநீக்கி மூலத்தனையே நோக்கி (பிரி)

கல்கெடாநட் புருங்கதிர்போலப்
மலர் தேனுறல் போலே—அன்னை
தாவின் துணையின்றிக் கன்னிமைக் கழிவின்றிப்
னையே கொண்டாள் சூலே—பரன்
யைப் படைக்குமுன் தனக்கிவள்தாயென்று
கு குறித்திட்ட தாலே—ஜெனப்
மில்லாதவளென்பதென்னம்
சாகுயியென் இனி மேலே—நாளும்

முடுகு.

ர்பு வினைகளை ஆக்கி அளிப்பவன்
புதமாக அவதாரஞ் செய்தவன்
அமலோற்பவி யாகத்தன் அன்னையைச்
ய்வ தருமைப்பா நிர்க்கமாயோசித்துச்
தைநீர் தேறும் பிரியதத்தமென்றாங் கூறும்
தைத்துயரோ மாறும் வந்துற்றிடுமே பேறும் (பிரி)

தேவவரங்கள் நிறைந்த பூரணியென்று
ன் தூதன் சொன்னதும் விடுத்தீர்—நல்ல
யைவர்க்குள்ளாசீர் வதிக்கப்பட்டவளென்று
ர்ந்தசொற் பயனையும் கெடுத்தீர்—எல்லாத்
லமுறைகளிலும் சௌபாக்கியவதி என்னும்
தியமறையையுந் தடுத்தீர்—உங்கள்
லமுறையில் அந்தத் தாயைத் தொழோமென்று
க்கங்கள் செய்திடத் தொடுத்தீர்—கள

முடுகு.

லமைக் கபிரியேலோடு பல் வானவர்
ச எலிசபேத்தம்மை சிமியோன்
லமை அப்போஸ்தலர் வேதியர் தீர்க்க
ரிசிகள் முனிவர்கள் சகலரும் புகழ்ந்திடும்
நற்சகாயியை நிகரில்லாப் பரமதாயகியைத்
தொழுவதுநீசம் நானே பகர்வது போதம் (பிரி)

வாசமலர்களைக் கன்னிதாராறயர்
மாங்கனி வேம்பு தாதே—நல்ல
மாணிக்கப்பாத்திர மன்றித்தேவாமிர்தம்
மண்கலந் தவ்விஷ் இராதே—ஒரு
மாசில்லான் மாசை வெறுப்பவன் மாசுகன்
மாற்றவந்தோன்புவி யிதே—ஒரு
மாசில்லாக் கன்னியல்லாது பிறரிடம்
வந்துபிறக்க வொண்ணுதே—பல

முடுகு.

தாசர்தொழும் அடிமேலாற்பவியே யெங்கள்
தாயென்பதற்கின்னம் சாக்ஷியும் வேண்டுமோ
நேசமில்லாமல் மறையைப் புரட்டி
நினைத்தபடியே யுரைத்தருஞ் செய்கிறது
நீதமோபாரும் சத்தோலிக்கு வேதமே சேரும்
நெஞ்சத்திடையேகொண்டு வந்தப்பமையேவிண்டு (பிரி)

சுத்தினை ஆக்தரி மோக்ஷ
சுதந்தரி யாவையிர ...ணி—சுரர்
ஸ்தோத்திரி தாயீறு சேத்திரி நீள்செய
ரூபதிரி சாஸ்திரி ஞானி—பெரும்
பக்தவிமோசனி பதிதர்கள் நாசனி
பக்தர் மனோசனி ...யானி—குசை
பத்தினி தர்ம்மசம் வர்த்தினி. துன்பநி
வர்த்தினி உத்தமி மாணி—நல்ல

முடுகு.

அந்த மனோன்மணி பந்த நிவாரணி
ஆரணி காரணி சிரணி பூரணி
விந்தை வேதநாயகனிரு கண்மணி
விண்மணியைப்புனை அம்மணி சென்னியில்
மீன்அணிசிவி சந்திரனைத் தான் அணி காலி
வேதப்பெரியார்நாமம் ஓதப்பெறுவீர்கேமம் (பிரி)

முற்றிற்று.

## பிழை திருத்தல்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| 37 | 20 | இரக்ஷணிய செபலையும் பிரித்து. | இரக்ஷணிய செபமாலி ஸப்பையும் பிரித்து. |
| 44 | 2 | விசுவாசப் பத்தனத்திருலேயே. | விசுவாச சம்பந்தத்திருலேயே. |
| 73 | 3 | பாதகரோ ... | பாதகராய். |
| 92 | 11 | மதி பிசகாயும் ... | மதி மருளாயும். |
| 153 | 4 | மனம்போக்கில் ... | மனம் போனபோக்கில். |
| 184 | 19 | விசுவாசப் பிரமாணங்களாகவும் இவ்வாறென்றும். | விசுவாசப் பிரமாணங்களாகவும் அமைந்த விதம் இவ்வாறென்றும். |